
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

விகடன்
பிரசுரம்

# சித்தம்... சிவம்... சாகசம்!



இந்திரா சௌந்தர்ராஜன்

www.t.me/tamilbooksworld

# சித்தம்...
# சிவம்...
# சாகசம்!

இந்திரா சௌந்தர்ராஜன்

விகடன்
பிரசுரம்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# சித்தம்... சிவம்... சாகசம்!

www.t.me/tamilbooksworld

Title :
SITHAM... SIVAM... SAGASAM
© INDIRA SOUNDARRAJAN
ISBN: 978-81-8476-600-4

விகடன் பிரசுரம்: 834

நூல் தலைப்பு:
சித்தம்... சிவம்... சாகசம்

நூல் ஆசிரியர்:
© இந்திரா செளந்தர்ராஜன்

ஓவியங்கள்:
ஜெயராஜ், ஸ்யாம்.

முதற்பதிப்பு : ஜூலை, 2014

விலை : ₹ 160

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

முதன்மை உதவி ஆசிரியர்:
அ.அன்பழகன்

வடிவமைப்பு:
ப.ஷங்கர்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: books@vikatan.com

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# பதிப்புரை

சித்தர்கள் என்பவர் யார், அவர்கள் வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதைப் பற்றி இந்த நூலில் எழுதியிருக்கிறார் நூல் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன்.

சித்தர்களின் வாழ்க்கை வரலாறு, அவர்கள் வாழ்வில் நடந்த சுவையான நிகழ்ச்சிகள், செய்த அதிசயங்கள், மக்களுக்குச் செய்த நன்மைகள், மொத்தத்தில் ஆன்மிக வாழ்க்கைக்குச் செய்த நன்மைகள் ஆகியவற்றைச் சுவைபட எழுதியிருக்கிறார்.

எது சித்தம், எது சிவம், சிவமே சிவபெருமானாக வரும்போது என்ன வித்தியாசம் ஆகியவற்றைத் தெளிவாக எழுதியிருக்கிறார். ஆண்டவனான சிவபெருமானே சித்தனாக வந்து அருளிய திருவிளையாடல், பொன்னனையாளுக்கு பொன் கொடுத்தது, சித்தர்கள் ரசவாதம் செய்தது, கூடுவிட்டுக் கூடு பாய்ந்தது, நவபாஷாணத்தில் விக்கிரகம் செய்தது, ஆகாயத்தில் பறந்தது, சீன தேசத்துக்கு நொடியில் சென்றது போன்ற அதிசயங்களை எழுதியிருக்கிறார். கூடுவிட்டுக் கூடு பாய்ந்துவிட்டு பட்ட அவஸ்தைகளும் நூலில் இருக்கின்றன.

கருவூரார், பாம்பாட்டி, கொங்கணர், தேரையர், பட்டினத்தார், புலிப்பாணி, மச்சமுனி, ரோமரிஷி, பிண்ணாக்கீசர், பிராந்தர், சிவவாக்கியர், சட்டைமுனி, திருமூலர், பதஞ்சலி முனிவர் ஆகியோரைப் பற்றி அனேக விஷயங்களை ஆழ்ந்து எழுதியிருக்கிறார்.

சித்தர்கள் நம்மைப்போல் லௌகீகத்தில் நாட்டம்கொள்ளவில்லை. நம்மைப் போன்ற மாந்தர்கள் சித்தர் வழியில் நடந்தாலும் அவர்கள் அடைந்த அஷ்ட மா சித்திகளில்தான் நமக்கு வசீகரம் அதிகம். ஆனால், சித்தர்களோ நமக்கு அதிசயமான, அமானுஷ்யமான இந்த அஷ்ட மாசித்திகளில் துளியும் ஆர்வமில்லாமல் முக்தி அடைவது ஒன்றிலேயே குறியாக இருந்தனர் என்றால் எவ்வளவு மனக் கட்டுப்பாடு உடையவர்களாக இருந்திருப்பார்கள்!

சக்தி விகடனில் தொடராக வந்து பாராட்டைப் பெற்ற கட்டுரைகள் உங்கள் கைகளில் நூலாக இப்போது தவழ்கிறது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தமிழ்நாட்டில் வாழ்ந்த ஒரு சாராரான சித்தர்களைப் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். அதற்கு இந்த நூல் பயன்படும்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# முன்னுரை

ஒரு மர்ம நாவலுக்கான தலைப்போடு உங்கள் கரங்களில் இருக்கும் இந்த நூல் சித்தர்கள் குறித்த என் நூல்களில் மூன்றாவது நூல்.

நம் ஆன்மிக உலகில் புராணங்கள் வாயிலாக ரிஷிகள், முனிவர்கள் குறித்து நாம் நிறையவே அறிவோம். ஆனால், சித்தர்கள் என்பவர்கள் மிகப் பின்னால் வந்த ஒரு புதிய பிரிவினர். அதிலும் குறிப்பாக ஓர் ஆயிரம் ஆண்டுகளாகத்தான் இவர்கள் குறித்த செய்திகள் அதிகம் உள்ளன. அதிலும் ஒரு ஐநூறு ஆண்டுகளாகத்தான் இவர்கள் குறித்த சிந்தனைகள் அதிகமாயிற்று.

'யார் சித்தர்?' என்கிற கேள்விக்குப் பல வியாக்கியானங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

தன்னை அறிந்தவர்,

மனதை இல்லாமல் செய்துகொண்டவர்,

உடம்பை வென்றவர்,

முக்காலமும் தெரிந்தவர்,

அஷ்டமா சித்துக்களை உடையவர்,

- என்று பல வியாக்கியானங்கள். ஆனால், ஆன்மிக உலகில் சித்தர்கள் என்றாலே மிகத் தன்னிச்சையானவர்கள் என்பதே கருத்தாக உள்ளது. இன்னும் சிலரோ சித்து வேலை செய்பவர்கள் சித்தர் என்று அர்த்தம் கொண்டுள்ளனர்.

புராணங்களையும் வேதங்களையும் பெரிதும் மதிக்கும் மக்கள் சித்தர்களை அவ்வளவாக மதிக்கவில்லை என்றே கூற வேண்டும். ஆன்மிகத்தில் குழப்பம் உடைய சிலருக்கு இவர்கள் தேவைப்பட்டு இருக்கிறார்கள். தன்னிச்சையான போக்கு, ஆணவம் போன்ற தன்னம்பிக்கை, சுய தேடல், குறிப்பிட்ட ஒரு வழிமுறையைப் பின்பற்றாமல் தாங்களே ஒரு வழிமுறையைத் தோற்றுவித்தல்... என்று இவர்களில் பலர் பலவிதம்.

ஆனால், ஒன்றை ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். வெந்ததைத் தின்றுவிட்டு வேளை வந்தவுடன் செத்துப்போகும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நம் கோடானுகோடி பேர்களைப்போல் இவர்கள் இல்லை. நாம் மிக விரும்பும் இந்த லௌகீக வாழ்வைப் புறந்தள்ளி தங்கள் பாதையைத் தாங்களே வகுத்துக்கொண்டு அதில் இவர்கள் சென்றதைப் பாராட்டியே தீர வேண்டும். அந்தத் துணிவு அசாதாரணமானது.

அப்படிப்பட்ட இவர்களைப் பற்றி நான் வாசித்த, கேள்விப்பட்ட தகவல்களோடு என் எண்ணங்களையும் கலந்து எழுதியதே இந்த நூல்.

சக்தி விகடனில் இது தொடராக வந்து பாராட்டைப் பெற்றது. இப்போது விகடன் பிரசுரத்தில் நூலாக வந்துள்ளது. சித்தம் குறித்து ஒரு தெளிவு வேண்டும் என்பவர்களுக்கு இந்த நூல் ஏதாவது ஒரு வகையில் பெரிதும் துணையாக இருக்கும். சுருக்கமாகச் சொன்னால் சித்தக் கடலில் இந்த நூல் ஒரு துளி அளவே. மேலும் பல துளிகள் காலத்தால் என் பொருட்டு உருவாகலாம். அது தெய்வ சித்தம்!

அன்புடன்

இந்திரா சௌந்தர்ராஜன்

மதுரை

18.5.2014

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



## இந்திரா சௌந்தர்ராஜன்

சித்தர்கள் பற்றிய சிந்தனை தோன்றும்போது அது தொடர்பானவர்களில் இந்திரா சௌந்தர்ராஜன் நினைவும் பலருக்கு ஏற்படும். அந்த அளவு சித்தர்கள் குறித்து ஆய்வுசெய்து, அவர்களை நாவல்களிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் இடம் பெறச் செய்தவர்.

குறிப்பாக 'மர்ம தேசம்' தொடரையும் பொதுவாக 'சிவமயம்', 'ருத்ர வீணை', 'யாமிருக்க பயமேன்?' போன்ற தொடர்களையும் கூறலாம். இதில் 'சிவமயமும்', 'ருத்ர வீணை'யும் புத்தக வடிவிலும் பெரிதும் வரவேற்கப்பட்டவை. லட்சக்கணக்கான பிரதிகள் என்னும் உயரத்தைத் தொட்டவை.

120 பத்திரிகைத் தொடர்கள், 390 மாத நாவல்கள், 750 சிறுகதைகள், தொலைக்காட்சியில் 3,500 எபிசோட்கள் எழுதி இருக்கிறார். சொற்பொழிவும் செய்கிறார். பொதிகை தொலைக்காட்சியில் ஆழ்வார்கள், நாயன்மார், சித்தர்கள் குறித்த இவருடைய சொற்பொழிவுகள் 200 எபிசோட்களைக் கடந்தது.

பிரபல டி.வி.எஸ். நிறுவனங்களில் ஒன்றான சுந்தரம் ஃபாஸனர்ஸ் நிறுவனத்தின் குடும்ப இதழுக்கு ஆசிரியர். 'சித்தம், சிவம், சாகசம்' இவருடைய 160-வது நூல்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 1

'பொன் வெள்ளி செய்கிறவன் பெரியோன் அல்ல
புகழான அஷ்டசித்தி பெரியோன் அல்ல
முன்னின்ற வைத்தியனும் பெரியோன் அல்ல
மூச்சடக்கி எழுப்பியவன் பெரியோன் அல்ல
சின்னமுள்ள குழியிருப்போன் பெரியோன் அல்ல
திறமுடனே கெவனமிட்டோன் பெரியோன் அல்ல
தன்னிலையை அறிந்தவனே பெரியோனாவான்
கந்தவேள் உரைத்ததெனக் கண்டுகொள்ளே!'

- சுப்ரமணியர் சிவயோகப் பாடல்

எது சித்தம்?

கேள்வியுடனேயே தொடங்குவோமே...!

இப்படி நான் கேட்க, நீங்களும் வாசித்திட... நமக்கிடையே பல எண்ணங்கள் ஏற்படுகின்றதே.... அதுதானா?

எண்ணக் கூட்டம்தான் சித்தம் என்றால், இந்த உலகில் வாழும் அவ்வளவு மனிதர்களுக்குமே சித்தம் இருப்பதால், சித்தர்கள் என்றாகிறார்கள்.

எல்லோரும் சித்தர்கள்தான் என்பது பொதுமைக்குப் பொருந்துகிறது. ஆனால், வலிமைக்குத் துளிக்கூடப் பொருந்த மறுக்கிறதே?!

அப்படியானால், வலிமைமிக்க எண்ணம் கொண்டோரை சித்தர் எனலாமா?

எனலாம்தான்! ஆனாலும், அப்போதும் அதில் ஒரு பரிபூரணம் இல்லாததுபோல் தோன்றுகிறது. வலிமையான சிந்தனை உடையவர்களை சிந்தனையாளர்கள் என்கிறது உலகு! அப்படியானால் சித்தர்கள்..?

சித் எனில் அறிவு; அறிவதையே வாழ்வாகக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கொண்டவர்கள்; அறிந்ததைக் கொண்டு தங்க ளையும் அறிந்தவர்கள்; அப்படி அறிந்ததாலே தங்களை அடக்கி ஆண்டவர்கள் என்று சித்தர்கள் பற்றி எண்ணும்போது, அது விரிந்துகொண்டே போகிறது.

குறிப்பாக, சித்தமாகிய எண்ணத்தை - எண்ணக் கூட்டங்களின் தொகுப்பாகிய மனத்தைக் குழப்பம் இல்லாமலும், ஒளியோடும், தெளிவோடும் வைத்திருப்பவர்களே சித்தர்கள் என்று ஒரு விளக்கமும் இவர்கள் வரையில் தரலாம். கூடவே, உடம்பையும் கல்ப மூலிகை களாலே முதிரா வண்ணம் பார்த்துக் கொண்டார் கள்; அதை ஆட்டிவைத்தார்கள்.

மனத்துக்குப் பஞ்ச பூதச் சிறை கிடையாது. உடம்புக்கு அது உண்டு. ஓர் அறைக்குள் வைத்து ஒருவரைப் பூட்டிவிட்டால், அறைக் கதவு திறக்கப்படும்வரை அந்த உடம்பு அந்த அறைக்குள் ஒரு சிறைக் கைதி போல அடைந்து கிடந்தே தீர வேண்டும். ஆனால், மனத்தை இப்படி அடைக்க முடியாது. மனத்தால் இந்த உலகை மட்டுமல்ல, அதற்கு அப்பாலும் சுற்றிவர முடியும்.

எனக்குத் தெரிந்து சித்தர் ஒருவர் நான்கு பேருடன் பேசிக் கொண்டிருந்தபோது, 'இதோ, ஒரு நிமிடத்தில் வந்துவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு வெளியேறி னார். இயற்கை உபாதைக்காக விலகிச் செல்கிறார் என்று கருதினோம். ஆனால், அந்த நொடிகளில் அவர் இமயமலைச் சாரல் பகுதியில் இருக்கும் அமர்நாத் எனும் ஸ்தலத்துக்கு போய், அங்கு அமர்நாத லிங்க தரிசனம் செய்பவர்களுடன் கூடி நின்று தரிசித்துவிட்டு, அவர்களிடமும் 'இதோ வருகிறேன்' என்று கூறிவிட்டுத் திரும்ப எங்களிடம் வந்துவிட்டார்.

அப்படி வந்தவர், 'அமர்நாத்தில் இன்று அவ்வளவு பனிப் பொழிவு இல்லை; தரிசனமும் நன்றாகக் கிடைத்தது' என்று பேச்சுவாக்கில் கூறப் போய்த்தான் எங்களுக்கு அவருடைய அந்த சாகச சஞ்சாரம் தெரியவந்தது.

இதைக் கேட்பதற்கு ஒரு மாயாஜாலக் கதைபோல இருக்கும். ஆனால், இந்த மாதிரி அற்புதங்கள் அல்லது ஜாலங்கள் சித்தர் வரையில் அற்பங்கள்!

நாமறிந்த சத்ய சாயிபாபா வாழ்வில் இந்த மாதிரி விஷயங்கள் சர்வ சாதாரணம்! புட்டபர்த்தியில் எல்லோருக்கும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தரிசனம் தந்தபடி இருக்கும் அவர், அமெரிக்காவில் ஆபரேஷனுக்காக 'அட்மிட்' ஆகி இருக்கும் அவரது பக்தருக்கும் காட்சி புரிந்திருக்கிறார்.

இதற்கு என்ன சாட்சி? இதை எதன் அடிப்படையில் நம்புவது?

இப்படி நம்முள், இந்த மாதிரியான அமானுஷ்யங்களைக் கேள்விப்படுகையில் கேள்வி எழும். விஞ்ஞான அடிப்படையில் இந்த அமானுஷ்யங்களைக் கேள்வி கேட்க மட்டுமே முடிகிறது. நம்ப முடியவில்லை. அதற்குக் காரணமும் இருக்கிறது. எப்போதும் அற்புதங்கள் ஒரு கூட்டத்திடமோ, பலர் முன்னாலோ நடந்ததே இல்லை. அது, ஒரு தனி மனித அனுபவமாகவே இருப்பதுதான் காரணம்!

இந்த அனுபவம், நாம் தாயின் வயிற்றில் அந்தத் தாயே முதலில் அறிந்திடாத நிலையில் கருக்கொள்வதுபோல் நிகழ்ந்துவிடுவதே காரணம்.

கடவுளைப் பற்றிச் சொல்லும் போது ஒரு கருத்தைச் சொல்வார்கள்... 'அது இருக்கிறது; இல்லாமலும் இருக்கிறது' என்பார்கள். இது என்ன பதம்? இருக்கும் ஒன்று எப்படி இல்லாமல் இருக்க முடியும் என்று நாமும் மண்டையைப் பிய்த்துக்கொள்வோம். நாமேகூட கனவுகள் இல்லாத தூக்கத்தில், இருந்தும் இல்லாதுதானே போகிறோம்?

அமானுஷ்யம் பற்றிச் சிந்திக்காமல் போனாலே இப்படித் தான் கேள்விகள் முளைக்கின்றன. பளிச்சென்று ஓர் அமானுஷ்யத்தைக்கூட விளங்கிக்கொள்ளவோ, நம்பவோ முடியவில்லை.

நம்புவதற்கு நிறையத் திராணி தேவைப்படுகிறது. விசாலமான பார்வை, சலியாத மனது, அவநம்பிக்கை துளியும் கலப்பில்லாத முழுமையான நம்பிக்கை எனப் பல சமாசாரங்கள் தேவைப் படுகின்றன. அப்படி இருந்தாலே இதை ஓரளவுக்காவது புரிந்துகொள்ள முடிகிறது. புலன்களுக்குப் புலனாவதை மட்டும்தான் நம்ப முடியும் என்றால், கண்ணுக்குத் தெரியாத மின்சாரம், காற்று ஆகியவற்றையும் நம்ப முடியாது. இங்கே சற்று வளைந்து கொடுத்து, கண்ணுக்கு நேராகப் புலனாகாவிட்டால் என்ன, மறைமுகமாகப் புலனானால்கூட நம்பலாம் என முன் வந்து, இவற்றை நாம் உணர்வுரீதியில் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். ஆக, பார்ப்பது அல்லது ஐம்புலன்களில்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஒன்றால் உணர்வது என்பதுதான் இன்று நம் நம்பிக்கையின் அளவு. சித்தம் இந்த நம்பிக்கை அளவுக்குள் சில நேரம் அகப்படுகிறது; பல நேரம் விலகிவிடுகிறது. நன்றாகவே கண்ணாமூச்சி விளையாடுகிறது.



இதுவே இப்படி என்றால், இந்தச் சித்தத்தின் மூலமான சிவம், 'அன்பெனும் பிடிக்குள் மட்டுமே நான் அகப்படுவேன்; மற்றபடி என்னை அறிவதும் புரிந்துகொள்வதும் பெரும்பாடு' என்கிறது.

ஒரு புராணக் கதையின்படி, இந்தச் சிவமானது அந்தத் திருமாலுக்கும், அயனுக்குமேகூட வசப்படவில்லை. சிவத்தின் அடி தேடிச் சென்றாராம் திருமால்; முடி தேடிச் சென்றாராம் அயனாகிய பிரம்மா.

முடியிலிருந்து உதிர்ந்து விழுந்த ஒரு தாழம்பூவை பொய் சாட்சியாகக் கொண்டு வந்து நிறுத்தி, சிவபிரானை அவர் ஏமாற்ற முனைய, அது கண்டு வெகுண்ட சிவபிரான், அயனுக்கு வணக்கத்துக்குரிய கோயிலே இல்லாது போகக்கடவது என்று சபித்துவிட்ட கதை நாமறிந்ததுதான்! இப்படிப்பட்ட சிவத்தைதான் 'ஆதி சித்தன்' என்கிறது சித்தர்கள் உலகம்.

சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி

சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி

-என்று, ஔவையும் தன் பாடல் ஒன்றில் வழிமொழிகிறாள். திருமூலரும் தன் திருமந்திரப் பாடல் ஒன்றில்,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நாபிக்கும் கீழே பன்னிரண்டங்குலம்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிகிலீர்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிந்தபின்
ஈசன் கூவிக்கொண்டு அமர்ந்திருந்தானே.

-என்கிறார்.

செகமெலாஞ் சிவமென்றே யறிந்தோன் சித்தன். சிந்தை தெளிந்திருப்பான் அவனே சித்தன்.

-என்னும் வான்மீகர் ஞானப் பாடல் ஒன்று, இந்த உலகையே சிவமாகப் பார்ப்பவர்கள் சித்தர்கள் என்கிறது.

நம்மில் ஆறு வழிமுறைகள் உள்ளன. ஆதிசங்கரர்தான் இந்த ஆறு வழிமுறைகளையும் வகுத்துத் தந்தவர். 'சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்யம், சௌரம்' என்கிற இந்த ஆறில், ஏதாவது ஒரு வழியில் நாம் நமது ஆத்மாவைக் கடைத்தேற்றிக்கொள்ளலாம்.

சைவமென்றால் சிவன்,

வைணவமென்றால் விஷ்ணு,

சாக்தம் என்றால் பராசக்தி,

கௌமாரம் என்றால் முருகன்,

காணாபத்யம் என்றால் கணபதி,

சௌரம் என்றால் சூரியன்.

- இந்த ஆறு வழிகளிலுமே பல சித்த புருஷர்களுக்கு ஈடுபாடில்லை. அதே நேரம், சிவத்தை இவர்கள் மறுத்து விடவுமில்லை. பராசக்தி, கணபதி, முருகனையும் மறுக்க வில்லை.

'இந்த வழிமுறைகள் என்பது பக்தி செய்வோர்க்கு! எங்களுக்கு அது தேவையில்லை. அது புறத்தே தேடுவது போன்றது. நாங்கள் எங்கள் அகத்துக்குள்ளேயே அவனைத் தேடிக் கண்டு கொண்டவர்கள்' என்பதுபோல் இருக்கிறது சித்தர்களின் போக்கு. இதனால், சித்த மார்க்கம் என்ற ஒரு வழிமுறையே உருவாகிவிட்டதுதான் விந்தை. ஆனால், இந்த வழிமுறை அத்தனை எளியதோ, சுலபமாகப் பின்பற்ற முடிந்ததோ அல்ல.

ஆதிசங்கரர் காலத்துக்குப் பின்னரே அநேக சித்த புருஷர்கள் தோன்றி, வரலாற்றிலும் பதிவாயினர். இவர்களை என்ன

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காரணத்தாலோ 18 என்னும் ஒரு கணக்குக்குள் நம் சான்றோர்கள் அடக்கிவிட்டனர். எவ்வளவோ எண்கள் இருக்க, 18-க்குள் சித்தர்களை அடக்கியது குறித்து ஆய்வு ஒருபுறம் நடந்தபடி உள்ளது.

அரனைப் பாடி உயர்ந்திட்டார் அறுபத்து மூவர்

அருளைப் பாடி மிகுந்திட்டார் அருட்பெருஞ்சோதி

அரியைப் பாடி சிறந்திட்டார் ஆறிரண்டாழ்வார்

அதனைப் பாடி நிறைந்திட்டார் அறுமூன்று சித்தர்...

-என்கிற ஒரு பாடலும் சித்தர்களைப் 18-க்குள் அடக்கவே பார்க்கிறது. ஆனால், எண்ணிறந்த சித்தர்கள் வாழ்ந்துவிட்டுச் சென்றுள்ளனர். இவர்களில் பால வர்க்கம், மூல வர்க்கம், கைலாய வர்க்கம் எனப் பிரிவுகள் உண்டு.

முருகனை குருவாகக் கொண்டவர்கள் பால வர்க்கம், திருமூலரை குருவாகக் கொண்டவர்கள் மூல வர்க்கம், அந்த ஆதிசிவனையே குருவாகக் கொண்டவர்கள் கயிலாய வர்க்கம். இதுபோக, யோக, காய, ரசவாத சித்தர்கள் என்று ஒரு கூட்டமும் உண்டு.

எதனாலோ ஒரு சித்தன்கூட காக்கும் கடவுள் திருமாலைப் பின்பற்றவில்லை. இடைக்காடரையும், திருமழிசையாரையும் இம்மட்டில் திருமாலடியாராகச் சிலர் சொல்வதன் பின்னே நிறையவே கேள்விகள் உள்ளன. அறுதியிட்ட ஆதாரங்கள் இல்லை. அவ்வளவு ஏன்... பதினெட்டு சித்தர்கள் எனப்படும் சித்தர்களிலேயே பலருக்கு அவர்களின் பிறப்புக்குப் பின்னால் உள்ள விஷயங்கள் பெரும் மௌடீகமாகவே உள்ளன.

ஆனால், இவர்கள் சொல்லிச் சென்ற விஷயங்கள், பாடிச் சென்ற பாடல்கள், இவர்கள் புரிந்த சாகசங்கள் எல்லாமே, மானுடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் அறிய வேண்டியவை.

உட்கார்ந்த இடத்தில் உடம்பை அளந்து, ஒரு நாளைக்கு ஒரு மனிதனானவன் 21,600 முறை சுவாசிக்கிறான் என்பதிலிருந்து... அண்டத்தில் சுற்றும் கோள்களில் புகுந்து, எப்போது மழை பெய்யும், எப்போது பயிர் செழிக்கும் என்பது வரை அவர்கள் சொன்னதும்.... அதன்படியே நடப்பதும் ஆச்சரியமான விஷயங்கள்!

இதனினும் மேலான ஆச்சரியங்களை அள்ளித் தருபவர்கள் அவர்கள். இறந்தவரை உயிர்ப்பிப்பர், கூடுவிட்டுக் கூடு பாய்பவர், செம்பைப் பொன்னாக்குபவர், நீர் மேல் நடப்பவர்,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆகாய வீதியில் பறப்பவர், ஆறடி உயர தூலத்தை அணு போல் சிறிதாக்குபவர், அணு போன்றதை மலை போலப் பெரி தாக்குபவர்... இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவற்றுக்குள் புகுந்து வியப்பதோடு, இவர்களை விளங்கிக் கொள்ள முற்படவே... இந்த சித்தம் சிவம் சாகசம்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 2

---

சிவாயவசி என்னவும் செபிக்க இச்சகம் எலாம்
சிவாயவசி என்னவும் செபிக்க யாவும் சித்தியாம்
சிவாயவசி என்னவும் செபிக்க வானம் ஆளலாம்
சிவாயவசி என்பதே இருதலைத் தீ ஆகுமே!

- சிவவாக்கியர்

---

நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது சித்தர்களின் இஷ்ட தெய்வம் பரமனாகிய சிவபிரான்தான். இப்பெருமானை நாம் லிங்க வடிவமாகத்தான் இந்த பூமி எங்கும் காண்கிறோம்.

ரூபமாக என்றால், நடராஜ தோற்றமே புலனாகிறது. இந்தத் தோற்றம் குறித்து ஆணித்தரமாக ஒரு கருத்தும் சான்றோர்களிடம் நிலவுகிறது. நடராஜ தோற்றம், உலகின் இயக்க கதியை உணர்த்துகிறதாம். அதன் ஒவ்வொரு நெளிவுசுளிவுக்குப் பின்னாலும் ஒரு பெரும் பொருள் இருக்கிறதாம்.

ஈசனின் புருவம் வளைந்தால், அது கடலின் மேல் விளையும் புயல்; பார்வை பதியும் இடம், விளையும் வயல்; விரல்களின் வளைவில் காற்றின் வீச்சு... மொத்தத்தில் நடராஜ நாட்டியத்தின் முத்திரை ஒவ்வொன்றுமே பூவுலகின் பலவித மாற்றங்களைக் குறிக்கிறது. இந்த மாற்றங்களுள், நாம் பொருள் கொள்ளும் வளர்ச்சியும் உண்டு; நாம் அச்சப்படும் வீழ்ச்சியும் உண்டு.

நடராஜரின் தோற்றமே ஒரு கருத்துப் புதையல். இந்த வடிவம் எங்கே உள்ளதோ, அங்கே இயக்க கதி சுறுசுறுப்பாக இருக்குமாம். சுறுசுறுப்பும் விறுவிறுப்பும் இல்லாத மிக மந்த கதியிலான ஒரு வீட்டுக்குள் நடராஜ சிலாரூபம் நுழைந்து அமர்ந்த மாத்திரத்தில், அந்த இல்லத்துக்குள் ஒரு விசைப்பாடு பலவிதமான வினைகளாக செயலாற்றத் தொடங்குகிறது.

ஓர் ஆச்சரியமான தகவல் என்னவென்றால், உலகில்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அதிகம் செய்யப்பட்ட சிலாரூபம் ஸ்ரீநடராஜ ரூபம்தான்; அதிகம் கடத்தப்பட்டதும் நடராஜ ரூபமே! அதிகம் ரசிக்கப் பட்டுக்கொண்டிருப்பதும் நடராஜ ரூபம்தான். புரிந்தும் புரியாமல் தொடர்ந்துகொண்டே இருப்பதும் நடராஜ ரூபம்தான்!

ஆனால், பூஜிக்கவும், அபிஷேக ஆராதனைக்குமாகவும் லிங்க ரூபமே உள்ளது. இதைத்தான் சித்த புருஷர்களும் இறுகப் பற்றிக்கொண்டனர். அதற்கான காரணத்தைப் பார்த்தால், ஒரு பிரமிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

வேதங்களே நமக்கு ஆதாரமானவை. அதில், ரிக் வேதமே முதல் வேதம். இது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என்பதை மேல்நாட்டு அறிஞர்களான வில்சன், மேக்ஸ்முல்லர் ஆகியோர் தங்களது ஆய்வில் உறுதிப்படுத்தியுள்ளனர். அதாவது, இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு எண்ணூறில் இருந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது ரிக் வேதம் என்பது அவர்களின் ஆய்வுத் தீர்மானம்.

இந்த ரிக்வேதம் லிங்க வழிபாட்டை வலியுறுத்துவதுடன், அதுவே உன்னதமானது, உத்தமமானது என்றும் கூறுகிறது. ஆனால், நம் சான்றோர் கூற்றுப்படி லிங்கத் தோற்றமும், வழிபாடும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நிகழ்ந்து வருகின்றன. மூவாயிரம் என்பது ஒரு சுலபமான கணக்கு!

அதாவது... நால் வகை யுகங்களை இந்தப் பூவுலகம் காண வேண்டும். அதன்படி, கிருத யுகமும், திரேதா யுகமும், துவாபர யுகமும் முடிந்து, இப்போது கலி நடக்கிறது. அதிலும் 5,113 வருடங்களைக் கழித்துவிட்டோம். நான்கு யுகங்களுக்கான மொத்த காலம் என்பதோ 43,20,000 வருடங்கள். இதில் மூன்று யுகங்களின் கணக்கோடு, நடப்பு கலியுக கணக்கையும் சேர்த்தால், தோராயமாக முப்பது லட்சம் ஆண்டுகளை இந்த பூமி பார்த்துவிட்டது.

இந்த பூமி தோன்றும்போதே வேதங்களும் தோன்றிவிட்டன என்றால், வேதங்களுக்கான காலமும் முப்பது லட்சம் ஆண்டுகளைக் கடந்தாகிவிட்டது. இந்தக் காலங்கள்தோறும் லிங்க வழிபாடு நிகழ்ந்தே வந்திருக்கிறது.

எதற்காக இந்த லிங்க வடிவம் எனும் கேள்விக்கு கோயிற் புராணத்தின் ஒரு பாட்டில் பதில் ஒளிந்திருக்கிறது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வாக்கொடு மனமிறந்த மன்னவனெங்கு மாகி
நீக்கற நிறைந்தானேனு நிகழ்தரா ததனான்
முத்தி போக்கெளிதல்ல வென்றப் புனிதனே
புந்தி செய்தேம் பாக்கிய வகையா வெண்ணில்
பதிமிகு பாரில் வைத்தான்

-எனும் அந்தப் பாடலின் பொருள், உருவ வழிபாட்டுக்கே இலக்கணம் சொல்கிறது.

சிவபெருமான் எங்கும் நிறைந்திருக்கிறான். அவன் இல்லாத இடம் இல்லை. விறகுக்குள்ளே தீயாக, பசுவின் பாலுக்குள் நெய்யாக, எள்ளுக்குள் எண்ணெயாக இருப்பது எல்லாமும் அவன்தான். ஆனால், இந்த உண்மையை ஞானத்தாலேயே உணர முடியும். மாயை மிகுந்த உலகில், அறிவதாகிய அறிவே முன் தோன்றி செயலாற்றும். அதனால், அறிவதற்கே இங்கே முதலிடம். உணர்வது என்பது இரண்டாம் பட்சமே!

இதுவே உலக இயற்கை என்றால், உயிர்கள் முக்தியடைவது இயலாதே? பாவ - புண்ணிய சுழற்சியிலிருந்து விடுபடாமல், பிறந்தும் இறந்தும், இறந்தும் பிறந்துமாய் அல்லவா இருப்பர்? உயிர்களை மீட்டெடுக்க வழிபட வேண்டுமே?

அதற்காகவே, பூவுலகில் சிவபெருமான் எண்ணற்ற ஸ்தலங்களை உருவாக்கி அருளினானாம். ஸ்தலங்களில் அவனது ரூபம் லிங்க வடிவம் ஆகும். விக்கிரக ஆராதனையைவிட, லிங்க வடிவத்தை ஆராதிப்பதே மோட்ச கதிக்கு மிக உசிதமானது என்கிறது ரிக்வேதம். இதற்குச் சான்றாக, ஒரு கதை மகாபாரதத்தில் காணக் கிடைக்கிறது.

பாரத யுத்தம் மூண்டு, 18 நாட்கள் நடந்ததை அறிவோம். அதில் ஒரு நாள், கௌரவர்கள் சார்பாக பாண்டவர்களோடு யுத்தம் புரிகிறார் அஸ்வத்தாமன். அவரை வெல்வது எளிதல்ல. அவரிடம் உள்ள அஸ்திரங்களில் அக்னி அஸ்திரம் ஒன்று போதும்; மொத்த உலகையே சாம்பலாக்கிவிட முடியும். இது பாண்டவர்களுக்கும் தெரியும். குறிப்பாக, கிருஷ்ண பரமாத்மா நன்கறிவார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



அன்றைய யுத்தத்தில், அஸ்வத்தாமா அந்த அஸ்திரத்தை இறுதியாகப் பிரயோகித்தார். மொத்த பாண்டவ சைன்யமும் சாம்பலாகப்போகிறது என்றே எல்லோரும் நினைக்க... கிருஷ்ண பரமாத்மா, பதிலுக்கு பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகிக்கும்படி அர்ஜுனனைப் பணித்தார். சிவனாரைக் குறித்து தவமிருந்து அர்ஜுனன் பெற்றதே பாசுபதாஸ்திரம். அது, அக்னியாஸ்திரத்தை அடக்கிவிடுகிறது. அஸ்வத்தாமனிடம் திகைப்பு!

அக்னியாஸ்திரத்தை மிஞ்சும் ஓர் அஸ்திரம் இருக்கமுடியுமா என்று, பின்னர் அவன் வியாசரிடம் கேட்க, அவர் பதில் கூறத் தொடங்கினார்: "அஸ்வத்தாமா! நீயும் அர்ஜுனன் போன்று மிகச் சிறந்த வீரனாக இருந்தபோதிலும், அவன் ஈஸ்வரனின் லிங்க ரூபத்தை தியானித்து தவம் செய்து, பாசுபதாஸ்திரத்தைப் பெற்றான். நீயோ அந்தப் பெருமானை விக்கிரக ஆராதனை புரிந்தாய். லிங்க ரூபத்தில் சக்தியும் பீட கதியில் கிடக்கிறாள். ஸ்தூபம் நாதமாக விளங்குகிறது. எனவே, சிவபெருமான் லிங்க ரூபத்தில் வழிபாடு உடையவர்களை, வரம் பெற்றவர்களை முந்தி ஆட்கொள்கிறான். அதனாலேயே அர்ஜுனனை உனது

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அஸ்திரத்தால் வெல்ல முடியவில்லை!" என்றாராம்.

மகாபாரதத்தில் கிடைக்கும் இந்தச் செய்திப்படி லிங்க வடிவமே வழிபாட்டுக்கு உரியது என்பது புலனாகிறது.

இதன்படி, லிங்கம் என்பது மணியாகும். மந்திரம் என்பது 'நமசிவாய' எனும் பஞ்சாட்சரமாகும். விபூதியே மருந்தான ஔஷதமாகும். இதையே 'மணி மந்திர ஔஷதம்' என்பார்கள். சித்த புருஷர்களும் மிக எளிதாக, மணிமந்திர ஔஷதமாக 'லிங்கத்தை- பஞ்சாட்சரத்தை- விபூதியை'க் கொண்டார்கள்.

இந்த லிங்கமும் ஏழு வகைப்பட்டு, இந்த உலகில் வணங்கப் பட்டு வருகிறது. 'சுயம்பு லிங்கம், தேவி லிங்கம், திவ்ய லிங்கம், ஆர்ஷக லிங்கம், மானுஷ லிங்கம், ராட்சஸ லிங்கம், ஆசுர லிங்கம்' என்று வகைப்பட்டு கிடக்கும் இந்த லிங்கங்களில், பன்னிரண்டு ஜ்யோதிர் லிங்கங்கள் சுயம்பு லிங்க வகையைச் சேர்ந்தவை. இந்த ஜ்யோதிர் லிங்கங்களை நினைத்த நேரம் மனத்தில் நிறுத்தி தியானிக்கலாம். இதுவல்லாமல், பஞ்ச பூத மகா லிங்கங்கள் ஐந்து உள்ளன. காஞ்சி, திருவானைக்கா, திருக்காளத்தி, திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய தலங்களில் இந்த பஞ்ச பூத மகாலிங்கங்கள் உள்ளன.

லிங்க வடிவத்தையே தேவாதி தேவர்களும் வணங்கி, வரங்களைப் பெற்றுள்ளனர். காஞ்சி ஏகாம்பரேஸ்வரரை வணங்கியே அன்ன வாகனத்தைத் தனதாக்கிக்கொண்டான் பிரம்மன். இந்திரன், அக்னி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய அஷ்டதிக் பாலகர்களும் ஸ்ரீசைலம், திருவண்ணாமலை, கேதாரம், கோகர்ணம், திருவானைக்கா, திருக்காளத்தி, சித்த வடம், திருவாரூர் ஆகிய தலங்களில் உள்ள ரூபங்களை வணங்கியே தங்களுக்கான ஆதிபத்தியத்தை அடைந்தனர். சூரியனும் சந்திரனும் தினமும் மகா மேருவையே லிங்கமாகக் கருதி வலம் வந்து வணங்குகின்றனர். மற்ற கோள்களான செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகியோர் திருவிடைமருதூர், மதுரை, ராமேஸ்வரம், திருவெண்காடு, வேதாரண்யம் ஆகிய தலங்களில் சிவபெருமானை வணங்கி, தங்களின் ஆதிபத்தியத்தை அடைந்தனர். சப்தரிஷிகள் சிதம்பரத்தில் வழிபட்டனர். துருவன் காசியில் வழிபட்டான். ஆதிசேஷன் கும்பகோணத்தில் பூஜித்தான்.

இந்த வரிசையில்தான் சித்தர்களும் வருகின்றனர்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சிவபெருமானை வழிபடுவோரில் தேவர்கள், அஷ்டதிக் பாலகர்கள், கிரகங்கள், சப்தரிஷிகள், அசுரர்கள், யட்சர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள் என்கிற வரிசையில்... இறுதியில் வந்து சேர்ந்தவர்களே நவநாயக சித்தர்கள்.

மற்றவர்கள் தங்களுக்கான தேவைக்கு பூஜித்து வரம் பெற்றதுடன் மகிழ்ந்த நிலையில், சித்த புருஷர்கள் மட்டும் சற்றே விதிவிலக்காக சிவபிரானிடம் வரங்களைக் கோராமல், சக்தி கொடு, முக்தி கொடு, ஆயுதம் கொடு, பட்டம் கொடு, பதவி கொடு என்று கோரிக்கை வைக்காமல், தாங்கள் உணர்ந்ததையும் அறிந்ததையும் கொண்டு மானுடர்களுக்கு வழிகாட்ட எண்ணினர். இதை ஒரு நோக்கமாகக் கொண்டு அவர்கள் செயல்படவில்லை; போகிற போக்கில் செய்தனர்.

சிலர் சொல்லிச் செய்தனர். சிலர் சொல்லாது செய்தனர். இன்னும் சிலரோ 'முடிந்தால் எங்கள் வாழ்வைப் பார்த்துப் புரிந்து கொள்' என்பது போல, எதுவும் கூறாமல் வாழ்ந்து சென்றனர்.

கூட்டிக் கழித்து, வகுத்துப் பெருக்கி ஆழ்ந்து சிந்தித்தால் தேவரால், முனிவரால், ரிஷிகளால், திக்பாலர்களால், கோள்களால், மற்றுமுள்ள யட்சர்கள், கிம்புருடர்கள், நாகர்கள், ராட்சஸர்கள் என்று சிவபிரானின் லிங்க வடிவை வழிபாடு செய்தவர்களால், லிங்கத்தின் மகாத்மியம் மட்டுமே நமக்குத் தெரியவந்தது; அவர்கள் பக்தியும் பணிவும் தெரியவந்தன. ஆனால், சித்தர்களால் மட்டுமே உடல், உள்ளம், ஆன்மா முதல் அண்டம், பிண்டம், பேரண்டம் வரை மானுட உலகுக்கு தெரிய வந்தது.

அது மட்டுமா?

'கேளடா மானுடா' என அவர்கள் பாடிய பாடல்கள், நமது மூச்சுக் காற்றில் பத்து விதம் உள்ளது என்றது. நாடிகளைக்கூடப் பகுத்து... பித்தம், வாதம், சிலேத்துமம் என்று அடையாளப் படுத்தினர்.

தாவரங்களில் வரமானது எது என்று அறிந்து, அதைத் தங்கள் கைகொண்டு பறித்து, அதன் மூலத்தை அறிந்து, அதுவே மூலிகை என்றனர். அதில் காயகற்பம் செய்து உண்டு, தங்கள் உடம்பை கல்ப தேகமாக்கிக் கொண்டு, மனித வாழ்வின் பெரும் சவாலான மூப்பு - பிணி - சாக்காட்டை சாட்டையால் அடித்து விரட்டினர்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இதெல்லாம் போதாது என்று அஷ்டமா ஸித்தியை அடைந்து காட்டினர். மொத்தத்தில், மானுட சிவங்களாகவே நடமாடினர்; நடமாடிக்கொண்டும் இருக்கின்றனர்.

சிவத்துக்கும் அவர்களுக்குமான தொடர்போடு, அற்பமாக சாகசங்கள் பல செய்தனர். இந்த சாகசத்தை முதன்முதலாய்த் தொடங்கி வைத்தவனே ஈசன்தான். அவன் மண்மிசை திருவிளையாடல் புரிய வந்தபோது எடுத்த முதல் வடிவமும் சித்த வடிவம்தான்!

எண்ணிறந்த வடிவங்கள் பல இருக்க, பூஜைக்கு லிங்கமாகத் தோன்றியவன், பூமியில் முதலில் சித்தனாய், புலவனாய், பின்பு வேடனாய் என்றே வந்தான். அவனே சித்தனாய் வந்து புரிந்த சாகசத்தைப் பார்ப்போமா?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 3

கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்

கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்;

ஒரு சிங்கம் முதுகின் மேற்கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலின் இரதம் வைத்து ஐந்து உலோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாது உலகத்து உலவலாம்
விண்ணவரை ஏவல் கொள்ளலாம்
சந்ததமும் இளமையோடு இருக்கலாம்
மற்றொரு சரீரத்தினுள் புகுதலாம்
சலமேல் நடக்கலாம்; கனல்மேல் கிடக்கலாம்
தன்னிகரில்லா சித்தி பெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது! சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேஜோ மயானந்தமே!'

- தாயுமானவர்

சித்தனாய் வந்த சிவபெருமானின் முதல் சாகசம் மதுரையம் பதியில்தான் நடந்தது. இதனை வரலாறும் திருவிளையாடற் புராண நூலில் அழகாய் பதிவு செய்துள்ளது. முன்னதாக, சில சிந்தனைப் பகிர்வும் இவ்வேளையில் அவசியமாகிறது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



மதுரை திருவிளையாடலுக்குப் பேர் பெற்ற நகரம். ஒன்றல்ல இரண்டல்ல... 64 திருவிளையாடல்களை இந்த மண்ணில் நிகழ்த்தினார் சிவபெருமான்.

மனித வாழ்வில் வெற்றி - தோல்வி அறிமுகமாவது விளையாட்டுகளில்தான். கூர்ந்து கவனித்தால்... அதனுள் ஒரு நுட்பமான உண்மை ஒளிந்திருக்கும். விளையாட்டில் நாம் அடையும் வெற்றியோ தோல்வியோ நிலையானதல்ல. அது மாறி மாறி வரும். எனவே, வெற்றி பெற்றவரின் சந்தோஷமும் சரி, தோல்வியுற்றவரின் துன்பமும் சரி... தற்காலிகமான ஒன்றே!

இதனால் கர்வப்படுவது என்பதோ, சோர்ந்துவிடுவது என்பதோ ஏற்படுவது இல்லை. விளையாட்டில் ஏற்படும் இந்த அனுபவமே, வாழ்வில் ஏற்படும் இன்ப - துன்பங்களையும் 'இதுவும் நிலையானது அல்ல; மாறிவிடும்' என்று

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எடுத்துக்கொண்டு நிதானமாய் மனிதர்களை நடக்கவைக் கிறது. மனித வாழ்வின் சாதாரண விளையாட்டுக்கே, இப்படி மனித மனங்களை ஆற்றுப்படுத்தும் ஆற்றல் இருக்கும்போது, மொத்த மனித உயிர்களையும் ஆற்றுப்படுத்த எண்ணும் இறைவனின் விளையாட லில் எத்தனை மேன்மை இருக்கும்? அத னாலேயே அவனது விளையாட்டை 'திரு விளையாடல்' என்கிறோம். அதில் ஒரு விளையாட்டை அவன் சித்தனாக வந்து செய்ததில்தான், நாம் சிந்திக்க நிறையவே உள்ளது.

சிவபெருமான் சித்தனாக வரும்முன் மதுரையில் எவ்வளவோ அருட்செயல்கள் நடந்துள்ளன. அருளாளர்களும் முனிவர் களும் ரிஷிகளும் அந்த நகரில் வலம் வந்துள்ளனர். உலகிலேயே மானுடர்களின் மொழிக்கென்று இலக்கணம் வகுக்கப்பட்டு, சங்கம் அமைக்கப்பட்டதெல்லாமும் மதுரையில்தான். இப்படிப்பட்ட மதுரையில் எவ்வளவோ சாகசங்களும் நடந்துள்ளன. அவற்றை அருள்மாயம் என்றும், இறை மாயம் என்றும்தான் கூறினர்.

ஆனால், ஆய கலைகள் அறுபத்துநான்கில் சித்துக்கு விளக்கமோ உதாரணமோ இல்லாதிருந்தது. அதற்கு உதாரணமாகவும் விளக்கமாகவும் இருக்க விரும்பியே முதல் சித்தனாக வந்தார் சிவபெருமான்.

அப்போது, அபிஷேக பாண்டியனின் ஆட்சி மதுரையில் நடைபெற்றுக்கொண்டு இருந்தது. எல்லாச் செல்வங்களும் இருந்தும், அபிஷேக பாண்டியனுக்குப் பிள்ளைச் செல்வம் மட்டும் இல்லை. அதைக் கோரி, திருச்சந்நிதியில் அவன் உருகாத நாளுமில்லை. அதற்கு அருள் புரியவே சிவபெருமானும் சித்த உருக்கொண்டு வந்தார். இதை இப்படியும் கூறலாம்... 'இனி வரும் நாட்களில் முனிவர்கள் ரிஷிகள் நடமாடும் சாத்தியம் குறைவு. அருளாளர் என்போர் சித்த வடிவம் கொண்டே வருவர். உலகம் உய்ய தங்கள் வாக்காலும் வாழ்வாலுமே பதில் தருவர்' என்பதுதான் சிவபெருமான் சித்தனாய் வந்ததன் அடிப்படை நோக்கம்.

அப்படி வந்த நிலையில், சித்த சாகசங்கள் எப்படி இருக்கும் என்று உலகத்தவர் தெரிந்துகொள்ள வேண்டாமா? சாகசம் ஆரம்பமாயிற்று. சாகசம் புரியும் முன், தோற்றத்திலும் ஒரு மாற்றம்! அதாவது, பார்த்ததும் பரவசப்படுத்தும் எழில் தோற்றம். நெற்றியில் மட்டும் வெகு திருத்தமாய் இட்டுக் கொண்ட விபூதியும், நடுவில் தீச்சுடர் போல் குங்குமமும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பளிச்சிட்டன. தெருவில் நடந்து செல்கையில் ஜவ்வாது வாசம் அலை அலையாய்ப் பரவிற்று. பார்த்தவர் பார்த்தபடியே இருக்க... பலர் தங்களை மறந்து அவர் பின்னால் சென்றனர். மெய்ம்மறப்பது என்பதை, அவர் ஒரு வலம் வந்து ஊராருக்கு நிகழ்த்திக் காட்டிவிட்டு, அவ்வாறு மெய்ம்மறந்தோரைப் பார்த்துச் சிரித்தபோது... கொடியில் பூத்திருந்த மலர்கள் எல்லாமும்கூட உதிர்ந்து சிலிர்த்துப் போயின.

மிகுந்த பிரயாசைக்குப் பின், சிலர் அந்த சிவச் சித்தனை நெருங்கி, "யார் நீ?" என்று கேட்டனர். "பார்த்தால் தெரியவில்லையா... உங்களைப் போல் ஒரு மனிதன்."

"இல்லை. நீ ஒரு மாயன்!"

"இதுவும் என் பெயரில் ஒன்றுதான்."

"உனது ஊர்?"

"அது மிக உயரமான இடத்தில் உள்ளது."

"ஊருக்குப் பெயர் எதுவும் கிடையாதா?"

"கயிலாயம் என்று வைத்துக்கொள்ளுங்களேன்."

"நம்ப முடியவில்லை."

""என்ன செய்தால் நம்புவீர்கள்?"

""எங்கே... விண்ணில் பறந்து காட்டு!"

உடனேயே பறந்தும் மிதந்தும் காட்டிவிட்டுச் சிரித்தார் சிவச்சித்தன்.

"இது ஏதோ மாயம்..." என்றனர் அவர்கள்.

"இது மாயமில்லை; சித்தம் தெளிந்தால் நீங்களும் வானேறலாம்; பொதிபோல் மிதக்கலாம். அவ்வளவு ஏன்... நீர் மேல் நடக்கலாம்; நெருப்பிலும் கிடக்கலாம்..."

"சித்தம் தெளிந்தால் என்றால்?"

"போகப் போக அறிவீர்கள்..."

"உம்மால் இன்னும் என்னவெல்லாம் மாயம் செய்ய ஏலும்?"

"அதோ தெரிகிறதே குன்று... அதை அந்தப் பக்கத்தில் இருந்து இந்தப் பக்கமாய் தள்ளி வைக்கமுடியும். அதோ மிதக்கின்றனவே மேகங்கள்... அவற்றை அருகில் அழைத்து மழை பெய்விக்க முடியும்..."

"நிஜமாகவா?"

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"ஐயம் எதற்கு... இப்போதே பாருங்கள்..."

சிவச் சித்தனின் சாகசம் தொடர்ந்தது. மலை இடம் மாறியது; மேகங்கள் அருகே வந்து நீரைப் பொழிந்தன. மொத்த மதுரையம்பதியே உறைந்து போனது. அந்தச் செய்தி மன்னன் அபிஷேக பாண்டியனையும் அடைந்தது. "யார் அந்தச் சிவச் சித்தன்..? இதுவரை கேள்விப்பட் டிராத இனத்தவன். அவனை உடனே அழைத்து வாருங்கள்!" என்று ஆணையிட்டான். ஆனால், அழைக்கச் சென்றவர்கள் பாவம், பாடாய்ப்பட்டுத் திரும்பி வந்தனர். "அரசே! ஒன்றை அறிய ஒருவர் விரும்புகிறார் என்றால், அவர் மாணாக்கர். அறிவுறுத்த வேண்டியவர் குருநாதர். குருவைத் தேடி மாணாக்கன்தான் வர வேண்டும்; குருவல்ல!" என்று சிவச் சித்தன் கூறிவிட்டதாகச் சொல்லினர்.

அபிஷேக பாண்டியன், தன் கட்டளைக்குக் கீழ்ப்படியாத ஒருவரைத் தனது வாழ்வில் முதல்முறையாகக் காண்கிறான். அது மட்டுமா? அவனது ராஜ கர்வமும் புழுக்கத்துக்கு உள்ளானது. அன்று ஆலயத்தினுள் தரிசனம் செய்தபோதும் அதன் நிரடல்!

"இறைவா... மன்னவன் என்னையே ஒரு மாயாவி வருத்தம் கொள்ளச் செய்துவிட்டான். எனக்கு இது இழிவா-, இல்லை விடிவா என்று தெரியவில்லை" என்று புலம்பிவிட்டு, கோயில் பிராகாரத்தை வலம் வரத் தொடங்கினான்.

என்ன ஆச்சரியம்... எதிரிலேயே அந்த சிவச் சித்தன். மன்னனின் உடனிருந்தோர், "அரசே... இவனேதான் தங்களுக்குப் பணிய மறுத்த சித்தன்" என்றனர்.

அபிஷேக பாண்டியனும் மாறாப் புழுக்கத் துடன் சித்தரை ஏறிட்டான். ஆனால், அவரைப் பார்த்த மாத்திரத்தில், மனத்தில் ஒரு பரவசம். சிவச்சித்தனிடமும் ஒரு புன்னகை. மன்னன் சார்பாக மந்திரிப் பிரதானியர் பேசினர்.

"நீர்தான் மதுரையம்பதியையே மயக்கித் திரியும் சித்தனோ?"

"நான் சித்தன் மட்டுமல்ல... பித்தன், எத்தன், முத்தன் என்று எனக்குப் பல பெயர்கள்..."

"அடக்கத்தோடு பேசு! உன் எதிரில் இருப்பவர் இந்த நாட்டு மன்னர்..."

"அதனாலென்ன... மூப்பும் திரையும் வரும் போது முடிந்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

போகப்போகிறவர்தானே?'

"நீ மட்டும் என்ன... வாழ்வாங்கு வாழ முடிந்தவனோ?"

"அதிலென்ன சந்தேகம்-? சித்தன் என்றாலே வாழ்வாங்கு வாழ முடிந்தவன் என்றும் பொருள் உண்டே..!"

"சித்தன்... பெரிய சித்தன்... எங்கே உன் ஆற்றலை அரசர் முன்காட்டு, பார்ப்போம்..."

"அதனால் எனக்கு ஆவது ஒன்றுமில்லை. அடுத்து, எதைச் செய்தும் உங்களை நான் அடக்கத் தேவையும் இல்லை."

"இது, அதிகப் பிரசங்கம். இப்போதே கைது செய்து சிறையில் அடைக்கவா?"

"முடிந்தால் செய்யுங்கள்..."

அந்தப் பதிலைத் தொடர்ந்து, வீரர்கள் அந்தச் சித்தரைக் கைது செய்ய முயன்றனர். ஆனால் சிவச் சித்தன், 'நில்லுங்கள்' என்று சொன்ன மாத்திரத்தில் கல்லாய்ச் சமைந்து நின்று விட்டனர். அருகிலேயே ஆலய கோபுரத்தைத் தாங்கி நிற்கும் இந்திரன் தோட்டத்து யானைகளில் ஒன்றாய் ஒரு கல் யானை. அதைச் சிவச்சித்தன் பார்க்கவும், அதற்கு உயிர் வந்தது. தும்பிக்கையை விசைத்து அசைத்த அதற்கு, அந்தரத்தில் இருந்து கரும்பை வரவழைத்து நீட்டினார் சிவச் சித்தன். அதையும் அது உண்டது.

நடந்ததை எல்லாம் பார்த்து, மன்னன் அபிஷேக பாண்டியன் விக்கித்துப் போனான். இருந்தும், தனக்கு எதிரில் தெரிவது நிஜமான யானையா அல்லது பொய்த் தோற்றமா என்று அறிய விரும்பி, அதன் முன் சென்று பார்த்தபோது... அந்த யானை மன்னனின் கழுத்து முத்துமாலையைப் பறித்து அதையும் கரும்புபோல் கருதி விழுங்கிவிட்டது.

அபிஷேக பாண்டியனும் அரச கர்வத்தை விலக்கி, 'அன்பரே... யார் நீவிர்? எதை உணர்த்த இந்தச் சாகசங்கள்?' என்று கேட்ட நொடியில், அந்தச் சிவச் சித்தனும் சொக்கலிங்கநாதர் சந்நிதியில் புகுந்து மறைந்து, 'வந்தது நானே...' என்பதை உணர்த்தினார். அப்படியே பாண்டிய மன்னனுக்குப் பிள்ளை வரமும் அளித்தார்.

முதல் சித்தராய் வந்து சாகசம் புரிந்த ஈசன் அபிஷேக பாண்டியனுக்கு உணர்த்திய செய்தி என்ன? 'தன் கருணையானது சித்த வடிவிலும் இனி வெளிப்படும். அதே வேளையில், சித்தத்தை வென்றுவிட்டாலோ, நான் புரிந்ததைப்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

போன்ற சாகசங்களை எல்லோராலும் புரிய முடியும்' என்பதுதான் அந்தச் செய்தி.

இது போதாதென்று, மதுரைக்கு அருகே உள்ள திருப்பூவனத்திலும் சிவபெருமான் சித்து வேலை புரிய முன்வந்தார். மதுரைக்குத் தென்கிழக்கில் இருக்கிறது இந்தத் திருப்பூவனம். வைகை பாயும் திருத்தலம். வைகைக்கு இங்கே காசிக்கு உண்டான குணம்! அதே நேரம், உயிர் நீத்தவர்களுக்கான இறுதிச் சடங்கு இங்கே நடப்பதும், இந்த ஆலயத்தில் மோட்ச விளக்கு ஏற்றுவதும் ஐதீகம்.

இந்த ஆலயத்தில் ஒரு தேவதாசி இருந்தாள். 'பொன்னாச்சி' என்பது அவள் பெயர். இறைவனுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களே தேவதாசிகள். ஆடல் - பாடல் எனும் கலை மூலமாக இறைவனைத் தொழுவார்கள். வேத மந்திரங்களாலான வழிபாட்டு முறை போலவே ஆடல் - பாடல் கொண்ட வழிபாட்டு முறையும் அன்று வழக்கில் இருந்தது. கர்ப்பக்கிரகத்தினுள் சிலா ரூபத்தைத் தொட்டு பூஜிக்கும் உரிமையும் அவர்களுக்கு இருந்தது. அதனால் ஊரே அவர்களை பயபக்தியுடனும் மரியாதையுடனும் பார்த்து, அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடந்தது.

ஒரு நீதிபதியைப் போலவும் இவர்கள் திகழ்ந்தனர். பொன்னாச்சியும் திருப்பூவனநாதர் சந்நிதி தேவதாசியாய் - திருப்பூவனத்து நீதி தேவதையாய்த் திகழ்ந்தாள். இவளுக்குள் ஒரு மேலான ஆசையும் இருந்தது. திருப்பூவனம் கோயில் திருச்சந்நிதிக்குள் கல் வடிவத்தில் உள்ள உத்ஸவ மூர்த்தியை அசல் பொன்னில் செய்து ஆலயத்தில் வைத்து பூஜிக்க வேண்டும் என்பதே அவளது விருப்பம்!

அவள் எங்கே விரும்பினாள்? அவனல்லவா அவளுக்குள் புகுந்து அப்படி விரும்பச் செய்தான்! அப்படி அவள் விரும்பினால்தானே, ஒரு சித்தன் மனது வைத்தால் செப்பைக் கூடப் பொன்னாக்க முடியும் என்பதை இந்த உலகத்துக்கும் உணர்த்த முடியும்?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 4

வெள்ளியுருகிப் பொன்வழி ஓடாமே
கள்ளத் தட்டானார் - கரியிட்டு மூடினார்
கொள்ளி பறியக் குழல்வழியே சென்று
வள்ளியுண்ணாவில் அடக்கி வைத்தாரே...

- திருமந்திரம்

பொன்னாலே ஓர் உத்ஸவ மூர்த்தி திருஉருவம். அதைத் திருப்பூவனநாதர் திருச்சந்நிதிக்குத் தன் உபயமாய் வழங்க வேண்டும் என்று நினைத்த பொன்னாச்சி, அதற்காக எவ்வளவு பொன் தேவைப்படும் என்று பொற்கொல்லர் ஒருவரை அணுகி வினவியபோது, அவர் சொன்ன பதில் அவளுக்கு அதிர்ச்சியைத் தந்தது.

காரணம், பல தோலாவுக்கு (ஓர் அளவு) தங்கம் வாங்க வேண்டும். அரசர்களுக்கு மட்டுமே சாத்தியப்படுகிற விஷயம் அது. அதைத்தான் பொற்கொல்லரும் கூறினார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



"தாயே... உனக்கெதற்கு இந்த ஆசை-? உன் சொத்தையெல்லாம் விற்றுப் பணம் திரட்டினாலும், உத்ஸவச் சிலையை அதற்குரிய லட்சணங்களோடு காண்பது கடினம். எனவே, உன் எண்ணத்தை மாற்றிக் கொள்" என்றார்.

அந்த பதில், பொன்னாச்சியை வெகுவாக யோசிக்க வைத்துவிட்டது. அன்று திருச் சந்நிதியில் ஆடி முடித்தவள், கோயில் பட்டரின் மரியாதையை ஏற்கும் நேரத்தில், உள்ளிருக்கும் புவனநாதரைப் பார்த்து கண்ணீர் சிந்தத் தொடங்கினாள்.

"பொன்னம்பலத்தவனே... பொன்மணியா கவே உன்னைக் காண என் மனம் ஏனோ பெரிதும் விரும்புகிறது. ஆனால், அது அரசர்களுக்கே சாத்தியம் என்கிறார் பொற் கொல்லர். அதுவும் உண்மைதான்! என்னிடம் அந்த அளவு நிதி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! நான் எனக்கென்று எப்போதும் எதற்கும் ஆசைப்பட்டதில்லை. உன்னிடம் அதற்காகக் கோரிக்கை வைத்ததுமில்லை. இன்று உன்னை அடைய உன்னிடம் கோருகிறேன். என் விருப்பத்தை எப்படியாவது ஈடேற்று" என்று கண்ணீர் பெருக்கினாள்.

அதைக் கண்ட பட்டரும், "அம்மா... உன் விருப்பம் மிகவும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உயரியது. ஆனால், சாத்தியம் இல்லை. அரசர்களால் செய்ய முடிந்தாலும், செய்துபார்க்க விரும்பமாட்டார்கள். காரணம் ஒன்றுதான். எதிர்பாராமல் திருமேனி களவு போனால், தங்கம் என்பதற்காக, திருமேனி என்றும் பாராமல் மிலேச்சர்கள் அதை உருக்கி விடுவார்கள். அது பெரும் பாவம் அல்லவா? ஆனால், கோயில் விமானத்தைத் தங்கத்தால் வேய்வார்கள். காரணம், அதைக் களவாடுவது அவ்வளவு சுலபமில்லை'' என்றார்.

அதைக் கேட்ட பொன்னாச்சிக்குள் மேலும் மேலும் கேள்விகளே முளைத்தெழுந்தன.

''பட்டரே... கள்வர்களுக்கு பயந்தா அந்த பொன்னம்பலன் பொன்னுருக்கொள்ளாமல் இருக்கிறான்?'' என்று திருப்பிக் கேட்டாள்.

''அச்சம் அவனுக்கேதம்மா..? அச்சமே அவனைக் கண்டு அஞ்சுமே! அச்சம் எல்லாம் நமக்குத்தான்!''

''அப்படியென்றால், அவன் மேல் நம்பிக்கை நமக்கு இல்லையா? நம்மை எல்லாம் காக்கத் தெரிந்தவனுக்கு தன்னைக் காத்துக்கொள்ளத் தெரியாது என்பதுதான் அவன் வரையில் நாம் உணர்ந்து வைத்திருக்கும் உண்மையா?''

''உன் கேள்விக்கு என்னால் பதில் கூற முடியவில்லை, பொன்னாச்சி! ஒன்று மட்டும் உறுதி; சொர்ண விக்கிரகம் என்பது சாத்தியமில்லை; அதை மறந்துவிடு! அதற்காக நீ முனைந்தால், தினந்தோறும் நீ சிவனடியார்களுக்கு அமுது படைப்பது என்பது இயலாது போகும்'' என்றார்.

பொன்னாச்சி தன் அமுதுப் படையல் தொண்டினைத் தொடர்ந்தாள். ஆனால், மனத்துக்குள் அந்தத் தங்க விக்கிரக ஆசை இருந்தபடியேதான் இருந்தது.

''இறைவா... நீ எத்தனைக் கருணையானவன்! உன் உள்ளம் பொன் போன்றது. ஆனால், உன் உரு மட்டும் ஏன் செப்பிலும் தாமிரத்திலும் இருக்க வேண்டும்? அது பொன்னில் இருப்பது தானே சரி? இந்த மாந்தர்கள் தங்கள் அணிகலனுக்குப் பொன்னைப் பயன்படுத்தலாம்; உன் உருவுக்குப் பயன்படுத்தக் கூடாதோ?'' என்று, சதாசர்வ காலமும் சிந்தித்தபடி இருந்தாள்.

அவளது இந்த சிந்தனைத் தீவிரம், மதுரையம்பதியில் ஒரு சித்தனாய் வலம் வந்தபடி இருந்த சிவபெருமான் திருவுள்ளத்தில் சென்று எதிரொலித்தது. அடுத்த நொடியே,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

திருப்பூவனத்தில் ஓர் அடியார் வடிவில் தோன்றியதோடு, பொன்னாச்சியின் அமுத விருந்து நடக்கும் இடத்தையும் அடைந்தார்.

ஆனால், அந்த விருந்தில் பங்கு கொள்ளாமல் ஒதுங்கியே இருந்தார். இதைக் கவனித்த பொன்னாச்சியும் அவரிடம் சென்று வினவினாள். "அடியவரே.. அமுதுச் சாலைக்கு வந்தும் அமுதுண்ணாமல் இருப்பது ஏன் என்று நான் அறியலாமா?"

"ஒரே காரணம்தான் பெண்ணே! அடியவர்களுக்கு அமுது ஊட்டும்போது மனத்தில் சிறு வருத்தமும் இருக்கக் கூடாது. ஆனால், உன் மனத்தில் ஒரு பெரும் பாரம் இருக்கக் காண்கிறேன். பிறகு, நான் எப்படி அமுது செய்வேன்?"

அடியார் வேடத்துப் பரமனின் கேள்வி பொன்னாச்சியை சிலிர்க்கச் செய்தது. இதுவரை ஆயிரமாயிரம் அடியார்கள் அமுது செய்திருக்கிறார்கள். ஆனால், ஒருவரும் அவள் உள்ளத்துக்குள் இருந்ததை ஊடுருவிப் பார்த்திடவில்லை. பார்த்திடுவது என்பது ஒரு வல்லமை. அது பலருக்கு இல்லை என்பதும் ஒரு காரணம்.

ஆனால், இப்போது அவளது மனத்தில் புதைந்திருந்த ஆசையை வெளிக்காட்டியது அந்த ஈசன் அல்லவா? அவரிடம் உண்மையை மறைக்க விரும்பவில்லை பொன்னாச்சி. அடுத்த நொடியே, 'உண்மைதான் ஸ்வாமி...' என்று மனம் உடைந்து அழுதாள்.

"ஒரு பொன் மேனி காண விரும்புகிறேன். ஆனால், எல்லோரும் அது இயலாது என்கின்றனர். அப்படி இயலாத வண்ணம் என்னை ஏழையாகப் படைத்துவிட்டானே அந்த ஈசன் என்பதே என் வருத்தம்."

"அப்படியென்றால், நீ செல்வச் செழிப்பை வேண்டுவது சுக போகமாய் வாழ அல்ல... அப்படித்தானே?"

"இந்த மண்ணுலகின் சுக போகம் நிலையானதில்லையே ஸ்வாமி? இதை நான் விரும்பினால், அந்த ஈசனை வணங்குவதிலும் பொருள் இல்லையே?"

"உன் மனம் பொன் என்பது புரிகிறது. ஆனால், உன்னிடம் பொருளாக பொன் இல்லை. அப்படித்தானே?"

"ஆம் ஸ்வாமி! எனக்கு வேண்டுமளவு பொன்னைத் தர, இந்தப் பாண்டி மண்டலத்தில் வர்த்தகர்களும் இல்லை. ஏதாவது மாயம் நிகழ்ந்தால்தான் உண்டு!"

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"அப்படியே ஆகட்டும்! உன் விருப்பத்தை ஈடேற்ற, நானே அந்த மாயம் புரியத் தயாராக இருக்கிறேன்."

"மாயம் என்று நான் ஒரு பேச்சுக்குச் சொன்னால், நீங்களும் அதையே பிடித்துக் கொண்டுவிட்டீர்களே? மாயத்தில் வருவது நிலைத்து நிற்குமா?"

"சித்த மாயம் நிலையானது. கவலைப்படாதே..!"

"சித்த மாயமா..? இது என்ன புதிய பதம்?"

"சித்தனான நான் புரியப்போகும் மாயத்தைதான் சித்தமாயம் என்றேன்."

"நீங்கள் சித்தனா? அடியார் என்றல்லவா எண்ணினேன்."

"சித்தனும் அடியவன்தான் பெண்ணே!"

"எல்லாமே புதிராக உள்ளது. தயவுசெய்து என் விருப்பத்தோடு விளையாடாதீர்கள்..."

"திருவிளையாட்டை தாராளமாய் ஆடலாம். நீ போய் உன் இல்லத்தில் இருக்கும் உலோக பாத்திரங்கள் அவ்வளவையும் இங்கே கொண்டு வா!"

"ஸ்வாமி..."

"தயங்காதே... பொன்னை அணைத்து நீ பொன்னணையாளாக ஆகிட வேண்டாமா?"

அவரின் கேள்விக்கு அதற்கு மேல் மறுமொழி கூற பொன்னாச்சி தயாராக இல்லை. அவரது மாயத்தை எதிர் கொள்ளத் தயாராகிவிட்டாள். அப்போதே அவர் முன் குவிந்தது பொன்னாச்சியின் உலோக பாத்திரங்கள். சட்டி சருவத்தில் இருந்து அண்டா, அடிப்பெருக்கிவரை அவ்வளவும் அவர் முன் வைக்கப்பட்டன.

அவரும் தன் வசமிருந்த விபூதியை எடுத்தார். நெற்றியின் பால் வைத்து தியானிப்பது போல் நடித்தார். தியானமே தியானித்த காட்சியைக் காண பொன்னாச்சிக்குக் கொடுத்து வைத்திருந்தது. பிறகு, தியான விபூதி அவ்வளவு பாண்டங்கள் மேலும் அவரால் தெளிக்கப்பட்டது.

"பெண்ணே... இவற்றை நீ இன்று இரவு முழுக்கத் தீயில் போட்டு வை. விடிந்த பின் பார்... இவை அவ்வளவும் தங்கமாகி இருக்கும்." என்றார்.

"தாங்கள் தெளித்த விபூதிக்கு அவ்வளவு சக்தியா?"- பொன்னாச்சி கேட்டாள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அதை நாளை காலையில் நீயே பார்த்துத் தெளிந்து கொள். இதற்குப் பெயர் ரசவாதம்...''

''விவாதம் அறிவேன்; உடலை முடக்கும் முடக்குவாதமும் அறிவேன்; ரசவாதம் என்பதை இப்போதுதான் கேட்கிறேன்.''

''ஒலிப்பது நாதம், ஒளிர்வதோ வாதம்.''

''அருமையான விளக்கம். விவாதத்திலும் கருத்து ஒளிர்கிறது; உடல் வாதத்தில் இயக்கமற்ற தன்மை ஒளிர்கிறது.''

''இங்கே உலோகம் ஒளிரும். நான் வரட்டுமா?''

''ஸ்வாமி... இது பொன்னாகும் வரை இருக்கக் கூடாதா?''

''எனக்கு இருக்க விருப்பம்தான். ஆனால், மீனாட்சியைப் பிரிந்தல்லவா வந்திருக்கிறேன்...''

''அது யார் மீனாட்சி?''

''சரிதான்... அவள் ஆட்சியில் வாழ்ந்து கொண்டு இப்படி ஒரு கேள்வியா..?'' என்று கேட்டவர், அப்படியே மாயமானார்.

அதன் பிறகுதான் பொன்னாச்சிக்கு, வந்தது ஈசன் என்பதும், அவர் புரிந்தது திருவிளையாட்டு என்பதும் புரிந்தது. உச்சி முதல் பாதம் வரை புளகாங்கிதத்தில் பூரித்தாள். கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

மறுநாள் காலையில், அவ்வளவு உலோகப் பாத்திரங்களும் பொன்னாகி மின்னின. அதை உவப்போடு அள்ளிப் பொற்கொல்லர் வசம் தந்தாள். ஈசன் தன்னிடம் பேசும்போது, 'மீனாட்சியைப் பிரிந்தல்லவா வந்திருக்கிறேன்' என்று பிரிய விரும்பாத விருப்பத்தை வெளிக்காட்டியதை உத்தேசித்து, அந்த ரசவாத தங்கத்தைக் கொண்டு -----சோமாஸ்கந்த உருவைச் செய்ய விரும்பினாள். அதன்படி, சோமனுடன் உமையும், இருவருக்கும் நடுவே கந்தமூர்த்தி நிற்கும் கோலத்தோடு, பொன்னாலே உத்ஸவ விக்கிரகமும் தயாராகியது.

அதை அப்படியே அள்ளி அணைத்து மகிழ்ந்தாள். கன்னத்தையும் உணர்ச்சிப் பெருக்கில் கிள்ள முற்பட்டாள். குழைந்து கொடுத்தார் ஈசனும். அதனால் பொன்னாச்சியின் நகக்குறி கன்னத்தில் பதிந்தது.

இன்றும் இந்தத் திருவுருவம் திருப்பூவனநாதர் ஆலயத்தில் காணக் கிடைக்கிறது. தன் விருப்பத்தை ஈடேற்றிய

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பொன்னாச்சி பிறகு 'பொன்னனையாள்' என்று வரலாற்றில் பதியலானாள்.

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராண நூலில் இந்த திருவிளையாடல் 36---வது படலமாக காணக் கிடைக்கிறது.

இந்த ரசவாத லீலையை அந்த ஈசன் மதுரையம்பதியில் ஏன் நிகழ்த்தவில்லை? திருவாரூர், காஞ்சி, ஆனைக்கா, சிதம்பரம், காளத்தி என்று பிற தலங்களிலும் ஏன் நிகழ்த்தவில்லை? திருப்பூவனத்தில் இதை ஏன் நிகழ்த்தினான் என்பதன் பின்னே சூட்சும காரணங்கள் நிறைய உள்ளன.

அதற்குத் திருப்பூவன தல பெருமையை அறிதல் முக்கியம். ஆவிபோன பின், அது வாழ்ந்த வீடாகிய தேகத்தை சுட்டுச் சாம்பலாக்கி, அதைப் பிறகு காசியில் கரைப்பது என்பது மானுடர்க்கான பித்ரு கர்ம வரையறை.

காசியில் பாயும் கங்கை நீருக்கு அலாதி குணங்கள் உண்டு. அவனியில் பாயும் நதிகளில் கங்கை மட்டுமே உருகிப் பெருகி வரும் நதி. மற்றவை மழை பொழிவால் மலைமேல் வீழ்ந்து, பின் பாய்ந்து ஓடி வருபவை.

ஆனால், கங்கையோ உறைபனி கதிரவனால் உருக்கப்பட, ஓடிவரும் நீராகும். அதனுள் அக்னிக் கங்கின் குணமுண்டு. பாவ எண்ணங்களையும் அந்தக் கங்கினால் கரைத்துவிடுகிறோம் என்பதே சூட்சுமப் பொருள்.

அப்படிப்பட்ட கங்கையானது தென்புலம் பாயாததால், தென்புலத்தவர்களுக்கு எல்லாம் கங்கை நீராடல் ஒரு பெரும் பிரயாசைக்குரிய ஒன்றாக இருந்து வந்தது. எனவே, பித்ரு கர்மங்களைச் செய்யவும் காசி வரை செல்லப் பெரும் காலம் தேவைப்பட்டது. பொருளும் தேவைப்பட்டது.

அந்தக் குறையைப் போக்க விரும்பிய ஈசன், மதுரையம்பதியில் தன் கையை வைத்த இடத்தில் ஒரு நதியைப் படைத்தான். கை வைத்ததால் வந்த அந்த நதி 'வைகை' ஆயிற்று. கங்கை ஈசனின் கருணை மிகுந்த சிரசில் இருந்து வருவதாக ஓர் ஐதீகம் உண்டு. வைகையோ அருள்மிகுந்த கரத்தில் இருந்து வந்தது. இதற்கும், காசிக்கும் மேலான பாவம் போக்கும் குணம் உண்டு என்பதை உலகத்தவர் உணர, அவன் எண்ணம் கொண்டான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அதற்கேற்ப தன் மூதாதையரின் அஸ்திக் கலசத்துடன் காசிக்குப் பயணம் மேற்கொண்ட ஓர் அந்தணர், திருப் பூவனத்தில் பாயும் வைகை ஆற்றில் நீராடுகையில்... அந்த அஸ்திக் கலசத்தை ஒருவர் கையில் கொடுத்து பத்திரமாக வைத்திருக்கச் சொல்லிவிட்டு நீராடச் சென்றார்.

அதை வாங்கிக்கொண்டவருக்கு, கலசத்தில் இருப்பதைத் திருட்டுத்தனமாய் பார்க்கும் ஆசை ஏற்பட்டது. பொன்னோ பொருளோ தான் இருக்கவேண்டும் எனும் எண்ணத்துடன் அதைத் திறந்து பார்த்தார்.

உள்ளே இருந்த அஸ்திச் சாம்பலும் எலும்புத் துண்டுகளும் மணக்கின்ற மலர்களாக அவருக்குக் காட்சியளித்தன. இதையா பாதுகாக்கச் சொன்னார் என்ற கேள்வி அவருக்குள் எழுந்தது. அந்தணர் குளித்துவிட்டு வரவும் அவரிடமே கேட்டும் விட்டார்.

"பூக்கலசத்தை பொன் கலசம் போல பாதுகாக்கச் சொல்லிச் சென்றீரே... அப்படி என்ன சிறப்பு இந்தப் பூக்களுக்கு இருக்கிறது? இந்த உலக வனத்திலே இல்லாத பூக்களா இவை?" என்று கேட்டார்.

அந்தணர் விக்கித்துப் போய் கலசத்தைத் திறந்து பார்க்க, அவருக்கும் பூக்களே காட்சி தந்தன. இது என்ன மாயம் என்று அவர் நெஞ்சு பரவசப்படுகையில் அசரீரி முழங்கிற்று.

'அப்பனே.. நீ உன் கர்ம காரியத்தை இந்த வைகையிலேயே செய்யலாம். இதுவும் கங்கைக்கு நிகரானதே! சொல்லப்போனால் காசிக்கு ஒரு வீசம்கூட என்றும் கொள்ளலாம்.

இதை உணர்த்தவே சாம்பலைப் பூவாக்கினேன். மண்ணில் மலர்பவை பூப்பதால் பூக்கள் எனப்படும். மரணித்த உடம்பு நெருப்பில் பூப்பதால் அந்தச் சாம்பலும் பூவாகவே கருதப்படும். அந்தப் பூ இங்குள்ள வைகையம்பதியில் கலந்திடும்போது திருப்பூவாகிடும். இந்த வைகைப்புறமும் ஆதலால் திருப்பூவனம் என்றாகட்டும்' என்று ஒலித்து அடங்கிற்று அசரீரி.

அந்தத் திருப்பூவனக் கரையிலேயே இறைவனும் பூவன நாதனாய் கோயில் கொண்டான். கங்கைக்கரையில் விஸ்வ நாதன். இங்கே பூவனநாதன்!

எத்தனைப் பாவம் செய்திருந்தாலும், இங்கே கர்மச் செயல்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

செய்ய... அதைச் செய்தவருக்கும் முக்தி - செய்யப்படுபவருக்கும் முக்தி.

சாதாரண உலோகம் தங்கமாவது என்பது உலோகத்துக்கான முக்தி. சாதாரண மனிதன் தங்கமாவது என்பது பிறப்புக்கான முக்தி. அதை உணர்த்த இறைவன் தேர்வு செய்த இடமே திருப்பூவனம்!

இந்தத் திருப்பூவனத்து ரசவாத சாகசம், மானுட முக்திக்கும் வழிகாட்டுகிறது. ஈசன் செய்த இந்த சாகசத்தை, அதாவது ரசவாதத்தை சித்தர் பெருமகன் ஒருவர் தன் வாழ்நாளில் செய்து காட்டினார். அது...?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 5

பாரேது புனலேது அனலு மேது
பாங்கான காலேது வெளியு மாகும்
நாரேது பூவேது வாச மேது
நல்ல புட்பந் தானேது பூசை யேது
ஊரேது பேரேது சினமு மேது
ஓகோகோ அதிசயந்தா னென்ன சொல்வேன்
ஆறேது குளமேது கோயி லேது
ஆதிசிவத்தை யறிவதனா லறியலாமே...

- கருவூர் சித்தர்

ரசவாத சாதுர்யத்தில் பொன்னணையாளைத் தொட்டு பல சித்தர் பெருமக்கள் வித்தை காட்டியுள்ளனர். ஆனாலும், முதல் வித்தைக்காரன் அந்த ஈசனே!

சித்த சாகசங்களிலேயே எல்லோரும் பெரிதாகக் கருதிடும் சாகசம் ஒன்று இருக்க முடியுமானால், அது ரசவாத சாகசமே! செப்பைத் தங்கமாக்கும் வித்தையை அறிவதற்காகவே சித்தர் பெருமக்களைத் தேடிச் சென்று, தங்களைச் சீடர்களாகச் சேர்த்துக்கொள்ளச் சொல்லி கெஞ்சி நின்றவர்கள் பலர் உண்டு.

ஆனால், அந்த உலோக ரகசியமோ, இன்று வரை அறியப்படாத ரகசியமாக- பெரும் புதிராகவே உள்ளது. இன்று 'மெட்டலர்ஜி' எனப்படும் உலோகவியல் கல்வியில் உச்சம் தொட்டவர்கள்கூட மண்ணிலிருந்து கிடைக்கும் தங்கத்தைத் தவிர்த்து, ஏனைய உலோகங்களை வைத்து அதன் குணத்தை மாற்றி தங்கம் செய்வது என்பது அசாத்தியம் என்கிற கருத்தையே கொண்டுள்ளனர்.

செயற்கையாகத் தங்கம் செய்ய முனைந்து, அதில் ஓரளவு சாதித்தவர்கள்கூட... இயற்கையாகத் தோண்டி எடுப்பதைவிட

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

செயற்கைத் தங்க முயற்சி பல மடங்கு கூடுதல் செலவைத் தருவதால், அந்த முயற்சியைத் தொடரவில்லை. மாறாக, ‘சூப்பர் கண்டக்டிவிடி மெட்டீரியல்’ எனும் எடைகுறைவான, அதே நேரம் மிக பலமான ஓர் உலோகத்தைக் கண்டறிவதில்தான் மிகவும் சிரத்தை காட்டி வருகின்றனர். இந்த சூப்பர் கண்டக்டிவிடி மெட்டீரியல் கண்டறியப்பட்டுவிட்டால் விமானம், பேருந்து, ரயில் என்று சகலத்திலும் அது பயன்படுத்தப்பட்டு, எரிபொருள் செலவினம் மிகக் குறையும். அடுத்து, மின்சாரத்தைக் கடத்துவதில் ஏற்படும் விரயம் தவிர்க்கப்பட்டு, உற்பத்தி செய்யப்படும் மின்சாரமானது முழுவதுமாய் பயன்படுத்தப்படும்.

எனவே, தங்கமாக்கும் விஞ்ஞான முயற்சிகள் மிக மிகப் பின் தங்கிய நிலையிலேயே உள்ளன. ஆனால், தங்கத்தின் மேல் உள்ள மதிப்போ நாளுக்கு நாள் கூடிக்கொண்டேதான் போகிறது. உலகின் பொதுப் பணமாக இதைக் கருத முடிவதும் ஒரு காரணம். இன்று எந்த நாட்டிடம் அதிகக் கையிருப்பு தங்கம் உள்ளதோ, அந்த நாடே உண்மையான பொருளாதார பலமுள்ள செல்வச் செழிப்பான நாடாகும். அந்த வகையில், நம் பாரத தேசத்தை உலகிலேயே மிக அதிக தங்கம் கொண்ட ஒரு நாடாக தாராளமாகச் சொல்லலாம். இங்கேதான் மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்களிடம் கூடக் குந்துமணி தங்கமாவது உள்ளது. தங்கத்தை மிகத் தெய்விகத் தன்மை பொருந்தியதாகக் கருதும் கலாசார அடிப்படை இன்னொரு காரணம். வாழ்வின் எல்லா முக்கிய தருணங்களிலும் தங்கம் இங்கே முக்கியப் பங்கு வகிக்கிறது.

ஆண் - பெண் சேர்க்கைக்குக் காரணமான திருமணத்துக்கே தங்கம்தான் பிரதான காரணியாக உள்ளது. சுமாரான அழகுடன் பிறந்துவிட்ட பெண்களை எல்லாம் இல்வாழ்க்கை எனும் கடலைக் கடக்கவைக்கும் பெரும் காரணியாக தங்கமே உள்ளது-. ஒருவருடைய அந்தஸ்தை இதுவே தீர்மானிக்கிறது.

எந்த விஷயத்துக்கும் ஓர் அளவு உண்டு என்பார்கள். அந்த அளவு என்பது கணக்காக, அதாவது எண்ணாக உள்ளது. மொழி என்பது எழுத்தாக உள்ளது. இந்த இரண்டும் இல்லாமல் மனித வாழ்க்கை இல்லை. இதை வைத்தே, ‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்’ எனும் வாக்கு தோன்றிற்று. இந்தக் கண்ணான எண்ணின் அளவீட்டில்,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கண்ணுக்குப் புலன் ஆகாத ஒரு தூசி எடைக்கும் கீழான எடை கொண்ட தங்கத்துக்கும் பெரும் மதிப்பு இருப்பதுதான் விந்தை!

தங்கம் என்று ஒன்று இல்லாதபட்சத்தில், அப்படி ஒரு அளவீட்டையே பயன்படுத்தும் ஒரு நிலைப்பாடு மனித இனத்துக்கு ஏற்பட்டிருக்காது. எண்ணின் தொடக்கமாய் இங்கே ஒன்றுதான் உள்ளது. அதன் கீழான அளவுகள் அரை, கால், காலே அரைக்கால் என்பதுதான். அந்தக் காலே அரைக்காலுக்குள் பல காலேஅரைக்கால்கள் இருப்ப தெல்லாம்கூட தங்கத்தை எடையிடும்போதே உணரப்படுகிறது. இதனால்தான், பொற்கொல்லர் வீட்டுக்கு அருகில் உள்ள சாக்கடைகூட சிலரால் அரித்தெடுக்கப்படும் நிலைக்கு உள்ளாகிறது.

மிக நல்ல ஒரு மனிதரை மெச்ச முற்படும் போது அவரை நல்லவர், தூயவர், சிறந்தவர் என்று எவ்வளவு சொன்னாலும் ஏற்படாத ஒரு நிறைவு, 'தங்கமான மனிதர்' என்றவுடன் வந்துவிடுகிறது. இப்படி பூமியின் பெரும் செல்வமாய், அழகின் இருப்பிடமாய், ஒளியின் நிலைக்களனாய், குன்றாத மதிப்போடு ஒவ்வொரு நாளும் உயர்ந்தபடியே இருக்கும் ஒரே வஸ்து தங்கம் மட்டுமே!

இன்று மட்டுமல்ல, உலகில் மனித நாகரிகம் தொடங்கிய நாளில் இருந்தே இதுதான் நிலை. பூமியில் மட்டுமின்றி, பூமிக்கு அப்பால் விண்ணகத்தே இருப்பதாக நம்பப்படும் மற்ற புவனங்களிலும் தங்கத்துக்குதான் முதல் மதிப்பு; முதல் இடம்! குபேர நிதியில் இதுவே பிரதானம். பொருளைப் புறந்தள்ளிய பெரும் ஞானியர்கூட கடவுளிடம் வேண்டிப் பெற்றது இதைத்தான். தனக்குப் பிட்சையிட ஏதுமில்லாத ஓர் ஏழையின் பொருட்டு மனமிரங்கி, ஆதிசங்கரர் பாடியதுதான் கனகதாரா ஸ்தோத்திரம். இந்த நிதியைப் பெறுவதற்காகவே வித்யாரண்யர் துறவறம் பூண்டார். திருமகளைத் தியானித்து இந்த நிதியையும் பெற்றார். தன்னைச் சோதிக்க நினைத்தவர்களுக்குப் பாடம் புகட்ட விரும்பிய வேதாந்ததேசிகன், ஸ்ரீஸ்துதி பாடினார்; பொன்னும் மழையாகப் பொழிந்தது.

இப்படிப்பட்ட சிறப்புக்குரிய பொன்னுக்குரிய கிரகமாகவும் கிரகாதிபதியாகவும் திகழ்பவர் குருபகவான். 'பொன்னன்' என்பது இவருக்கான இன்னொரு பெயர். குரு என்பவர்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நம்மை எல்லாம் இருளில் இருந்து வெளிச்சத்துக்கு அழைத்துச் செல்பவர். அறியாமை இருளை நீக்குபவர். எனவே, ஒளிமிகுந்த தன்மையை குணமாகக் கொண்ட குருவே தங்கத்துக்கு அதிபதி. ஜாதகத்தில் இவரது பலம் குறையும் போதும், இவரது சஞ்சாரம் தவறாகும் போதும் தங்க நகைகள் தொலைவது, திருடு போவது போன்றவை நிகழும். உடனேயே எப்பாடு பட்டாவது நாம் தங்கத்தை வாங்கி விடும்பட்சத்தில், குருவருள் குறைய நேர்ந்தாலும், அதை எப்பாடுபட்டாவது அடைந்துவிடும் சக்தி நமக்கு இருப்பதை அது உணர்த்தும்.

இந்திரலோகத்தில் தர்பாரில் இந்திரன் அமர்ந்திருக்க, அரம்பையர் கூட்டம் ஆடிக் கொண்டிருக்கிறது. உல்லாசமான சூழல். அப்போது சபைக்கு, பிரஹஸ்பதியாகிய குரு பகவான் வருகிறார். அவரை அந்த உல்லாச சூழ்நிலையில், இந்திரன் வரவேற்க மறக்கிறான். தான் வந்திருப்பதை பிரஹஸ்பதி குறிப்பால் உணர்த்தியும் அவனிடம் அலட்சியமே தொடர் கிறது. உடனே பிரஹஸ்பதி, ‘இனி இந்த அமர லோகம் பக்கமே நான் வரமாட்டேன்’ என்று கூறி, கோபித்துச் செல்கிறார்.

குரு நீங்கியதால், இந்திரனின் செல்வம் குறைகிறது. நிரம்பிய பொன் பேழைகளில் உள்ள பொற்காசுகள்தான் முதலில் மாயமாகின்றன. அதன்பின், அவன் பாடாய்ப்பட்டு ஓடாய்த் தேய்ந்து இந்திர உலகை விட்டு பூவுலகு வந்து, இன்றைய மதுரையான அன்றைய கடம்ப வனத்தில் உள்ள சொக்கலிங்க சுயம்பு மேனியைத் தரிசித்து, பாவ விமோசனம் அடைகிறான். அப்படியே, அருகிலுள்ள பொற்றாமரைக் குளத்துப் பொற் றாமரைகளால் லிங்க ரூபத்துக்கு அர்ச்சனையும் புரிகிறான். அப்படி அவன் அர்ச்சனை புரிந்து வழிபட்டது ஒரு சித்ரா பௌர்ணமி நன்னாளில்..! அன்றிலிருந்து இன்றுவரை, மதுரை சொக்கநாதப் பெருமானை சித்ரா பௌர்ணமிதோறும் இந்திரன் வந்து தரிசித்து வணங்கிச் செல்வதாக ஐதீகம்.

சூரியனின் கதிர் பட்டு, கூரிய தாமரை மொட்டு அவிழ்ந்து, இதழ்கள் அனைத்துப் பக்கமும் பிரியும். பார்க்கவே கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும் அது. இதனாலேயே மனத்தை தாமரையோடும் ஒப்பிடுவர்.

மனமும் அறிவொளியால் மலர்கிறது. தான் மலரக் காரணமான குளம் எவ்வளவு ஆழமாக இருந்தாலும், தாமரை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அதனுள் மூழ்கி விடுவதில்லை. மனமும் அறிவொளியால் மலர்ந்தால், அஞ்ஞானத்தில் மூழ்குவ தில்லை. இப்படித் தாமரைக்கும் மனத்துக்கும் அநேக ஒற்றுமை உண்டு. மலர்த் தாமரைக்கே இப்படி என்றால், ஒளிமிக்க பொற்றாமரைக்கு இன்னும் எத்தனை விசேஷம் உரியது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதன் பிரகாசம், அதன் திண்மை எத்தகையது என்பதை எண்ணிப் பார்க்கவே இயல வில்லை. அது நம் கற்றலுக்கு வெளியே உள்ளது.



அப்படிப்பட்ட பொற்றாமரைகள் பூத்த குளம் உடைய சொக்கலிங்கநாதர் கோயிலும் இந்திரனால் கட்டப்பட்டு, அவனாலேயே குடமுழுக்கும் செய்யப் பட்டது. குடமுழுக்கு நாளில் அந்த ஆதிசிவன் தன் சிரசிலிருந்து அமுதமாகிய மதுரத்தையே எடுத்து ஆலயம் மீதும், அது அமைந்த ஆலவாய் நகர் மீதும் தெளித்தார். அந்த மதுரத் துளிகள் பட்டு ரட்சணை பெற்றதாலேயே அந்த நகர் 'மதுரை' என்றானது. அதனாலேயே இம்மண்ணில் அந்த சிவனின் திரு விளையாடல்கள் நிகழ்ந்தன; அமிழ்தான தமிழ் மொழியும் இங்கு சங்கம் கண்டது. கங்கைக்கு நிகராக, இறைவன் கை வைக்க 'வைகை'யும் பாய்ந்து வந்தது.

காலங்கள் பல உருண்டுவிட்ட நிலையிலும், அந்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அமுதத்தின் குணம் காரணமாகவே இன்றும் இம்மண்ணில் இயலும், இசையும், நாடகமும் பிற இடங்களைக் காட்டிலும் தூக்கலான தரத்திலும், தன்மையிலும் இருந்துவருகிறது. பொன்னை குணத்தில் மட்டுமே கொண்டிருந்த தெய்விக குணத்தவர்கள் இருந்த வரையில் பொற்றாமரையும் பூத்த வண்ணம் இருந்தது. கலிமாயை காரணமாக அந்த எண்ணிக்கை குறைந்து முற்றாக இல்லாது போகவும், அதுவும் மறைந்தது.

ஆனாலும், இன்றும் பொன் வேண்டுவோரும் குருவருள் வேண்டுவோரும் மதுரையம்பதி வந்து அந்த சிவபிரானையும், தீயில் பூத்த அன்னை மீனாட்சியையும் துதிக்கும்போது, அவர்களுக்கான விருப்பம் நிறைவேறத் தேவை யான அருளும் உருவாகிறது.

இந்தப் பொன்னை தன் ஸித்தியினாலே அந்தப் பெருமானும் பொன்னனையாள் வரையில் உருவாக்கித் தந்து சென்றான். இவனுக்கே பொன்னம்பலன் என்று ஒரு பெயரும் உண்டு. இந்த பொன்னம்பலனின் பொன்னம்பலம் இருப்பது சிதம்பரத்தில்! பஞ்ச பூதத்தில் ஆகாய தத்துவத்துக்குரிய தலம் இது. ஆகாயமே முதல் பூதம்; பெரும் பூதம். அது இருப்பதாலேயே அதனுள் பூமி மிதக்கிறது. அதனைக் காற்றும் சுற்றி வளைக்க முடிகிறது. மழை மேகங்களும் தோன்றி மழையைப் பொழிந்திட... சூரிய - சந்திரர்களின் சுழற்சியாலே இரவு- பகலை உருவாக்க முடிகிறது.

எனவே பெரிதான- எல்லையில்லாத, இருந்தும் இல்லாத ஆகாய பூதத்தலத்தில் அதன் பொருட்செறிவோடு உலக இயக்க கதியையும் விளக்கும் முகமாய் திருநடன கோலத்தோடு நடராஜ மூர்த்தியாக சேவை சாதிக்கிறான் அவன். இந்த நடன தோற்றத்தை அனுதினமும் ரசிப்பவர்கள் விண்ணுலகில் நால்வரே! அவர்கள் இதை ஒரு வரமாகவே பெற்று விட்டார்கள்.

ஒருவர் - பதஞ்சலி. மனித உருவம், பாம்புச் சிரம் இவரது தோற்றம். அடுத்து பிருங்கி முனிவர், வியாக்ரபாதர், நந்தீசர். இவர்களில் ஒருவருக்குக் கொம்பு சிறப்பு; ஒருவருக்குப் புலிக்கால்கள் சிறப்பு; ஒருவருக்குக் காதுகள் சிறப்பு. ஆனால்... பாவம், பதஞ்சலி! இவருக்குக் காலும் இல்லை, காதும் இல்லை, கொம்பும் இல்லை. கண்கள் மட்டுமே!

இவர், 'ரஜித ஸ்ருங்க ஸ்தோத்திரம்' என்று ஒரு துதியாலே

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பொன்னம்பலத்தில் உறையும் இறைவனைப் பாடுகிறார்!

எப்படிப் பாடுகிறார் தெரியுமா? தான் பாடும் துதியில் எங்கும் கொம்பெழுத்துக்களோ, 'கால்' எனப்படும் துணை எழுத்தோ இல்லாதபடி வார்த்தைகளை அமைத்துப் பாடுகிறார். அது ஒரு வியப்பூட்டும் ஸ்லோகம்.

ஏன் இப்படிப் பாட வேண்டும் என்பதற்கு, நமது மகா பெரியவர் வேடிக்கையாக ஒரு கருத்தைக் கூறியுள்ளார்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 6

தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவறி யாதார் சிவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே!

- திருமந்திரம்

சிதம்பரம் திருத்தலத்தின் பொன்னம்பலத்துள் உறையும் ஸ்ரீநடராஜபெருமானை 'ரஜித ஸ்ருங்க ஸ்தோத்திரம்' எனும் துதியால் பதஞ்சலி முனிவர் பாடுவது பற்றி அழகாகக் குறிப்பிடுவார் காஞ்சி மகா பெரியவர்.

நந்தி, பிருங்கி, வியாக்ரபாதர் மூவருக்கும் இறைவனின் அந்தத் திருநடனத்தை இசைச் சிறப்போடு தங்களால் மட்டுமே பூரணமாக ரசிக்க முடியும் என்கிற கர்வம் இருந்ததாம். பதஞ்சலிக்குக் காதுகள் இல்லாததால், கண்களால் பார்த்து ரசிக்க மட்டுமே முடியும். இறைவனின் திருநடனத்தில் மெய்ம்மறந்து கண்களைமூட நேரும்போது, காட்சி அற்றுப் போகும். எனவே, அவரால் பூரண திருநடனத்தை ஒருநாளும் காண இயலாது. எனவேதான், அந்த மூவருக்கும் அப்படி ஒரு கர்வம்!

அதற்குப் பதிலாகவே பதஞ்சலி இப்படி ஒரு துதி செய்தார். இது ஒரு வேடிக்கையான போட்டி. அதாவது, இறைவனைத் தரிசிப்பதில்- வியப்பதில்- பூரிப்பதில் யார் முதலில் என்கிற போட்டி!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



இதை நமது மனித மனோபாவனையில் மலிவுபடுத்தி, அந்த ஞானிகளுக்குள்ளேயே போட்டி - பொறாமையா என்று கேட்டுவிடக் கூடாது. இறைவனைத் துதிக்க... அவனோடு ஒன்றிட... கலந்திட... கொம்பும் வேண்டாம்; காதும் வேண்டாம்; காலும் வேண்டாம்;. மனம் மட்டுமே போதும் என்று

பதஞ்சலி உணர்த்துவதுதான் உட்பொருள்.

இப்படி, இவர்களிடையே ஒரு போட்டிக்குக் காரணமாய் நின்ற அந்தப் பொன்னம்பலத்தவனை இரணியவர்மன் எனும் மன்னவனும் தரிசிக்கிறான். அவன் மனம், என்றும் காணாத அமைதியை அடைகிறது. அப்படியே அவனுள் பலவிதமான எண்ண அலைகளும் எழும்புகின்றன. சிதம்பரத்து ஆலயக் கூரை பொன்னால் வேயப்பட்டுப் பொன்னம்பலமாய்த் திகழ்ந்திட, ஏன் திருமேனி மட்டும் முழுவதும் பொன்னில் இல்லை? சுத்தமான செம்பொன்னில் ஒரு நடராஜ ரூபத்தை ஏன் நாம் உருவாக்கக் கூடாது?

திருப்பூவனம் பொன்னனையாளுக்கு உத்ஸவ மூர்த்தியைச் செய்யும் ஆசை வந்தது. இரணியவர்மனுக்கோ நடராஜ ரூபத்தையே செய்யும் ஆசை வருகிறது.

நாடு திரும்புகிறான்; பிரதானியர்களை அழைக்கிறான்; விருப்பத்தைக் கூறுகிறான்; செம்பொன்னையும் குவிக்கிறான். ஆனால், ஒரு பொற் தச்சராலும் சுத்தமான பொன்னில் செப்பு கலவாமல் ஸ்ரீநடராஜர் தோற்றத்தை வார்க்க முடியவில்லை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இரணியவர்மனோ துளியும் செப்பு கலக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறான். தச்சர்கள் 'இது ஆகாது' என்கிறார்கள். இரணியவர்மன் வருந்துகிறான். அவனது வருத்தம் போகர் சித்தர் காது வரை செல்கிறது.

புன்னகைக்கிறார் போகர். தன் சீடனாகிய கருவூராரை இரணியவர்மனிடம் அனுப்புகிறார். கருவூராரும் வருகிறார். இவரது பெயரை இருவிதமாகப் பிரித்துப் பார்த்துப் பொருள் கொள்ளலாம். 'இனிவரும் நாளில் ஒரு கருவிலும் ஊர்ந்திடாமல் பிறவா வரம் பெற வேண்டும்' என்று வாழ்ந்தவர்; தன் நோக்கையே காரணப் பெயராக கொண்டவர் என்பது ஒரு பொருள்.

'அன்னையின் கருவில் இருந்த நாளிலேயே வேதிய தந்தையின் சாஸ்திர ஞானத்தை, குறிப்பாக ஆலய ஆகம விதிகளை அவர் சொல்லக் கேட்டுக் கருவிலேயே ஊறி வளர்ந்தவர்' என்பது இன்னொரு பொருள்.

தவிர, இன்றைய கரூரில் பிறந்த காரணத்தாலும் அப்பெயர் கொண்டவர் எனக் கருவூராரைப் பற்றிச் சொல்லும்போது நமக்குப் பல பொருள் ஸித்திக்கும்.

அப்படிப்பட்டவர் ஸ்ரீநடராஜர் ரூபத்தை வடிவமைக்கிறார். கூடுதலான பொன்னோடும் கொஞ்சம் செப்போடும்..! அந்தச் செப்புதான் அவர் செய்த தப்பு. மன்னன் இரணியவர்மன் அதை அறிந்து, பெரும் கோபம் கொள்கிறான். 'நூறு சதம் பொன்னில் நான் உருக் காண விரும்பினால் செப்பைக் கலந்துவிட்டாரே..! செப்பு கூடாது என்பதே என் விருப்பம். என் கட்டளை! அதை மீறிவிட்டார். எனவே, இது ராஜ குற்றம்!' என, அவரைத் தூக்கிச் சிறையில் பூட்டினான்.

கருவூரார் தயார் செய்த நடராஜர் பொன் விக்கிரகத்தினுள் நூற்றுக்கு நூறு பொன்னில்லை. சிறிது செப்பைச் சேர்த்தால்தான் நடராஜ திருமேனி உருக்கொள்ள முடியும் என்பதே உலோக நுட்பம். இதை மன்னன் இரணியவர்மன் ஏற்கவில்லை; அவனால் நடராஜ உருவை உருவாக்கப் பணிக்கப்பட்ட ஏனைய சிற்பிகளும் ஏற்கவில்லை. 'செப்பைக் கலந்து செய்ய இவர் எதற்கு? இந்தச் சோழ தேசத்தில் இல்லாத பொற் கொல்லர்களா?' என்று ஏகடியமாய்ப் பேசினார்.

ஆனால், கருவூரார் செய்த நடராஜ மூர்த்தத்தில் நுட்பங்கள் அதிகம் இருந்தன. காலிலும் கையிலும்தான் செப்புக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கலப்பிருந்தது. திருமுகம் நூற்றுக்கு நூறு பொன்னில் கொஞ்சியது.

'மன்னா... எந்த ஒரு சிலா ரூபத்தை காணும்போதும் அதன் முகத்தைப் பார்த்தே நாம் வியப்போம். முகத்தின் அமைப்பை வைத்தே மற்ற பாகங்களை ரசிப்பதும், அதைக் கணிப்பதும் நிகழும். இங்கே பொன்முகத்தோடு காட்சி தருகிறான் அந்த ஈசன். எனவே இதை ஒரு பூரண பொற்சிலையாக தாங்கள் கருதலாம்' என்று கருவூரார் சொன்ன சமாதானத்தை மன்னன் ஏற்கவில்லை.

அதே வேளையில், எங்கே... கருவூராரின் சமாதானத்தை மன்னர் ஏற்றுக்கொண்டு விடுவாரோ என்னும் அச்சத்தினாலும் பொறாமையினாலும் அங்கிருந்த ஏனைய சிற்பிகள், "அரசே... எங்களுக்கென்னவோ இந்தத் திருமேனியில் பாதிக்கும் மேலேயே செப்பு கலந்திருக்குமோ என்று சந்தேகமாக உள்ளது. இவர் இந்தத் திரு உருவைப் படைக்கும்போது எங்களை காண விடவில்லை. மிக ரகசியமாகவே இதைச் செய்தார். அதிலிருந்தே இவர் பொன்னைக் களவாடி ஒளித்து வைத்திருக்கலாம் என்று எங்களுக்குத் தோன்றுகிறது" என்று கூறவும், மன்னரின் மனது பற்றி எரியத் தொடங்கியது. "எங்கே நான் கொடுத்த பொன்?" என்று கருவூராரைக் கோபத்துடன் கேட்டான்.

கருவூராருக்கு அது அதிர்ச்சியைத் தந்தாலும், சித்த உள்ளம் அதை ஜீரணித்து, 'இது ஒரு சோதனை! இதனைத் துணிவோடும் நேர்மையோடும் எதிர்கொள்ள வேண்டும்' என்று தீர்மானித்து, தன்னை இச்செயலுக்காக பணித்த போகரை மனதில் நினைத்தார்.

சித்த யோகிகளுக்கு தூரமோ இடைவெளியோ ஒரு பொருட்டில்லை. எத்தனை தொலைவில் ஒருவர் இருந்தாலும், தான் நினைக்கும் எண்ணத்தை அவருக்குள் புகுத்த முடியும். அதற்கான அவர்களின் பதிலை அறியவும் முடியும்.

கருவூரார் மன்னனின் கேள்விக்குப் பதில் கூறாமல், போகரை எண்ணி தியானத்தில் மூழ்கிட.... மன்னனும் கருவூராரைத் தூக்கிச் சென்று அந்தகாரச் சிறைக்குள் போட்டுப் பூட்டச் சொன்னான்.

உணர்வுகளில் சிக்கி, அதன் போக்கில் போகின்றவனாக மட்டுமே அவன் அப்போது இருந்தான். அரசன் என்னும் அதிகார மமதை அவனை ஒரு சித்த புருஷனிடம் எப்படி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நடந்துகொள்ள வேண்டுமோ அப்படி நடக்க விடவில்லை.

அதனால் ஒரு பாதகமும் இல்லை. அடுத்த சில நாழிகைகளில் போகர் தன் சீடர்களுடன் பழநியம்பதியில் இருந்து வான மார்க்கமாக, 'மேகமணிக் குளிகை' என்னும் வானில் சஞ்சரிக்க உதவும் குளிகையை வாயில் போட்டுக்கொண்டு, மன்னன் இரணியவர்மனின் அரண்மனை தர்பாரை அடைந்தார். அவரோடு வந்த சீடர்கள், தங்கள் தலைமேல் கட்டுக்கட்டாக தங்கக்கட்டிகளோடு காட்சி தந்தனர். பொதுவாக தங்கம் பாளம் பாளமாக சதுரத்திலும் செவ்வகத்திலும்தான் இருக்கும். இங்கே சிதறிய பாறைத் துண்டுக் கற்கள் வடிவில் அந்தத் தங்கக் கட்டிகள் இருந்தன. இரணியவர்மன் அதைப் பார்த்து அதிசயித்துப் போனான். போகரைப் பார்த்து "சித்தர்பிரானே... என்ன இதெல்லாம்?" என்றும் கேட்டான்.

"அதெல்லாம் இருக்கட்டும். என் சீடன் கருவூரான் எங்கே?" - கோபமாகக் கேட்டார் போகர்.

"சிறையில் இருக்கிறார். அவர் உம் சீடரா?"

"எனக்குச் சீடன். ஆனால், உனக்கு அவன் குரு!"

"குருவா..?"

"ஆம்... உன் ஊனக் கண்களைத் திறக்கப்போகிறவன் அவன். அப்படியென்றால், அவன் உனக்கு குருதானே?"

"சித்தர்பிரானே... தங்களின் கோபமான பதில் எனக்கு வியப்பைத் தருகிறது. நான் சிவனடியார்களை அந்தச் சிவபிரானாகவே கருதிப் போற்றுபவன். அப்படியே தங்கள் சீடரையும் கருதினேன். ஆனால், அவர் என் விருப்பம் தெரிந்திருந்தும் தவறிழைத்துவிட்டார்."

"நிறுத்து உன் பேச்சை! சிற்ப சரித்திரம், ஆலய ஆகமம், உலோக சாத்திரம் மற்றும் சூட்சுமம் எனச் சகலத்தையும் தாயின் கர்ப்பத்துக்குள் இருந்தபோதே கற்றுத் தெளிந்தவன் கருவூரான். ஒரு பொன் உருவுக்காக நீ ஏங்குவதை அறிந்து, நானே அவனை இங்கு அனுப்பி வைத்தேன். துளியும் செப்புக் கலவாமல் தூய தங்கம் கொண்டு எந்த ஒரு உருவையும் செய்ய இயலாது. கோடை காலத்தில் வெப்பம் தாளாது குழைந்து கொடுத்து, மேனியானது கோணியாகிவிடும். இது ஆபரணங்களுக்கும் பொருந்தும். ஆபரணம் குழைந்தால் அணியாமல் உருக்கிப் போட்டுவிடலாம். ஆனால்,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வழிபாட்டுக்குரிய திருமேனிகள் குழையக் கூடாது. சாத்திரப் பிழை ஏற்பட்டு, தோற்றப் பிழை உருவாகி, பின் அது பெரும் பிழையில் முடிந்துவிடும்.

இறை ரூபங்கள் குறித்த ஞானம் உனக்கு இல்லாததால், நீ என் சீடனைப் புரிந்து கொள்ளவில்லை. இறை மூர்த்தங்களுக்குள் தத்துவங்கள் ஒளிந்திருக்கும் என்பதை முதலில் நீ புரிந்துகொள். அருளும் கரங்கள் நேர் நோக்கில் இருப்பதில் இருந்து மண் நோக்கி, தன்னை நோக்கி, ஒன்றைப் பற்றிக்கொண்டு, பின் முத்திரை புரிந்த நிலையில் இருப்பது... என்று ஒவ்வொரு தோற்றத்துக்குப் பின்னாலும் பெரும் பொருள் உள்ளது.

வேதியர், ஞானியர் அந்த மூர்த்தத்தைப் பார்த்த மாத்திரத்தில் பொருளை உணர்ந்து கொண்டு, அதன் தத்துவத்தைப் புரிந்து கொள்வார்கள். பழநியம்பதியில் முருகன் கரத்தில் இருக்கும் தண்டமாகிய கோல் சொல்லும் பொருளுக்கும், மதுரை மீனாட்சியின் கரத்தில் வீற்றிருக்கும் கிளியானது உணர்த்தும் பொருளுக்கும் வேறுபாடு உண்டு.

தென்திசை நோக்கி அமர்ந்திருக்கும் தட்சிணாமூர்த்தக் கோலம் சின் முத்திரை காட்டி நிற்கும். அது சொல்லில் ஏதுமில்லை, அமைதியில்தான் எல்லாம் உள்ளது என்பதோடு சும்மாயிரு என்றும் கூறுகிறது. திருமாலின் சயன கோலத்துக்குள்ளும் பெரும் பொருள் புதைந்து கிடக்கிறது.

இப்படி ரூபங்களுக்குப் பொருள் இருப்பதோடு, அவை எந்த உலோகத்தில் எப்படி ஒரு சிலா ரூபம் இருக்க வேண்டும் என்பதற்கும் கணக்கு உள்ளது. ஜாதிக் கற்களுக்கும், ஐம் பொன்னுக்கும் சத்தத்தை கிரகித்துத் தேக்கி வைத்துக்கொள்ளும் ஆற்றல் உண்டு. பொன்னுக்கு ஒளிரும் குணமே மிகுதி. பொன்வசம் உள்ள ரத்தினக் கற்கள் வேண்டுமானால் மந்திர உச்சாடனங்களின் அலைக் கதிர்களை ஏற்றுப் பிரதிபலிக்கும். தூய செம்பொன் ஒளி கண்ணொளியை காலப் போக்கில் குறைத்துக் குருடாக்கிவிடும். இப்படிப் பொன்னின் குணம் பற்றி அறியவேண்டியது எவ்வளவோ உள்ளது. இவற்றைக் கசடறக் கற்றுக் தெளிந்தவன் கருவூரான். என்ன ஒரு மமதை இருந்தால், அவனைப் பொற் கள்ளனாகக் கருதி அந்தகாரச் சிறையில் அடைத்திருப்பாய்?"

- நீண்ட விளக்கத்தோடு வந்த போகரின் கேள்வி மன்னனை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஒரு புரட்டு புரட்டிப் போட்டது.

'கருவூரரை அந்தகாரச் சிறையில் அடைத்து அரை நாள்கூட ஆகவில்லை. ஆனால், நடந்தவற்றை அப்படியே பக்கத்தில் இருந்து பார்த்ததுபோல எப்படி போகரால் கூற முடிந்தது? அடுத்து... பொன்னுக்கும் சிலா ரூபங்களுக்கும் பின்னால் இப்படி ஒரு பொருட் செறிவா? இது எதையும் இங்குள்ள பொற்கொல்லர்கள் நம்மிடம் கூறவே இல்லையே..?' - மன்னனுக்குள் கேள்விகள் முளைத்தெழுந்து ஓடத் தொடங்கின.

"என்ன யோசனை? இதெல்லாம் எப்படி எனக்குத் தெரியும் என்றா? சித்தம் தெளிந்து நீயும் சித்தனாகு. உனக்கும் பல உண்மைகள் யாரும் கூறாமலே புரிந்துவிடும். உயிர் வாழும் ஒரு வீடான இந்த தேகத்தின் பேச்சைக் கேட்டு நடப்பவன் சராசரி மனிதன். இந்த தேகத்தை தவத்தாலும் கல்பங்களாலும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவனே சித்தன். நானொரு சித்தன். கருவூரானும் சித்தன். இரண்டு சித்தர்களுக்கு நடுவில் காற்று போதும், எண்ண அலைகளை எடுத்துச் செல்ல! கருவூரான் என்னை நினைத்து நடந்ததைக் கூறினான். நானும் பழநியம்பதியில் இருந்து பறந்தே வந்துவிட்டேன்.

கருவூரானை உன்னிடம் அனுப்பி வைத்த பிழையை இதோ நானே நேர் செய்யப்போகிறேன். சித்தனுக்கு மனம் பொன்னாக இருப்பதே கணக்கு. இந்த மண்ணின் பொன்னெல்லாம் தூசுக்குச் சமம். கொண்டு வா, கருவூரான் செய்த அந்தப் பொற்சிலையை! துலாபாரத் தராசில் அதை ஒரு பக்கம் வை. ஈடாக இதோ செம்பொன் கட்டிகள். எடைக்கு எடை எடுத்துக் கொள். எங்கே கருவூரான்? முதலில் அவனை விடுதலை செய்...!"

- போகரின் ஆவேசம் மன்னனைத் திகைக்க வைக்க, அந்தப் பொற்சிலையும் வந்து தராசில் ஏறி நின்றது. மறு தட்டில் போகரின் சீடர்கள் தங்கக் கட்டிகளைக் கொட்டினார்கள். மன்னனுக்கு தான் தவறான திசையில் செல்வது புரிந்தது. ஆனால், போகரின் கோபத்தை எதிர்கொண்டு அவரைச் சமாதானப்படுத்தும் விதம் தெரியவில்லை. முதல் காரியமாக கருவூராரை விடுவிக்கச் சொன்னான்.

ஆனால், அந்தகாரச் சிறைக்குள் அவரைக் காணவில்லை. அரண்மனை வீரர்கள் ஓடிவந்து 'சித்தரைக் காணவில்லை'

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்றனர். இது அடுத்த அதிர்ச்சி!

"உன் பொன்னைத் தந்துவிட்டேன். எங்கே என் கருவூரான்?" என்று போகர் மீண்டும் இடிஇடித்தார்.

"சித்தர் பெருமானே! அவரை சிறையில் அடைத்த தவறை உணருகிறேன். உங்களைப் போல உணர்த்துவார் இல்லாததால் நிகழ்ந்துவிட்டது பிழை. உண்மையில் அவர் எவ்வாறு மாயமானார் என்று எனக்குத் தெரியவில்லை. மேலும், தாங்கள் எனக்கு எடைத் தங்கமும் தரத் தேவையில்லை. இந்தப் பொன் மூர்த்தியே எனக்குப் போதும். இந்தத் திரு உருவம் பல உண்மைகளை இந்த உலகத்துக்கு இனி உணர்த்தியபடியே வழிபாடு காணட்டும். என் பிழையை அருள்கூர்ந்து மன்னியுங்கள்!" என்று உருக்கமாய் வேண்டி நின்றான் மன்னன்.

அதன்பின் போகரும் சற்று அமைதியானார். பின், அதே அந்தகாரச் சிறைவாசலுக்குச் சென்று, "கருவூரா, வெளியே வா! உணர வேண்டியவற்றை உணர வேண்டியவர்கள் உணர்ந்துவிட்டார்கள்" என்றார். கருவூராரும் புன்னகைத்த படியே வந்து போகரின் திருப்பாதங்களில் விழுந்து வணங்கினார். அப்படியே அனைவருமாகச் சென்று, அந்த நடராஜ திருமேனியை வணங்கினர். அப்போது மன்னன் இரணியவர்மன் போகரிடம், "இந்தத் தங்கக் கற்கள் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன என்று தெரிந்துகொள்ளலாமா?" என்று கேட்டான்.

"தங்கச் சுரங்கம் எதிலிருந்தாவது இவற்றை எடுத்து வரவில்லை. பழநியம்பதியின் பாறைக் கற்கள்தான் இவை. ரசவாதத்தால் இவற்றைத் தங்கமாக்கினேன்" என்றார் போகர்.

"ரசவாதத்தால் எப்படிக் கற்களைத் தங்கமாக்க முடியும்?"

"அது சித்த விஞ்ஞானம் மன்னனே..."

"சித்த விஞ்ஞானமா... புதியதாய் உள்ளதே?"

"புதியதேதான்! இந்த மண்ணில் ஒவ்வொன்றுக்கும் ஒரு குணம் உண்டு. அந்த குணப்பாட்டை வேதி மாற்றத்தால் மாற்றும் முறைக்குப் பெயரே ரசவாதம்."

"அது எப்படிச் சாத்தியம்?"

"உயிரின் மூலத்தையே அறிந்துகொண்டுவிட்ட சித்தனுக்கு இதுவா பெரிது? என் வரையில் ரசவாதத்தைவிட பெரியது நவ பாஷாணமும் அதன் மூலமாக உருவாகப் போகும் தெய்வத்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

திருமேனியும்தான்!"

போகர் மறைமுகமாக பழநி முருகனின் மூலத் திருமேனி அருகே தன் பேச்சில் வந்து நின்றார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 7

சித்திக்கு லட்சணந்தான் பிரண்டைமுந்தி
செய்த பின்பு என் மக்காள் கேளுகேளு...
மத்திக்கு பாஷாண மெல்லாந்தின்னு
மலஜலமெலாம் பொன்னாகும் வயிரம் தேகம்
மொத்திக்கு மூன்றுடம்பில் தேகம் தங்கம்
உத்தமனே செம்பாகு மோடுந்தூரம்
சுத்திக்கு சூதமொடு கந்தகத்தை உண்ணு
அம்மம்மா தேகமெல்லாங் களங்குமாச்சே!

- சித்தர் பாடல்

மன்னன் இரணியவர்மனிடம் ரசவாதம் குறித்துப் பேசத் தொடங்கிய போகர், 'செம்பையும் இரும்பையும் தங்கமாக்கும் ரசவாதம் ஓர் அற்புதம்! அதைவிட மேலானது நவபாஷாணமே!' என்று கூறத் தொடங்க, இரணியவர்மன் அதிசயித்துப் போனான்.

'பொன் பெரிதல்ல, விஷம் பெரிது என்கிறாரே, எப்படி?' என்ற கேள்வியும் அவனுக்குள் எழும்பியது. அவனுக்குள்தான் எழும்புமா என்ன? நமக்குள்ளும்தான்..!

அதுமட்டுமா? நவபாஷாணம் என்றதும், பழநி முருகனின் திருஉருவச்சிலை நம் மனக்கண்களில் முந்தும். முருகன் என்றால் அழகன் என்றே பொருள். அந்த அழகன் இங்கே விஷமாக இருப்பது எத்தனை முரண்பாடு?

முரண்பாடு என்று நமக்குத் தோன்றும் இந்த முருகனின் பின்னாலே, நம் சிறு மூளை கொண்டு உணரப்பட முடியாத சூட்சுமாதி சூட்சுமங்கள் பல உள்ளன. அவற்றில் இதுவரை தெரியவந்திருப்பது கொஞ்சம்தான்; தெரியாமல் ஒளிந்திருப்பது அநேகம்!

இந்த முருகனையும், அவரது திருமேனிக் குள்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கலந்துகிடக்கும் நவ பாஷாணங்களைப் பற்றியெல்லாம் அறிந்துகொள்வதற்கு முன், இதற்கெல்லாம் கர்த்தாவான போக முனிவர் பற்றித் தெரிந்துகொள்வது மிக அவசியம்.

போகர்!

போகங்களை எல்லாம் அறுத்து எறிந்தவர் எனும் பொருளினை இவரது பெயர்மூலம் நாம் கொள்ள நேர்ந்தாலும், அவர் ஒரு சீன தேசத்தவர் என்ற கருத்தும் நிலவுகிறது. அதற்கு ஆதாரமாக, அகத்தியர் பன்னிரண் டாயிரம் எனும் நூலில், ஒரு பாடலும் காணக் கிடைக்கிறது.

சித்தான சித்துமுனி போகநாதன்

சிறந்த பதினெண் பேரில் உயர்ந்த சீலன்

கத்தனென்னும் காலாங்கி நாதர் சீடன்

கனமான சீனபதிக்குகந்த பாலன்

- எனும் அந்தப் பாடல் வரிகள், அந்தக் கருத்தை நம்பச் சொல்கின்றன. கூடவே, அநேக சிந்தனைகளும் எழுகின்றன. அந்த நாளிலேயே பாரத தேசம் போலவே சீன தேசமும் 'சீனா' என்று, இன்று நாம் அழைக்கும் பெயரிலேயே இருந்து, அங்கே நாம் போய் வரவும் இடம் இருந்திருக்கிறது என்பது ஒரு சிந்தனை.

சீன தேசத்தில் இவர் பெயர் 'போ-ஹீ-யங்' என்பதாகத் தெரியவருகிறது. கூடவே, பாரத மண்ணில் ஒரு சித்தனாய் அலைந்து திரிந்த போகர், தன்முனைப்பால் பல அரிய வித்தை களைக் கற்றார். அதில் ஒன்றான, ஆகாய மார்க்கமாகப் பறவைபோல் பறந்து செல்லும் வித்தை மூலம் சீனா சென்று, அங்கு 'போ-ஹீ-யங்' எனப்படும் ஒரு ஞானியின் உடம்புக்குள் பரகாயப் பிரவேசமாகக் கூடு விட்டுக் கூடு புகுந்து, அந்த மண்ணின் மூலிகை ரகசியங்களை எல்லாம் அறிந்துவந்தார் என்றும் ஒரு கதை நிலவுகிறது.

இதில் எது உண்மை, எது பொய் என்ற கேள்விக்கே போகாமல், போகரின் சாகசங்களை நாம் வியக்க முற்படுவதே உத்தமம். ஆதாரமற்ற கட்டுக் கதைகளில் வியக்க என்ன இருக்க முடியும் என்ற கேள்விக்குள் புகுந்தால், நூற்றுக்குத் தொண்ணூறு சித்தர் பெருமக்களுமே பொய்யாகிப்போவர். அதேநேரம், அவர்களின் பாடல்கள் மட்டும் எப்படி வந்தன என்கிற கேள்வி மிஞ்சி நிற்கும். இதனால்தான் 'நதி மூலம் ரிஷி மூலம் பார்க்காதே!' என்றனர். அது நம்மைத் திசை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

திருப்பி, நமக்குக் கிடைக்க வேண்டியதைக் கிடைக்கவிடாமல் செய்துவிடும்.

பொதுவாக, எந்த ஒரு சித்தருடைய பெயரும் அவரது இயற்பெயராகவே முதலில் இல்லை. கருவூரார், பாம்பாட்டி, கொங்கணர், தேரையர், பட்டினத்தார், புலிப்பாணி, மச்சமுனி, ரோமரிஷி, பிண்ணாக்கீசர், பிராந்தர், சிவவாக்கியர், சட்டை முனி, திருமூலர் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். அவ்வளவு பெயர்களும் காரணப் பெயர்களே! அடுத்து, அவர்களின் தாய் - தந்தையர் பற்றியோ, குலம் - கோத்திரம் பற்றியோ, மனைவி - மக்கள் பற்றியோ சரித்திரச் சான்றுகள் போல கல்வெட்டு, பட்டயம் என்று எதுவும் இல்லை. ஒரு சிலரது பின்புலம் தெரிகிறது; அதில்கூட ஒரு தெளிவற்ற தன்மையே காணப்படுகிறது.

ஆனால், இவர்களது பாடல்கள் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாமல், ஓரளவு நம் வசப்பட்டுள்ளன. அதுவும் ஓரளவுக்குத்தான். அந்தப் பாடல்களைக்கூட இவர்களே எழுதினார்களா அல்லது இவர்கள் சொல்லச் சொல்ல இவர்களின் சீடர்கள் எழுதினார்களா என்று ஆராய வேண்டி உள்ளது.

மக்கள் சமுதாயத்துக்குச் சேதி சொல்ல வேண்டும், அவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும் என்றெல்லாம் எண்ணி அவர்கள் செயல்பட்டது போலவே தெரியவில்லை. ஒரு சித்த புருஷன் அப்படிச் செயல்பட வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது. ஒரு சித்தன் எப்படி உருவாகிறான் என்று சிந்தித்தால், இந்த விடையே நமக்குப் புலனாகும்.

மண்ணில் பிறந்துவிட்டோம்; உடம்பு என்று ஒன்று இருந்து பசிக்கிறது; அதற்காக உண்ண வேண்டியுள்ளது; அந்த உணவுக்காக உழைக்க வேண்டியுள்ளது; கூடவே துணிமணி, வீடு - வாசல் எனப் பல தேவைகள்; மனைவி - மக்கள் என உறவுகள்; இவை அனைத்துக்குமாகவும், இவர்கள் அனைவருக்குமாகவும் உழைக்க வேண்டியுள்ளது; இந்த வினைப்பாடுகளுக்குள் நிறையவே ஏற்றத் தாழ்வுகள். பெரியவன் - சிறியவன், ஏழை - பணக் காரன், வீரன் - கோழை, நல்லவன் - கெட்டவன் எனப் பலப்பல நிலைப்பாடுகள்.

'இதெல்லாம் எதற்கு? இவ்வளவு பெரிய உலகில் நான் வந்து பிறக்க எது காரணம்? நான் யார்? எனக்கு என்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பெற்றோர் இட்ட பெயர்தான் நானா? இல்லை, இந்த உடல்தான் நானா? இதனுள் மனம் எங்கே இருக்கிறது? அது ஏன் அச்சத்திலும் மிச்சத்திலும் அவ்வப்போது சிக்குகிறது? சாப்பிட்டால் பசி அடங்குகிறது; திரும்பப் பசித்திடாமல் இருப்பதில்லையே! பசியாது இருக்க வழியே இல்லையா? நான் விரும்பும் விதமாக வாழ இயலாதபடி எதிரே எவ்வளவோ விஷயங்கள்... இவற்றை வெற்றி கொள்வது எப்படி?'

- இப்படிப் பல கேள்விகள் எழும்பிய நிலையில், அவற்றுக்காக ஓர் உறுதியோடு விடை தேடி, அப்படித் தேடியதால், தானறிந்த விடையால் தன்னை அறிந்தவனே- அதனால் சித்தம் தெளிந்தவனே சித்தன்.

இந்தத் தெளிவுக்குள் எவ்வளவோ அடக்கம். அதில் ஒன்று, 'யாரும் யாருக்கும் எதையும் கொடுத்துவிட முடியாது' என்பதும் ஆகும். ஒருவன் ஏழையாக, ஒருவன் பணக்காரனாக... அறிவாளியாக, அறிஞனாக, அழகாக, ஊனமாக என்று இருப்பதன் பின்னாலே, அநேக கர்ம காரணங்கள் இருக்கின்றன. வினைப்பாடுகளே வழி நடத்துகின்றன. அந்த வினைப் பாட்டுக்குள் இடம் இருந்தால் மட்டுமே, ஒரு சித்தனோ முனிவனோ ஒருவருக்கு உதவ முடியும். உதவ நேருகிறது என்றாலே, கடன்பட்டிருக்கிறோம் என்றாகிவிடுகிறது. யாருக்கு அப்படிக் கடன்பட்டிருக்கிறோமோ, அவரை காலமும் உரிய நேரத்தில் கண்ணில் காட்டும். அவரும் கேட்பார். அவருக்குக் கொடுத்துவிட வேண்டியதுதான். அது, தான் கொடுத்ததாக ஆகாது; அவருடையதை அவர் எடுத்துக்கொண்டதாகவே பொருள்!

இந்தத் தெளிவுதான் சித்தர்களை மனித சமுதாயத்தை விட்டு ஒதுங்க வைத்தது. காடு, மலை, குகை என்று போகச் செய்து வாழ்வைக் கழிக்க வைத்தது. அடுத்து... இது மாயா வாழ்வு; எச்சிலும் மலமும் எப்போதும் இருக்கும் வாழ்வு; காமமும் குரோதமும் உடம்போடு பசைபோட்டு ஒட்டிக் கொண்ட வாழ்வு.

ஒரு குருட்டுப் பறவையோ, குருட்டு ஆடோ, மாடோ இரை தேட வக்கற்றுப் போய் இறந்துபோகும். ஆனால், மனிதன் குருடாகப் பிறந்தாலும், பேச்சு மொழி எனும் சத்தத்தால் வாழ்ந்துவிட முடியும். ஒலி மனிதனுக்குக் கிடைத்த பரிசு. அதையும் மேம்படுத்தி, அதில் ஏழு சுரங்களை இனம் பிரித்து, எழுத்து எனும் மொழியின் உறைவிடத்தைக் கண்டறிந்து,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மனிதன் மேலானவனாக இருக்கிறான். இதெல்லாம் இவனுக்கு அளிக்கப்பட்ட நோக்கம்... இவன் தன்னையறிந்து, இந்த மாயா உலகில் இருந்து விடுபட்டு, முக்தி அடைய வேண்டும் என்பதற்காகவே!

ஆனால், அதற்கு முயலாமல் சிற்றின்பங்களை அனுபவித்து வாழ்வதே வாழ்க்கை என்று, அவன் உலகின் நிலையற்ற இன்பங்களில் ஆழ்ந்துவிடுகிறான். அப்படி அமிழ்வதாலேயே அவனது கர்ம வினைப்பாடும் மிகுதியாகி, பிறப்பதும்-இறப்பதும், பின்பு திரும்பப் பிறப்பதும் என்றே அவன் வாழ்நாள் செல்கிறது.

இதில் எவராலும் எப்போதும் இன்பத்திலேயே இருக்க முடிவதில்லை. இளமையை கைக்கொள்ள முடிவதில்லை. நோய் நொடியை வெல்லவும் வழிவகை தெரியவில்லை. உரிமையாக 'என் உடம்பு' என்கிறோம். ஆனால், நம் உடம்பில் ஒரு முடி எப்போது நரைக்கும் என்று நமக்குத் தெரியவில்லை. அதை நரைக்க விடாமல் செய்யவும் தெரியவில்லை. மொத்தத்தில், நாமே நம் வசமில்லை. எதன் வசம் இருக்கிறோம் என்பதும் தெரியவில்லை. இதுவே மனித வாழ்வு! இதில் உடம்பையும் மனத்தையும், பின்பு காலத்தையும் வென்று வாழ எவனால் முடிகிறதோ, அவனே சித்தன். போகரும் அவர்களில் ஒருவர்.

ஆனால், எடுத்த எடுப்பிலேயே அவர் முழுமையான சித்தனாக ஆகிவிடவில்லை. சித்தத்தின் ஆரம்ப நிலையைச் சுலபமாக அடைந்திட, அவரது கர்மத்தில் இடம் இருந்தது. பின், அடுத்தடுத்த நிலைப்பாடுகள் அவருக்கும் பெரும் அனுபவத்தாலேயே சாத்தியமாயிற்று. அவரது அனுபவங்கள் அலாதியானவை. சித்த புருஷர்களிலேயே ரசமான அனுபவங்களுக்குச் சொந்தக்காரரர் என்று போகரைக் கூறலாம்.

சித்தத்தின் ஆரம்ப நிலையில், இவருக்கு அஷ்டமா சித்து வசமாகிவிட்டது. அதாவது, அணிமா (அணு போன்று சிறுத்தல்), மஹிமா (மலை போல் பெருத்தல்), கரிமா (கனத்தல்), இலஹிமா (லேசாதல்), வசித்வம் (ஈர்த்தல்), பரகாயம் (கூடு மாறல்), காரிய ஸித்தி (விரும்பியதை அடைதல்), ஈசத்வம் (இறை நிலை எட்டல்) ஆகியவையே அஷ்டமா ஸித்தியாகும்.

மானுட வாழ்வில், ஒளி - ஒலியிலான வாழ்க்கைப் போக்கில்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கர்ம வினைப்பாட்டுக்கு நடுவில், இந்தச் ஸித்துகள் மிகப் பெரியவை! இதனால், மாயா வாழ்வை நம் விருப்பம்போல் அனுபவிக்கலாம். ஆனால், இதை அறிந்து, இதைக் கடந்துவிட வேண்டும். இதிலேயே லயித்துவிடக் கூடாது. இதில் லயித்தால், ஒருகட்டத்தில் இது கைவிட்டுப் போய், இதை அறிந்திருந்த சித்தனும் பெரும் சாபத்துக்கும் பாபத்துக்கும் ஆளாகும்படி ஆகிவிடும். இந்தத் தவறு பல சித்தர்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, அஷ்டமா ஸித்திகளை தன் பொருட்டுத் துளியும் பயன்படுத்திக்கொள்ளாதவனே அசலான சித்தன்.

உதாரணமாக, பஞ்சணையில் படுத்து உறங்க வேண்டும் என்றால், காரிய ஸித்தியால் நொடியில் இதை அடைந்துவிடலாம். எதிரி தாக்க வந்தால், அணிமா ஸித்தியால் அணுபோல் சிறிதாகி, எதிரியின் கண்களிலேயே படாமல் தப்பித்து விடலாம். நம்மைத் தூக்கிக் கடலில் போட்டால், இலஹிமா ஸித்தியால் மூழ்கிவிடாமல் மிதக்கலாம். இப்படி மிதந்துதான் கரை சேர்ந்தார் திருநாவுக்கரசர். மஹிமாவால் விசுவரூபம் எடுத்தார் அனுமான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



போகரும் தொடக்க காலத்தில் இந்தச் ஸித்திகளைப் பெரிதாகக் கருதி, இதை அறிந்துள்ள தன்னையும் பெரிதாகக் கருதிக்கொண்டு, இந்த உலகைக் காக்க வேண்டியது தன் கடமை என்று எண்ணி, தானறிந்த யோகக் கலைகளை எல்லோருக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கத் தொடங்கிவிட்டார். குறிப்பாக, மருத்துவக் கலைக்குள் புகுந்து, இறவாமைக்கு என்ன வழி என்பதில் கவனம் செலுத்தத் தொடங்கினார்.

இவரது சீடர்களில் ஒருவன், வனத்தில் மூலிகை சேகரிக்கும் போது, பாம்பு கடித்து இறந்துபோனான். நீலம் பாரித்த அவன் உடம்பைக் கண்ட போகருக்கு, அவனை எப்படியாவது உயிர்ப்பித்துவிட வேண்டும் என்கிற எண்ணம் ஒரு வெறியாகவே ஏற்பட்டது.

'அவன் கர்மம், அவன் போனான்' என்று எண்ணாமல், 'என் சீடனுக்கு எப்படி மரணம் நேரிடலாம்?' என்ற ஆங்காரம், இப்படி ஒரு வெறியை அவருக்குள் உருவாக்கியது. அதாவது, சித்த நிலையை எட்டியவனையே உலக மாயை விடவில்லை. அந்தச் சீடனை உயிர்ப்பிக்க விரும்பிய அவர், ஆகாய மார்க்கமாக, தானறிந்த பறக்கும் வித்தையால் இமயமலை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நோக்கிப் பயணிக்கத் தொடங்கிவிட்டார். அங்கே...?!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 8

---

விட்டகுறை வந்ததென்றால் தானே யெய்தும்
விதியில்லார்க் கெத்தனைதான் வருந்தினாலும்
பட்டுமன மாய்தலல்லால் வேறொன்றில்லை
பக்தியில்லார்க் குரைத்து மனம் பாழ்போக்காதே
திட்டமதாய்ப் பாணம் வைத்துத் தேவி பூசை
சீர்பெற்றார் பதினெட்டுச் சித்தர் தாமே...

- கருவூர் சித்தர்

---

மேகமணிக் குளிகையின் தயவாலும், அட்டமாஸித்தியில் ஒரு ஸித்தியான இலஹிமாவின் திறத்தாலும் பஞ்சு போலாகி வானவீதியில் பறந்து, இமயமலைக்கு நேர்மேலே நின்று, அந்த வெள்ளிப்பனி மலையை நோக்கிய போகர், அதையே கயிலாயமாகக் கருதி 'ஓம் நமசிவாய' என்று நெக்குருகத் துதித்தபடியே, அந்த மலையின் ஒரு பகுதியின் மேல் இறங்கினார்.

இமயம் ஓர் அற்புதம். அது ஒரு புதிரும்கூட! அங்கே எதுவும் வளர்வதும் இல்லை; எதுவும் அழிவதுமில்லை. அங்கே மாசுமருவுக்கோ, தூசு தும்புக்கோ இடமில்லை.

தூய்மையின் நிறம் வெண்மை; அமைதியின் நிறமும் வெண்மை தான். எனவே, அங்கே எங்கு பார்த்தாலும் இருப்பது அமைதி யும், தூய்மையும் மட்டும்தான்.

எப்பேர்ப்பட்ட காமேந்திரியன்கூட அங்கு செல்லும்பட்சத்தில் உடற்சூட்டை இழந்து, அதன் பிடியில் இருந்து விடுபட்டவனாகி விடுவான்.

உலகில் அளவில் மட்டும் இது உயர்ந்தது அல்ல; அனைத்திலும் இதுவே உயர்ந்தது. உயரே செல்லச்செல்ல, ஒரு ஆத்மாவுக்கு எது ஸித்திக்கும் என்பதைச் சொல்லும் ஒரு தோற்றமாய் இமயம் விளங்கிக்கொண்டிருக்கிறது. 'மயம்'

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்றால் எல்லாமாயிருப்பது, வியாபித்திருப்பது என்று பொருள். இமயம் என்றால், ‘இதுவே எல்லாம்’ எனப்படுவதாகும்.

இது மட்டுமல்ல, உலகின் மையம்- உயிர்களின் மையம் என்றும் இதைக் கூறலாம். நமது இமைகள் இரண்டின் மையத்தில்தான் ஆக்ஞா சக்கரம் சுழன்றபடி உள்ளது. இங்கேதான் நாம் விபூதி, குங்குமம், திருமண் என்று தரிக்கிறோம். இதனால், இதனுள் துர்நீர் சேராதவாறு தடுக்கப்படுகிறது. துர்நீர் சேர்ந்தால், நாம் குழைத்துப் பூசும் விபூதியும், திருமண்ணும் தன் ஈரம் காயும்போது, இதையும் உறிஞ்சி காயச்செய்து விடுகிறது. அதனால், நம் முகப்பொலிவு தேஜசாய் வெளிப் படுகிறது. இந்தப் புருவ மையம்தான் லலாடக்கோயில். மகாபீடம், மூன்றாவது கண், திரிவேணி, திரிமூர்த்தி, குருபீடம், ஞானவாசல் என்றெல்லாம் சித்தர் பெருமக்களால் குறிப்பிடப்படுகிறது.

இந்தப் புருவ மையம்தான் ஒரு மனிதனை ஞானியாக்குகிறது. இந்த மையத்தில் மனத்தைக் குவித்து தியானிக்கும்போது, பேராற்றல் உருவாகிறது. இந்த ஆற்றலால் நேற்று நடந்ததை, இன்று நடக்க இருப்பதை, நாளை நடக்கப்போவதை அறியலாம். உச்சபட்சமாக, இந்த மையத்தில் அந்தப் பரமனையே நாம் காண முடியும்.

இந்த மையம் ஒருவருக்கு எப்படி இருக்கிறது என்பதை வைத்தே, அவரது அறிவும் ஞானமும் தெரியவரும். இந்த மையத்தில் மனத்தை ஒடுக்குவதற்குப் பெயர்தான் தவம். மனிதனுக்கு இரு இமை நடுவே மையம் என்றால், உலகுக்கு மேல்- கீழ் எனும் இரு புறத்துக்கு நடுவேயான மையம் இமயம்!

தவிர, பூமியின் சமதளத்தில் இருந்து ஆகாயம் நோக்கி அதிகபட்சத்துக்கு எழும்பி நிற்பது இது ஒன்றே! இதன் உச்சியே இந்த உலகின் உச்சி. இப்படி ஓர் உச்சிக்கு மனிதனும் சென்று இம்மையாகிய இமயத்தில் நின்று, தன் மையமாகிய லலாடக்கோயிலில் மனத்தை அடக்கி தவம் செய்வது பேராற்றல் மிக்க செயலாகும்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



அடுத்து, சத்தமற்ற ஒரு நிலையை இந்த உலகில் வாழும் ஒரு மனிதர்கூட உணர்ந்திருக்க முடியாது. ஏனென்றால், அதற்கு வாய்ப்பே கிடையாது. மிக அதிகபட்சமாக, ஊரே தூங்கும் நள்ளிரவில், வீட்டுக் கடிகார விநாடிமுள் நகரும் சத்தம்கூடக் கேட்கும் ஓர் அமைதியைத்தான் நாம் அனுபவித்திருப்போம். இந்த அமைதியைப்போல நூறு மடங்கு அதிகமானது இமயத்தின் உச்சியில் நிலவும் அமைதி. இப்படி இமயம் பற்றிச் சிந்திப்பதற்கு நூறு நூறு விஷயங்கள் உள்ளன.

அப்படி ஒரு இடத்துக்கு போகர் வரவும், அவரிடமும் ஒரு புத்துணர்வு. மேனி எங்கும் ஒரு பரமானந்தச் சிலிர்ப்பு! ஏற்கெனவே தவப் பரிச்சயமும், அதற்கான கர்ம பலமும் உடையவராக இருந்தபடியால், அப்படியே ஒரு குகையாகப் பார்த்து அமர்ந்து, தன்னையும் உலகையும் மறந்துவிடத்தான் முதலில் விரும்பினார்.

ஆனால், சீடனின் நினைவும், அவனுக்கு உயிர் தரும் விருப்பமும் அவரது தவநோக்கத்தை மாற்றி, இந்த வெண்பனிக் கோட்டத்தில் எங்கே சஞ்சீவி மூலிகை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கிடைக்கும் என்று தேட வைத்தது. கூடவே, அந்த மலையில் தவமிருக்கும் சித்தர் பெருமக்கள் நினைவும் வந்திட, அவர்கள் எங்கே என்று தேடத் தொடங்கினார். அதற்கு தோதாக, கயிலாய ஏரி எனப்படும் மானசரோவர் கரைக்குச் சென்றார். அங்கே நீராட வரும் சித்தர் பெருமக்களிடம் தன் விருப்பத்தைக் கூறினால், அவர்கள் சஞ்சீவி பர்வதம் உள்ள இடத்தை காட்டக்கூடும் என்று கருதினார்.

அவர் எண்ணியது வீண்போகவில்லை. பல சித்தர் பெருமக்கள் கோவணதாரிகளாக மானசரோவர் கரையில் நீராட வந்திருந்தனர். அப்பியெடுக்கும் குளிரால் உடம்பானது பாதிக்கப்படாதவாறு இருக்க, அவர்கள் தங்கள் உடம்பில் உள்ள அக்னியை நிலைநிறுத்தி இருந்தனர்.

நம் உடம்பின் மேல் நாம் ஆதிக்கம் செலுத்துவது என்பது ஒரு பெரும் ஆற்றல். பசியாதிருப்பது, உறங்காதிருப்பது, அசையாதிருப்பது, நின்றவாறே இருப்பது என்று அதில் பலவிதங்கள் உண்டு. காயகல்பங்களால் உடம்பைப் பேணுபவர்களுக்கே இதெல்லாம் சாத்தியமாகும். போகரோ துவராடையால் மேனி மூடி, குளிருக்கு ஆளாகியிருந்தார். இருப்பினும், அந்த ஏரிக்கரை வரை வரமுடிந்த அவரின் தீரச்செயலை அந்தச் சித்தர்கள் புரிந்துகொண்டு, அவரைப் பார்த்து சிரித்தனர். போகர் அவர்களை எல்லாம் வணங்கினார்.

''யாரப்பா நீ?''

''மதங்கொண்ட யானையை அடக்குபவன் பாகன் என்றால், அதனினும் பலம் கொண்ட காமம், குரோதம், மாச்சரியங்களை அடக்கமுடிந்த காரணத்தால் போகன் என்றானவன்!''

''பாகன்- போகன்... பலே!''

''இங்கு வந்த காரணம்?''

''உங்களை எல்லாம் தரிசனம் செய்யவும், மேலான சஞ்ஜீவி மூலிகையை அடையவுமே..!''

''அது எதற்கு உனக்கு?''

''எனக்கல்ல... என் சீடனுக்கு...''

''அப்படியென்றால், உன் சீடன் இப்போது...?''

''ஆம். அரவம் தீண்டி, உதிரம் சுண்டி, உயிரை இழந்து கிடக்கிறான்.''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"ஓ... அவன் பிழைத்தெழ வேண்டுமா?"

"ஆம்... மிகுந்த இளம் வயது. அவன் இறந்தது பெரும் கொடுமை."

"அட, அரைச் சித்தா! கர்மம் குறித்த சிந்தனையே உன்னிடம் இல்லையே..?"

"கர்மமா?"

"என்ன கேள்வி இது? கர்மமாகிய வினைப்பாடு குறித்து நீ சிந்தித்ததில்லையா?"

"நிறையவே சிந்தித்திருக்கிறேன். அதற்கென்ன?"

"அதற்கென்ன என்றா கேட்கிறாய்? அரவம் தீண்டி அவன் உயிர் பிரிய வேண்டும் என்பது அவன் கர்மம் என்பதை நீ உணரவில்லையா?"

"அந்தக் கர்மத்தை வெல்ல வேண்டும் என்பதே என் நோக்கம்..."

"வென்று..?"

"இது என்ன கேள்வி? சித்தன் நினைத்தால் படைத்தல், காத்தல், அழித்தல் என சகலமும் சாதிக்க முடியும் என்று நான் நிரூபிக்க விரும்புகிறேன்..."

"நிரூபித்து..?"

"நிரூபிப்பதன் மூலம், சித்தத்தை உயர்த்திப் பிடிக்க விரும்புகிறேன்..."

"ஆமாம், நீ எப்படி சித்தனானாய்..?"

அந்தக் கோவணச் சித்தர்களில் ஒருவர் இப்படிக் கேட்கவும், போகருக்கு நெஞ்சில் முள் தைத்ததுபோல் இருந்தது.

"சித்தர் பெருமக்களே... என் கேள்விக்கு நேரடியாக பதில் கூறாமல், எதற்காக என்னை இப்படிச் சீண்டுகிறீர்கள்? இதில் தங்களுக்குக் கிடைப்பதுதான் என்ன?" - போகரிடம் இருந்து கோபமாய் கேள்வி வெடித்தது.

"போகனே... சினம் கொள்ளாதே! சினம் தவத்துக்கு நேர் எதிரானது. நீ சேமித்து வைத்திருக்கும் உன் தவப் பயன்களை எல்லாம் அது அழித்துவிடும். மாறாக... அந்த தவப் பயன்கள், நீ கோபிக்கும் எங்களை அடைந்துவிடும். எங்களுக்கு எவரிடம் இருந்தும் எதுவும் வேண்டாம். உனது தவப்பயன்கள் எங்களை அடைந்தால், அதை அனுபவிக்க நாங்கள் மேலும் சில காலம்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வாழும்படி இருக்கும்...''

''உங்கள் பதில் எனக்கு ஆச்சரியம் தருகிறது. என் சினம், அருளாசி உங்களை அடைந்துவிடும் என்பதும், அந்த அருளை தாங்கள் வேண்டாம் என்பதும் மேலும் ஆச்சரியப் படுத்துகிறது.''

''நாங்கள் வேண்டுவதெல்லாம் ஒன்றே! அது மீண்டும் பிறவாமை! சஞ்சித கர்மம், பிராரப்த கர்மம், ஆகாமிய கர்மம், நிஷ்காமிய கர்மம் என்னும் எல்லா கர்மங்களில் இருந்தும் தெளிந்து விடுபடத்தான் மானுடப் பிறப்பு. எனவே, எதன் பாலும் விருப்பம் கொள்ளாமல், இறைவன்பால் மட்டும் விருப்பம்கொண்டு இந்த உடம்புச் செல்களின் முற்றான அழிவுக்காக காத்திருக்கிறோம். கடைசி செல் இயங்கும்வரை ஜீவித்திருப்போம். அதுவும் அடங்கவும் எங்கள் விடுதலை நிகழும்...''

''ஒரு நாள், உடல் அழிந்து உயிர் விடுபெறத்தானே போகிறது? அதுவரை உலக மக்கள் நன்மைக்காகப் பாடுபட்டு, அவர்களின் இன்ப வாழ்வுக்காக வழிகாட்டி வாழலாமே..?''

''உன் எண்ணம் மேலான எண்ணமே! ஆனால், அதில் மாயை மிகுந்திருப்பதை நீ உணர வேண்டும். எல்லோருக்கும் எல்லாவற்றையும் கொடுத்துவிட முடியாது. கொடுத்தாலும் எல்லோராலும் பெற முடியாது.''

''அவரவருக்கு எது தேவையோ அதைத் தரலாமே..?''

''உன் தேவைக்கே இறைவன்தான் தருகிறான். இதில் நீ எதை பிறருக்குத் தந்துவிட முடியும்?''

''என்னிடம் இருப்பதை..!''

''அப்படி நீ தருவதன் மூலம் நீ அடைய விரும்புவது...?''

''நிறைவை..!''

''அது உனக்கு ஏற்படாவிட்டால்?''

''அது எப்படி ஏற்படாமல் போகும்? இப்போதுகூட என் சீடனுக்கு நான் உயிரைத் தந்துவிட்டால் அது எத்தனை பெரிய நிறைவு?''

''இந்தச் சீடன் நாளையே ஒரு பாவச் செயல் புரிந்தால், அது இவனுக்கு உயிரை அளித்த உன்னையும் சார்ந்திடும். பரவாயில்லையா?''

இந்தக் கேள்வி முன் போகர் ஒரு விநாடி தேங்கினார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அதுவரை பளிச் பளிச்சென்று பதில்களை கூறியதுபோல அவரால் கூற முடியவில்லை.

"என்ன சிந்தனை..? பதில் கூறு!"

"பாதகமில்லை. அந்தப் பாவம் என்னையும் சேரட்டும். நான் இதற்காக அஞ்சத் தயாரில்லை!"

"போகா... அரைச் சித்தன்தான் நீ என்பதை இந்த பதில் மூலம் நிரூபித்துவிட்டாய். அரை வைத்தியனும், அரைச் சித்தனும் ஆபத்தானவர்கள். உனக்கு உன்னை உணர்த்தவே நாங்கள் இவ்வளவு கேள்விகளையும் கேட்டோம். உன்னிடம் 'நான்' என்னும் செருக்கும், புகழ் மீது மோகமும் நிறையவே உள்ளது. இந்தச் செருக்கும் மோகமும் ஒரு யோகிக்கு துளியும் ஆகாதவை. நீ அறிய வேண்டியதும் புரிய வேண்டியதும் நிறையவே உள்ளன. அவற்றை நீ அடைந்த நிலையில், இப்போது நாங்கள் பேசிய அளவுக்குக்கூடப் பேச மாட்டாய்.

நாங்களும் உன்னால் இன்று பல நூறு வருடங்களுக்கு பிறகு பேசியுள்ளோம். இந்தத் தூயவெளியும், இதனால் அதிர்வுக்கு ஆளாகியிருக்கும். இங்கே இன்னும் பல நூறு யோகியர் தவம் செய்தபடி உள்ளனர். தொடர்ந்து உன்னோடு பேசுவதால், அவர்கள் தவத்துக்கு ஊறு நேரலாம். பேசியது போதும்; வந்த வழியே புறப்படு!'

அவர்கள் கட்டளை இடும் குரலில் கூறிவிட்டு, நீருக்குள் இறங்கினர். போகருக்கு ஏமாற்றமாக இருந்தது. அந்தச் சித்தர்கள் அவருக்கு சுயநலவாதிகளாகத்தான் தெரிந்தனர்.

அப்படியே நடக்கத் தொடங்கினார். கயிலாய மலையை வலம் வந்து முடித்தவர், ஓரிடத்தில் இருந்து வந்த சிவநாம ஒலியை செவிமடுத்தார்.

அந்த ஒலி அவரை ஒரு பெரும் முனிவர் முன் கொண்டுவந்து நிறுத்தியது. அவரது கால்களும், மூச்சுக் காற்றும் அங்கு வியாபிக்கவும், அந்த முனிவரின் தவமும் கலைந்துபோனது.

கண் திறந்தவர் எதிரில், போகர்! போகரும் அவரை பயபக்தியோடு வணங்கினார். அவரிடம் பதிலுக்கு எந்த ஓர் உணர்வும் வெளிப்படவில்லை. மாறாக, அமர்ந்திருந்தவர் எழ முற்பட்டார். ஆனால், அது சுலபத்தில் சாத்தியமாகவில்லை. போகர் அவருக்கு உதவி செய்தார். அவரும் நன்றியோடு பார்த்தார். இருந்தும், அவரால் எழுந்து நிற்க முடியவில்லை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"அப்பனே... இன்றைய கால கதியை அடையாளப் படுத்துவாயா?" என்று கேட்டார் அவர்.

"இப்போது கலியுகத்தில் பல நூறு ஆண்டுகள் கழிந்து, அதில் விபவமும், அதனுள் வசந்த ஹேமருதுவும் நடப்பில் உள்ளது. கிழமையில் இன்று குருவுக்கான வியாழக்கிழமை" என்றார் போகர்.

"அடேயப்பா... கலி பிறந்து, அதில் பல நூறு ஆண்டுகள் கழிந்துவிட்டனவா? நான் முந்தைய துவாபர யுகத்தில் தவத்தில் ஆழ்ந்தேன். அது இங்கு நீ வரவும், முடிவுக்கு வந்துள்ளது. அதனால்தான் சட்டென்று எழுந்து நிற்க முடியவில்லை!" என்றார். அதைக் கேட்ட போகரிடம் பெரிதும் அதிர்ச்சி.

"முனிவர்பிரானே... தாங்கள் யுகக் கணக்கிலா தவத்தில் இருந்தீர்கள்?"

"ஏனப்பா... நம்ப முடியவில்லையா?"

"ஆம்... இன்னுமா உங்களுக்கு இறைவனிடம் வரம் ஸித்திக்க வில்லை?"

"நான் வரம் குறித்து சிந்திக்கவேயில்லையே...?"

"அப்படியென்றால் தங்கள் தவத்தின் நோக்கம்...?"

"நோக்கம் இல்லாததே என் நோக்கம்..."

"நோக்கம் இல்லாததா..? என்ன சொல்லுகிறீர்கள்?"

"பின், நீ வேறு என்ன எதிர்பார்க்கிறாய்?"

"ஒரு நோக்கமும் இன்றி எப்படி தவமியற்ற முடியும்?"

"நான் இயற்றியிருக்கிறேனே... என்னைப் பார்த்துமா கேட்கிறாய்?"

"சரி, இதில் தாங்கள் அடைந்தது எதை?"

"இத்தனை காலம் நான் அழியாமல் அப்படியே இருந்திருக் கிறேனே... அது போதாதா?"

"இதில் என்ன பெரிதாக இருக்கிறது?"

"பெரிதாகவா..? அப்படியென்றால், சிறிதாக என்கிற ஒரு எண்ணமும் உன்னிடம் உள்ளது. ஒன்றை பெரிதென்றும் சிறிதென்றும் கருதுவது மானுட அறிவின் தொடக்க நிலை. உண்மையில் பெரிதென்று ஒன்றில்லை; சிறிதென்று ஒன்றில்லை. பெரிதும் சிறிதும் அடையாளங்களே!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இந்த ஊனுடம்பு அழியாமல் யுகம் கடந்து அப்படியே இருந்திருப்பதே தவத்தால்தான். இனியும் இதைத் தொடர்ந்து இருந்தும் இல்லாமல் போவது என்பதுதான் உத்தம நிலை. இதை ஈசத்வம் என்பார்கள். உன் அறிவுக்குப் புரிகிறாற்போல் கூறவேண்டும் என்றால், நானே கடவுளாகிவிடுகிற நிலை - நித்ய இன்ப நிலை! நான் மீண்டும் அதைத் தொடர விரும்புகிறேன். நீ புறப்படு!"

போகரைப் பார்த்து இப்படிச் சொன்னவர், திரும்பவும் தவத்தில் ஆழ்ந்தார். அவர் பேசிய பேச்சுகளுக்குள் மிக ஆழ்ந்த பொருள். போகருக்குள்ளும் அவற்றின் தாக்கங்கள்..!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 9

வினவையிலே சமாதியதுதான் திறந்து
வேகமுடன் அசரீரி வாக்குண்டாச்சு
தினகரன்றன் ஒளிபோல வடிவம் கண்டேன்
திகழான சட்டை முனி தனைக் கண்டேன்
மனமுருகி என் மீதில் கிருபை வைத்து
மாட்சியுடன் ஞானோபதேசம் சொன்னார்
அனல் கண்ட மெழுகது போல் நெஞ்சம்தானும்
அப்பனே மனமுருகி அழுதிட்டேனே...

- போகர் ஏழாயிரம்

போகரைப் புறந்தள்ளி நெடிய தவத்தை மீண்டும் தொடர ஆரம்பித்துவிட்ட அந்த முனிவர், போகரை மிகவே பாதித்துவிட்டார். ஏற்கெனவே அவரது தவம் யுகங்களைக் கடந்துவிட்டது. திரும்பவும் தவத்தைத் தொடர்கிறார் என்றால், அப்படி தவத்தில் தொடர்வது என்பதும், தவத்தோடு தவமாய் கிடப்பதும்தான் ஞானியர் செயலா?

தவத்தில், இருந்தும் இல்லாது போகிறோம். குறிப்பாக, 'மனோ நாசம்' எனும் எண்ணங்களற்ற நிலை உருவாகி, உயிரானது உடம்புக்குள் சிறைப்பட்டது போலாகி, விடுபெற்று வேறு மாற்றங்களுக்கு ஆளாகாமல், ஒரு பெட்டகத்து நகைபோல அப்படியே இருந்துவிடுகிறது. அது மாறுவதும் இல்லை; இயங்குவதும் இல்லை. இப்படி ஒரு நிலையை, இவர் ஈசத்வம் என்று எதை வைத்துச் சொன்னார்?

ஈசத்வம் என்பது, நாமே அந்தப் பரம்பொருளாகிய ஈசனாக மாறிவிடுவதைக் குறிக்கிறது என்றால், அந்த ஈசன் என்ன இப்படியா தவத்தில் தவமாய் இருக்கிறான்? உலகின் ஒட்டு மொத்த இயக்க கதிக்கே சொந்தக்காரன் அவன். அவனது நடனம் ஒன்று போதும். உண்மையில்...இயக்ககதியில் உலக

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நலனை உத்தேசித்து ஈசனைப் போன்று இயங்கிக்கொண்டிருப்பது நான்தான். இந்த முனிவர், தனது தவத்தை மேன்மைப் படுத்துவதற்காக ஈசத்வத்துடன் அதை ஒப்பிட்டுள்ளார் என்று, அந்த முனிவரிடம் ஏற்பட்ட தாக்கத்தால், தன் வரையிலும் ஒரு புது அர்த்தத்தைக் கொடுத்துக்கொண்ட போகர், தொடர்ந்து சஞ்ஜீவி மூலிகையைத் தேடுவதைக் கைவிடவில்லை.

ஆனால், அவருக்கு அதைத் தவிர, எல்லாமே கிடைத்தது. குறிப்பாக, தாவர ரகசியங்கள் போகர் வரையில் நிர்வாணமாகின. புல் - பூண்டில் இருந்து விண்ணளாவும் விருட்சம் வரை ஒவ்வொன்றின் குணப்பாடும், வினைப்பாடும் போகருக்குத் தெரியவந்தன. இமயத்து யோகிகள், அவருக்கு அவ்வளவையும் உபதேசித்தனர். அப்படியே, 'இறந்தவனைப் பிழைக்கச் செய்கிறேன் என்று எமனோடு மல்லுக்கட்டாமல், இருப்பவர்களை... அதாவது பிறவி எடுத்துவிட்டவர்களை எமன் கொண்டு போக முடியாதபடி, முடிந்தவரையிலும் மானிடர்களை கல்ப யோகிகள் ஆக்கு' என்றனர். அந்தக் கருத்து போகருக்கு மிகப் பிடித்துப்போனது. ஆனால், ஒருவனுக்குக் கல்ப தேகம் உண்டாவது என்பது அத்தனை சாதாரணமானது அல்ல. அதற்குத் தவம் செய்திருக்க வேண்டும். கோள்களின் குறுக்கீடும் இருக்கக் கூடாது. அதிலும், கலியுகத்தில் ஒரு மனிதன் பிறப்பதே கர்மத்தால்தான். மாணிக்கவாசகர், தமது சிவபுராணத்தில் உயிர்களின் பல்வேறு பிறப்பு நிலை பற்றிப் புலம்பும் விதமாய் பாடியிருப்பார்.

புல்லாகிப் பூடாய்ப்
புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப்
பறவையாப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப்
பேயாய் கணங்களாய்
வல்லசு ரராகி
முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்
தாவர சங்கமத்துள்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எல்லாப் பிறப்பும்

பிறந்திளைத்தேன்; எம்பெருமான்

மெய்யே, உன் பொன்அடிகள்

கண்டு இன்று வீடு உற்றேன்...

- எனும் அவரது பாடலில், ஓர் உயிரின் யாத்திரை எப்படிப் பட்டது என்பதை ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு பிறப்பிலும், அந்தப் பிறப்பில் நாம் புரிகின்ற பாவ- புண்ணிய செயலுக்கேற்ப, நமக்கான அடுத்த பிறப்பு தீர்மானம் ஆகிறது. அதனூடே பிறவி எனும் அந்தத் தளையில் இருந்து விடுபெற நாம் என்ன செய்கிறோம் என்பதில்தான் நமக்கான முக்தி உள்ளது. இந்தக் கருத்தின்படி, நம் அனைவரின் தேகமுமே கர்ம தேகமாகும். இந்தத் தேகத்தால் படவேண்டிய பாடுகளைப் பட்ட பின்பே, நமக்கான விடுதலையும் நமக்கு ஏற்படும். இந்தத் தேகத்தால், ஒருவனை எப்போதும் இன்ப ரசத்துக்கு உள்ளேயே மூழ்க வைத்திருப்பது என்பது சாத்தியமே இல்லை; துன்பத்திலேயே ஒருவர் இருக்கவும் வாய்ப்பு இல்லை. இரண்டும் கலந்து கிடப்பதே வாழ்வு!

எப்போது எது அதிகமாய் உள்ளது என்பது அவருடைய பிறந்த கால நேரத்தைப் பொறுத்தது. ஏனென்றால், பிறந்த நேரப் பள்ளிக்குள், நமக்கான ஜாதகம் என்பது, நமது மொத்த வாழ்நாளுக்கான ஒட்டுமொத்த செய்திகளுடன் அச்சிட்டு முடிக்கப்பட்ட ஒரு புத்தகம் போல உள்ளது. அதை படித்துக் கூறுபவரே ஜோதிடர். அவர் கூறினாலும் கூறாவிட்டாலும், அந்தப் புத்தகத்தில் உள்ளபடிதான் ஒவ்வொருவரது வாழ்வும் செயலும்! அதில் ஓர் அணுத் துகள் மாற்றத்தையும் ஏவராலும் ஏற்படுத்த இயலாது.

இப்படி ஒரு கருத்தைக் கேட்கும்போது, கிளைக் கேள்வி களாகப் பல கேள்விகள் தோன்றும். அதில் பிரதானமானது... விதித்தபடிதான் எல்லாம் என்றால், ஒரு கொடுமைக்காரன் கொடுமை புரிவதற்குக் காரணமும் அவன் விதிப்பாடே என்றாகிறது. அப்படியிருக்க, அவனைத் தண்டிக்க நீதிமன்றம் எதற்கு? நடப்பதுதான் நடக்கும் என்றால், பேசாமல் சிவனே என்று இருந்துவிடலாமே? எதற்கு எல்லோருக்கும் உழைப்பு எனும் கடப்பாடு?'

இப்படியான கேள்விகள் மிக மாயை சார்ந்தவை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இவற்றுக்கெல்லாம் மிகச் சரியான விடைகளும் உள்ளன. சும்மா இருந்துவிடலாமே என்று சொல்வது மிகச் சுலபம். ஆனால், அரை நாளில் இருந்து ஒருநாள் வரையிலும் நாம் சும்மா இருந்துவிட்டால், அதுவே மிக அதிகம். எதையாவது செய்து, திரும்பவும் வினை வழி செல்லத் தொடங்கிவிடுவோம். வினைக்கு அப்படி ஓர் ஆற்றல். அந்த ஆற்றலைக் கசடறப் புரிந்துகொள்ளும்போதுதான் மனத்துக்குள் ஒரு தெளிவு பிறக்கும். அந்தத் தெளிவுதான் வினையை வெற்றிகொள்ள எது சரியான வழி என்பதைக் காணவைக்கும்.

அந்த வழியில்கூட, எடுத்த எடுப்பிலேயே மிக வேகமாகச் சென்றுவிட முடியாது. மெள்ள மெள்ளவே செல்ல முடியும். ஓர் எண்ணெய்க் கிண்ணத்தைக் கையில் சுமந்துகொண்டு, அது சிந்தாதபடி உலகைச் சுற்றிவருவதைப் போன்ற செயல் அது. பழைய வினைகளை அனுபவித்தபடியே புதிய நல்வினைச்செயல்கள் புரிந்து, மெள்ள மெள்ள விடுபட வேண்டும். அப்படி விடுபடுவதற்குள் புல், பூண்டு, புழு, பூச்சி, பறவை, மிருகம் எனப் பல பிறப்புக்குள் நமது கர்மங்களாலேயே சிக்கிக்கொள்கிறோம்.

இப்படி, நமது பிறப்புக்குப் பின்னால் ஒரு நீண்ட கதி உள்ளது. எனவே, உலகத்து மாந்தர்களைக் கல்ப யோகிகளாக மாற்றுவது என்பது சாதாரணமான ஒன்றல்ல. போகர் போன்ற சித்தர் ஒருவர் திட்டமிட்டு முயற்சித்தாலும், ஒருவனைக் கல்ப யோகியாக ஆக்க முடியாது. ஒரு கல்ப யோகிக்குப் புலனடக்கமும், வைராக்கியமும் மிக முக்கியம். இந்த இரண்டும் ஒரு துறவிக்கு வசப்படுவதே பெரும்பாடு!

இதற்கு உதாரணமாக விஸ்வாமித்திரரின் கதையைச் சொல்வர். கௌசிகன் எனும் பெயர் கொண்ட பேரரசன்தான் பின்னாளில் விஸ்வாமித்திரர் ஆனார். அதற்கு ஒரே ஒரு காரணம்தான். 'ஒருவரால் கோடானகோடி பேர் கொண்ட நாட்டைக்கூட ஆண்டுவிட முடியும். ஆனால், தனது கூட்டை (உடம்பை) கட்டுப்படுத்தி ஆள முடியாது' என்று கூறப்படவும், 'நான் ஆண்டு காட்டுகிறேன், பார்' என்று தவம் செய்யப் புறப்பட்டவரே கௌசிகன். புலன்களை அடக்கி விஸ்வாமித்திரர் ஆகி, பின்னர் வசிஷ்டர் வாயாலேயே பிரம்மரிஷி பட்டமும் பெற்றார். ஆனாலும், ஒரு மேனகை அந்த பிரம்மரிஷியையே வீழ்த்திவிட்டாள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

விஸ்வாமித்திரர் வீழ்ந்ததும் சரி, எழுந்ததும் சரி... பெரும் உதாரணங்கள். புலனடக்கம் அவ்வளவு கடினமானது. எனவே, போகர் தனது வாழ்நாளில் தனக்கு இணையாக தன் சீடர்களான புலிப்பாணி, கோரக்கர் என்று சிலருக்கே கல்ப தேகத்தைத் தர முடிந்தது. மற்றவர்களுக்கு அவரால் எளிய வைத்திய முறைகளையே அளிக்க முடிந்தது.

சரி, கல்ப தேகம் என்றால் என்ன?



இதை விளங்கிக்கொள்ள நமக்குத் துளியாவது நம் தேகம் பற்றிய தெளிவும் புரிதலும் வேண்டும். இன்றைய

விஞ்ஞானத்தின் புண்ணியத்தால், பள்ளி இறுதி நிலை முடிவதற்குள்ளாகவே, ஓரளவுக்கு நம் உடலின் உள்ளுறுப்புகளின் பெயர்களைத் தெரிந்துவைத்துள்ளோம். நமது மருத்துவ

விஞ்ஞானம், நுட்பமான உள்ளுறுப்புகள் எல்லாவற்றுக்கும் ஒரு பெயரை வைத்திருப்பதால், அந்த உறுப்புகளால் நிரம்பியதுதான் நம் தேகம் என்று நாமறிவோம். இதில், ஒரு வியப்புக்கு உரிய விசித்திரமான சங்கதியும் ஒளிந்துள்ளது. நாம் உயிர் வாழக் காரணமான இந்த உள்ளுறுப்புகள் எதையும், நாம் நமது வாழ்நாளில் பார்க்கப்போவதே இல்லை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்பதுதான் அந்த விசித்திரம். கூடவே இருக்கின்றன; இயங்கிக்கொண்டும் இருக்கின்றன. ஆனால், உணரத்தான் முடிகிறது; பார்க்கவே முடிவதில்லை. ஒரு கருவியின் துணை கொண்டு சில இயக்கங்களைக் காண முடிகிறது. ஆனால், அங்கும் நேராகக் காணும் வாய்ப்பு கிடையாது.

இந்த விசித்திரம்தான் சித்தர் பெருமக்கள் சிலரை, இந்த உடம்பின்பால் கோபமும் வெறுப்பும் கொள்ள வைத்தது. 'காயமே இது பொய்யடா... வெறும் காற்றடைத்த பையடா' என்று பாடவும் வைத்தது.

சரி.. எது கல்ப தேகம் என்று அறிவோம்.

முன்னதாக இந்த உடம்புக்குள் பஞ்ச பூதங்களும் இருப்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

நீர், நிலம், காற்று, நெருப்பு, வெளி எனும் ஐந்து பூதங்களின் சேர்க்கையே நமது உடம்பு. இதில் நிலத்தின் கூறு ஒன்றரை பங்கு. நீரின் கூறு ஒரு பாகம். காற்று முக்கால் பாகம். ஆகாயம் முக்கால் பாகம். நெருப்பு ஒரு பாகம். கூட்டினால் ஐந்து பாகம் வரும்.

இந்த ஐந்தின் அளவு கூடுவதும் குறைவதும் நிகழும்போதுதான் நமக்கு உடல்நிலை பாதிக்கப்படுவதும், நாம் முதுமை அடைவதும் நிகழ்கின்றன. நிலத்தின் பங்கு, சதைப் பாகத்தில் சுருக்கம் மற்றும் மடிப்பாக எதிரொலிக்கும். நீரின் பங்கு, ரோமத்தின் மாற்றத்தில் எதிரொலிக்கும். நெருப்பின் பங்கு, பசி - தாகத்தில் எதிரொலிக்கும். வாயுவின் பங்கு, தள்ளாமையில் எதிரொலிக்கும். ஆகாயத்தின் பங்கு குறையும்போது, நாம் மீள முடியாத உறக்கத்துக்குச் சென்றுவிடுவோம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 10

தானான மகிமாவும் கர்மாவோடு
தங்கும் ஈசத்துவமும் வசித்துவமாகும்
பூனான பிராத்திபிரா காம்யத் தோடு
புகழ் எட்டு தேவதையும் தளத்தில் நின்றே
ஏனான இதழாலே மூடிக் கொள்வார்
ஏற்றமாம் நந்தியைத் தான் காணொட்டாமல்
வானான வஸ்துவை நீ பானம் பண்ணி
வங்நென்று வாங்கியுமெ கும்பித்தூதே

- போகர் 7000-த்தில் ஒரு பாடல்

நீர், நிலம், காற்று, நெருப்பு, வெளி என்னும் ஐந்து பூதங்கள் ஒவ்வொன்றுக்கும் நம் உடலில் ஓர் இடம் உண்டு. இவை தவிர மனம், உயிர் என இரண்டு கூறுகள் சேர்ந்து, மொத்தம் ஏழு ஆதாரங்கள் நம் உடம்பில் உள்ளன. இதைத்தான் சித்தர்கள் உலகம், 'மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞா, ஸஹஸ்ராரம்' என்கிறது.

இந்த ஏழு ஆதாரங்களும் ஏழு சக்கரங்களாக உச்சந்தலையில் இருந்து முதுகெலும்பின் அடிப்பாகம் வரையிலான தூரத்துக்கு உள்ளேயே உள்ளன. ஆதாரம் எதனால் சக்கரமாயிற்று என்று ஒரு கேள்வி எழலாம். சக்கரம் என்பது தடையின்றி இயங்குவதாகும். விசைக்கு ஏற்ப இதன் வேகமும் கூடும்; குறையும். நம் உடம்பிலும் உயிர் விசை உள்ள வரையிலும் இந்தச் சக்கரங்கள் இயங்கிக்கொண்டே இருக்கின்றன.

இந்த ஏழு சக்கரங்களோடு தொடர்புடையதுதான் நம் உடம்பில் உள்ள 72,000 நாடி நரம்புகள். இந்த ஏழு சக்கரங்களும் நாம் உயிர் வாழக் காரணமான சுவாச கதிக்கு ஏற்ப இயங்குகின்றன.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இதில் நாம் அறியவேண்டிய அடுத்ததோர் உண்மை, நமது ஒரு நாளின் சுவாசம் 21,600 தடவை என்பதாகும். ஒருநாளின் 24 மணி நேரத்தில் இந்த சுவாசமானது, ஏழு ஆதார சக்கரங்களிலும் பங்கு போட்டுக்கொண்டு செயல்படுகிறது. மூலாதாரத்தில்- தினசரி 600 மூச்சுக் காற்று... அதாவது, காலை 6 மணிக்குத் தொடங்கி 6:40 வரை - நாற்பது நிமிட நேரத்துக்கு இந்த சுவாச ஓட்டம் நிகழ்கிறது. அடுத்ததாக, அது அப்படியே சுவாதிஷ்டானத்துக்கு மாறி (மதியம் 1:20 வரை) செயலாற்றுகிறது. இங்கே 6,000 முறை மூச்சுக் காற்றை உள்வாங்கி வெளியிடுகிறோம். அடுத்து, மணிபூரகத்தில் 6,000 மூச்சு இரவு 8 மணி வரை. அதற்கும் அடுத்து அநாகதத்தில் 6,000 - இரவு 2:40 வரை. விசுத்தியில் 1000 மூச்சு- 3:46 வரை, ஆக்கினையில் 1,000 மூச்சு- 4:54 வரை, சஹஸ்ராரத்தில் 1,000 மூச்சு- காலை 6 மணி வரை.

இப்படிச் செயலாற்றும் மூச்சுக் காற்றை, அதாவது இந்த 21,600 எனும் அளவைக் குறைத்துக்கொண்டே போகும்போது ஆயுள் அதிகரிக்கிறது. கூடிடும்போதோ... வேகமாக நாம் நமது முடிவை நெருங்கிவிடுகிறோம். இந்த 21,600 என்ற கணக்குக்கு ஒரு மனிதனின் ஆயுள் 120 வருடங்களாகும். நாம் இன்று 70, 80 வயதுக்குள் போய்ச்சேரக் காரணம், இந்த அளவை அதிகரிக்கும் விதமான சுவாசக் கணக்கோடு நாம் இருப்பதுதான்.

அது எப்படி அதிகரிக்கும் என்றால்... மனம் படபடக்கும்போது, அச்சப்படும்போது, பேராசை வயப்படும்போது! குறிப்பாக கோபப் படும்போது... இந்த 21,600 கணக்கெல்லாம் சும்மா! 30,000, 40,000 என்று நம் மூச்சுக்காற்றின் எண்ணிக்கை இருக்கும். பேசாமல் ஒரு மூலையில் அமர்ந்துகொண்டு, மனத்தை ஒருநிலைப் படுத்தி சீராக மூச்சுவிட்டபடி இருந்தால், இந்த எண்ணிக்கை குறைய ஆரம்பிக்கும்.

இதில் நாம் உணர வேண்டிய ஒரு விஷயம்... மனிதன் ஒருவன் வெறும் 200 மூச்சை மட்டுமே விட்டு, ஒரு முழு நாளைக் கடத்த முடியும். எனில், 21,400 மூச்சு ஒரு நாளில் மிச்சமாகிறது. இப்படி ஒரு பத்து வருடம் மூச்சுப் பயிற்சியில் இருந்தால்கூடப் போதும்; மிச்சமான மூச்சுக்காற்று நீண்ட ஆயுளாக, அதாவது 300 வருடம், 400 வருடம் என்கிற ஆயுள் காலமாக மாறிவிடுகிறது.

மூச்சால் ஆயுள் நீட்டிப்பு நடக்கும் அதே நேரம், உடம்பையும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கிருமிகள் வெல்ல முடியாதபடியும், பஞ்சபூத அளவு சிதைந்துவிடாதபடியும் அதே கட்டுக்கோப்புடன் வைத்துக் கொண்டு விட்டால்... அவனே நெடுநாள் வாழ முடிந்த, நோய் - நொடியற்ற, நரை - திரையை வெற்றிகொண்ட கல்ப யோகியாவான். இதற்கு மூலிகைகள் பயன்படுகின்றன.

ஆக, ஒரு கல்ப யோகி ஒருபுறம் மூச்சுப் பயிற்சியாலும், மறுபுறம் கல்ப மூலிகைகளாலும் உடம்பைப் பேணிடும்போது, அவன் எமனை வென்றவனாகிவிடுகிறான். கல்ப மூலிகைகள் தங்கள் சக்தியால் உடம்பில் உள்ள ஏழு தாதுக்களான ரசம், ரத்தம், மாமிசம், கொழுப்பு, எலும்பு, மூளை, சுக்கிலம் ஆகியவற்றை வசப்படுத்தி, அவற்றின் மூன்று பூதங்களான 'வாதம், பித்தம், கபம்' எனும் காற்று, நெருப்பு, அப்புவைத் துளியும் கெட்டுவிடாதபடி வைத்துவிடுகின்றன.

ஒருவருக்கு நோய் என்பது ஏழு தாதுக்களில் மாற்றம் உண்டாகும்போதும், மூன்று பூதங்களிடம் சக்தி குன்றும்போதும் தான் ஏற்படும். இந்த மூன்று பூதங்களையும், அவற்றின் அடிக் கூறுகளான ஏழு தாதுக்களையும் துளியும் கெடாதபடியும், இயல்பு மாறாதபடியும் வைத்துக்கொள்ளும்போது நோயாவது, நொடியாவது?

ஆக, மனிதன் கல்ப யோகியாவது என்பது முதலில் மூச்சால்; பின்பு தேகத்தால்! மூச்சை புரிந்து வசப்படுத்தினால், தேகம் அடிப்படை சக்தி பெறும். அத்துடன், கல்ப மூலிகை மருந்துகள் சேரும்போது அந்தச் சக்தி, உருக்கு போல் ஆகிவிடுகிறது. இந்த மூச்சை புரிந்து வசப்படுத்துவது என்பது ஒன்றும் சாதாரண விஷயமல்ல. மூச்சுப் பயிற்சி என்று இரு சொற்களுக்குள் எளிதில் அடங்கிவிடும் இந்தப் பயிற்சி, ஒரு பல்கலைக்கழகம் அளவுக்குத் தனக்குள் ஏராளமான பாடங்களை உடையது.

பிராணாயாமம் எனும் தலைப்பின் கீழ் தொடங்கும் இது, பிராக்ருதம் - வைகிருதம் என இரண்டு வகைப்படும். இதில் பிராக்ருதம் நாம் இயல்பாக சுவாசிப்பதாகும். வைகிருதம்- இந்த இயல்பில் இருந்து விலகி, ஆயுளை நீட்டித்துக்கொள்ளவும், நமது சில மனோதேவைகளைப் பொருத்தும் மேற்கொள்ளப்படும் முறையாகும்.

மூச்சுப் பயிற்சி இப்படி என்றால், உடம்பை உருக்கு போல் ஆக்கும் காயகற்பம் எப்படிப்பட்டது?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



இதைத்தான் போகர் இமயத்து யோகிகளிடம் கேட்டு அறிகிறார். அதில் ஒன்று மெர்க்குரி எனப்படும் பாதரசத்தையே காயகற்ப மருந்தாகப் பயன்படுத்தும் முறை! இந்த பாதரச காயகற்பம் செய்திட, கல்தாமரைக் கிழங்கு என்று ஒன்று தேவை. இது மனித சுவாசம் நிகழாத மலைகளில், பாறை இடுக்குகளில் வளரக் கூடியது. இதைத் தேடி அலைந்தபோது, போகர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

கல் தாமரையைத் தேடிய போகரின் வனப் பயணம் மிக சுவாரஸ்யமானது. இந்தப் பயணமே மிகப் பெரும் பூகோள ஞானத்தை போகருக்குள் உருவாக்கியது. இந்த கல் தாமரை உருவாக பூகோள ரீதியாக பருவ முறைகள் மிக முக்கியம். ஒரு பனிமலையில் இது உருவாகாது; உருவாகவும் முடியாது.

சம அளவு இரவும் பகலும் உள்ள ஒரு நிலப்பரப்பில், அதிலும் பருவங்கள் சமமாகப் பிரித்துக்கொண்ட கால அமைப்பில் (வசந்தம், கோடை, குளிர், மழை, இளவேனில், இலையுதிர்) தமிழ் வருடங்களில் குறிப்பிட்ட சில ஆண்டுகளில் தான் இது மலையகத்துப் பாறை இடுக்குகளில் தோன்றும்.

காற்றின் ஈரப்பதமும், அதனூடே நுட்பமான மகரந்தச் சேர்க்கையும் பாறை இடுக்குகளில் மோதிடும்போது உருவாகி,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இத்தாவரம் கருக்கொண்டு வளரும்போது மிதமான மழைப் பொழிவும் அவசியம். அடாது மழை பெய்தாலும், இது வளர முடியாது. பாசியானது ஈரத்தில் பிடித்து தன்னை வளர்த்துக் கொள்வது போல, இதுவும் வளர்ந்து அளவான உஷ்ணத்தை உள் வாங்கி, அப்படியே விரிந்து பரவும். பின்பு, இதில் கிழங்குகள் தோன்றும்.

பொதுவாக கிழங்குகள் பூமிக்கு அடியில், பூமியை கர்ப்பமாக கொண்டு உருத் திரள்பவை. அதனால்தான் கிழங்குகளை மனித உயிருக்கும், ரத்தமும் சதையுமான உயிரினங்களுக்கும் இணையாகக் கருதி, ஆசாரம் காப்பவர்கள் உண்ண மாட்டார்கள். இவ்வகையில் வெங்காயம், பூண்டு, முள்ளங்கி போன்றவை அடங்கும். இவை ஜீரணிக்கப்படும்போது, இவற்றின் குணம் ரத்தத்தில் ஆதிக்கம் செலுத்த முனையும். இதனால் புலன்களை அடக்கித் தவம் செய்ய முனைபவர்களுக்கு கிழங்கு வகைகள் எதிரியாகும்.

இவற்றுக்கு நேர் எதிர்குணம் கொண்டவை பழங்கள். இப்படி கிழங்குகள், பழங்களுக்குப் பின்னாலே நுட்பமான பல சங்கதிகள் உள்ளன. இதிலிருந்து ஓர் உண்மை புலனாகும். கிழங்குகள் உருவாக மண் மூடியிருத்தல் அவசியம். ஆனால், கல் தாமரைக் கிழங்குகள் பாறைகள் மூடப்பெற்ற நிலையில் உருவாகக் கூடியவை. இந்தக் கிழங்குக்கு அரிதான பல குணம் உண்டு. இதில் சாறு பிழிந்து, இந்தச் சாற்றில் இரும்பைப் போட்டு வைத்தால், ஒரு நாளில் அந்த இரும்பு செம்பாகிவிடும். இதன் சாற்றில் செம்பைப் போட்டு வைத்தாலோ, அது குணம் மாறி தங்கமாகிவிடும். இந்தக் கிழங்குகளும் தாமரையும் வளரும் இடத்தில் இருந்து வானத்தைப் பார்த்தால், நட்சத்திரக் கூட்டத்தை மிகத் துல்லியமாகப் பார்க்கலாம்.

இப்படிப்பட்ட இந்தக் கிழங்கை தேடிப் பறித்து வந்து நிழலில் உலர்த்த வேண்டும். நிழலில்தான் இது தன் குணம் கெடாதபடி தன் ஈரத்தை இழக்கும். சுட்டெரிக்கும் வெயில் இதன் குணத்தை உஷ்ணத்தில் மாற்றிவிடும். இப்படி நிழலில் உலர்த்தப்பட்ட கிழங்கை, அது முற்றாக ஈரம் நீங்கிவிட்ட நிலையில் இடித்துப் பொடி போலச் செய்து, ஒரு சிட்டிகை அளவுக்கு தேனில் குழைத்து காலை, மாலை இருவேளை என ஒரு மண்டல காலம் சாப்பிட வேண்டும். இப்படி உட்கொள்வதால் உடல் கல் போலாகும். இந்த ஒரு மண்டல

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காலத்தில் வெற்றிலை, அகத்திக்கீரை போன்றவற்றை உட்கொள்ளக் கூடாது.

இதே கல்தாமரைப் பொடியைப் பாதரசத்தில் சேர்த்துக் குழைக்க, வெண்ணெய் உருண்டை போலாகும். இந்த உருண்டைகளை மண் கலய நீருக்குள் போட்டு வைக்க, இவை கல்லுருண்டை போலாகும். இதை ரசமணி என்பர். இந்த ரசமணியை, கல்தாமரையை அரைத்துச் செய்த உருண்டையுள் மீண்டும் வைத்து, பின் அப்படியே அதை பூமியில் புதைத்து பசுஞ்சாண வறட்டியால் தீயிட்டுப் புடம் போடவேண்டும். புடம் போடப்பட்ட இந்த ரசமணிதான் பாதரச காயகற்பம்.

இதைச் சிவனாகக் கருதி பூஜித்து வணங்கி எடுத்துவைத்துக் கொள்ள வேண்டும். தினமும் உறங்கச் செல்கையில், இதை வாயினுள் வைத்துக்கொள்ள, எச்சில் சுரக்கும். இந்த எச்சிலுக்கு அமிர்த குணம் உண்டு. இதை கீழே உமிழ்ந்த நிலையில், இதை உண்ணும் ஈ, எறும்புகள் தங்கள் சராசரி ஆயுளைக் கடந்தும் மிக வலிமையோடு திகழ்ந்து உயிர் வாழும். இந்த எச்சிலை நாமே விழுங்கிட, நம் உடல் ஆரோக்கியமான ஒரு நிலையில், வளர்ச்சியும் வீழ்ச்சியும் இன்றி அப்படியே நின்றுவிடும்.

ஒரு வகையில் இது மரணத்தைத் துரத்தும் குளிகையும்கூட! இதை உண்டு உடம்பு கல்லாகிப் போனவர்கள் தீயில் புகுந்து உயிர் விட்டாலே உடல் அழியும். தானாக உயிர் பிரியும் ஒரு நிலை இவர்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு வராது. இந்தப் பாதரச காயகற்பத்தைப் புடம் போடுவதில் மேலும் பல மாதிரிகளும் விதங்களும் உள்ளன. அவற்றுக்கேற்ப அந்த காயகற்பத்தின் தன்மையும் மாறும். போகர் இந்த காயகற்பத்தைத் தான் செய்து, பிறகு தன் சீடர்களுக்கும் கொடுத்து, அவர்களை எல்லாம் மிகுந்த வலிமை உடையவர்களாக மாற்றிக் காட்டினார். இந்த காயகற்பங்களுக்காகப் பெரும் வீரர்களும், நிலக்கிழார்களும், அரசர் பெருமக்களும் எவ்வளவு பொன்னும் தரத் தயாராக இருந்தனர். அதே நேரம், இதை உண்டவருக்குச் சுக்கிலம் கல்லாகி, காம உணர்வு தலையெடுக்காது என்பதால், பலர் இதை வேண்டாம் என்றும் தவிர்த்தனர்.

போகரின் கல் தாமரைத் தேடலில் அவருக்கு ஒரு ஊருக்கும், வனத்துக்குமான வேற்றுமைகள் புரிந்துபோயின. ஊர் என்பது

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஊர்வோராகிய உயிர்கள் வாழுமிடம். உயிர்கள் விடும் மூச்சுக் காற்றால் காற்றுவெளி எங்கும் அதிர்வுகள் பரவியிருக்கும். வனம் இதில் மாறுபட்டது. தாவரம் என்பது நின்ற இடத்தில் வான் நோக்கி வளர்வது. அதுவும் சுவாசிக்கிறது. ஆனால், அதன் சுவாசம் பரவிய ஒரு இடத்துக்கும், மனம் கொண்ட மனிதர்கள் வாழும் இடத்துக்கும் நிறைய வேற்றுமை இருப்பதை அவர் முதலில் கண்டறிந்தார்.

அடுத்து, பறவைகளே தங்கள் எச்சங்கள் மூலம் தாவரங்கள் எல்லா இடங்களுக்கும் செல்லக் காரணமாக இருப்பதையும், வன விலங்குகள் தங்கள் கழிவுகளாலும் கரித்துண்ணும் முறையாலும் வனத்தினைப் பேணுவதையும் புரிந்து கொண்டார்.

எந்தவொரு வனத்தில் மான்கள் மிகுதியாக உள்ளதோ, அங்கே சிறு தாவரம் எனப்படும் புற்கள், கொடிகள் மிகுதி. எங்கே ஒரு வனத்தில் யானைகள் மிகுதியாக உள்ளதோ, அங்கே நீர் நிலைகளும், புதராய் மண்டும் தாவரங்களும், குறு மரங்களும் மிகுதி. இதுபோக, உயரமான மரங்களும், அவற்றில் தேன்கூடும் இருக்கும் பட்சத்தில், அப்பகுதியில் குளிரும் அதிகம் இருந்தால்... ரோமம் அதிகம் கொண்ட செம்மறி ஆடுகள், கரடிகள் ஆகியன இருக்கும் என்று ஒன்றோடொன்று தொடர்புபடுத்தியும், அவை தொடர்போடு இருப்பதையும் அறிந்தார்.

அப்படியே சிங்கம், புலி போன்ற வன் மிருகங்களும் எங்கு இருக்கும் என்பதையும் அவர் அறிந்துகொண்டார். மான் இருந்தாலே புலியும், புலி இருந்தாலே எருதுகளும் என ஒன்றுக்குள் ஒன்று அடங்கிய தன்மையை உணர்ந்து ‘வனச் சாகரம்’ என்று ஒரு நூலையும் எழுதினார். ஆனால், அந்த ஏடுகளைக் கால வெள்ளம் கொண்டு சென்றுவிட்டது. இவரது நூல்கள் பற்றிய விவரம் அகத்தியரின் ‘சௌமிய சாகரம்’ எனும் நூலில் காணப்படுகின்றது. அதில்... போகர் நிகண்டு, போகர் சப்த காண்டம் 7000, போகர் ஜனன சாகரம், போகர் கற்பசூத்திரம், போகர் அட்டாங்க யோகம், போகர் பூஜாவிதி போன்றவை குறிப்பிடப்பட வேண்டியவை.

மொத்தத்தில், போகர் என்றாலே முதலில் அவரது சித்த வைத்தியம்தான் நினைவுக்கு வரும். பிறகு, அவரால் ஸ்தாபிக்கப்பட்ட பழநி ஸ்ரீதண்டாயுதபாணி ஸ்வாமியின் நவபாஷாண விக்கிரகம்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இந்த விக்கிரகத்துக்குப் பின்னாலே உணர முடிந்த அளவுக்கும், உணர முடியாத அளவுக்கும் ஏராளமான நுட்பங்கள் உள்ளன. போகர் மற்ற முனிவர்களின் வழிகாட்டுதலிலும், தன் தேடலிலும் மருத்துவ முறைகளை உலகுக்கு அளித்தது ஒருவிதம் என்றால், ஸ்ரீதண்டாயுதபாணி ஸ்வாமியை அளித்த விதம் ஓர் அற்புதமாகும்.

எவ்வளவோ தெய்வ வடிவங்கள் இருக்க, முருகப்பெருமானின் உருவத்தினை இவர் ஏன் வடிக்க வேண்டும்? முருகன் என்றால் அழகன் என்று பொருள். அவன் வெறும் அழகன் மட்டுமல்ல; நல்லதோர் தமிழழகனும்கூட! அவனது ஆறுமுகமும், பன்னிரு கரமும், அதன் கூட்டான பதினெட்டும் நம் உயிர்மெய் எழுத்துகளை நினைவூட்டுபவை. அவனது வேல், கூரிய அறிவின் சின்னம். இப்படிப்பட்டவனை ஆண்டிக் கோலத்தில் வடிக்கவேண்டிய அவசியம் ஏன்? இப்படிப் பல கேள்விகள் நம்முள் எழலாம்.

முருகப்பெருமானின் திருவிளையாடல் கதை ஒன்றும், அதில் அவன் கோபித்துக்கொண்டு பழநி மலை மேல் வந்து நின்று கொண்டதால் அந்த மலை 'பழநி மலை' என்றாயிற்று என்கிற புராண வரலாறு ஒருபுறம்; போகர் வேல்முருகனை தண்டபாணி யாகச் சிந்தித்து வந்தித்து, அப்படி வந்தித்த உருவை நவ பாஷாணத்தில் உருவாக்கியதன் பின்னாலே, மிகவே நுட்பமான காரண காரியங்கள் உள்ளன.

போகர், உயிர் வாழ்க்கைக்கு இடையூறான நோய்களை வெல்லும் வழிமுறையைக் கண்டறிந்தார். பஸ்பங்கள், காயகற்பங்கள், மூலரசங்கள், குளிகைகள்... என்று எல்லாம் கண்டறிந்தும், மனித இனம் அதனாலேயே கடைத்தேறிவிடும் என்று அவர் நம்பவில்லை.

இவை எல்லாமே அருளுள்ளவர்களுக்கே என்பதுதான் அவர் இறுதியில் அறிந்துகொண்ட பேருண்மை. வியாதியும்-மூப்பும், நரையும்- திரையும் கர்மத்தால் வருபவை. அப்படி அவை வருவதை எது கொண்டும் தடுத்து நிறுத்த போகரால் முடியவில்லை.

இந்த உலகின் எல்லாவிதமான மாயா சுகங்களையும் பெரிதாகக் கருதி, இதில் லயித்திருக்கவே எல்லோரும் விரும்பினார்கள். போகரிடமே சிலர் 'சிற்றின்பத்தில் ஈடுபடும் போது அது நிலைத்திருக்க வழியுண்டா? அதற்கான மருந்து உங்கள் வசம் உள்ளதா?' என்று கேட்டனர். 'இளமையோடு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இருக்க வழி சொல்லுங்கள்; முதுமையே வரக் கூடாது' என்றனர். புலன் அடங்கியும், புலன் அடக்கியும் வாழும் வாழ்க்கையைவிட மனம் போன போக்கில் வாழவே எல்லோரும் விரும்பினர். இன்றும் அதுதான் வாழ்வின் நிலை!

இதைக் கண்ட போகரும், 'எதை அறிந்தும் பயனில்லை. இறையருள் இல்லையேல் எவராலும் கடைத்தேற முடியாது' என்பதையே இறுதியாக உணர்ந்து கொண்டார். அருளற்றுப் போகும்போது மெள்ள பொருளற்றுப் போகிறது. பொருளற்றுப் போகப் போக, இருளூற்றவர்கள் ஆகிறோம். இந்த இருளுக்குள் விழுந்தவர்களுக்கான ஒளியை எதனால் தர முடியும்? இந்தக் கேள்வியோடும் மெய் வருத்தத்தோடும் அவர் தவத்தில் மூழ்கவும் - குறிப்பாக, சித்தர்கள் சக்தியை வாலையாக, கன்னிக்குமரியாக வழிபடும் விதத்தில், அவர் வழிபட்டு தவத்தில் மூழ்கவும் - அவருக்கு அந்த ஆதிசக்தியின் தரிசனம் கிட்டியது.

'போகா... உன் நோக்கம் மிக உயர்ந்தது. நீ அறிந்த எதுவும் வீண் போகாது. ஆயினும், இவை எல்லாம் நோயுற்றவர்க்கே! பிறவி எனும் நோயுற்றவர்க்கும் நீ ஒரு மருந்தை உருவாக்கு. அந்த மருந்துதான் முருகு. முருகன், சக்தியும் சிவமுமானவன்; மாலின் காக்கும் குணப்பாடும் உடையவன். சத்தும் சித்துமாய் வள்ளி - தேவானையை உடன் கொண்டவன். அவன் குழந்தைக்குக் குழந்தை; பிள்ளைக்குப் பிள்ளை; காளைக்குக் காளை; ஞானத்திலும் பரிபூரணன்; அப்பனுக்கே பாடம் சொன்னவன்!

மொத்தத்தில் வானவர்க்கும், தேவர்க்கும், பூதவர்க்கும், ஞானியர்க்கும் என்று, எவர்க்கும் எளியவன், இனியவன். நவகோள்களோடும் தொடர்புடையவன். எனவே, அக்கோளின் குணம்கொண்ட பாஷாணங்களால் அவனை வடிவாக்கு. மற்றவை, அந்த உருவம் உருவாகுங்கால் உனக்கே தானாகப் புரியும்..." என்று கூறி மறைந்தாள்.

போகருக்கும் அப்போதுதான், 'பிறந்துவிட்டவர்க்கு மருந்தை அறிந்த எனக்கு, பிறப்புக்கே மருந்து இருப்பது தெரியாமல் போனதே' என்பது புரிந்தது. நவபாஷாணங்களால் முருகப் பெருமானும் தண்டபாணியாக எழும்பி நிற்க ஆரம்பித்தான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 11

அஞ்சல்லவோ பூதம்? பஞ்சல்லோ வெழுத்து?
அஞ்சொடுங்கும் போது நெஞ்சடங்கும் அத்தான்
ஆறுமுகமல்லோ அறுபதியா லெட்டாம்
ஆறல்லவோ தாரம்? வேறல்லோ சொரூபம்?

- சேஷ யோகியார்

பழநியம்பதியில், சண்முக நதிக்கரையில் ஆஸ்ரமம் கண்ட நிலையில், நவபாஷாணங்களைக் கொண்டு அந்த ஆதிசக்தி தேவியின் கட்டளைக்கு ஏற்ப, அவளது சக்திச் சுடரானது பொய்கையில் விழுந்து, பின் குளிர்ந்து, மலர்ந்து எழுந்து, கார்த்திகைப் பெண்களால் ஆராதிக்கப்பட்டு, அதற்கும் பின் ஆறும் கூடி ஒன்றாகிய ஆறுமுகனை - கார்த்திகேயனை - அழகனை, அதன் காரணப் பெயரான முருகனை தண்டபாணி யாக தன்னுள் வாங்கி, அந்த ஆண்டிக்கோலத்தையே உருவாக்குகிறார் போகர்.

இந்த ஆண்டிக்கோலத்தின் பின்னால் உள்ள புராணச் சங்கதியை நாம் எல்லோருமே ஓரளவு அறிவோம். ஒரு மாம்பழத்துக்காக விளைந்த சண்டையில் விநாயகப் பெருமான் முந்திக்கொள்ள, தான் பிந்திவிட்டதால் உண்டான கோபத்தோடு, பிஞ்சு பாலகனாக முருகன் திகழ்ந்தபோதே துறவிக்கோலத்துக்குத் தாவி, அந்த கோலத்தோடு அவன் பூவுலகில் வந்து நின்ற இடம்தான் பழநி.

இந்தப் பெயர்கூட அவ்வையால்தான் விளைந்தது. 'குமரா, நீயே ஒரு பழம்; ஞானப் பழம். உனக்கெதற்கு ஒரு மாம்பழம்?' என்று அந்தக் கிழவியால்தான் உரிமையோடும்

வாஞ்சையோடும் கேட்க முடிந்தது. பின்னர், முருகனும் சினம் தணிந்தான். ஆனாலும், அவன் தனது கை வேலை வீசி எறிந்துவிட்டு, ஒரு கோலைப் பிடித்துக்கொண்டு, பட்டை உதறிவிட்டு, ஒரு கொட்டை கட்டிக்கொண்டு பாலயோகியாக

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நின்றது என்பது... என்ன, தூங்கி எழுவதுபோல ஒரு சாதாரண சம்பவமா?

அதன்பின்னே, நாம் ஆய்ந்தறிய ஏராளமான கேள்விகள் உள்ளன. பரந்த இப்பூவுலகில் எவ்வளவோ இடங்கள் இருக்க, இன்றைய நம் பழநியம்பதியின் அந்தச் சிறு குன்றை அவன் ஏன் தேர்வு செய்ய வேண்டும்? அங்கேயே போகர்பிரானும் ஏன் இருக்க வேண்டும்? அவரை ஏன் ஆதிசக்தி பாஷாண உருவைச் சமைக்கப் பணிக்க வேண்டும்? இப்படி நமக்குள் நிறையவே கேள்விகள் எழும்பும்.

இவை மட்டுமா?


எங்காவது இறைவனே மனிதனைப் போலச் சினந்து துறவு மேற்கொள்வானா? அதுவும், ஒரு பழத்துக்காக என்னும் கேள்வி எழும்பும். இந்தக் கேள்விக்கு பின்னால் உள்ள சம்பவங்களைத்தான் திருவிளையாடல் என்கிறோம். உலகில், இளம்வயதில் பிள்ளைகள் ஆடுவது விளையாட்டு. இந்த விளையாட்டே மாந்தர்க்கு வெற்றியையும் தோல்வியை யும் அறிமுகம் செய்கிறது. ஒரு விளையாட்டில் கிட்டும் வெற்றியையும் சரி, தோல்வியையும் சரி, சமமாக எடுத்துக் கொண்டாலே நாம் தொடர்ந்து விளையாட முடியும். வெற்றியும் தோல்வியும் நிரந்தரமுமில்லை. அது மாறி மாறி வரும். இதனால், பிஞ்சாக இருக்கும்போதே நெஞ்சம் பண்பட்டு விடுகிறது. பின், வளர்ந்து எழுந்து வாழும் நாளில், வாழ்வில் ஏற்படும் இன்ப- துன்பங்களையும் சமமாக பாவிக்கும் தன்மை சற்றேறக் குறைய எல்லோருக்கும் வந்துவிடுகிறது.

இந்த விளையாட்டு உடலுக்கும் சரி, உள்ளத்துக்கும் சரி... பெரிதும் ஆரோக்கியத்தை மட்டுமே அளிக்கிறது. விளையாடு பவருக்கு மட்டுமா... பார்ப்பவர்க்கும் அது ஆனந்தத்தை வாரி வழங்குகிறது.

மானுட விளையாட்டுக்கே இத்தனை மகிமை என்றால், இறை விளையாட்டுக்குள் எத்தனை மகிமை இருக்க முடியும்? அதனாலேயே இறைவிளையாடல்கள் திருவிளையாடல்கள் ஆகின. திருவாகிய பெரும் சிறப்புகள் அதனுள் பூடகமாய்ப் பொதிந்துள்ளன.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



சரி, தண்டபாணிக் கோலம் குறித்து சிறிது சிந்திப்போமா?

அந்தக் கோலம் ஏற்படக் காரணம், ஒரு மாம்பழம். அதை உண்டால் ஞானம் ஸித்திக்கும் என்பதே அந்தப் பழத்தின் பின்னுள்ள சிறப்பு. அப்படிச் சொல்லியே நாரதர் அதை ஈசனாரிடம் தந்தார்.

எங்காவது பழம் ஞானம் தருமா?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அது பசியாற்றும், ருசியாற்றும். அதைக் கடந்து அது அளிப்பது ஒருவித திருப்தி. இந்த உண்மை, இந்த உலகைப் படைத்து, அதனுள் ஒரு மாமரம் படைத்து, பின் அதனுள் அப்பழத்தை படைத்த ஈசனாருக்குத் தான் தெரியாதா? இல்லை, நாரதர்தான் சராசரி மானிடனா, இந்த உண்மை தெரியாமல் போக..!

ஆனாலும், அந்தப் பழம் ஞானப்பழம்தான்!

எப்படி?

அது இருக்கப்போய்தான், அதனால்தான் போட்டி உண்டானது. அதாவது, ஞானத்தை யார் அடைவது என்னும் போட்டி. அதில், கணபதி அலுங்காமல் குலுங்காமல் அம்மையப்பனைச் சுற்றிவந்து, தன் சூட்சும ஞானத்தால் பழத்தைப் பெற்றுவிடுகிறார். கணபதி இந்த விளையாட்டில் வெற்றிபெற வேண்டும் என்றால், முருகன் தோற்றுத்தானே ஆக வேண்டும்? எனவே, அந்த விதி முருகனை உலகத்தைச் சுற்ற வைக்கிறது. பின், கோபம் கொள்ளவும் வைக்கிறது. அதனால், அம்மையப்பனைப் பிரியவும் நேர்கிறது. பழநியம்பதி குன்றின் மேல் ஒரு துறவியாக வந்து நிற்கவும் வைத்து விடுகிறது.

துறவி வேண்டுவதும் ஞானத்தைதானே? இகபர சுகங்களை அல்லவே..! இதை, இனி இப்படிப் பார்க்க வேண்டும்.

'சூட்சும ஞானம் உள்ளவர்கள் இறைவனைப் பிரியவே மாட்டார்கள். அதனால், துறவு பூண்டு மனத்தை அடக்கிப் பின் ஞானம் தேடும் ஒரு போக்குக்கு அவசியம் இல்லாது போகிறது. அல்லாதவர்க்கே கோபம் வரும். கோபம் வந்தால் பிரிய வேண்டிவரும். பிரிந்துவிட்டால், துன்பமின்றி இன்பமாக வாழ்வது சாத்தியமில்லை. அவனோ ஓர் ஆண்டியாகிவிட நேரும். பின், தவத்தாலேயே உய்வடைய முடியும்.' இதுவே இந்தத் திருவிளையாடல் உணர்த்தும் செய்தி. அடுத்து... முருகன் என்னும் தெய்வீக பாத்திரமானது, அப்பனுக்கே பாடம் சொன்ன பெரும் ஞானியவன் என்பதையும் உள் கொண்டது.

பிரணவத்துக்கே பொருள் சொன்னவனுக்கு அம்மையப்பனே உலகம் என்பது தெரியாதா என்ன? ஆனாலும், தெரியாததுபோல பாவிக்கப் போய்த்தான் இச்சம்பவம் நிகழ்ந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இப்படிப் பெரும் பொருள் கொண்ட முருகன், காக்கும் கடவுளாம் மாலுக்கு மருகன். கூட்டிக் கழித்துப் பார்த்தால் சிவமும் சக்தியும், மாலும் கணபதியும், முருகனுக்குள் அடங்கியும், ஆனந்தமாய்க் கலந்தும் இருப்பதை நாம் உணர முடியும். இந்திரன் மகளான தேவயானையை மணக்கப் போய், தேவர் உலகின் மாப்பிள்ளையாகி, அவர்களாலும் துதிக்கப் படுபவன் முருகன்.

இத்தனைப் பெரியவனுக்கு மண்ணுலகில் எத்தனையோ கோயில்கள்! அதிலெல்லாம் அவனை நாம் நம் விருப்பத்துக்கு ஏற்பவும் அந்தத் தலத்தின் நோக்கத்துக்கு ஏற்பவும் வடிவமைத்தோம். ஆனால், பழநியில் அவனுக்கினிய கோலம், பற்றற்ற ஆண்டிக் கோலம்தான். அதுவே, பூவுலகில் முக்தி பெறவும் உற்ற வழிகாட்டவும் கூடியது என்று உணர்த்தவே ஆண்டியாய்- தண்டபாணியாய் வந்து நின்றான் என்பர்.

மண்மிசை பழநிமலை மேல் அக்கோலம் கொள்ள

விஞ்ஞானபூர்வமாகவும் பூகோளரீதியாகவும் சில காரணங்கள் கூறப்படுகின்றன. அதன்படி பார்த்தால், நவகோள்களில் ஒன்றான செவ்வாய் என்னும் சிவந்த கோளின் நேரான வீச்சு பழநிமலை மேல் பட்டுத் தெறிப்பதாகவும், அந்தக் கோளின் தலைவனான முருகன் அந்த மலைமேல் நின்ற நிலையில் அதன் வீச்சை அவன் தன்னுள் வாங்கி, பின்... ஆகம விதிப் படியால் ஆன பூஜைகளால் அருள் அலைகளாக ஆக்கி, அதை பக்தர்களுக்கு அன்றாடம் வழங்கிக்கொண்டிருப்பதாகவும் ஒரு கருத்து உண்டு.

செவ்வாயின் வீச்சை ஒரு கற்சிலை உள்வாங்குவதைவிட, பாஷாணம் உள்வாங்கி வெளியிடுவதில் பற்பல ரசாயன மாற்றங்கள் நிகழ்ந்திட இடம் இருக்கிறது. இதனாலேயே போகர்பிரானும் நவபாஷாணத்தால் இந்தச் சிலையை உருவாக்கினார். இந்த பாஷாணங்கள் ஒவ்வொன்றுமே ஒரு கோளை பிரதிபலிக்கும். ஒன்பது கோள்களே ஒன்பது பாஷாணங்கள். மனித வாழ்வும் ஒன்பது கோள்களாலேயே வழி நடத்தப்படுகிறது. பழநி முருகனை வணங்கிடும் நிலையில், இந்தக் கோள்களையும் வணங்கிய ஒரு பரிகாரார்த்தம் ஏற்படுகிறது என்போரும் உண்டு.

மானுடர்கள் இப்படிப் பரிகாரார்த்தம் புரியவும், யோகியர் தங்களின் ஞானத் தலைவனாகக் கருதவும் இந்தத் தண்டாயுத பாணி காரணமாக விளங்கிவருகிறான். நவபாஷாணத்துக்கு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்று குணப்பாடு உண்டு. விஷத்துக்கு எதிரானது அமிர்தம். இது, வாழ்வாங்கு வாழ வைப்பது. விஷமோ அழிப்பது.

நவபாஷாண தண்டபாணியும் தன்னை தரிசிப்பவரின் விஷமாகிய அஞ்ஞானத்தை தான் ஏற்று அழிக்கிறான்.

அஞ்ஞானம் அழிந்தாலே மெய்ஞ்ஞானம் தோன்றிவிடும். அவனை தரிசித்த மாத்திரத்தில் அங்கு நிலவும் கதிர்வீச்சால் நாம் சுத்திகரிக்கப்படுகிறோம். அவன் திருமேனி அபிஷேகப் பிரசாதம் நம் வரையில் அமிர்தமாய் நம்மை அடைகிறது. அவன் திருமேனி படும் விபூதியும் மருந்தாகி நமக்கு நலம் தருகிறது.

இப்படி இந்தத் தண்டபாணிக்குப் பின்னாலே நாம் உணர்ந்திட ஏராளமான சங்கதிகள் உண்டு. இவ்வண்ணம், தன்னை போகரைக் கொண்டு அந்த முருகன் நிறுவிக் கொண்டான். இதனால் போகரும் இறவாப்புகழும் பெயரும் கொண்டார். அங்கேயே ஜீவசமாதியும் கொண்டார். இப்படி ஒரு நவபாஷாண உருவை போகர் உருவாக்கியபோது,

எஞ்சிய பாஷாணக் கலவை கொண்டு மேலும் ஒரு சிலை செய்ததாகவும், அது பழநியம்பதிக்குள்ளேயே பத்திரமாக உள்ளதாகவும், உரிய காலத்தில் அது வெளிவரும் என்றும் ஒரு கதை காலம் காலமாகப் பழநியம்பதியை வலம் வந்தபடி உள்ளது. இல்லையில்லை, அதன் மிச்சம்தான் பூம்பாறையில் முருகனாக உள்ளது என்போரும் உண்டு. ஆனால், இது குறித்தெல்லாம் திண்மையான ஆதாரங்கள் இல்லை. அருஞ்சிறப்புடைய விஷயங்களின் பின்புலத்தில், காலத்தால் இதுபோன்ற சங்கதிகள் முளைப்பது என்பது ஒன்றும் புதிதல்ல.

போகர்பிரானை சீனர் என்று கூறுவோரும் உண்டு; அதை வன்மையாக மறுப்போரும் உண்டு. அவர் ஒரு குயவர். அதற்கான சான்று அவர் பாடலிலேயே காணக் கிடைக்கிறது என்று, அவர் பாடல் ஒன்றை ஆதாரமாகக் காட்டுகிறார்கள். அதுமட்டுமல்ல; அவரது சீடராக புலிப்பாணி, கொங்கணர், கருவூரார், சுந்தரானந்தர், மச்சமுனி, இடைக்காடர், கமலமுனி, சட்டைமுனி என்று ஒரு சித்தர் கூட்டத்தையே காட்டுகின்றனர். போகரின் சீடர்கள் இவர்கள் என்றால், போகரோ அகத்தியரின் சீடர் என்கிறது அபிதான சிந்தாமணி.

இவர் எழுதிய நூல்களும் ஏராளமாக காணக் கிடைக் கின்றன. போகர் 12,000, சப்தகாண்டம், நிகண்டு 1,700, போகர்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வைத்தியம் 1,000, போகர் சரக்கு வைப்பு, போகர் ஜனன சாகரம், போகர் கற்பம், போகர் உபதேசம், போகர் ரணவாகடம், போகர் கற்ப சூத்திரம், போகர் அட்டாங்க யோகம், போகர் பூஜாவிதி என்று போகரின் நூல்கள் விரிந்துகொண்டே செல்கின்றன. இதில், போகர் 12,000-மும், ரணவாகடமும் என்னாயிற்று என்று தெரியவில்லை. மற்ற நூல்கள் இன்று சான்றோர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

போகர் தண்டபாணி உருவைச் சமைத்த நிலையில், ஆகமப்படி அவரே பல காலம் பூஜித்தும் வந்தார். அவருக்குப் பின் புலிப்பாணியும், அவர் தொடர்பில் வந்தோரும் பூஜித்து வந்து, அந்த பூஜா முறைகளே இன்றுவரையிலும் தொடர்கின்றன.

இவரது வாழ்வில் இன்னமும் பல ரசமான சம்பவங்கள் இறைந்து கிடக்கின்றன. இவர் மிருகங்களுக்குக்கூட ஞானோபதேசம் செய்திருக்கிறார் என்பது விந்தையான ஒரு தகவலாகும். ஒரு பூனைக்கு இவர் வேதமந்திரம் ஓதக்கற்றுக் கொடுக்க, அதுவும் மந்திரம் ஜெபித்த கதை, அதில் ஆச்சரியமூட்டும் ஒன்றாகும். இச்சம்பவம் தொடர்பான பாடல் ஒன்று, போகர் 7,000 நூலில் காணப்படுகிறது.

மிகுந்த சுவாரஸ்யம் கொண்ட, பூனை மந்திரம் சொன்ன சம்பவத்துக்குப் பின்னால், பெரும் ரசவாதச் செயலையும் போகர் புரிகிறார்.

அந்தச் சம்பவம்..?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 12

பார்த்திருந்த சித்தர்களை பார்க்க வைத்தே
பக்குவமாய் போகரவர் தயங்கிடாமல்
சீர்நிறை என்போல் அவரை ஏய்த்துப் போட்டு
சிதறாமல் உரகையினில் என்னைக் கண்டார்
போர் விளங்கப் புதுமையுடன் எனை அழைத்துப்
பொய்கை நல்லூர் என்றிடும் பூங்கா சென்றார்
நேர்மையுடன் எனக்கு அடக்கம் நிலைமை காட்டி
நெடிய கடல் தாண்டி மறுதேசம் போனார்!

- கோரக்கர் சந்திரரேகை

போகருடைய வாழ்வில் எவ்வளவோ அதிசயங்கள்! அதில், அவர் ஒரு பூனைக்கு வேதத்தை உபதேசம் செய்த சம்பவம் சித்த உலகில் வேடிக்கையாகவும், அதேநேரம் ஆழ்ந்த பொருளுடையதாகவும் கருதப்படுகிறது. போகர் ஒரு மருத்துவர்; போகர் ஒரு யாத்ரீகர்; போகர் ஒரு தவசி; போகர் ஒரு நாடோடி... இப்படி, போகரை எல்லா நிலைப்பாட்டிலும் பொருத்திச் சொல்லலாம்.

நான்கு முழத்தில் ஒரு துவராடை, காலில் ஜாதிபத்திரி மரத்தால் ஆன பாதரட்சை, கையில் ஐம்பொன் கமண்டலம். தோளில் துணி மூட்டை - இதுதான் போகர். எங்கு வேண்டுமானாலும் கிளம்பிவிடுவார். ஆகாய மார்க்கம், நீர் மார்க்கம், தரை மார்க்கம் என்று எதிலும் பயணிக்க வல்லவர். தூரம் இவருக்கு ஒரு பொருட்டாக இருந்ததே இல்லை. போகரின் இந்தச் சாதுர்யங்கள் இன்று நம்மில் யாரேனும் ஒரு மனிதனிடம் இருந்தாலும் போதும். அவனை இந்த உலகமே வியந்து நோக்கும். அது மட்டுமல்ல; போகரின் சாதுர்யங்கள் நம்மிடம் இருந்தால் நமக்கு எந்த ஒரு வாகனமும் தேவையில்லை. எரிபொருள் என்ன விலை விற்றாலும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கவலையில்லை; பாஸ்போர்ட், விசா என்று எந்த நடைமுறைகளும் நமக்கு தேவையில்லை. இதெல்லாம் நடக்கற காரியமா என்றுதான் நம் பட்டறிவு நம்மைப் பார்த்துக் கேட்கும். ஆனால், போகர் வாழ்வில் அதெல்லாம் சர்வ சாதாரணமாக நடந்திருக்கின்றன.

சரி, பூனை கதைக்கு வருவோம். போகர் ஒரு யாத்ரீகர் என்பவரும்கூட என்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன் இல்லையா? ஒருநாள் காலார கிளம்பிவிட்டார். ஓர் ஊருக்குள் நுழைந்தபோது, நடந்த களைப்பில் தாகமும் பசியும் மேலிட்டது. காடாக இருந்தால் மூலிகை உணவாகிவிடும். இருப்பதோ நாடு... பாலும் கனியும் கிடைக்காதா என்று தேடத் தொடங்கினார். அப்போது ஒரு வேதியர் வீடு குறுக்கிட்டது. அந்த வீட்டின் உள்ளே பெரிதாக ஹோமம் நடந்துகொண்டிருந்தது. வேதியர்கள் வேத மந்திரங்களைக் கூறி, ஹோமம் வளர்த்தபடி இருந்தனர். அங்கே தன் தேவைக்கு உணவு கிடைக்கும் என்று கருதிய போகர், அந்த வேதியர் வீட்டுத் திண்ணையில் வந்து அமர்ந்தார்.

அலைந்து திரிந்து வந்தமையால் பார்ப்பதற்குப் பக்கிரி போல தென்பட்ட அவரை, வேதம் ஓதும் வேதியர்கள் பார்த்து முகம் சுளித்தனர். அவரது அருமை உணராது அவரை எழுந்து போகச் சொன்னார்கள். போகருக்குக் கோபம் வந்துவிட்டது.

''வேதியர்களே! என்னை ஏன் துரத்துகிறீர்கள்? நானும் உங்களைப்போல் ஒருவன்தானே?'' என்று கேட்டார். அவர்கள் சிரித்துவிட்டனர்.

''பார்க்கப் பரதேசி போல் இருக்கும் நீ எங்களைப் போன்றவனா? எங்களைப் பார்... நாங்கள் உன்னைப் போலவா இருக்கிறோம்?'' என்று ஏகடியம் பேசினர்.

''தோற்றத்தை வைத்து எடைபோடாதீர்கள். உங்களுக்கு நான் இளைத்தவனில்லை. சொல்லப்போனால், எனக்கு இணை உங்களில் ஒருவர்கூட இல்லை!'' என்றார் போகர்.

''என்ன... பேச்சு தடம் மாறுகிறது. நாங்கள் வேதியர்கள். இங்கே நடப்பது புனிதமான மஹாமிருத்யுஞ்சய ஹோமம். அப்படி என்றால் என்னவென்றாவது உனக்குத் தெரியுமா?''

''என்னைச் சோதிக்கிறீர்களா?''

''இல்லை... சோதிப்பது என்பது, சந்தேகம் வரும்போது நடக்கும் ஒன்று. இங்கே உன் மேல் எங்களுக்கு எந்தச்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சந்தேகமும் இல்லை. உன்னோடு நாங்கள் இவ்வளவு பேசியதே அதிகம். எங்களை இனியும் பேசவிடாமல்- நாங்கள் ஹோமம் செய்ய இடையூறு செய்யாமல் இடத்தை காலி செய்!" என்று கூறிவிட்டு அவர்கள் விலகிட. போகர் முகத்தில் கோபம் குடியேறத் தொடங்கியது. அப்போது பூனை ஒன்று அவரைக் கடந்து ஹோமம் நடைபெறும் இடம் நோக்கிச் சென்றது. ஒரு வேதியர் அதை அடிப்பதுபோல பாவனை காட்ட, அது பயத்துடன் ஓடிவந்து போகரின் காலடியில் விழுந்தது.

போகர் உடனே குனிந்து அதை எடுத்தார். பரிவோடு பார்த்து வருடிக் கொடுத்தார். பூனைக்கும் இதமாக இருந்தது. அப்படியே அதன் நெற்றி மீது தன் கட்டை விரலை வைத்து தன் தவசக்தியைச் சற்று அந்த பூனைக்குள் பாய்ச்சவும், அந்தப் பூனை பேச ஆரம்பித்தது. 'முனிவர் பிரானுக்கு என் வணக்கம்' என்றது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



"நான் முனிவனல்ல பூனையே... முனைந்து தவம்புரிபவனே முனிவன். அவனுக்கு வரசித்தி பெறவேண்டும் என்னும் நோக்கம் இருக்கும். நான் சித்தன். சகல ஸித்திகளையும் நான் என்னை வென்றே பெற்றுவிட்டவன்" என்று பூனைக்கு விளக்கமளித்தவர், அதன் காதில் வேதமந்திரங்களை உபதேசிக்கத் தொடங்கினார். பூனையும் சிஷ்ய பாவனையுடன் கேட்டுக்கொண்டது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அதே நேரம், ஹோம மந்திரம் ஜெபித்தபடி இருந்த வேதியருக்கு, சொல்லி வந்த மந்திரத்தில் அடுத்த அடி மறந்துபோய், முதல் அடியையே திரும்பத் திரும்பச் சொல்லி, தன் தலையிலும் அடுத்த அடி நினைவு வருவதற்காகக் குட்டிக் கொண்டார்.

போகர் வெளியே இருந்தபடியே அதைக் கேட்டுச் சிரித்தார். பிறகு, அவர் பூனையுடன் அங்கே போய் நின்று பூனையைப் பார்க்க, அது அடுத்த அடியை எடுத்துக்கொடுத்தது. அதைக் கண்ட வேதியர்கள் அப்படியே ஸ்தம்பித்து, ஆச்சரியத்தில் மூழ்கினர். இது ஏதும் மாயமா, ஸித்து வேலையா எனத் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள, பூனை மந்திரத்தைத் தொடர்ந்து உச்சரித்து, முழுவதுமாகச் சொல்லி முடித்தது. பின்பு போகரைப் பார்த்து, "குருநாதா... நான் செல்லட்டுமா?" என்று கேட்க, "நீ செல்லலாம்" என்றார் போகர். அதுவும் தன் வழியே துள்ளிக் குதித்து ஓடத் தொடங்கியது.

இப்போது வேதியர்களிடம் ஒரு மாற்றம்.

"ஐயனே... தாங்கள் யார்?"

"நீங்களே சொன்னீர்களே... பரதேசி என்று!"

"மன்னியுங்கள். நாங்கள் தோற்றத்தை வைத்துத் தவறாகக் கருதிவிட்டோம்."

"அப்படிக் கருதக் கூடாது என்றேனே.."

"உண்மைதான். எங்கள் செருக்கு. உங்கள் பேச்சைக் கேட்கவிடவில்லை."

"அது போகட்டும். இந்த ஹோமத்தின் நோக்கம்?"

"நாட்டில் மழையில்லை. அதனால் கடும் வறட்சி. வாழ்விலும் இதனால் ஒளியில்லை. எனவே, இறையருளுக்காகவே இந்த வேள்வி. நாங்களும் வறுமையில் வாடுகிறோம்."

"இதைப் போன்ற வேள்விகளின்போது மனத் தூய்மையும் பணிவும் மிக முக்கியம். அப்போதுதான் வேத மந்திரங்கள் வானில் முழுமையாகப் பரவி அதிர்வு உருவாகி, மேக மண்டலத்தில் மாற்றம் தோன்றி, மழைக்கான கார்மேகங்கள் ஒன்று திரளும்..."

"உண்மைதான். நாங்கள் தெளிந்தோம். தங்களைப் பற்றித் தயவுசெய்து கூறுங்கள்."

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"என் பெயர் போகன். நான் ஒரு சித்தன்!"

"போகர் பெருமானா? கேள்வியுற்றிருக்கிறோம். இன்று நேரிலும் பார்த்துவிட்டோம். மட்டற்ற மகிழ்ச்சி! ஒரு பூனைக்கே வேதத்தைப் புகட்டி தாங்கள் எங்களுக்குப் பாடம் கற்பித்து விட்டீர்கள்..."

"வேதம் இறைவனின் மொழி. அதை மொழிவது வேதியர் கடப்பாடு. அப்போது சுயநலம் துளியும் கூடாது. அடுத்து, உச்சரிப்பு பிசகினாலும் அது ஆபத்து."

"தாங்கள் கூறுவதை ஏற்கிறோம். எங்கள் வேள்வி வெற்றி பெற்றிட, தாங்களும் உடனிருந்து அருளுங்கள்."

"கவலை வேண்டாம். உங்கள் வேள்வி வெற்றி காணும். மழை வளம் இனி பொய்க்காது. உங்களின் வறுமையையும் நான் போக்குகிறேன். நான் எனில், என் சித்த ஞானம்!" என்ற போகர், அந்த வீட்டில் இருந்த அவ்வளவு அண்டா குண்டாக்களையும் கொண்டுவந்து தன் முன் போடச் சொன்னார். கடப்பாரை, மண் வெட்டியைக்கூட விடவில்லை.

பிறகு, அவற்றை வறட்டி எனப்படும் பசுஞ்சாணத் தட்டைகள் கொண்டு மூடி நெருப்பிட்டார் போகர். கொழுந்துவிட்ட நெருப்பால் அவ்வளவு உலோக பாண்டங்களும் சிவப்பேறிப் பழுத்து நின்றன. அப்போது அதன் மேல், தன் வசம் இருந்த ஆதிரசம் எனும் ரசவாத மூலிகைச் சாற்றைத் தெளித்தார். பின்பு அதைக் காற்றில் ஆறிய நிலையில் காணச் சொன்னார். அவர்கள் எடுத்துப் பார்த்தபோது அவ்வளவும் தங்கமாக மாறியிருந்தது.

"இது உங்கள் வறுமையை வெல்ல உதவட்டும்; உங்கள் மனமும் பொன்போல மின்னட்டும்" என்று ஆசி கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டார் போகர்.

இந்தச் சம்பவம் போகர் வாழ்வில் ஒரு பாட்டாக காணக் கிடைக்கிறது.

குருவென்றே தாகத்துக்கு அமுதம் ஈந்தார்
கொண்டுமே வந்துவொரு சித்தி ஈந்தே
அருவென்றே பாத்திரங்கள் ஈந்து ஐயா
ஆயி அவன் உபதேசம் அனுகிரகித்து
தருவென்றே அவரவர் வீட்டில் உள்ள
தவலை செம்பு மண்வெட்டி உழவுப்பாறை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வெருவென்றே வெளிதனில் குவிக்கச் சொல்லி
விராட்டிப் போர் தனையடுக்கி நெருப்பிட்டேனே
இட்டுமே சிவந்த பின்பு கொணர்ந்த சூதம்
எள் அளவாய் எடுத்துமே திவலை வீசி
கட்டுமே கனகம்பத் தரையுமாச்சு
கணக்காக அவரவர்கள் எடுத்துக் கொண்டார்கள்!'

- எனும் இந்தப் பாடல், போகிற போக்கில் தங்கம் செய்ய முடிந்தவர் போகர் என்பதை உணர்த்துவதுபோல் உள்ளது. அது மட்டுமல்ல, வேத மந்திரங்களும் அவருக்கு தெரிந்திருந்தன.

இந்த ரசவாத ரசத்தை எப்படிச் செய்வது என்பது குறித்தும் போகர் ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார். பொன்னாவரை மூலிகைச் செடியை வேரோடு பிடுங்கி எடுத்து, ஒரு களஞ்சு முப்புவைச் சேர்த்து (உப்பு, கந்தகம், பாதரசம் மூன்றும் சேர்ந்தது) தைலம் போல் காய்ச்ச வேண்டும். பிறகு அதை ரசமாக்க பிரிதொரு முறைகள் உள்ளன. இதில், 'எது பொன்னாவரைச் செடி? அந்த முப்புவின் அளவு எவ்வளவு? அதை எப்படிக் காய்ச்ச வேண்டும்? எப்போது காய்ச்ச வேண்டும்?' என்பது வரை அதனுள் நுட்பங்கள் உள்ளன. காய்ச்சப்படும் பாத்திரம் எத்தன்மை கொண்டிருக்க வேண்டும் என்பதும் இதில் முக்கியம். இதெல்லாம்தான் ரசவாத ரகசியம்.

போகரின் ரசவாதம் இப்படி என்றால், மற்ற சில சித்தர்கள் வேறு மாதிரிகளில் இதேபோல ரசவாத ரசம் செய்திருக்கின்றனர்.

போகர் ரசவாதத்தில் மட்டுமல்ல, அஷ்டமா ஸித்திகளிலும் சிறந்து விளங்கினார். அதில் ஒன்று இலஹிமா ஸித்தி. அதாவது, எடைப்பாடுள்ள நாம் பஞ்சு போல் ஆகிவிடுதல்.

இது எப்படி சாத்தியம்?

விமானம்கூட மிகுந்த கனமானதுதான்; ஆனால், அது காற்றைச் சமன் செய்யும்போது லேசாகி வானில் மிதப்பதுடன் பறக்கவும் செய்கிறதல்லவா? இதே தத்துவத்தை நம் உடலிலும் நாம் செயல்படுத்தலாம். அதற்குத் தசவாயுக்கள் பற்றிய அறிவு நமக்கு முக்கியம்.

தசவாயுக்களில் ஒரு வாயு அபான வாயு. இன்னொரு வாயு உதான வாயு. இதில் அபான வாயுவுக்குக் கீழ் நோக்கி அழுத்தும் தன்மை உண்டு. உதான வாயுவுக்கு மேல் நோக்கி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இழுக்கும் தன்மை உண்டு. இலஹிமாவில் நாம் லேசாக, நம் உடலில் உதான வாயுவை நிரப்ப வேண்டும். அப்போது நாம் லேசாவோம். அதை எப்படி நிரப்புவது என்பதெல்லாம் யோகப் பயிற்சியால், தகுந்த குருநாதர் மூலம் படிப்படியாக அறிய வேண்டியவை.

பௌத்த குருமார்கள் இம்மட்டில் சாதாரணமாக இந்த இலஹிமா வித்தையை செய்தனர். அவர்கள் ஆகாயத்தை ஒரு தனி பூதமாகக் கருதவில்லை. ஆகாயமும் பூமியும் அவர்கள் வரையில் ஒன்றுதான்!

ஆதிசங்கரரின் சீடர்களில் ஒருவர் பத்மபாதர். அதாவது, தாமரைபோல் மென்மையான பாதங்களை உடையவர் என்பது பொருள். ஆதிசங்கரர் வகுப்பு எடுக்கும் நேரம், பத்மபாதர் வரும் வழியில் ஆற்றில் வெள்ளம் பெருகி ஓடியபடி இருக்கிறது. வகுப்புக்குச் சரியான நேரத்துக்குச் செல்ல வேண்டிய ஒழுக்கம், கட்டுப்பாடு அவரை நீர்மேல் நடந்து செல்லச்செய்கிறது.

அவர், உதான வாயுவை உள்ளுக்குள் பெருக்கப் பெருக்க... அது உடம்பை மேல் நோக்கி இழுத்திட, எடை இழப்பு ஏற்பட்டு, அவர் நீர்மேல் நடந்து வந்ததாகப் புராண வரலாறு கூறுகிறது.

இப்படிப்பட்ட ஸித்திகள் போகர் வரையிலும் சாதாரணம். தானறிந்த இவை அவ்வளவையும் போகர் தன் சீடர்களில் ஒருவரான கோரக்கரிடம் கூறியதாகவும் வரலாற்றுக் குறிப்பு களின்படி தெரியவருகிறது. அவரே 'போகர் ஜனன சாகரம்' எனும் நூலில் தன் வாழ்வியல் அனுபவங்களை எழுதியதாகவும் தெரிகிறது.

மேற்கண்ட தகவல்கள் அவ்வளவும் சோழ அரசன் இரணியவர்மனுக்கு எடுத்துரைக்கப்படவும், மன்னன் அதைக் கேட்டு நெகிழ்ந்து போனான். அதன்பின், அவன் கருவூராரையும், போகரையும் சென்னியில் வைத்துக் கொண்டாடிச் சிறப்பித்தான்.

இப்படிப்பட்ட போகரின் ஜீவன் முக்தியும் மிக விநோதமாக, சித்தர்கள் உலகமே எண்ணிப் பார்த்து வியப்பதாக உள்ளது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 13

மாயத்தைக் கண்ட சித்தர்
மதியதைப் பெருக்கிக் கொண்டு
காயத்திலிருக்கும் போதே
கர்த்தனைக் கலந்து கொள்வார்.
நேயத்தை விட்டபோது
நேர் சிவந்தன்னை சேர்வார்
மாயத்தைக் கண்டு சூட்ட
வாசியில் வாழுவாரே!

- சுப்பிரமணியர் சுத்தஞானம்

போகரின் சமாதி நிலைக்குப் பின்னே நாம் அறிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் சூட்சுமமான விஷயங்கள் நிறையவே உள்ளன. உலகில் பிறந்தோர் ஒரு நாள் இறந்தே தீர வேண்டும். இது இயற்கை நியதி. இதற்குச் சித்த புருஷர்களும் விதிவிலக்கல்ல. ஆனால், இவர்கள் விதியின் பொம்மைகளாக, வெந்ததைத் தின்றுவிட்டு வேளை வந்ததும் செத்துப் போகிறவர்கள் அல்லர்!

நான் யார் என்னும் வினா எழுப்பி, தன்னை அறிந்து கொண்டதாலேயே இவர்கள் சித்தர்கள் எனப்பட்டார்கள். தன்னையே அறிந்தபின், இந்த உலகை அறிவது ஒன்றும் பெரிய விஷயமில்லை. உலகையும் அறிந்து, அதன் வசம் உள்ள பஞ்ச பூதங்களையும் அறிந்து தெளிந்து விட்ட நிலையில், இவர்கள் உலகில் இருந்து கொண்டே இல்லாமலும் இருக்கத் தெரிந்து கொண்டார்கள். தண்ணீரில்தான் மிதக்கிறது தாமரை இலை; ஆனால், தண்ணீரோடு அது ஒட்டுவதேயில்லை. அப்படியே இந்தச் சித்தர்களும் இந்த உலகோடு தங்களை வைத்துக் கொண்டார்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தன்னையும் உலகையும் அறிய முடிந்ததால் விதியையும் அறிய முடிந்தது. அப்படி அறிந்த விதியை மீறாமல், அதே நேரம் விதி விலக்காகவும் இவர்களால் திகழ முடிந்தது.

பிறந்தோர் இறந்தாக வேண்டியதே விதி. இறந்தும் வாழ முடிவதே விதிவிலக்கு!

அது எப்படி?

இந்தக் கேள்விக்கு விடை பகர்பவைதான் சித்தர்களின் ஜீவ சமாதிகள். சமாதி என்ற சொல்லைப் பிளந்து பார்த்தால் உண்மை தெரியும். சமாதிக்குள் 'ஆதி' என்னும் பதம் ஒளிந்துள்ளது. 'ஆதி' என்றால் தொடக்கம் என்று பொருள். ஏதோ ஒன்றின் தொடக்கம் அல்ல; உயிரின் தொடக்கம். அனைத்துக்கும் முதலான தொடக்கம். அந்தத் தொடக்கம், அதாவது... அந்த ஆதியானதுடன் சமாதியுறும் சித்தர்களின் ஜீவனும் சமமாகக் கலக்கிறது. அதாவது, சென்று சேர்கிறது. அந்த ஆதிக்குச் சமம் இது; அதற்குச் சமமான ஆதி... சமாதி எனலாம்.

அந்த ஆதி(பகவனுக்கு)க்குச் சமமான ஆதியை சமாதி என்றாலும், அது கோயிலுக்கு நிகரானதன்றோ? நம்மைப் போன்ற ஊனப் பிறப்புடையோரும் புதைக்கப்பட்டு சமாதியே கொள்கிறோம். ஆனால், இங்கே ஜீவனில்லை. உடம்பு மட்டும் உள்ளது. ஜீவன் நீங்கிய உடல் வெறும் குப்பை. எனவே, நமது சமாதிகள் வெறும் குப்பைக் குழிகளே! ஆனால், சித்த புருஷர்களின் சமாதிகளில் ஜீவன் அப்படியே இருக்கிறது. இது, சூட்சும உடம்பெடுத்து வந்து நடமாடவும் செய்யும். உள்ளே இருந்துகொண்டு அருள் அதிர்வுகளை வெளியிட்டபடியும் இருக்கும். பிரபஞ்ச வெளியோடும் நட்சத்திரங்களோடும் கோள்களோடும் தொடர்புகொண்டு இருக்கும்.

இன்றைய வாழ்வில் உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், ஒவ்வொரு சித்தனின் ஜீவ சமாதியும் ஒரு விண்வெளி ஆய்வுக் கூடத்துக்கு சமம். அந்தக் கூடத்தில் இருப்பவர்கள் உலகில் எங்கே வேண்டுமானாலும் தொடர்புகொள்ள முடிந்தவர்களாக இருப்பர். இருந்த இடத்தில் இருந்துகொண்டே பூவுலகோடு மட்டுமல்ல, விண்ணில் ஏவப்பட்டிருக்கும் கோள்களோடும் அவர்கள் தொடர்பில் இருப்பார்கள். புயல், மழை, காற்றை முன்னரே கூறுவார்கள். கோள்கள் நெருங்கி வருவதை, பூமி மேல் உரசப் போவதை முன்னரே கணித்துக் கூறுவார்கள். அப்படியே இன்னமும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அறியப்படாத நட்சத் திரங்களைத் தேடியும், கோள்களைத் தேடியும் ஆய்வு நிகழ்த்தியபடி இருப்பார்கள்.

இதை எல்லாம் அறிவாற்றலால் கண்டறிந்த கருவிகளைக் கொண்டும், மின்னாற்றல், மின் காந்த ஆற்றல் கதிர்களின் ஆற்றல் கொண்டும் செய்தவண்ணம் இருப்பார்கள். இதன் பின்னே, பல ஆண்டு கால உழைப்பு, பல நூறு கோடி ரூபாய் செலவும் இருக்கும்; இன்னும் செலவழிந்தபடியேயும் இருக்கும்.


ஆனால், ஒரு கருவியும் இல்லாமல், மின்னாற்றல் மின்காந்த ஆற்றல், கதிர் ஆற்றலை எல்லாம் தன் உடம்பிலேயே கண்டறிந்து, அதை வெளிப்படுத்தி ஒரு சித்த யோகி ஜீவ சமாதிக்குள் இருந்து செய்தபடி இருப்பார். கால் காசு செலவு கிடையாது. நெடிய தவமும் புலனடக்கமும்தான் இவர்களுக்குத் தேவை. இது விந்தையிலும் விந்தையான பேருண்மை.

எனவே, ஒரு ஜீவ சமாதிக்குப் பின் உள்ள இந்த ஆற்றலை முதலில் நாம் புரிந்துகொண்டாக வேண்டும். அடுத்து, இதன் வகைகளையும் தெரிந்துகொள்ளுதல் நல்லது. ஜீவசமாதியிலும் வகைகளா என்று ஆச்சரியமோ, குழப்பமோ அடையாமல் அவற்றைப் பார்ப்போம்.

நிர்விகற்ப சமாதி, விகற்ப சமாதி, காயகல்ப சமாதி, சஞ்ஜீவித சமாதி, ஜோதி சமாதி, பரிபூர்ண சமாதி என்று ஜீவசமாதிகளில் வகைகள் உள்ளன. ஏன் இந்த வகைகள் என்பதன் பின்னே காரண- காரியம் உள்ளது. நிர்விகற்ப சமாதி என்பது, ஒரு சித்தன் மீண்டும் பிறவாதபடி பிரம்மத்தோடு கலந்துவிட்டதைக் குறிப்பது. விகற்ப சமாதியோ, மறுபிறப்புக்கு இடமுள்ள சமாதி. அதாவது, ஒரு சித்தர் சமாதியுறுகிறார். அவர் மீண்டும் பிறக்கும் விருப்பமோ அல்லது கடப்பாடோ கொண்டிருந்தால், அவரது சமாதி விகற்ப சமாதியாகும். சஞ்ஜீவித சமாதியில், உள்ளே அடங்கியிருக்கும் உடல் துளியும் கெடாது. அப்படியே இருக்கும். மண்ணால் இந்த உடலைத் தின்றுவிட முடியாது. ஜோதி சமாதி என்பது, ஒரு சித்தன் தன் பருஉடலைத் தீச்சுடர்போல ஆக்கிக்கொண்டு வானில் கலந்து விடுவதாகும்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இப்படி, சமாதிகளின் உள் அடங்கிக் கிடக்கும் சித்தர் பெருமக்களின் நோக்கம், விருப்பத்துக்கு ஏற்ப அவை பெயர் கொண்டுள்ளன. இந்த வகையில், போகர் பிரம்மத்தோடு கலந்து மீண்டும் பிறவாதிருக்க விரும்பியதால், அவரது சமாதி நிர்விகற்ப சமாதியாகும். மீண்டும் பிறவாமையைத் தங்கள் வாழ்வின் நோக்க மாகக் கொண்டவர்களுக்கு இங்கே மனம் ஒடுங்கும்போது, அவர்களின் நோக்கமும் விரைந்து ஈடேறிவிடும்.

எது சமாதி எனும் கேள்வியில் தொடங்கி, அதன் வகைகளையும் சிந்தித்தோம். இனி, இந்தச் சமாதிக்குள் சித்தர்கள் எப்படி ஒடுங்கு கிறார்கள் என்று சிந்திப்போம்.

உடம்போடு முதுமை எய்தி தவத்தைத் தொடரும்போது அதைப் பேணுவதற்காக மூச்சைக் கட்டுப்படுத்துதல், பச்சிலை உண்ணுதல் போன்றவை தேவைப் படுகின்றன. ஒரு கட்டத்தில் அந்த உடம்பைச் சுமந்தபடி வாழ்வது என்பது பாரம் சுமப்பது போலாகி விடுகிறது. இத்தனைக்கும் அது நமது உடம்புபோல பித்த, வாத, வாயு சிலேத்துமங்களால் பாதிக்கப்பட்ட ஊத்தை உடம்பு அல்ல. காயகல்பங்களால் கல்போல் விளங்கும் உறுதியான உடம்பு. ஆனாலும், அது சுமைதானே?

இந்தச் சுமையோடு இதுவரை சுற்றித் திரிந்தது போதும்; இதை உதிர்ப்போம் என்கிற முடிவுக்கு எப்போது ஒரு சித்தன் வருகிறானோ, அப்போதே அவன் சமாதியுற விரும்புகிறான் என்று பொருள். அப்படிச் சமாதியுறும்போது, அவன் தானறிந்த ரகசியங்களால் தன் ஒரு உடலை எட்டு சூட்சும உடம்புகளாக ஆக்கிக்கொள்ள முடியும். இது எட்டு ஸித்திகளான அனிமா, மஹிமா, லஹிமா, கரிமா, பிராகாமியம், வஸ்யம், பிராப்தி, ஈசத்வம் என்பதன் கூறாகும். இப்படி எட்டாக ஆக்கிக்கொண்டு, எட்டு இடங்களில் சமாதிகொள்ள முடியும்.

இந்த தகவல் ஆச்சரியம் தரலாம். ஆனால், இதுதான் உண்மை. இந்த உண்மைக்குச் சான்றாக உள்ளதுதான் போகர் வாழ்வு.

போகரின் ஜீவசமாதி என்றவுடன், பழநியின் நினைவு வரும். ஆனால், சமாதி நிலை அடைந்த பின், அவர் அதிலிருந்து வெளிவந்து நாகப்பட்டினம், வடபொய்கை, நல்லூர், பிறகு... சீனதேசம் என்று சூட்சும உடம்போடு சுற்றித் திரிந்தார். எட்டு தேகத்தில் ஒன்று மட்டுமே பிரம்மத்தோடு கலந்து பிரம்மமாகி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

விட்டது. மீதமுள்ள ஏழு, இந்தப் பூவுலகில் பல்வேறு இடங்களில் சமாதி நிலை கொண்டது. அவை எங்கே என்பதில் தெளிவில்லை. இப்படிச் சமாதி நிலையை பல இடங்களில் கொள்வதை அட்டாங்க நிலைப்பாடு என்பர். 'ஒருவர் ஏன் எட்டாகி அடங்க வேண்டும்? ஒன்றே ஒன்று கூடாதா? போதாதா?' என்றெல்லாம் நமக்குள் கேள்விகள் எழலாம்.

இவற்றுக்கான விடையை ஜீவ சமாதிகளால் ஏற்படும் நன்மைகளைக் கொண்டே உணர முடியும். எந்த ஒரு ஊரில் ஜீவ சமாதி உள்ளதோ, அந்த ஊரில் பெரும் இயற்கைச் சீற்றமோ, அரக்க குணம் கொண்ட மக்களோ, பஞ்ச பூதங்களின் கொடும் தாக்கமோ இருக்காது. மாறாக, அருளாளர்கள் நிறைய இருந்து, பாவ - கர்ம வினைப்பாடுகளைச் சமன் செய்தபடி இருப்பார்கள். அந்த அருளாளர்கள் ஜீவ சமாதிகளின் தொடர்பில் இருப்பார்கள்.

போகரும் தன் நெடிய தவமும் அருளும் தன் சமாதி நிலைக்குப் பின்பும் இந்த உலகுக்குப் பயன்பட எண்ணியே இப்படி எட்டு இடங்களைத் தேர்வு செய்து ஒடுங்கியிருக்கலாம். இப்படித்தான் நம்மால் யூகிக்க முடிகிறது. இதற்கு என்ன சான்று என்று கேட்பவருக்கு, 'கோரக்கர் சந்திர ரேகை'யில் வரும் 22, 23-ஆம் பாடல் சான்றாக உள்ளது.

கோரக்கரும் ஒரு சித்த புருஷர். இவர் போகரை குருவாய் வரித்துக்கொள்கிறார். சமாதியுறவும் விரும்புகிறார். இப்படிச் சித்த புருஷர்கள் சமாதியுற விரும்பும்போது, தங்கள் சீடர்களைக் கொண்டு அதை நிகழ்த்திக் கொள்வர். சமாதிக் குழிக்குள் உடம்பானது அடங்கிய நிலையில், அதன் மேலே கற்களைக் கொண்டு அக்குழியை மூடி, அங்கே தூய்மையான சூழ்நிலையை உருவாக்கிட வேண்டியது அவசியம். அல்லாத பட்சத்தில், உள்ளிருக்கும் உடம்பை விலங்குகள் உண்டுவிடும், பாம்புகள் விழுங்கிவிடும் ஆபத்து உண்டு.

அதே நேரம், சில சித்த புருஷர்கள் பிறர் அறியாதபடி சமாதியுற விரும்புவர். இந்த உலகு அறியாதபடி வெளியே வந்து நடமாடிவிட்டும் செல்வர். எதற்கு இந்த ரகசியத்தன்மை என்று நாம் கேட்க முடியாது. கேட்கவும் கூடாது. அதை நாம் அறிய வேண்டுமென்றால், நாமும் சித்தம் ஒடுக்கிச் சித்தனாக வேண்டும்.

ஒரு வழக்கறிஞர் அறையில் தலையணை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தலையணையாய் வழக்குக்குப் பயன்படும் நூல்கள் உள்ளன. வழக்கறிஞராக இல்லாதவர்களுக்கு அந்த நூல்களால் ஆகப்போவது ஒன்றுமில்லை. எனவே, அவர்கள் அதை நூலாக மட்டுமே காண்பர். அதன் உட்பொருள் தெரியவே தெரியாது. தெரிய வேண்டுமென்றால் வழக்கறிஞராக ஆக வேண்டும். சித்தமும் அப்படித்தான்.

இன்றைய செல்போன் யுகத்தின் விஞ்ஞானத் தாக்கங்களால், காலிருந்தும் நடைசெத்துப்போய் வாகனங்களின் அடிமைகளாகி, கருவிகளின் தயவால் அதை இயக்கும் அறிவுடன் மட்டுமே வாழும் நம்மால், தன் உடம்பின் ஒவ்வொரு செயலையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ஒரு சித்தனின் பேராற்றலை எல்லாம் அவ்வளவு சுலபத்தில் உணர முடியாது.

சித்த வாழ்வு என்பது ஒரு நம்பமுடியாத புனைகதையாகவோ அல்லது ஃபேன்டஸி எனப்படும் மாயமாகவோதான் தோன்றும். தோன்றிவிட்டுப் போகட்டும். சித்தர் பெருமக்களும் ஊத்தை உடல்கொண்ட நமக்காக இல்லை. பின்னால் வரப்போகும் தங்களைப் போன்ற சிலருக்காகவே உடல் துறந்தும் சூட்சும உடம்போடு இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். அப்படி வாழ விரும்பியே போகரும் ஜீவ சமாதி ஆகிடத் தயாரானார்.

அதற்கு ஏற்ற இடமாக பழநி மலை ஸ்ரீதண்டபாணிச் சந்நிதிக்கு அருகிலேயே ஒரு மூலையைத் தேர்வுசெய்தார். முன்னதாக, அவர் சமாதி நிலை கொண்ட கமல முனி என்னும் சித்தரைக் கண்டார்.

நெருங்கியே கமலரது சமாதி கண்டார்

நேர்மையுடன் யாகோபு வணங்கி நின்றார்

-என்னும் 'போகர் ஏழாயிரம்' நூலின் வரிகள் இதற்குச் சான்று. இதன்படி, கமல முனி சமாதியில் யாகோபு சித்தர் என்னும் ராம தேவரை போகர் சந்திக்கையில், கமல முனி போகரின் வாழ்வியல் அனுபவங்களை நூலாக எழுதச் சொல்கிறார்.

தொழுதிட்ட என்தனக்கு முனிதான் சொன்னார்

தொல்லுலகில் (சீனா) நீர்கற்ற வித்தை தன்னை

முழுத்திட்டம் தன்னுடனே முனிதான் சொல்ல

முயற்சியுடன் கற்ற வித்தை பழுதில்லாமல்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வழுதிட்டமுடன் நானும் மறைப்பை எல்லாம்

மாநிலத்தில் கொட்டிவிட்டேன் வண்மை பாரே...

- என்கிறார் போகர் தன் ஏழாயிரத்தில்!

இதன்படி, அவர் தனது 'ஜனன சாகரம்' நூலை எழுதி முடித்தார். தன் சீடர்களில் ஒருவரான கோரக்கரை அழைத்து தனக்கு சமாதி எழுப்பச் சொல்லி, அதில் சென்று அமர்ந்து கொண்டார். அப்படிச் சமாதி எழுப்பச் சொல்லும்போது, கோரக்கருக்கும் சமாதி கொள்ளும் விருப்பம் ஏற்பட்டிருந்தது.

"குருவே.... நீங்கள் சமாதியுற நானிருப்பதுபோல, நான் சமாதியுற யார் இருக்கிறார்?" என்று கேட்க, "உனக்கு நானே சமாதி எழுப்புவேன்" என்கிறார் போகர்.

கோரக்கரும் சித்தர் என்பதால், புரிந்துகொண்டு மிகவே மகிழ்ந்தார். அதன் பின், பழநியம்பதியில் மலைமேலுள்ள குகைப் பகுதியில், ஒருபுறம் ஸ்ரீதண்டாயுதபாணியின் ஞானக் கோயிலும், அதில் பூஜா க்ரமங்களும் ஈடேறிக்கொண்டிருக்க... போகர் சமாதி கொள்ள, கோரக்கர் அதை எழுப்பி முடித்தார். இதை கோரக்கரே தன் சந்திரரேகை நூலில் 22, 23-ஆம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

அது சரி, போகர் இங்கே சமாதியாகிவிட, கோரக்கருக்கு அவர் எப்படி சமாதி எழுப்பினார்? முன்னதாக, போகர் சமாதிக்குள் தன் குண்டலினியை சஹஸ்ராரத்துக்குக் கொண்டுவந்து கபாலம் திறந்துகொண்டது எப்படி?

எப்படி இதனின்றும் வெளியேறினார்? அதன்பின் சூட்சும உடலுடன் அவர் செய்த செயல்பாடுகள் எல்லாம் என்ன?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 14

போடுவது திலகமடா மூலர் மைந்தர்
போகர் கருவூராரைத் தியானம் பண்ணு
நாடு நகரந் தனிலுள்ள ஜீவசந்து
நாதாந்த சித்தருக்கும் தோணாதையா
ஏடதனில் எழுதினோர் பாடல் என்று எண்ணாதே
ஒருநாளும் தப்பே இல்லை
தேடின பேர் பொருள் கோடி தனமீந்தாலும்
செப்பாதே இக்கருவை உலகத்தோர்க்கே'

- சட்டைமுனி

போகர் சமாதிகொள்ள புறத்தே கோரக்கர் அவருக்கான சமாதியை எழுப்பி முடித்துவிட்டார். போகரும் உடலினை அங்கே உதிர்த்துவிட்டு, தன் தவவலிமையால் தனக்கு ஏற்பட்ட ஞானத்தினால் சூட்சும உடம்பை உருவாக்கிக்கொண்டு அங்கிருந்து வெளியேறி, தான் விரும்பும் காலம் வரை இந்த மண்ணுலகில் வாழ முடிவு செய்தார்.

இந்தக் கருத்தைக் கேட்கையில் குழப்பமாகவும், நம்பமுடியாத ஒன்றாகவும் இருக்கும். ஒரு மனிதன் உடம்போடு சமாதியுறும் போது அவன் முற்றாக முடிந்தவன் ஆகிறான். சமாதிக்குள் காற்றைக் கொண்டு சுவாசிக்கவோ, ஒருவேளை சுவாசிக்க முடிந்தாலும் உணவில்லாததால் உயிர் வாழவோ முடியாமல் போவதே மானுட வாழ்வில் யதார்த்த நிலை. காலங்காலமாக அவன் கண்டு வருவதும் இதைத்தான். ஆனால், இந்த யதார்த்தம் சித்த புருஷர்களுக்குக் கிடையாது என்பதே உண்மை. அது எப்படி என்கிற கேள்விக்கு சித்தர்கள் வாயிலாகச் சிந்திக்க முடிந்தாலே விடை கிடைக்கும்.

அந்த விடையை இன்றைய விஞ்ஞானம் எந்த அளவு ஏற்கும் என்று தெரியாது. ஆனால், சித்த புருஷர்களுக்கு இந்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

விஞ்ஞானம் ஒரு சுண்டைக்காய்! இன்றைக்கு ஒன்று, நாளைக்கு ஒன்று என, தான் சொன்னதையே மறுத்துப் பேசும்

விஞ்ஞானம். கேட்டால்... அதுதான் வளர்ச்சி; வளர்ச்சி நிலையில் மாற்றங்கள் வந்து கொண்டுதானே இருக்கும் என்று அது எதிர்க் கேள்வி கேட்கும். ஒரு கோணத்தில் மிகுந்த நியாயத்துக்கு உரியதான இக்கருத்துக்குள் உண்மையில் ஒரு பெரும் உண்மையோ, உலகை வென்று காட்டும் பலமோ இல்லை என்பதே யதார்த்தம்.

இப்போது நாம் போகரின் சமாதி நிலைக்கு வருவோம். அவர் தன் உடலை உதிர்த்து சூட்சும உடலை எப்படி எடுத்தார் என்று பார்ப்போம். இப்படிச் சொல்லும்போதே, உடல் என்பது இரண்டாக இருப்பது தெரிய வருகிறது. ஒன்று பருவுடல்; இன்னொன்று சூட்சும உடல்.

இந்தப் பருவுடல், தாய் - தந்தையரின் சுக்கில, சுரோணிதத் தயாரிப்பு. இந்தப் பருவுடலில் ஏழு தலைமுறை கண்ட நம் ஏழு பாட்டன், பாட்டிமார்களின் அணுக்கூறுகள் நிச்சயமாக இருக்கும். முதலாம் தாத்தனின் நெற்றி, நான்காம் தாத்தனின் தலைமுடி, ஆறாம் பாட்டியின் விரல் நகங்கள் என்று ஒவ்வொருவருள்ளும் ஏழு தாத்தன்களின் - பாட்டிகளின் ஜீவ அணுக்கள் இருந்தே தீரும். அது எப்படி? தாய் வழித் தாத்தா, பாட்டிகள் என்று ஏழு தலைமுறையினர், தந்தை வழியில் ஏழு தலைமுறையினர் என்று பதினான்கு தலைமுறைக் கணக்குப்படி 28 பேரின் ஜீவ அணுக்களும் அல்லவா நம் உடம்பில் இருக்க வேண்டும் என்று கூட சிலர் கேட்கலாம். ஆனால், அதற்கு இடமில்லை. ஒரே கோத்திர வழியில் ஆணும், மாறுபட்ட கோத்திர வழியில் பெண்ணும் திருமணம் புரிந்துகொள்வதால், அந்த ஒரு கோத்திர வழி விந்துவுக்குள்தான் வினைப்பாடுகள் நடைபெறுகின்றன. இதனால் தாய்வழித் தாத்தா, பாட்டிகள் தொடர்பு உடம்பளவில் தொடர்வதில்லை. வினைவழியிலும் தொடர்வதில்லை.

அடுத்து, சித்தவியிலின்படி பெண் என்பவள் ஆண் தரும் மண்ணைக் கொண்டு தன் வசம் உள்ள தண்ணீரைக் கலந்து பானை செய்து தருபவள் மட்டுமே! அவளிடம் இருந்து ஜீவ அணு எதுவும் பிறவித் தொடர்பால் தொடர்வதேயில்லை. தொடரவும் கூடாது என்பதால்தான், ஒரு கோத்திரத்தில் உள்ள ஆண் - பெண்ணுக்கு நம்மவர்கள் திருமணம் புரிவதில்லை. ஒரு கோத்திர வழி என்னும் ஒரே வழிக்குள் சகோதர உறவு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நிலைதான் உள்ளது. சகோதரன் என்ற சொல்லே 'சக உதிரன்' அதாவது, 'ஒரே ரத்தம் கொண்டவன்' எனும் பொருளில்தான் வந்தது.

ஒரே கோத்திரத்தில் சகோதரனுக்கும் சகோதரிக்கும் ரத்த வகை வேறாக இருக்கலாம். ஆனால், அவர்களுக்குள் இருக்கும் மரபுவழி ஜீவ அணுக்களின் தொடர்ச்சி ஒன்றே! இந்த ஜீவ அணுக்கள் வழியாகவே பூர்வ ஜென்ம பந்தங்கள் தொடர்பான அம்சங்களும் தொடர்கின்றன. பொருத்தம் பார்த்து மணம் முடிப்பதெல்லாம் இதை உத்தேசம் செய்தே தோற்றுவிக்கப் பட்டது. இந்த வகையில், காதல் மணங்களில் ஜீவ அணுக்களின் தொடர்பு அறுந்து போய், ஒரு புது வரிசை உருவாகிவிடும். அதனுள் மரபுத் தொடர்பு, வினைத்தொடர்பு எல்லாமே நீக்கப்பட்டு, வெறும் உயிர்த் தொடர்பு மட்டும் இருக்கும்.

இதனால், வழிவழியாகத் தொடர்ந்து கிடைத்து வரும் விஷயங்களை இழந்துவிடுவோம். உதாரணமாக, நான்கு தலைமுறைக்கு முன் நம் தாத்தாக்களில் ஒருவர் ஒரு ஊரையே பெரும் ஆபத்தில் இருந்து காப்பாற்றியிருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த ஊரில் உள்ளோர் ஒன்றுகூடி அவரை மனதார வாழ்த்தியிருப்பார்கள். அந்த வாழ்த்து அவர் செவிவழியே பருவுடலில் பதிவாகி, பின் சூட்சும உடலிலும் பதிவாகியிருக்கும். பருவுடலில் பதிவானது அவர் உடம்பின் ஒட்டுமொத்த சக்தியின் திரட்சியான விந்துவிலும் சென்று பதிவாகியிருக்கும். அதன் வழியாகத்தானே தலைமுறைகள் தொடர்கின்றன? அந்தப் பதிவு, ஏழு தலைமுறை வரை உறுதியாகத் தொடரும். எட்டாம் தலைமுறைக்குதான் அது மிச்சமிருக்காது. இது ஒரு கணக்கு.

இப்படித் தலைமுறை தலைமுறையாகத் தொடர்கின்ற விஷயங்கள் வாழ்த்துக்களாக மட்டுமே இருக்க வேண்டும் என்றில்லை; சாபங்களாகவும் இருக்கலாம். அதனால்தான் எந்தவொரு நல்லதும் சரி, கெட்டதும் சரி... நமக்குப் பிறரால் தரப்படுவதில்லை. நாம்தான் வரவழைத்துக் கொள்கிறோம். நம் நடவடிக்கைகளால் எனும் பொருளில்தான், 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்றனர்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



நமக்கு இன்றுள்ள அனைத்து விஷயங்களுக்கும் இப்படி ஓர் அடிப்படை இருக்கிறது. நாம் ஒவ்வொருவருமே ஏழு தலைமுறைகளின் தொடர்ச்சியில் வருபவர்கள்தான். இந்த ஏழு தலைமுறைக்காலம் எப்படிப்பட்டதாக இருந்ததோ, அதைப் பொருத்ததே நம் அறிவு; இந்த ஏழு பேர் எப்படி வாழ்ந்தார்களோ, அதைப் பொறுத்ததே நம் வாழ்வு! இவர்கள் பெரும் கல்வியோடும், தர்ம சிந்தனையோடும், பாவத்துக்கு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அஞ்சியும் வாழ்ந்திருந்தால், நம் வாழ்விலும் நல்ல கல்வி, செல்வம் நிரம்பியிருக்கும். அதற்கேற்ற காலப்புள்ளியில் அந்த விந்தின் போக்கு ஜனனம் கண்டுவிடும். இல்லாவிட்டாலும் இல்லைதான்!

இதை மாற்ற நம்மால் இயலாது. ஒரு வகையில் இந்தப் பிடிப்பு ஒரு தொடர்கதையாக, பலரின் வாழ்க்கை எச்சமாய், பலகால நிலைப்பாடாய் இருப்பதே அடிப்படையான உண்மை.

இதனால்தான், நாம் பார்க்க ஒருவர் கோட்டையில் இருக்கிறார்; இன்னொருவர் குப்பைமேட்டில் இருக்கிறார். சத்தியம் தவறாமல் வாழ்ந்தும் ஒருவர் சிரமப்படுகிறார்; தவறு செய்வதையே வாழ்வாகக் கொண்டும் ஒருவர் உல்லாசியாக உள்ளார். இவர்களின் இன்றைய போக்குக்குப் பின்னாலே அந்த ஏழு தலைமுறையின் பாவ- புண்ணியக் கணக்கு உட்கார்ந்துகொண்டு, தன் கணக்கைத் தீர்த்தபடி உள்ளது.

இன்றைய நம்முடைய போக்கு, நம் பிள்ளைகள் கணக்கில் எதிரொலிக்கும். இதில் எந்த மாயத்துக்கும், மாய்மாலத்துக்கும் இடமில்லை. இதுவும் ஒரு விஞ்ஞானமே! இந்த விஞ்ஞானம் புரிய, மனித உடம்பைப் பற்றிய பெரும் ஞானப்பாடு அவசியம். இன்றைய மருத்துவ விஞ்ஞானம் உடம்புக்கும், அதன் உறுப்புகளுக்கும் பெயரை வைத்துள்ளது. வியாதிக்குக் காரணமான கிருமிகளைக் கண்டறிந்து, அந்தக் கிருமிகளைக் கொல்லும் மருந்துகளைக் கண்டறிந்துள்ளது. கண்ணுக்குப் புலப்படுகின்ற பருவுடலைக் கையில் எடுத்துக்கொண்டு, ஓர் உச்சத்தைக்கூடத் தொட்டுவிட்டது. செயற்கை இதயம், மூளை மாற்று என்று உடம்பை இயக்கத்தோடு வைத்துக்கொள்ள முயன்றபடியே உள்ளது.

ஆனால், உடம்புக்குள் ஒளிந்திருக்கும் சப்தம் சார்ந்த மனம் என்னும் விஷயத்தில் அது மிக மிகப் பின்தங்கியே உள்ளது. குறிப்பாக, மன ஒடுக்கம் - அதன் தவம் - அதனால் உடம்பில் உண்டாகும் மாற்றங்கள் மற்றும் இந்த பருவுடல்- ஒளியுடல் பற்றியெல்லாம் அது இனிதான் மேம்பட வேண்டும். இந்த வகையில், ஒவ்வொரு சித்தனும் ஒரு விஞ்ஞான ஆய்வுக் கூடத்துக்கு ஒப்பானவர்கள். அவர்கள் தாங்களாகவே தங்கள் உடல் பற்றி அறிந்து, அதன் பசி- தாகத்தை முதலில் வெற்றிகண்டு, பிறகு... மனத்தை அடக்கி, தாங்கள் யார் என்கிற கேள்வியில் விழுந்தனர். தாம் ஒரு பரம்பரைத் தொடர்பாளன் என்பதை உணர்ந்து, தம் முன்னோர் பற்றிப்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பின்னோக்கிச் சென்று அறிந்தனர். அதோடு, அவர்கள் புரிந்த வினைகளை அறிந்து, அதனால் தம் பருவுடல், ஒளியுடல் இரண்டிலும் உள்ள பதிவுகளைத் தெரிந்துகொண்டனர். பிறகு, அந்தப் பதிவுகளில் அழிக்க முடிந்ததை அழித்து, அழிக்க முடியாததை அனுபவித்து முடித்து, தங்களோடு தங்கள் பரம்பரைத் தொடர்புக்கு ஒரு முற்றுப்புள்ளியும் வைத்து, 'போதும் இந்த இடைவிடாத பிறப்பு' என்று, பிறப்புகளில் இருந்தே தப்பித்துக் கொண்டார்கள்.

இதுபற்றி ஓரளவு சிந்திக்கமுடிந்த எல்லோருக்குள்ளுமே நியாயமான கேள்வி ஒன்று இருக்கும்; ஒன்றல்ல, பல கேள்விகள்கூட இருக்கும்.

* ஏன் எவ்வளவு முயன்றும் சில விஷயங்கள் வசப்படவே மாட்டேன் என்கின்றன?

* எதனால் எனக்கு மட்டும் சராசரி உடலமைப்பு அமைந்து விட்டது?

* நான் எவ்வளவு முயன்றும் சில பாடங்களைச் சுலபமாக படிக்க முடியவில்லையே, ஏன்?

* நான் ஏன் ஒரு ஏழையின் வயிற்றில் வந்து பிறந்தேன்?

* நான் ஏன் பாழாய்ப்போன இந்தப் பட்டிக்காட்டில் பிறந்தேன்? அமெரிக்காவிலோ ஜெர்மனியிலோ பிறந்திருந்தால் நல்ல ஆங்கிலம் பேசிக்கொண்டு பளிச்சென்ற ஒரு நகரவாசியாக இருந்திருப்பேனே!

இப்படி, அந்தக் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகலாம். இதற்கெல்லாம் நிச்சயம் விடைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், அந்த விடை இரண்டு விடையாக உள்ளன. ஒன்று, பளிச்சென்று உணர முடிந்ததாகவும், இன்னொன்று ஒளிந்தும் உள்ளது. முதலில், பளிச்சென்று தெரியும் விடைக்கு வருவோம்.

முதல் கேள்வி, 'ஏன் எவ்வளவு முயன்றும் சில விஷயங்கள் வசப்படவே மாட்டேன் என்கின்றன?' இதற்கான அறிவியலார் பதில், 'வசப்பட வேண்டிய அளவுக்கு நீங்கள் முயற்சிக்கவில்லை. எனவே, தொடர்ந்து முயலுங்கள். நிச்சயம் ஒரு நாள் வசப்பட்டு விடும்' என்பதாகத்தான் இருக்கும். இதன் ஒளிந்துள்ள விடை என்ன தெரியுமா? 'அது எப்போது வசப்பட வேண்டும் என்று இருக்கிறதோ, அப்போதுதான் வசப்படும். அதுவரை எவ்வளவு முயன்றாலும், அது வசப்படாது. இதுதான்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அதன் விதிப்பாடு' என்பதே!

இந்த இரு விடைகளில், அன்றைய நம் உணர்வு நிலைக்கேற்ப நாம் ஒரு விடையை ஏற்றுக்கொண்டு, ஒன்று... தொடர்ந்து முயற்சி செய்வோம்; இல்லாவிட்டால், அது வசப்படும்போது வசப்படட்டும் என்று மனத்தை ஆற்றுப்படுத்திக் கொள்வோம்.

இப்படித்தான் மனித வாழ்வின் சகல நிலைப்பாடுகளிலும் நாம் இருவகையாக இயங்கிக் கொண்டு இருக்கிறோம். ஒன்று, இடைவிடாத முயற்சி; இன்னொன்று, கிடைத்ததை ஒப்புக் கொண்டு திருப்தியோடு வாழ முயற்சிப்பது.

அடுத்து, இடைவிடாத முயற்சியால் ஒன்றை அடைகிறோம் என்றே வைத்துக்கொள்வோம். அதை அடைந்த பிறகு, நம் மனத்துக்கு அது சாதாரணமாகி, அதற்கும் அடுத்ததை நோக்கி நம் மனம் புறப்பட்டுவிடுகிறது. கிடைத்ததை வைத்துத் திருப்தியாக வாழ்வதாக கருதிக்கொள்வதிலும் ஒரு நாள் அலுப்பும் சலிப்பும் ஏற்படத்தான் செய்கிறது.

இறுதியாக ஒரு கேள்வி எல்லோர் முன்னாலும் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்குகிறது.

நாம் விரும்பியதுபோல எதுதான் நடந்தது? நடந்ததை விரும்பித்தானே வாழ்ந்துள்ளோம்? அப்படி வாழ்ந்துதான் எதைப் பெரிதாகக் கண்டுவிட்டோம்? அடைய முடியாதவை குறித்த ஏமாற்றங்களும், அடைந்துவிட்டவை குறித்த 'இவ்வளவுதானா'க்களுமாகத்தானே நம் மனது உள்ளது. ஒரு முழுமையான திருப்தி, ஒரு பரிபூரண சந்தோஷம், கிடைத்தற்கரிய வாழ்க்கையை நூறு சதவிகிதம் பூரணமாகப் பயன்படுத்திக்கொண்ட நிறைவு ஒருவரிடமும் இல்லை. சுருக்கமாகச் சொன்னால், அப்பா - அம்மாக்கள் ஒன்று சேர்ந்ததால் வந்து பிறந்தோம்; பிறந்துவிட்டபடியாலே தின்று வளர்ந்தோம். காலம் எப்படி எல்லாம் அழைத்துச் சென்றதோ அப்படி எல்லாம் சென்றோம். ஆற்று வெள்ளத்தின் மேல் ஒரு துரும்பு விழுகிறது. அந்தத் துரும்புக்கென்று ஒரு தனிப் போக்கு இருக்க முடியுமா என்ன? வெள்ளம் போகின்ற வழிதானே அதன் வழி..?

தனித்த - பிரத்யேகமான சுயமாக தன்னை வழிநடத்திக் கொள்ளுதல், உலகின் சர்வ பிடிமானங்களில் இருந்தும் விடுபடுதல், விரும்பிய வடிவம் எடுத்தல், விரும்பிய வாழ்க்கை வாழல்... மொத்தத்தில், 'உலகம் எனக்குக் கீழ்! அதற்கு கீழ்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நானல்ல' என்கிற நிலைப்பாடு எத்தனை பேருக்கு இந்த உலகில் சாத்தியம்?

எவன் ஒருவனுக்கு அது சாத்தியப்படுகிறதோ, அவனே சித்தன். சித்தனாவதற்கோ உடம்பு, உலகம் பற்றிய தெளிவு மிக முக்கியம்.

போகரும் தன் புலத்தாலே இந்த உடம்பு, உலகம் குறித்தெல்லாம் தெளிந்தார். பரம்பரை வினைப்பாடுகளை அனுபவித்தும் முடித்தார். உச்சபட்சமாக தண்டாயுதபாணியை நவ பாஷாணத்தால் வடிவமைத்து, வருங்கால உலகம் பக்தி செய்ய, அதாவது ஒவ்வொரு நொடியும் ஒரு நல்வினைப்பாடு அவர் பொருட்டு நிகழ வழிவகை செய்துவிட்டு, தன் பரம்பரைத் தொடர்பால் உண்டான தேகத்துக்கும் சமாதியில் ஒரு முடிவைக் கொடுத்தார். அப்படி முடிவைக் கொடுக்க, அவர் தன் வசம் மிச்சமிருந்த விந்துவைத்தான் பயன்படுத்தினார்.

ஜீவசமாதி என்பதே, நம் உடலில் நம் குதப் பகுதிக்குக் கீழ் கிடக்கும் விந்துவை, குண்டலினி என்னும் யோக முயற்சியால் திரவநிலையில் உள்ளதைச் சற்றே திடமாக்கி (சப்பாத்தி மாவின் உருண்டை நிலை) ஒரு கோலிக்குண்டு அளவு அதை உருட்டி, பின்புற முதுகுத்தண்டின் வழியாக மெள்ள மேலேற்றி, பிறகு கழுத்தைக் கடந்து, அதன் பிறகு தலை வழியாக அப்படியே அந்தச் சரிவில் சிரமப்பட்டு மலை ஏறுவது போல் ஏற்றி, உச்சந்தலையில் அதைக் கொண்டுபோய் நிறுத்திவிடுவது தான்! இதைத்தான் குண்டலினி யோகம் என்பார்கள்.

ஆண் ஒருவன் பெண்ணைப் புணர்கையில், அவனது விந்து வெளிப்படும். அப்போது அவனது உடம்பின் சர்வாங்கமும் பரவிடும் பரவச உணர்வு நிலையைப் போன்றதொரு பரவச நிலை குண்டலினி யோகம் புரியும்போதும் ஏற்படும். பெண் தொடர்பில்லாத, சன்னியாசம் கெடாத, அதே நேரம் உடல் நலத்துக்கு யாதொரு தீங்கும் இல்லாத, உடம்புக்குள்ளேயே இருக்கும் இன்பம் இது!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 15

சோதி தன்னைப் பதினெண்பேரும் ஒளித்து- நூலிற்பேசி
சித்துஞான மர்மம் மிகக் காட்டிடாமல் ஏகி
ஓதியதன் உண்மை தன்னை யோகஞானதேகி
உரைத்தே நித்தம் மந்திரத்தை யனுதினமும் நேசி
நீதியாயிரம் மந்திரத்தா லகலும் பேய்பிசாசு
நிலைத்து வாசி தங்கிக்காயம் அழியாதுவிசுவாசி
ஆதிமந்திரம் இது தன்னாலே சித்தர் அனேகம்வீசு
அம்பிகையின் பாதத் தாணை அறைந்திட்டேன் சந்யாசி.
- கோரக்கர் நமனாசத் திறவுகோல்

குண்டலினி யோகம் பற்றி சென்ற அத்தியாயத்தில் விரிவாகப் பார்த்தோம். இதை இன்னும் விளக்கமாகவும் எழுத முடியும். ஆனால், என்ன எழுதினாலும், குண்டலினியை அப்படி எல்லாம் ஒருவரால் சுலபமாகப் பயின்றுவிட முடியாது என்பதே உண்மை. சரியான குரு மூலம் உடம்பை வென்ற ஒருவரால்தான் இது முடியும். வைராக்கியம் இதற்கு மிக மிக முக்கியம்.

ஓர் இமாலயத்து யோகிக்கு, அவர் முக்தி அடைவதற்குச் சில நாட்களுக்கு முன்புதான் இது வசப்பட்டது. இது வசப்பட அவர் எடுத்துக்கொண்ட காலமோ எழுபது வருடங்களுக்கும் மேல்! முக்கியமாக உடம்பு புரிய, யோகம் வசப்பட, சித்தனாக 'விதிப்பாடு' மிக முக்கியம். நம் விதிப்பாடோ, நமக்கு முன் நாம் வரக் காரணமான ஏழு பாட்டன்மார் - பாட்டிமார் சார்ந்த ஒன்றாகவும் இருப்பதை மறந்துவிடக்கூடாது. எனவே, இதைப் படித்துவிட்டு, 'நானும் குண்டலினி பழக விரும்புகிறேன்' என்று ஏதோ கம்ப்யூட்டர் கிளாஸுக்குப் புறப்படுவது போலக் கிளம்புவதோ, அல்லது இந்தப் பரவச நிலைக்கு ஆசைப்பட்டு 'சந்நியாசியாகவே ஆகிவிடுகிறேன்' என்று செயல்படுவதோ

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பைத்தியக்காரத்தனமாகும்.

இந்தக் குண்டலினியில் சிறு பிசகு நேர்ந்தாலும் சரி, பைத்தியமாகிவிட நேரிடும். சித்தர்களை இந்த உலகத்தவர்கள் மாயாவிகள்போல நினைத்துவிடக் கூடாது என்பதாலும், சித்தர்களும் விஞ்ஞானத் தன்மைக்கு உட்பட்டவர்களே என்பதாலும், விதிப்பாடும் அதன் காரணமாய் அவர்கள் புலனடக்கம் மேற்கொண்டதுமே அவர்களைச் சித்தர்கள் ஆக்கிற்று என்பதையும் நாம் அறிதல் வேண்டும்.

இவ்வாறு நாம் தெளிவாய் அறிவதால், நம் உடல் குறித்தும் ஒரு விழிப்பு நமக்கு ஏற்படும். அதில் நோய்- நொடிகள் நேரும்போது, கர்மவினை என்று அதை மன விருப்போடு அனுபவித்துத் தீர்க்க முயல்வோமே தவிர, வெறுப்போடு அதை எண்ணி வருத்தத்தோடு வீழ்ந்து கிடக்க மாட்டோம்.

இந்த ஞானமே, ரமணரைப் புற்றுநோய் தாக்கியபோது, அதை விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ளச் செய்தது. வலியையும் சந்தோஷமாக 'வா... வலியே வா!' என்று இன்பத்தை விரும்புவதுபோல விரும்பி அழைப்பதுதான் உயர்ந்த மனத் தெளிவு; மனத் துணிவு! அது ரமணரிடம் இருந்தது. இவற்றை உணரும்பட்சத்தில் நமக்கும் அது கொஞ்சம் கொஞ்சமாக வரும். சித்தர்கள் வாழ்வைக் கசடற அறிவதில் இதெல்லாம்தான் நமக்குத் தெளிவாக வேண்டும்.

சரி, இனி நாம் போகரிடம் வருவோம். பழநியம்பதியில் சமாதி கண்ட போகர், குண்டலினியால் தன் மிச்ச விந்துவை உச்சந்தலைக்குக் கொண்டு வந்து, உடல் இயக்கத்தையும் மன இயக்கத்தையும் நிறுத்தினார். இப்படி ஒரு நிலையில் அந்த உடலை மண்ணால் அரித்துவிட முடியாது; அந்த உடம்பும் சிதைந்து புழு பூச்சி என ஒருயிர்களாகப் பெருகாது. இப்படி ஒரு நிலையில், குறித்த அளவு வெப்பம் இருக்கும்; நகமும் முடியும் வளரும்; இதயமும் ஃப்ரிட்ஜில் வைக்கப்பட்ட பழத்துண்டு போல் தன்னிலை மாறாமல் அப்படியே இருந்துவிடும். மொத்தத்தில், ஜீவசக்தி நிலைப்படுத்தப்பட்ட, ஒரு கெடாத உடலாக இந்த உடல் காலாகாலத்துக்கும் இருக்கும்.

இந்த ஜீவசக்தி, அருள் அலைகளாக தீபச்சுடரில் இருந்து ஒளி அலை வட்டமாய்ப் பரவுவதுபோலப் பரவியபடியே இருக்கும். எனவேதான், ஜீவ சமாதிகளுக்கு நாம் செல்லும் போது, நம் உடலின் ஜீவசக்தி எந்த நிலையில் இருந்தாலும்,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இரும்பும் காந்தமும் ஒன்றை ஒன்று நேர்க்கோட்டில் சந்திக்கும்போது கவரப்பட்டு ஒன்றாகிவிடுவதுபோல, நம் ஜீவசக்தி, ஜீவசமாதியின் ஜீவசக்தியுடன் ஒன்றுபட்டுப் பலமடைகிறது. நம் ஜீவசக்தியின் பலத்தை தவத்தால் அதிகரித்துக்கொள்வது ஒரு விதம்; இதுபோல சமாதிகளில் வழிபாடுகளால் அதிகரித்துக்கொள்வது இன்னொரு விதம்.

திரும்பவும் போகருக்கு வருகிறேன். போகரின் வாழ்வு அவரின் சமாதி நிலை பற்றிச் சொல்லும்போது, நாம் சிந்தித்து அறிந்துகொள்ள இவ்வளவு விஷயங்கள் உள்ளன. இப்படிச் சமாதியில் அமர்ந்த போகர் தன் உடலை ஜீவசக்திக்கு ஆட்படுத்திவிட்டு, தன் சூட்சும உடலால் அங்கிருந்து, முன்பே கோரக்கரிடம் கூறியபடி அவரைத் தன் சூட்சும உடம்போடு நாகப்பட்டினத்தில் சந்தித்து, அவரை அங்கிருந்து அழைத்துக் கொண்டு வடக்கு பொய்கைநல்லூருக்குச் சென்று, அவருக்குச் சமாதி செய்வித்தார். கோரக்கரும் தன் உடலை ஜீவசமாதிக்கு ஆட்படுத்திவிட்டு, சூட்சும உடம்போடு வாழ விரும்பியதுதான் அதற்குக் காரணம். இதற்கான சான்றுகள் கோரக்கரின் தனி நூல் தொகுப்பில் உள்ள 4, 5, 6 பாடல்களில் காணக்கிடைக் கின்றன.

இவ்வாறு கோரக்கருக்குச் சமாதி செய்வித்த போகர், அதன்பின் சூட்சும உடம்போடு சீனா, மெக்கா, மதினா முதலான பல பாகங்களுக்கும் பல காரணங்களுக்காகப் பயணித்தார். கோரக்கரும் அவரைப் பின்தொடர்ந்தார். குருவின் வழியில் சிஷ்யன்!

அதேநேரம், போகரின் சூட்சும உடல் சஞ்சாரம் இன்றும் நிகழ்கிறது என்பதுதான் நாம் நினைவில்கொள்ள வேண்டிய ஓர் அதிசய விஷயமாகும்.

குருவாகிய போகர் குறித்து இயன்ற அளவு பார்த்துவிட்டோம். இனி, இந்தச் சிஷ்ய னையும் பற்றிச் சிந்திப்போமே!

யார் இந்தக் கோரக்கர்?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சித்தர் பெருமக்களில் சிறிது குழப்பமான வரலாறு கொண்டவர் இவர் என்றால், அதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. இவரால் 22 நூல்கள் எழுதப்பட்டுள்ளன. கோரக்கர் சந்திரரேகை, கோரக்கர் நமநாசத் திறவுகோல், கோரக்கர் ரக்ஷமேகலை, கோரக்கர் முத்தாரம், கோரக்கர் கற்பம், கோரக்கர் மலை வாகடம், கோரக்கர் முக்தி நெறி, கோரக்கர் அட்டகர்மம், கோரக்கர் தாண்டகம், கற்ப சூத்திரம், பிரம்ம ஞானம்... என அந்தப் பட்டியல் பெரிதாக நீள்கிறது.

ஓர் ஆச்சரியம்போல, இவர் எழுதிய நூல்களில் சரி பாதிக்கு மேல் கிடைக்கவில்லை. கோரக்கரே அவற்றை எல்லாம் எங்கோ ஒளித்து வைத்துவிட்டதாகவும், அவ்வாறு ஒளித்து வைத்தற்குப் பின்னாலே ஒரு கதையும் கூறப்படுகிறது. அந்தக் கதைக்கெல்லாம் நாம் பிறகு செல்லலாம். அதற்கு முன்பாக, அவரது வரலாற்றைச் சுருக்கமாகப் பார்த்துவிடுவோம்.

ஏற்கெனவே ஏடுகள் பலவற்றில் கோரக்கர் குறித்த பல செய்திகள் வந்திருக்கக்கூடும். எனினும், இங்கே கோரக்கருக்கான எளிதான, அதே நேரம் தெளிவான ஒரு வரலாற்றுச் சுருக்கத்தை அளித்துவிடுவது நலம் என்று கருதுகிறேன். சித்தர் நூல்கள் பலவற்றை வாசித்ததன் அடிப்படையில், கோரக்கர் குறித்த ஒரு தெளிவோடு இதை நான் இங்கே அளிக்க விரும்புகிறேன்.

கோரக்கர் குறித்த குழப்பம் அவர் தமிழரா, இல்லை மராத்தியரா என்பதில் இருந்தே தொடங்குகிறது. வடநாட்டில் 'கோரக்கர்' என்றே ஓர் ஊர் இருக்கிறது. சில சான்றுகளின்படி அவர் மராத்திய கானக் குறவர் எனும் வகுப்பைச் சேர்ந்தவர் ஆகிறார். ஆனால், இங்கே தமிழ்நாட்டில் வடக்கு பொய்கை நல்லூரில் கார்த்திகை மாத ஆயில்ய நட்சத்திரத்தில் அவர் அவதரித்ததாக ஒரு குறிப்பு சொல்கிறது.

பழநியிலே ஒரு பதினெட்டுச் சித்தர் வரிசை உண்டு. இந்த வரிசை ராமேஸ்வரத்திலே கிடையாது. இந்தப் பழநியின் கணக்குப்படி, கோரக்கர் கார்த்திகை மாதம் அவிட்டம் நட்சத்திரத்தில் அவதரித்தவர் ஆவார்.

இப்படி, இவரது நட்சத்திர கால கதியிலே நிறைய முரண்பாடுகள்! இதை எல்லாம் உற்றுப் பார்த்தாலோ, இல்லை... தராசில் எடை போட முனைந்தாலோ நமக்குத்தான் நஷ்டம் ஏற்படும். இதனாலேயே 'நதி மூலம் ரிஷி மூலம் பார்க்காதே' என்றனர்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கோரக்கர் மராத்தியரோ, தமிழரோ? அவர் பாடல்கள் தமிழில் இருப்பதில் இருந்து, அவர் தமிழராக இருக்கவே வாய்ப்பு அதிகம் என்று கொள்ளலாம். அதே நேரம், வடநாட்டில் வழங்கப்படும் அந்த கோரக்கர் மகாஜீ வேறு ஒருவராக இருக்கலாம்.

கோரக்கர், தாய்- தந்தையர் கூடிப் பெற்ற யோனி வழி வந்தவர் அல்லர். இவர் ஓர் அயோனிஜர். வைணவ சம்பிரதாயத்தில் முதல் மூன்று ஆழ்வார்களான பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோர், ஆண்டாள் இவர்கள் நால்வரும் அயோனிஜர்களாய் இந்த மண்ணுக்கு வந்தவர்கள்.

சித்தர்களில் இந்த அயோனிஜம் கோரக்கருக்குப் பொருந்தும். மச்சேந்திர நாதர் என்னும் சித்தரின் தவ சக்திக்கும் விபூதிக்கும் பிறந்தவர் இவர்.

பெண்ணொருத்தி பிள்ளைப்பேறு இல்லாமல் வருத்தத்தோடு இருந்த நேரம்... அந்தப் பெண்ணின் வீட்டு முன் பிட்சை கேட்டு வந்து நிற்கிறார் மச்சேந்திரர்.

'பிச்சை'க்கும் 'பிட்சை'க்கும் வித்தியாசம் உண்டு. பிச்சை இடுபவர் தர்மம் புரிபவர் ஆகிறார். பிச்சை பெறுபவரோ கர்மம் கெட்டவர் ஆகிறார். பிட்சை இடும்போதோ, பிட்சை இடுபவர் அருள்பெறுபவர் ஆகிறார். பிட்சை பெறுபவர், அதை இடுபவர் கர்மக் கணக்கை நேர்செய்தவர் ஆகிறார்.

பிச்சை, ஊன உடம்பை வளர்க்க உதவும். பிட்சை, ஊன உடம்பு ஒளிர உதவும்!

பிச்சை எடுப்பவன் இயலாதவன்; காலம் அவனைக் கைவிட்டுவிட்டது என்று பொருள். எனவே பிச்சையோ, பிட்சையோ இடுவது சிறந்தது. ஆனால், வித்தியாசம் புரிந்திருக்க வேண்டியது மிக முக்கியம். ஒன்று புண்ணியம் தரும்; மற்றொன்று பாவத்தை நீக்கும்.

பாவங்களை நீக்கவே சந்நியாச தர்மப்படி சித்த புருஷர்களும் பிட்சை கேட்டு வருவர். மச்சேந்திரரும் அப்படித்தான் வருகிறார். அந்தப் பெண்ணோ பிள்ளையில்லாக் கவலையில் அவரது பிட்சைக் குரலைக் காதில் வாங்காமல் அமர்ந்திருக்க... மச்சேந்திரருக்கு அவளது முகத் தோற்றமே அவளின் நிலையை உணர்த்திவிடுகிறது. அவளருகில் சென்று, "உன் முகக் குறிப்பை வைத்தே உன் சோகத்தை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உணர்ந்துகொண்டேன். கவலைப் படாதே! எனக்கு பிட்சை இடு. உன் பிள்ளைக்கலி தீரும்'' என்கிறார். அவளும் பிட்சையிடுகிறாள். அவரும் 'கையை நீட்டு' என்று சொல்லி, ஒரு சிட்டிகை விபூதியை சிவநாமம் சொல்லி ஜெபித்து, அவள் கரத்தில் வைக்கிறார்.

''என்ன இது?''

''விபூதி, தாயே! உன் வரையில் இதுவே பிள்ளை!''

''என்ன.. இந்த விபூதி பிள்ளையா?''

''ஆம்... நமசிவாய நாமம் சொல்லி, வாயில் போட்டுக்கொள். என் தவ சக்தி இதில் உள்ளது. பிள்ளை இல்லாத காரணத்துக்கான உன் கர்மக் கணக்கு நேராகி, உனக்குப் பிள்ளை பிறக்கும்.''

''இதை என்னால் நம்ப முடியவில்லை!''

''நம்பு! இன்றிலிருந்து சிலகாலம் கழித்து நான் திரும்ப வருவேன். அப்போது இந்த இல்லத்தில் குழந்தை இருக்கும். இது சத்தியம்.''

மச்சேந்திரர் சத்திய வாக்களித்துவிட்டுச் செல்ல, உள்ளங்கை விபூதியோடு அந்தப் பெண் சிந்தனையோடு நின்றபடி இருந்தாள். அதை தூரத்தில் இருந்தே பார்த்த பக்கத்து வீட்டுப் பெண் ஒருத்தி ஓடி வந்தாள். விபூதியை வாங்கிய பெண் அதை வாயில் போட்டு விழுங்க முற்பட, அதை அந்தப் பக்கத்து வீட்டுப் பெண் தடுத்தாள்.

''நிறுத்து!''

''ஏன் தடுக்கிறாய்?''

''இப்படித்தான் தெருவில் போகும் யாரோ ஒரு பிச்சைக்காரன் தருவதை எல்லாம் துளியும் சிந்திக்காமல் வாயில் போட்டுக் கொள்வாயா?''

''நீ என்ன சொல்கிறாய்?''

''அவன் யாரோ, எவனோ... இது வசிய விபூதியாகவும் இருக்கலாம். இதைச் சாப்பிட்டால், நீ அவனைத் தேடிக் கொண்டு அவன் பின்னாலேயே சென்றுவிடவும் கூடும்..!''

''அய்யோ... என்னடி இது, இப்படி பயமுறுத்துகிறாய்? இதன் பின்னால் இப்படி எல்லாம்கூட உள்ளதா?''

''பின்னே... யார் எதைத் தந்தாலும் உண்பது சரியா? போ... போய் அதை வீசி எறி!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அந்தப் பெண்ணும் பயந்து, அந்த விபூதியை வீசி எறிய முற்பட... "இரு இரு... கண்ட இடத்தில் அதைக் கொட்டாதே. தெரியாமல் யாராவது தீண்டப்போய், அவர்களுக்கும் ஏதாவது ஆகலாம். உன் கொல்லையில் உள்ள மாட்டுத் தொழுவத்தில் வெந்நீர் அடுப்பு இருக்கிறதல்லவா? இதை அதில் கொண்டு போய்ப் போட்டுவிடு. சாம்பலோடு சாம்பலாகட்டும்!"

அதன்படியே, அந்தப் பெண்ணும் மச்சேந் திரர் தந்த விபூதியை மாட்டுத் தொழுவத்தில் இருந்த அடுப்பில் போட்டாள். கையையும் நன்றாகத் தூசு தட்டிக் கொண்டாள்.

காலம் உருண்டது. சில ஆண்டுகள் கழிந்த நிலையில், மச்சேந்திரர் அந்தப் பெண்ணின் வீட்டு வாசலுக்கு, சொன்னது போலவே வந்து நின்றார். அந்தப் பெண்ணும் அவரை அடையாளம் கண்டுகொண்டாள்.

"என்னைத் தெரிகிறதா தாயே?"

"ஏன் தெரியாமல்..?"

"உன் பிள்ளைக்கலி தீர்ந்துவிட்டதா? நீ தாயாகி விட்டாயா?"

"இல்லை..!"'

"ஏன்?"

அந்தப் பெண் தயங்கியபடி அன்று நடந்ததைக் கூற, அவர் முகத்தில் சலனமும் கோபமும் ஏற்படத் தொடங்கியது.

"ஹூம்... உன் நற்கருமம் எனக்குப் பிட்சை இடச் செய்தது. ஆனால், அதைவிட உன் தீய கருமத்துக்கு சக்தி அதிகம். அது என் விபூதியையே பழித்து, உன்னையும் மலடாகவே வைத்துள்ளது."

"அப்படியென்றால், உங்கள் விபூதிக்குப் பிள்ளையைத் தரும் சக்தி இல்லை என்பதுதானே உண்மை?"

"தவறு பெண்ணே! சித்தன் தவமும் வாக்கும் பொய்க்கவே பொய்க்காது..!"

"இங்கே பொய்த்துவிட்டதே..!"

"ஒருக்காலும் பொய்க்காது. அந்த விபூதியை என்ன செய்தாய் நீ?"

"அதோ, அந்த வெந்நீர் அடுப்பில் போட்டேன்."

"தவச் சாம்பலை கோவகத்து (மாட்டுத் தொழுவம்) அக்னியோடு சேர்த்துவிட்டாயா?"

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"ஆம்."

"நான் இப்போதே என் தவத்தின் பேரால் கோருகிறேன்... கோவகம் பிள்ளை தரும், பார்! கோவகத்தே கோருகிறேன்... என் வாக்கு மெய்யாக வேண்டும்!" என்று அவர் வேண்டிய நொடி, அந்த அற்புதம் நிகழ்ந்தது. கோவகத்து வெந்நீர் அடுப்பின் முன் ஒரு சிறுவன் தோன்றி, அவரை நோக்கி வந்தான். அவனே பின்னாளில் கோலகனாகி, பின்னர் கோரகனாகி, நாவின் வசதிப்பாட்டிற்கேற்ப 'கோரக்கன்' என்றானான் என்பதே கோரக்கரின் பிறவிக் கதை.

இவர் வரையில் மச்சேந்திரர்தான் குரு. மச்சேந்திரரே தாய்-தந்தை எல்லாம்! மச்சேந்தி ரரும் தான் அறிந்ததை எல்லாம் கோரக்கருக்கு உபதேசிக்கிறார். போதாக்குறைக்கு போகர் வேறு. இதுவே கோரக்கரின் வரலாறு.

இன்றும் சித்தம் விரும்பும் சீலர்களுக்கு கோரக்கர் தரிசனம் தருகிறார் என்றொரு செய்தியும் உண்டு. பூனாவைச் சேர்ந்த ஓர் அன்பர் கோரக்கரை மானசீக குருவாகக் கொண்டு, அவரது ஜீவசமாதிக்குச் சென்று தவமிருந்தபோது, கோரக்கர் அவருக்குக் காட்சியளித்திட.... அந்தக் காட்சியை அப்படியே ஓவியமாகவே வரைந்துவிட்டார் அந்த அன்பர்.

ஜீவசமாதிகளில் ஒடுங்குபவர்கள், விரும்பிய வேளையில் வெளியே வந்து, தங்கள் அருளாட்சியைத் தொடர்வது என்பதன் பின்னாலே பல கணக்குகள் உள்ளன. கோரக்கரும் அவர்களில் ஒருவராக இன்றும் தீவிரமாய் பிரார்த்தனை புரிகின்றவர்களுக்குக் காட்சி தருகின்றார் என்பதே ஆச்சரியமான செய்திதான். அந்த வகையில், இன்றும் நம்மிடையே வாழ்ந்து வரும் யோகி கைலாஷ் நாத் என்னும் யோகியாருக்கு கோரக்கர் தரிசனம் வாய்த்திருக்கிறது என்பது ஓர் ஆச்சரியமூட்டும் செய்தியாகும்.

யோகி கைலாஷ்நாத் என்பவர், 'பதஞ்சலி யோக மந்திரம் ட்ரஸ்ட்' என்னும் ஒரு அமைப்பின் கீழ், பழநிக்கு அருகில் உள்ள கணக்கன்பட்டியில் வாழ்ந்துவருவதாகத் தெரிகிறது. சித்த வாழ்வே சுத்த வாழ்வு என்று ஒரு தூய வாழ்வை வாழ்ந்து வரும் இவருக்குப் பல அமானுஷ்ய அனுபவங்கள். அதில் ஒன்றே கோரக்கரின் தரிசன அனுபவமும்!

சேலம் மாவட்டத்துக் கொல்லிமலை ஒரு சித்தர் பூமி. இங்குள்ள ஆகாச கங்கை நீர்வீழ்ச்சி ஓர் அற்புதம்! இந்த நீர்வீழ்ச்சியின் நீர்ப்பாதையின் வழியில் ஓர் இடத்தில்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கோரக்கர் தவமியற்றிய குகை மற்றும் மச்சேந்திரர் தவமியற்றிய குகைகள் இருப்பதாகத் தெரிகிறது.

ஒரு பௌர்ணமி நாளன்று, யோகி கைலாஷ் நாத்தும், அவரின் சீடர்கள் இருவரும் அந்தக் குகையைத் தேடி அலைந்துள்ளனர். உள்ளே அமர்ந்து குளிர்காற்றைத் தாங்கிக்கொண்டு தியானமும் புரிந்திருக்கிறார்கள்.

அப்போது உடன் வந்தவர்கள் குளிர் தாங்காது அங்கிருந்து விலகிவிட, யோகியார் மட்டும் அங்கேயே ஆறு மணி நேர அளவுக்குத் தியானத்தில் இருந்திருக்கிறார். அப்போது ஒரு சடாமுடி யோகி ஒருவரின் குரல் அவரைக் கலைத்து, "வா, மகனே! உனக்காகத்தான் காத்திருக்கிறேன். சித்தானுக்கிரகத்தால் மட்டுமே நீ இங்கே வந்துள்ளாய் என்பதை நானறிவேன். கொடுவிலார்ப்பட்டி ஆஸ்ரமத்தில் இருக்கும் என் சீடரின் ஆசி பெற்றவன் நீ என்பதையும் அறிவேன்" என்றது.

யோகி கைலாஷ்நாத் கண் திறந்து பார்த்திட... எதிரில் கோரக்கர்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 16

உண்டப்பா இன்னுமொரு அதிசயந்தான்
உலகத்தில் உள்ளோர்கள் அங்கு வந்து
குண்டப்பா கோரக்கர் தீர்த்தமாடிக்
கொள்ளவே எப்பிணியும் அகன்று போகும்
மண்டப்பா கரம் இரண்டும் ஒன்றாய்க் கூட்டி
வாரிநீர் மூன்றுகை யுண்ணப் போதை
கொண்டப்பா சென்ம சாபல்யமாகும்...
கோரக்கர் தனைப் போற்றக் குணமுண்டாமே!

- 'ஞானவித்து ரகசியம்' காலாங்கி நாதர்

யோகி கைலாஷ்நாத், கொல்லிமலையில் உள்ள கோரக்கர் குகையில் கோரக்கரைச் சந்தித்தார் அல்லவா? ஆனால், கோரக்கர் என்கிற பெயரில் அல்ல; கைகட்டிச் சித்தர் எனும் பெயரில்!

கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் குளிரைப் பொருட்படுத்தாமல், நம்பிக்கையுடன் பொறுமையாக அந்தக் குகைக்குள் இருந்ததற்கான பலன் அது. கண்ணில் பட்ட அந்த சித்தரோடு யோகி பேசத் தொடங்குகிறார்...

"தாங்கள் யார்? தாங்கள் கோரக்கநாத சித்தரோ?"

"ஆம் மகனே! நான் கோரக்கனேதான். ஆனால், இப்பகுதி மக்கள் என்னைக் கைகட்டிச் சித்தன் என்று அழைப்பார்கள்."

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld




இப்படிச் சொன்னவர், அதற்கேற்ப கைகள் இரண்டையும் கட்டிக்கொண்டார். நீளமாக வளர்ந்திருந்த அவரது கை நகங்கள் உடம்பைச் சுற்றி வளைத்துக்கொண்டன. கட்டிக் கொண்ட கைகளை அவர் அவிழ்க்கவே இல்லை. அதேபோல, தலையிலும் ஜடாமுடி! நகத்தையும் தலைமுடியையும் பார்க்கும்போது, அவை காலம் காலமாக வளர்ந்திருக்க வேண்டும் என்பது புரிந்தது.

அடுத்து... அப்படியே கைகட்டிக்கொண்டிருப்பது அசாத்தியம்; உடம்பைத் தூசு போல கருத முடிந்தாலே இது சாத்தியம். கோரக்கர் தூசு போல உடம்பைக் கருத முடிந்தவர் என்பது அவரைப் பார்க்கும்போதே தெரிந்தது. அதனால் அவருக்கு அருகில் இருப்பது, யோகி கைலாஷ்நாத்துக்குள் பலவிதமான பரவச உணர்வை உருவாக்கியது. பேச்சும் தொடர்ந்தது.

''அப்பா... அஷ்டமா ஸித்திகள் உண்மையா?''

யோகியின் இந்தக் கேள்விக்கு 'உண்மைதான்' என்று பதில் கூறியதோடு, யோகிக்கு அனுபவபூர்வமாக அதை உணர்த்தவும் தயாரானார் கோரக்கநாதச் சித்தர்.

''மகனே! கண்ணை மூடிக்கொண்டு, உன் உள்ளங்கையை விரித்தபடி உட்கார்!'' என்றார். யோகியும் அவ்வாறே உட்கார்ந்தார்.

20 முதல் 25 நிமிடங்கள் கழித்து, அவர் வலது கையில் ஒரு சிறு பாதரச லிங்கம் அளவு கனத்துடன் ஓர் அழுத்தம்.

''மகனே... கண்களைத் திறந்து பார்!'' என்றார் கோரக்கர். கண் திறந்து பார்த்த யோகிக்கு பெரும் ஆச்சரியம்! சற்று முன்பு வரை, 60 கிலோவுக்குக் குறையாமல் ஐந்தடி உயரத்துக்குக் கண் எதிரில் காட்சி தந்த கோரக்கர், இப்போது யோகியின் உள்ளங்கையில் ஒரு சிறு பொம்மைபோல அமர்ந்திருந்தார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அப்படியே, அந்தத் தோற்றத்தில் இருந்தபடியே, 'இதுதான் அணிமா ஸித்தி' என்றார். யோகியிடம் ஏற்பட்ட பிரமிப்பு அடங்கவேயில்லை.

யோகி கைலாஷ், தான் எழுதிய 'சித்தர் களஞ்சியம்' என்னும் நூலில் இந்த அனுபவத்தைக் குறிப்பிட்டுள்ளார். கோரக்க சித்தர் காலம் கடந்தும் வாழ்கின்றவர் என்பது இதனால் தெளிவாகிறது. சூட்சும சரீரத்துக்கே உண்டான ஆற்றல் அது.

கோரக்கர் போன்ற சித்த புருஷர்கள் சூட்சும சரீரத்தால் மட்டுமல்ல, ஸ்தூல சரீரத்தாலும் இந்த உலகின் நரை, திரை, மூப்பை வெற்றிகொண்டவர்களாகத் திகழ்ந்தார்கள் என்பதற்கும் நிறையச் சான்றுகள் காணக் கிடைக்கின்றன. அது எப்படி என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், நாம் சதுரகிரி மலைக்குச் சென்று வர வேண்டும்.

எங்கே இருக்கிறது இந்தச் சதுரகிரி?

இன்றைக்கு சதுரகிரியைப் பற்றி அறியாதவர்கள் இல்லை என்றே கூறலாம். தமிழகத்தின் தென் பகுதியில், ராஜபாளையம் நகருக்கு அருகிலுள்ள வத்திராயிருப்பு எனும் ஊர்வழியாக இந்த மலையின் அடிவாரத்தை அடையலாம். அதன் பின்னர், அங்கேயிருந்து ஒரு 15 கிலோ மீட்டர் வரை மலை மேல் செல்ல, சதுரகிரியின் மையப் பகுதியை நாம் அடையலாம். இங்கேதான் ஆகாயம் பார்த்த லிங்கங்களாக சந்தன மகாலிங்கம், சுந்தர மகாலிங்கமாய் அந்த இறைவன் கோயில் கொண்டுள்ளான்.

ஒன்றேயான இறைவனுக்கு இங்கே எதற்கு இரண்டு சந்நிதிகள் என்று கேள்வி எழலாம். ஈசனின் சந்தன ரூபம் இகபர சுகத்தைத் தரவல்லது. அதாவது... பிள்ளைப்பேறு, கல்விச்செல்வம், அதுபோக நவநிதிகளும் பெற்று இகபர மாயா சுகத்தை முழுவதுமாய் அனுபவித்துத் தெளிவதற்கு உதவுவது. சுந்தர ரூபம், பற்றை அறுத்துக்கொள்ளவும் சித்தனாய் மாறிடவும், தவக்கோலம் ஏற்கவும் அருள்வதாகும்.

இந்தத் தெய்வங்களால் அன்றி இயற்கை வளத்தாலும் ஓர் அரிய தலம்தான் சதுரகிரி.

மந்தரங் கலக்க முன்னாள் வாரியின் மருந்தின் மிக்க
நந்தலில் மூலிகைகள் நன் சுமை சதுர வெற்பின்
சுந்தரலிங்கர் வாசத் தூய நற்றவத்தின் சீரை
எந்தரங் கொண்டு சாற்ற வெழுந்தன மீங்குமாதோ

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

-என்பது, சதுரகிரியின் மகிமையைக் கூறும் ஒரு பாடலாகும். கிரி என்றால் மலையைக் குறிக்கும். சதுரகிரி என்றால், அந்த மலை சதுரமாக உள்ளது என்று பொருளல்ல. சதுர் என்றால் நான்கு என்று கணிதப் பொருள். இங்கே நான்கு புறமும் கிரியோடு, அதாவது மலைகளோடு உள்ளது. நான்கு என்றதும் நான்கு வேதங்கள் நம் நினைவுக்கு வரும். இந்த நான்கு என்பது வேதங்களை மட்டுமல்ல, திசைகளையும் நினைவுக்குக் கொண்டுவரும். நான்கு பக்கமும் ஒரே அளவான நேர்க் கோட்டை 90 டிகிரியில் நாம் வளைவின்றிப் போடும்போது, அந்தக் கோடுகள் ஒன்றோடொன்று சந்தித்துக்கொண்டு ஒரு சதுரம் உருவாகும். அந்தச் சதுரத்துக்கு வெளியே அதன் முனைகளை இணைக்கும்போதோ வட்டம் உருவாகும். அதாவது, பூஜ்ஜியம். இதைச் சற்று மாற்றி, 'நான்கும் வசப்பட்டால் பூஜ்ஜியமாகலாம்' என்றும் கூறலாம்.

சதுரத்துக்குள் முன், பின், மேல், கீழ், இடது, வலது போன்றவை உண்டு. வட்டத்தில் இது எதுவுமே கிடையாது. இப்படிச் சொல்வதைப் புரிந்துகொள்ளச் சிரமமாக இருந்தால், ஒரு கற்பனைக்குத் தயாராகுங்கள்.

சதுரத்தின் மேலோ அல்லது உள்ளேயோ எங்கு வேண்டுமானால் போய் நின்று கொள்ளுங்கள். நீங்கள் நின்ற இடத்தை உடனே அடையாளப்படுத்த முடியும். உதாரணமாக, ஒரு சதுரத்தின் வலது பக்க கோட்டின் நடுவில் நீங்கள் நிற்கிறீர்கள் எனும்போதே, அது வலது பக்கம்; மேலே உள்ளது மேல் பக்கம்; கீழ் உள்ளது கீழ்ப் பக்கம்; நீங்கள் இருப்பது வலது கோட்டின் மையத்தில் என்று உங்கள் இருப்பிடத்தைக் கண்டறிந்து அடையாளம் காண முடியும்.

அப்படியே ஒரு வட்டத்தின் விளிம்பில் போய் நில்லுங்கள். அதே விளிம்பில் இன்னும் பலரும் நிற்கட்டும். வட்டத்தில் நிற்பவர்களுக்கு, முன்- பின்னோ, கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று எதுவும் கிடையாது. எதற்கு இந்த வியாக்கியானம் என்று கேட்பவர்களுக்காக, இன்னும் சற்று விளக்கமாகக் கூறுகிறேன்.

மனித வாழ்வில் பெரியவன், சிறியவன் எனும் பாகுபாடு உண்டு. வயதால் மட்டுமல்ல; செல்வத்தால், குணத்தால் என்று அநேக விஷயங்களால் இந்தப் பாகுபாடு தோன்றியே தீரும். இதைத் தவிர்க்கவே முடியாது. பாகுபாடு உள்ள இந்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வாழ்க்கையில், நம் நிலை எப்படிப்பட்டது, நாம் எங்கே உள்ளோம் என்பதை எல்லாம் கணிதப் படுத்திக் கூற முடியும். இப்படிக் கூற முடிந்தால், இதேபோன்று கணிதப்படுத்த முடிந்த சதுரத்தில் நாம் உள்ளோம் என்பது பொருள். இதிலிருந்து விடுபட வேண்டும் என்றாலோ, அதாவது மேல்-கீழ் அற்ற, உயர்வு - தாழ்வு அற்ற சம நிலைப்பாடு வேண்டும் என்றால் சதுரம் கடந்து, சதுர விளிம்புகளைத் தொட்டு உருவான வட்டத்துக்குச் சென்றுவிட வேண்டும்.

சதுரகிரி மலையும் தன்னை நாடி வருபவர் களுக்கு அருள் தந்து, அவர்களை மேல்- கீழ் பேதமற்ற, உயர்வு- தாழ்வு அற்ற பூஜ்ஜியத்துக்குள் கொண்டு சேர்த்துவிடுகிறது. இதை வைத்தே சித்த புருஷர்களை, ஞானிகளை 'பூஜ்யஸ்ரீ' என்றழைக்கும் நிலை தோன்றியது. பூஜ்யத்துக்கென ஒரு மதிப்பில்லை. ஆனால், அது எந்த எண்ணின் பக்கத்தில் அமைந்தாலும், அந்த எண் மதிப்பில் பத்து மடங்கு அதிகரித்துவிடும். ஞானிகளை நாடிச் செல்லும் நமக்கு அவர்களால் பல மடங்கு பலன் என்பதை எல்லாம் இதை வைத்தே உணரலாம்.

ஆக, சதுரகிரியில் ஆரம்பித்த சிந்தனை பூஜ்யம் - பூஜ்யஸ்ரீ வரை சென்றுவிட்டது. திரும்ப வருவோம்.

இந்தச் சதுரகிரியில் நாற்புறமும் உள்ள மலைகளும் நான்கு வேதங்களைக் குறிப்பதாகச் சொல்வர். இதற்கு 'பூலோக கயிலாயம்' என்றும் ஒரு பெயர் உண்டு. இந்தப் பெயருக்கு பின்னாலே ரசமான ஒரு சிவச் சம்பவமும் உண்டு.

ஈசனுக்கும் பார்வதிக்கும் பூவுலகில் திருமணம் நடைபெற்றது. ஈசனின் உறைவிடமோ இமயம். அங்கு நடைபெற்ற அந்தத் திருமணத்தில் பிரம்மா, விஷ்ணு முதல் இந்திராதி தேவர்களும், ரிஷிகளும், முனிவர்களும் பங்கு கொள்கின்றனர். இதனால் வடபாகம் தாழ்ந்து, தென்பாகம் உயர்ந்துவிடும் ஒரு நிலை. இதைச் சமன் செய்ய, அகத்திய முனிவரை சதுரகிரிமலைக்கு அனுப்பி, அங்கிருந்தபடியே கல்யாண கோலத்தை அவர் கண்டுகளித்திட ஈசன் அருளுகிறார். இதனால் இதற்கு 'பூலோக கயிலை' என்ற பெயரும் உண்டாயிற்று.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



இந்த கல்யாணக் கதையைக் கேட்கும் போது நமக்குள் நிறைய கிளைக் கேள்விகள் எழும். 'ஈசனுக்கும் பார்வதிக்கும் பூவுலகில் திருமணம் நடக்கத் தேவை என்ன? தன்னில் சரிபாதியை அந்த ஈசன் தேவியாருக்கு எப்போதோ தந்துவிட்ட நிலையில், இந்தக் கல்யாணம் என்பது எதற்கு? அடுத்து... இதற்கு எல்லோரும் வருவதால் எப்படி வடதிசை தாழ்ந்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தெற்கு உயர முடியும்? பூலோக அமைப்பு என்ன, தராசு போன்றதா... ஒரு தட்டு தாழ்ந்தால் ஒரு தட்டு உயர்ந்திட?' எனப் பலப்பல கேள்விகள் எழும்.

இன்றைய நமது வாழ்க்கை முறையும், நம்மோடு கலந்து கிடக்கும் விஞ்ஞானமும் பகுத்தறிவும் இவ்வாறு நம்மை சிந்திக்கச் செய்வதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. அதேநேரம், விஷயத்துக்கு ஏற்ற அணுகுமுறை என்று ஒன்று உள்ளது. நாம் இந்த உலகில் ஒரு பொருளை வாங்கும்போது, அது ஆடையாக இருந்தால் கெஜத்திலும், முழத்திலும், மீட்டர் கணக்கிலும் அளந்தே வாங்குகிறோம். அதுவே திடப்பொருளாக இருந்தால், எடைக்கல்லால் நிறுத்து வாங்குகிறோம். திரவப் பொருளாக இருக்கும்பட்சத்தில் பாத்திரத்தில் கால் படி, அரைப் படி என்று நிரப்பி வாங்குகிறோம்.

இவ்வாறு அளந்து வாங்காமல் போனால் வாங்குபவருக்கும் சரி, விற்பவருக்கும் சரி, நியாயம் என்ற ஒன்று கிட்டாமல் போய்விடும். எனவேதான், நியாயமாக ஒரு வர்த்தகம் நடக்க, அதற்கேற்ற அளவு முறைகளை, அணுகுமுறைகளை நாம் உருவாக்கியுள்ளோம்.

இதேபோன்ற ஓர் அணுகுமுறையைத்தான் காலம் தொடர்பான மற்றும் மறை தொடர்பான விஷயங்களிலும் நாம் பின்பற்றவேண்டும். ஆன்மிக சங்கதிகளை, அதிலும் சித்தர் பெருமக்கள் சார்ந்த விஷயங்களை மேலெழுந்த வாரியாக நோக்கினால் ஒரு பொருளைத் தரும்; ஆழ்ந்து நோக்கினால் வேறு பொருள் தரும். எனவே பொறுமையான, விரிந்த மனம் கொண்ட, எதிர்மறையற்ற, நம்பிக்கை எனும் தன்மை மிக முக்கியம்.

அந்தத் தன்மையோடு, இந்தத் திருமணம் குறித்தும், வடக்கு தாழ்ந்து தெற்கு உயர்ந்தது குறித்தும் நோக்கும்போது, அதில் பல நுட்பங்கள் புதைந்திருப்பது தெரியும்.

நமது பாரத தேசத்தில் இமயம், தலை பாகத்தில் உள்ளது. சதுரகிரி கால் பாகத்தில் உள்ளது. திருமணம் என்பது சிவமும் சக்தியும் சேரும் ஒரு சம்பவம். சிவசக்தி சேர்க்கையை உலக இயக்கமாக - செயல்சக்தியாக உருவகப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு தேவர்கள் அனைவரும் வருகிறார்கள் என்பதை, 'கலந்துகொள்ள வருகிறார்கள்' என்று மேலோட்டப் பொருளாகவும், அந்த சிவசக்தி சேர்க்கை நிகழ உற்ற

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காரணமாக நிகழ்த்தும் கடமை உடையவர்களாக அவர்கள் உள்ளார்கள் என்பதும் ஆழ்ந்துபட்ட காரணமாகும். இது பூவுலகில் இமயத்தில் நடக்கிறது. இவ்வேளையில் ஈசனே அகத்தியரை சதுரகிரிக்கு அனுப்பி, அங்கிருந்தே கல்யாணக் கோலத்தை காணச் செய்கிறார் என்பது மேலெழுந்தவாரியாக ஒரு பொருளையும், ஆழ்ந்த நோக்கில் வேறு பொருளையும் கொண்டதாகும். மேலெழுந்த நோக்கில் சம நிலை ஏற்படுத்துவது என்பது, நோக்கம். ஆழ்ந்த நோக்கிலும் சம நிலை ஏற்படுத்துவதே நோக்கம். அது நிலமிசை அல்ல... மனமிசை!

ஆம்... இவ்வுலகில் சிவசக்தி சேர்க்கை என்னும் இயக்க கதியை- அதனால் உருவாகும் உயிர்களின் வாழ்வை அகத்தியர் போன்ற முற்றும் துறந்த முனிவர்களாலேயே சமப்படுத்த முடியும் என்பது ஒரு கருத்து. அடுத்து, இமயத்துள் குவிந்திருக்கும் தேவசக்திக்குச் சற்றும் குறைவில்லாதது தவசக்தி என்பதை இது உலகுக்கு உணர்த்துகிறது என்பது இரண்டாவது கருத்து. இமயம் எப்படி இணையற்றதோ, அப்படியே சதுரகிரியும் இணையற்றது. இது மூன்றாவது கருத்து.

எல்லாவற்றுக்கும் மேலாக, சதுரகிரி என்பது திருவடி பாகம். அங்கு வருபவர்கள் திருவடி சேர்பவர்கள். திருவடி சேர்பவர் களுக்குத் திருவருள் கிடைப்பதில் ஆச்சரியப்பட எதுவு மில்லையே!

இப்படி, சதுரகிரிக்குப் பின்னே நாம் சிந்திக்க நிறைய விஷயங்கள் உள்ளன. இதனால்தான் இங்கே பதினெட்டு சித்தர்களில் இருந்து தேவர்கள் வரை சகலரும் வந்தும், தவம் செய்தும், வாழ்ந்தும், வாழ்ந்துகொண்டும் இருக்கிறார்கள்.

இப்படி ஓர் அற்புதமான தலத்தை நோக்கி கோரக்கர் வந்ததிலும் வியப்பில்லை அல்லவா?

அப்படி இங்கு வந்த கோரக்கருக்கு, பிரம்மமுனி என்று ஒரு சித்த புருஷரும் நட்பாகிறார். இருவருக்கும் எல்லா விஷயங் களிலும் ஒத்த கருத்து என்பது, அவர்களின் நட்பு இறுகவும் பெருகவும் காரணமாகிறது.

போகர் வாயிலாக அறிந்திருந்த மூலிகை ஞானம் இங்கே கோரக்கருக்குக் கைகொடுக்கிறது. எப்படித் தெரியுமா? அது ஒரு கதை!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கோரக்கர் பிரம்ம முனியோடு இருந்த ஒரு நாளில், சந்தன மகாலிங்கத்தையும் சுந்தர மகாலிங்கத்தையும் தரிசனம் செய்ய தேவலோகத்தில் இருந்து ஒரு ரதமும், அதிலிருந்து இந்திரன் முதலான தேவர்களும் வருகின்றனர்.

அது ஒரு மாலைப் பொழுது. அன்று திரயோதசி திதி. இந்தத் திதி சார்ந்த மாலைப் பொழுதை பிரதோஷ வேளை என்பார்கள். அதிலும், சனிக்கிழமை அன்று வந்திருக்கும் பிரதோஷம் அன்று!

இந்தப் பிரதோஷ வேளையின் பின்னே அமுதம் கடைந்த சம்பவம் நடைபெற்றதை நாமறிவோம். மேரு மலையை மத்தாகக் கொண்டு, வாசுகிப் பாம்பைக் கயிறாகக் கொண்டு, தலைப்பாகத்தில் அசுரர்களும், வால் பக்கம் தேவர்களுமாய் நின்று பாற்கடலைக் கடைந்திட... அதில் முதலில் ஆலகால விஷம்தான் உருவாயிற்று. பிறகு, மகா லட்சுமி தேவியில் இருந்து உச்சைச்ரவஸ், கற்பக விருட்சம், காமதேனு என வரிசையாக செல்வ சம்பத்துக்கள் வெளிப்பட்டன. இறுதியாக, அமுத கலசம் வெளிப்பட்டது. இந்த அமுதத்தை அருந்தியவர் களுக்கு என்றும் சிரஞ்ஜீவித்துவமும், நோய் நொடியும், மூப்பும் நரையுமற்ற நித்ய யௌவனமும், ஆயுளும் ஸித்திக்கும் என்பதே அமிர்தத்தின் பின்புலம்.

இந்த அமிர்தம் வருமுன் ஆலகால விஷம் வந்து, அது அமிர்தம் கடையும் முயற்சியில் இருந்த தேவாசுரர்களை அழித்துவிடாதபடி இருக்க, அந்த ஈசனே அந்த ஆலகாலத்தை உண்டு தன்னுள் அடக்க முனைய... அப்படிப்பட்ட தருணத்தில், சிவபெருமானின் கண்டகத்தில் பார்வதிதேவி கைவைக்க, அந்த விஷம் கண்டத்திலேயே நின்றுவிடுகிறது. இதனாலேயே, அந்த ஈசனும் நீலகண்டன் ஆனார்.

இப்படி விஷம் வெளிவந்த வேளைதான் பிரதோஷ வேளை. அதாவது, பெரிய தோஷமுள்ள ஒரு காலகதி. இக்கால கதியில் நம்மை அறியாது நாம் செய்திடும் சிறு பாவமும் பெரிதாகி தோஷமாகிவிடும். எனவே, இந்த வேளையில் இறை தியானத்தோடு இருந்து, இந்தத் தோஷம் ஏற்படாதவாறு நம்மை நாம் காத்துக்கொள்ள வேண்டும். இந்த வேளை கடந்து, அமிர்தம் கிடைக்கப்போகிறது. நாம் புரிந்த பூஜைக்கும் தியானத்துக்கும்கூட அருளானது அமிர்த பலத்தோடு கிடைக்கும். அதனால்தான் பிரதோஷ வழிபாட்டுக்குச் சிறப்பு அதிகம். அதிலும், கீர்த்தி மிகுந்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சிவாலயங்களில் கேட்கவே வேண்டாம்.

சதுரகிரி சந்தன - சுந்தர மகாலிங்கனோ பூலோக கயிலையின் உன்னத ரூபங்கள். அதனால்தான் அங்கே இந்திரனே வருகிறான். அவனே வரும்போது மற்ற சித்த புருஷர்கள் வராது இருப்பார்களா?

மொத்தத்தில், அன்று சந்நிதியில் அப்படியொரு கூட்டம். அதில் தேவர்கள் ஒருபுறம், முனிவர்கள் இன்னொருபுறம். இரு தரப்பிலும் வழிபடுவதிலும்கூட ஒரு போட்டி! இதைக் கண்டபடி இருந்த கோரக்கர் மற்றும் பிரம்ம முனி இருவரது மனதுக்குள்ளும் ஒன்றே போல ஓர் எண்ணம். அதில் முதலான எண்ணம் என்ன தெரியுமா?

எதற்காக தேவர்கள், முனிவர்கள் என்கிற இரு நிலைப்பாடு? ஏன் எல்லோரும் ஒரே மாதிரி இருக்கக் கூடாது? பேதமே இல்லாத ஒரு மானுட நிலைப்பாட்டை உருவாக்க முடியாதா?

இப்படி ஒரு சிந்தனையைத் தொடர்ந்து... தேவர்கள், அசுரர்கள்தான் அமுதம் கடைந்து அதை அனுபவிக்க வேண்டுமா?

இப்படிச் சிந்தித்தவர்கள் மனதுக்குள், 'ஏன்... சித்தர்களாகிய நாம் இந்த மலையகத்தில் ஒன்றுகூடி மூலிகைகளில் இருந்து அமுதத்துக்கு இணையான ஒரு ரசத்தை எடுக்கக் கூடாது? அமிர்தத்துக்கு இணையான மூலிகைகள் உள்ள மலையாயிற்றே இது!' என்கிற எண்ணமும் ஒரு சேர எழுந்தது.

ஒரு பிரதோஷ வேளையில் உருவான இந்தச் சிந்தனை... பின்னர், எப்படி எல்லாம் அவர்களைச் செயல்பட வைத்தது தெரியுமா?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 17

மலையாது பூரணமாய் அறிந்தோரானால்
அந்தரத்தில் வாரியது அசையா நிற்கும்
அலையாமல் உண்டவர்கள் கண்டே கொள்வார்
கஞ்சாவும் கள்ளும் உண்டோர் காணார் பேயர்
முலையின் பால் உண்டாலல்லோ நிலைக்கும் தேகம்
நிலவரமாய் யோக சித்தி ஞான சித்தி
தலைகாமப் பாலுண்டோர் அருட்சித்தனாகி
வாழ்ந்திருப்பார் கோடானு கோடி காலம்..!

- சந்திர ரேகை

அமிர்தத்துக்கு இணையான மூலிகை ரசத்தை அடைந்து, அதன் மூலமாய் சிரஞ்ஜீவித்துவத்தை அடைந்துவிட வேண்டும். அதாவது, உடல் சார்ந்த நரை - திரை - மூப்பை வெற்றி கொண்டுவிட வேண்டும். பின், அந்த நரை- திரை-மூப்புக்குக் காரணமான ஐந்து பூதங்களை தன் உடம்பில் மட்டுமல்ல, உலகிலும் அடக்கி ஆளவேண்டும் என்கிற எண்ணமும் முனைப்பும் கோரக்கருக்குள்ளும் பிரம்மமுனிக்குள்ளும் ஒருசேர எழும்பியது.

கூடவே, இன்னொரு எண்ணமும் சேர்ந்துகொண்டது. உலகில் பிறந்துவிட்டால் இறந்தாக வேண்டும் என்பது ஒரு மாற்றமுடியாத விதியாக உள்ளது. ஆனால், இது தேவர்களுக்குப் பொருந்துவதில்லை. எனவே, இந்த உலகிலும் இறப்பின்றி வாழ வழி காண வேண்டும். அதாவது, பூவுலகிலும் தேவர்களைப் போல ஏற்றத் தாழ்வில்லாத இறவாப் பெருவாழ்வு வாழ வேண்டும் என்று இருவரும் விரும்பினார்கள். தாங்கள் இருவர் மட்டும் இறவாப் பெருவாழ்வு வாழ்ந்தால் போதும் என்று அவர்கள் எண்ணவில்லை. இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வாழ வேண்டும் என்று விரும்பினார்கள்.

நல்ல எண்ணம்தான் இது. ஆனால், நடக்கக் கூடியதா? முயற்சி திருவினையாக்கும் என்பது பழமொழி. எனவே, கடும் முயற்சி செய்தால், இந்த எண்ணம் ஈடேறிவிடாதா என்ன?

இப்படி நம்மில் பலருக்கும்கூடத் தோன்ற லாம். ஆனால், இதுபோன்ற சிந்தனைகளை வெறும் உணர்வு மற்றும் புலனறிவால் மட்டும் அணுகினால் போதாது. இவற்றைக் கடந்த, அதாவது... உணர்வு, அறிவு இரண்டையும் சமன்படுத்திச் செய்யும் சிந்தனையால் விளையும் ஞானத்தைக் கொண்டே இதை அணுக வேண்டும். அப்படி ஞானத்தோடு இந்த விஷயத்தை அணுகும்போதுதான் பல உண்மைகள் புலனாகும்.

அந்த அடிப்படையில் பார்த்தால், இன்பம் என்ற ஒன்றுக்கு மதிப்பிருப்பதே துன்பம் என்கிற ஒன்றால்தான் என்பதும் புரியும். இது அப்படியே இனிப்புக்கு மதிப்பு கசப்பால், அன்புக்கு மதிப்பு வெறுப்பால், குணப்பாட்டுக்கு மதிப்பு வியாதியால் என, ஒன்று இரண்டாக எல்லாத் தளங்களிலும் இருப்பதும் புரியவரும்.

அப்படி இல்லாதபட்சத்தில், எந்தவொரு நல்லதின் மதிப்பும் பரிமாணமும் நமக்குப் புரியாமலேயே போய்விடும். இன்றைய நம் வாழ்க்கையிலேயே அதற்கு நிறைய உதார ணங்கள் இருப்பது, கொஞ்சம் சிந்தித்தால் புரியும். பெரும்பாலும் நாம் ஆரோக்கியமாக, பசியை உண்ணும் உணவால் வென்று மகிழ்வாகவே வாழ்ந்தபடி இருக்கிறோம். எப்போதாவதுதான் பசிக்கு உணவில்லாத ஓர் இக்கட்டுக்குப் பல காரணங்களால் ஆளாகிறோம். ஆனால், அப்போதோ நம் மனது, 'காலமெல்லாம் இப்படித் துன்பப்பட நேர்ந்தால்..?' என்னும் அச்சத்துக்கு ஆளாகி, தவிக்கத் தொடங்கிவிடுகிறது. அந்த அச்சம் நம்மைப் பலவித சிந்தனைகளுக்கு ஆளாக்கி, அடுத்துப் பல மாத காலத்துக்கு உணவுப் பொருட்களை நம் இல்லத்தில் சேமித்து வைத்துக்கொள்ளக் காரணமாகிவிடுகிறது.

அதாவது, நமக்கு ஏற்பட்ட பசி பயமாகி, இறுதியில் வெறும் சுயநலமாக மாறிவிடுகிறது. இந்தவகையில் மனிதனைத் தவிர, மற்ற உயிரினங்கள் நாளைக்கு என்று எதையும் சேமித்து வைத்துக்கொள்வதில்லை. அப்படி சேமித்து வைத்துக்கொள்ளத் தெரியாததால் அல்லது முடியாததால்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அவை வாழாமலும் போய்விடுவதில்லை.

நாளைய தினத்தை எண்ணி அரிசி, பருப்பில் இருந்து... தங்கம், வெள்ளி வரை தன் எதிர்கால நலம் கருதிச் சேமித்து வைத்துக்கொள்ளும் மனிதன், கடைசி வரை அல்லது தான் விரும்பும்வரை இறவாப் பெருவாழ்வை இந்த மண்ணில் வாழ்ந்துவிடுகிறானா?

என்னதான் சேமிப்பும் செல்வமும் இருந்தா லும் மரணம் எப்போது வரும் என்பது தெரிய வில்லை. பல நூறு ஆண்டுகளாக இந்த மண்ணில் வாழ்ந்து வரும் ஒரே ஒருவரைக் கூட இந்த உலகம் இதுவரை காணவில்லை; இனி, காணப் போவதும் இல்லை.

ஒருவேளை, அப்படி வாழ முடிந்துவிட்டால், அதாவது, காலம் காலமாய் பிறப்பு மட்டுமே உண்டு, இறப்பே கிடையாது என்கிற நிலை உருவாகிவிட்டால், பின்பு இந்த உலகில் நாம் நடமாடித் திரிய நிலப்பரப்பு இருக்குமா என்பது சந்தேகமே! தவிர, இந்த உலகம் என்பது ஆயிரம் ஆண்டு, இரண்டாயிரம் ஆண்டு, மூவாயிரம் ஆண்டுகள் இறவாது உயிர்வாழ்ந்து வரும் முதியவர்களின் பூமியாகவே இருக்க முடியும். அப்படி மரணம் இல்லாப் பெருவாழ்வு வாழ்கிறவர்களின் மனோ பாவம் எப்படி இருக்கும்? 'அட, போப்பா! ஆயிரம் ஆயிரம் வருடங் களாக ஒரே மாதிரி இரவு பகலைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். உடம்பால் அழிவின்றி அப்படியே இருக்கிறேன். ஆனால், உள்ளத்தில்தான் உற்சாகம் என்பதே கிஞ்சித்தும் இல்லை. ஒரே மாதிரி வாழ்க்கைப்போக்கில், மாற்றமே இல்லாத இந்த வாழ்வைப் போலக் கொடிய வாழ்வை பார்க்கமுடியாது. இதற்குப் பதிலாகத் தீயில் குதித்துச் சாம்பலாகிவிடுவதே மேல்' என்பார்கள். அதுமட்டுமல்ல, புதிதாய் பிறக்கும் குழந்தையைப் பார்த்து, 'இந்த உலகச் சிறைக்கு இன்னொரு கைதி வந்து விட்டான்' என்றே நினைப்பார்கள்.

எனவே, இறவாப் பெருவாழ்வு என்பதைப் போல ஒரு அபத்தமான சிந்தனை இருக்கவே முடியாது என்பதே யதார்த்தம். இருக்கவே முடியாது என்பதல்ல; இருக்கவும் கூடாது என்பார்கள் சிலர்.

இன்றுள்ளதைப் போல நூறாண்டு என்பதே போதுமானது. இதிலும் நரை - திரை - மூப்பு இல்லாவிட்டால் ஒருவரின் வயதை அறிவது முதல் அனைத்திலும் குழப்பம் ஏற்படும். நரை - திரை - மூப்பு ஏற்பட்டாலே அடையாளங்கள் காண


www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

முடியும். இதன்படி பார்த்தால், இப்போது நடைமுறையில் உள்ள மனித வாழ்க்கைப் போக்கில் ஓர் அசாதாரண திட்டமிடலும், நிகரில்லாத கட்டமைப்பும் இருப்பது புலனாகும்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



ஆனாலும், கோரக்கரும் பிரம்மமுனியும் இவற்றைப் பற்றி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எண்ணாமல், மரணமில்லாத வாழ்வையும், பஞ்ச பூதங்களையும் கட்டுப் படுத்த எண்ணியதன் பின்னாலே நாம் கவனிக்க வேண்டியது... அவர்களுக்கு இந்த உலகத்து உயிர்களின் மேல் இருந்த கருணையும் கரிசனமும்தான்! அந்தக் கருணையும் கரிசனமும் செயலானது. அந்த நாளிலும் சரி, இந்த நாளிலும் சரி... வேண்டியதை அடைய மானுடத்துக்கு இருக்கும் மகத்தான ஒரே வழி- வேள்வி புரிவது என்பதுதான். வேள்வியில் அக்னிக்குத்தான் பிரதான இடம். நாம் மந்திர முழக்கத்தோடு இடும் அவிர் பாகங்களைப் பெற்று அவனே உரியவர்களிடம் சேர்ப்பிக்கிறான். அவிர் பாகம் பெற்ற தேவர்கள், பதிலுக்கு நம் கோரிக்கையை ஈடேற்றுபவர்கள் ஆகிறார்கள்.

தனியொரு மனிதன், தன் நலன் பொருட்டு வளர்க்கும் தீ 'ஹோமம்' எனப்படும். இது வீடுகளில் நிகழ்வது. ஒரு மனிதக் கூட்டம் நாட்டு நலன் விரும்பி வளர்க்கும் தீ 'வேள்வி' எனப்படும். இது பொதுவான இடத்தில் நிகழ்வது. பிரம்ம முனியும் கோரக்கரும் உலக நன்மைக்காகவே யாகம் எனும் வேள்வியை செய்யத் தயாரானார்கள். அதற்கு அவர்கள் தேர்வு செய்த இடம் சதுரகிரி மலையில், ஆலயத்துக்கு தென் திசையில் உள்ள பிரம்ம வனம் எனும் பகுதி.

எப்போதும் இதுபோன்ற நற்செயல்களை கால பலத்தோடு செய்வது முக்கியம். கால பலம் என்பது... இரவு - பகல் எனும் இரு பிரிவுக்குள் கிடக்கும் காலை, மதியம், மாலை, நள்ளிரவு, பிரம்ம முகூர்த்த அதிகாலை எனும் பிரிவுகளில் மட்டுமல்ல; அன்றுள்ள மாதம் மற்றும் கிழமை, அது சார்ந்த நட்சத்திர ஆதிக்கம், இந்த இரண்டோடு கூடிய திதிப் பொழுது, அதனுள் நிலவும் ஹோரை எனும் ஐந்து அம்சங்கள் கொண்டதாகும். ஐந்து எனும் பஞ்ச அம்சங்களை அங்கங்களாக உடையதையே 'பஞ்சாங்கம்' என்கிறோம். பஞ்சாங்கம் என்பதோ கணித மயமானது. மிக மிகத் துல்லியமானது. கணிதம் என்றாலே துல்லியம் என்றும் ஒரு பொருள் உண்டு. அடுத்து, மிக நியாயமானது என்றும் ஒரு பொருள் உண்டு. ஏனென்றால், கணக்கை யார் எங்கிருந்து போட்டாலும் விடை மாறாது. அது ஆளுக்குத் தகுந்த மாதிரி மாறும் ஒன்றல்ல; மாறாத் தன்மை உடையது. இந்த மாறாத் தன்மை உலகிலேயே இறைவனுக்கு மட்டுமே பொருந்தும். அடுத்து, கணிதத்துக்குதான் பொருந்தும்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எனவே, கணிதத்தைக் கடவுளாகவும் கருதலாம். அதில் தப்பில்லை. இந்தக் கணிதம் எண் வடிவானது. அதனாலேயே நம் சான்றோர்கள் இதைக் கண்ணாக கருதினர். அதுவும் எப்படி... 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பதில், எண்ணை முதலில் வைத்து சிறப்பித்தனர். எழுத்தை ஏன் பின்னால் வைத்தனர் என்றால்... அது, இனத்துக்கு இனம், கண்டத்துக்கு கண்டம் மாறுதல்களோடு உள்ளது. எழுத்துதான் மொழியால் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு எனப் பல விஷயங்கள் கண்டுள்ளது. அதாவது, அது மாறும் தன்மைக்கு உரியது. ஆனால், பல மொழியாளரிடத்தும் எண் மட்டும் மாறாமல் ஒன்றாகவே உள்ளது. ஒன்று, இரண்டை அமெரிக்கன், இந்தியன், ஆப்பிரிக்கர்கள், அரேபியர்கள் என்று எவரும் ஒரே வடிவில் ஏற்று, அதையே பயன்பாட்டிலும் கொண்டுள்ளனர்.

இப்படி, எண் குறித்துச் சிந்திக்க அநேக விஷயங்கள் உள்ளன. இந்த எண்ணின் பின்புலத்துக் கணிதம்தான், காலப் பொழுதை அளந்து கணித்து, இந்த நாளில் இந்த வேளை யில் இத்தனை நிலை அளவுக்கு உட்பட்ட நிமிடங்கள் மிகுந்த செறிவுடைய - கதிர் வீச்சு கொண்ட பொழுதாக உள்ளது என்பதைக் காண நமக்கு உதவுகிறது.

இந்தக் கணக்கில் கோரக்கரும் புலி. உலக நன்மைக்கான வேள்வியைத் தொடங்க அவர் இந்தக் கணிதப்படி தேர்வு செய்த இடமே பிரம்மவனம். தேர்வு செய்த காலம்- மாசி மாதம் பௌர்ணமி திதி, மக நட்சத்திர நாளின் இரவுப்பொழுது. அதிலும் பத்து நாழிகை சென்றுவிட்ட பதினோராவது நாழிகையின் தொடக்க காலம்..!

இப்படிக் காலமறிந்து செயல்பட்டால்தான் அது வெற்றியில் முடியும். இங்கே காலம் கூடவா வெற்றிக்குரியது, தோல்விக்கு உரியது என இரண்டாக இருக்க வேண்டும் என்கிற கேள்வி எழலாம். ஒன்று இரண்டாக இருந்தாலே, அதில் ஒன்றை நாம் உணர முடியும். இந்த ஒன்று இரண்டாக இருப்பது என்பதும், உணர்ந்துவிட்ட பின் இரண்டையும் சமமாகக் கருதுவதும்தான் அத்வைதம் ஆகும்.

துவைதம் என்றால், இரண்டாக இருப்பதைக் குறிக்கும். இரண்டையும் உணர்ந்து, அதை ஒன்றாகக் கருதும் நிலைக்கு வந்துவிட்டவர்களை 'அத்வைதிகள்' என்பார்கள்.

நாம் திரும்ப காலகதிக்கு வருவோம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பிரம்மமுனியும் கோரக்கரும் காலகதியைக் கண்டறிந்து வேள்வியைத் தொடங்கவும், அது மற்ற சித்த புருஷர்கள், தேவர்கள் என எல்லோருக்கும் தெரியவந்து, அவர்களும் அங்கே வந்து குழுமினர். சதுரகிரி தலத்தில் தவமியற்ற வந்த யோகியர்களும் அந்த வேள்வியை ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

'எதற்காக இந்த வேள்வி?' என்ற அவர்கள் கேள்விக்கு 'பூவுலகையும் தேவருலகம் போல இன்ப - துன்பங்களுக்கு இடமில்லாத, அமைதி மட்டுமே தவழும் உலகமாக உருவாக்க' என்கிற பதில் அளிக்கப்பட்டது. அதைக் கேட்டு அவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

அவர்கள் மட்டுமா ஆச்சரியப்பட்டனர்?

கயிலாயத்தில் சிவபெருமானும் ஆச்சரியத்துக்கு ஆளானார். அருகில் இருந்த பார்வதிதேவியைப் பார்த்தார். ஏற்றத் தாழ்வே இல்லாத அமைதியான உலகத்தைப் படைக்கும் நோக்கோடு நடத்தப்படும் இந்த வேள்வி குறித்து சிவபெருமானின் எண்ணத்தை அறிய விரும்பினாள் உமாதேவி.

சிவபெருமானோ, "தேவி! அந்த இரு சித்த புருஷர்களும் நல்ல எண்ணத்தோடுதான் வேள்வி புரிகின்றனர். ஆனால், அவர்களிடம் தூர திருஷ்டி (தொலைநோக்கு பார்வை) இல்லை. அவர்களது வேள்வி வெற்றிபெற்றால் வரத்தை அளித்தே தீர வேண்டும்" என்றார்.

"நம் கேள்விக்கு இரு விடைகளா?" என உமை திருப்பிக் கேட்டாள்.

"இந்த இரு விடைகளில் ஒன்றை நீதான் முடிவு செய்ய வேண்டும். அவர்களுக்கு வேண்டுமானால் இறவாப் பெருவாழ்வை வரமாகத் தரலாம். உலகோர்க்குத் தர முடியாது. எனவே, அவர்கள் வேள்வியும் வென்றதுபோல, நம் எண்ணமும் வென்றதுபோல ஒருவழிப் பாட்டை நீ உன் திறத்தாலே உருவாக்கு" என்றார்.

உமையும் தன் க்ரியா சக்தியிலிருந்து அருள், இருள் எனும் இரு சக்தி அம்சங்களை அழகிய பெண்களாக ஆக்கி, வேள்விச்சாலை நோக்கி அனுப்பிவித்தாள். அருளும் இருளும் 'அருள்மாயா', இருள்மாயா'வாக வேள்விச் சாலையில் தோன்றி எழிலோடு நின்றிட... அக்னி, வாயு, வருணன் முதலான பஞ்ச பூதாதியர் அவர்களைக் கண்டு மயங்கத் தொடங்கினர். இதனால் வேள்வி தடைப்படும் சூழல் உருவாகியது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மற்றவர்கள் மனமும் மயங்கியது.

என்னதான் காலக்கணக்கைத் துல்லியமாகப் போட்டு இருந்தாலும், வேள்வி தடுமாற்றம் கண்டது. அது பிரம்ம முனி, கோரக்கரிடம் கோபமாக மாறியது. வேள்வியின்போது வரக் கூடாதது வந்தும்விட்டது. அவர்களுக்குள் சேமிப்பாகி இருந்த தவ சக்தி சாபமாக மாறியது.

"தேவர்களையே மயக்கும் வல்லமை பெற்ற பெண்களே! நீங்கள் உங்கள் தோற்றத்தை இழந்து தாவரங்களாக ஆவீர்களாக. தாவரங்களான உங்களை இந்த அக்னியும், எந்த வாயுவும் கண்டு மயங்கினார்களோ, அவர்களே சாம்பலாகவும் ஆக்கிடுவார்கள்" என்று சபித்தனர்.

சாபம் வேலை செய்தது. அருள் மாயை கஞ்சா செடியாகவும், இருள் மாயை புகையிலைச் செடியாகவும் ஆயினர்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 18

சொல்லுகிறேன் சதுரகிரி தன்னிலப்பா
சுகமான ஆற்றோரம் என் குகைக்குள்
வல்ல சித்தர் அனந்தம் பேராகக் கூடி
வாழ்ந்திருப்பார், அதனருகே குண்டாதன்னில்
நல்லதொரு கஞ்சாவை நான் கசக்கி
நயம் பெறவே அவர்களுக்கு கொடுத்ததாலே
எல்லவரும் பயன் பெற்றார் குகையில் தங்கி
இயற்றினேன் தைலங்கள் அநேகம் தானே

- பிரம்மஞான தரிசனம்

வேள்விச்சாலையில் கோரக்கர், பிரம்மமுனி ஆகியோரின் சாபத்தால் இருள் மாயையும் அருள் மாயையும் கஞ்சா, புகையிலை எனும் தாவரங்களாக மாறிவிட... வேள்வியும் ஒருமுனைப்போடு தொடர முடியாமல் போயிற்று.

வேள்வி புரிவோர், உணர்வுகளுக்கு இடம் கொடாது வேள்வியின் நோக்கம் ஒன்றையே பிரதானமாகக் கருதி செயல்படவேண்டும் என்பதுதான் வேள்விகளுக்கான அடிப்படை விதி. எனவேதான், இத்தகைய இறைநெறிப் பணிகளில் இன்றும் ஈடுபடுவோர், கையில் ரட்சையை கட்டிக்கொண்டு உடற் சுத்தம், மனோ சுத்தம் என இரு விஷயத்திலும் விரதம் இருப்பார்கள். பிறரைத் தீண்டுவது, வாய்க்கு ருசியான உணவுகளை உண்பது, மது - மாது இரண்டையும் மனத்தாலும் நினையாதிருப்பது என்கிற எல்லாமே மனத்துக்கு ஒரே முனைப்பைத் தரவல்லவை யாகும்.

இந்த முனைப்பு மிகச் சிறிய ஒரு விஷயத்தில்கூட குலைந்து போகலாம். ஆனால், இங்கே பிரம்ம முனி, கோரக்கர் என்னும் இருவர் வரையில், அவர்கள் கோபப்படவே

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காரணமாகி விட்டது.

முனிவர்கள், ரிஷிகள், சித்த புருஷர்கள் முதலானோரின் கோபம் வலிமைமிக்கது. அது இரு பக்கமும் கூர்மையான கத்தியைப் போன்றது.

எதிரில் இருப்பவர்களை மட்டுமல்ல, சபித்த அவர்களையே கூட நிலைகுலையச் செய்துவிடும்.

'விதுர நீதி' எனும் நீதி சாஸ்திரத்தில், கோபத்தை 'சத்ரு' என்கிறார் விதுரர். கோபப்படுவதுபோல நடிக்கலாம். ஆனால், நிஜத்தில் கோபம் கூடவே கூடாது என்கிறார் அவர். கோபத்தில் ஒருவரை நாம் நிந்திக்கும்போதும், சபிக்கும்போதும் நம் வசம் உள்ள அருள் சார்ந்த அத்தனையும் எதிரில் இருப்பவர்களைச் சென்று சேர்கிறது. இதனால் புலன்களை அடக்கியும், பக்தி செலுத்தியும் நாம் சேமித்து வைத்த அருள் அம்சம் அவ்வளவையும் இழந்துவிடுகிறோம். எனவே, கோபப்படுவதை எதிரிக்காக இல்லாமல், தனக்காகவாவது தடுத்து நிறுத்திக் கொள்வதே புத்திசாலித்தனம் என்கிறார்.

அதேநேரம், கோபத்துக்கு ஆளானவர் அருள் வயப்படுகிறார் என்கிற அரிய கருத்தையும் கூறுகிறது விதுர நீதி. இருந்தும், தன்னிலை மறந்து முனிவர்கள் சபித்துவிடுவது நடந்துவிடுகிறது. இங்கேயும் அதுவே நிலை!

ஆனாலும், பிரம்மமுனி மற்றும் கோரக்கரின் கோபம், இரண்டு அரிய தாவரங்கள் இந்த பூமிக்குக் கிடைக்கக் காரணமாயிற்று. இதனைத் தொடர்ந்து சிவபெருமானும் அவர்கள் முன் பிரசன்னமானார். இருவரையும் பார்த்து, அவர்கள் செய்யும் யாகம் குறித்துப் பேசவும் செய்தார்.

'முனிவர்களே! பஞ்ச பூதங்களை அடக்கி ஆளும் வல்லமை என்பது மேலான ஆதிசக்திக்கு மட்டுமே! அதை இந்த மண்ணில் பிறந்துவிட்டவர்கள் அடையவே முடியாது. அருட்பிரசாதமான விபூதியில் தோன்றியமையாலும், பிரம்ம ஞானம் இருந்த காரணத்தாலும் உங்களுக்கு இந்த உலகை ஏற்றத்தாழ்வற்றதாகப் படைக்கும் விருப்பம் ஏற்பட்டது. ஆனால், அது தேவையற்றது. ஏற்றத் தாழ்வு என்பது பார்வையால் வருவது. மனது சமமாகக் கருத வேண்டியதே ஞானமாகும். ஞானப்பட்டவருக்கு பெரிது எதுவும் பெரிது இல்லை; சிறிது எதுவும் சிறிதும் இல்லை. நோக்குவதில்தான் எதுவும் உள்ளது. இதைப் புரிந்துகொண்டு முக்தி காணுங்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆனாலும், நீங்கள் செய்த யாகத்துக்கு உங்களுக்கு வரஸித்தி ஒன்றைத் தருகிறேன்.

இந்த மலையகத்திலும், இமயச் சருக்கத்திலும் அகால மரணம் அடைவோரை நீங்கள் விரும்பினால் உயிர்ப்பித்து எழச் செய்யலாம். உமக்கு அதற்கான சக்தியைத் தருகிறோம். இந்தச் சக்தி ஓர் அமிர்த ரசம்போல ஒரு ரச மருந்தாக உமக்குக் கிடைத்து, அதனால் அகாலப்படுவோர் காலப்படுவர்!" என்று கூறி மறைந்தார் சிவபெருமான்.


அதன் பிறகே, கோரக்கர் அந்த அபூர்வ ரசத்தை உருவாக்க முனைந்தார். முன்னதாக, அதற்கு சரியான இடத்தை கௌண்டின்ய நதிக்கரையோரம் தேர்வு செய்தார். இந்த நதியை ஒட்டி ஒரு பொய்கையும் உண்டு. இந்தப் பொய்கை வற்றாப் பொய்கையாகும். இதனைச் சுற்றி ஏழாயிரம் மூலிகைச் செடிகள் முளைவிட்டு, அதன் வேர்கள் இந்த பொய்கை நீரைத் தீண்டி, அதை உண்டே ஜீவித்துள்ளன. இதனால் இந்தப் பொய்கை நீருக்கும் அந்த ஏழாயிரம் மூலிகைத் தொடர்பு காரணமாக மருத்துவ குணம் உண்டு. இதில் ஒருவர் நீராடும் போது, ரோமக் கால் துவாரம் வழியாக உட்புகும் இதன் நீரும், மேனிச் சூட்டைக் குறைக்கும் இதன் குளிர்மையும், ஒரு வாய் இதை உண்ணும்போது உட்புறமாய் இது ரத்தக் கலப்பாவதும், பிறகு அதனுள் ஜீவ வாயுக்கள்

மிகுவதும்... அதன் காரணமாக நூறு வயதைக் கண்டு விட்டோர்கூட காளையைக் கைப்பற்றி அடக்க முனையும் ஓர் இளைஞனைப் போல தினவும் வலிவும் கொண்டவராவர்.

இப்படி ஒரு பொய்கையை ஒட்டியே மலைப் பாறையில் ஜாதிப் பாறை ஒன்றைத் தேர்வு செய்து, அதனுள் தேரை இல்லாத வலிவை உணர்ந்து, அங்கே பெரும் குழியை உருவாக்கினார் கோரக்கர். அதில் மூலிகைகளை இடித்துச் சாறாக்கி சேர்த்து, பின் உச்சிவானச் சூரியக் கிரணங்களாலேயே அதை கொதிக்கச் செய்தார். தொடர்ந்து, அதை மூடிவைத்தார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



மறுநாள் அதைத் திறந்து, திரும்பவும் அதனுள் கல்ப மூலிகைகளைச் சேர்த்து ஒரு மண்டலம் கொதிப்பாக்கி, அகப்பையில் குழம்புபோல் அள்ள முடிந்த சாறாக அதை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆக்கினார். இதில் கஞ்சா, புகையிலையை உரிய பக்குவத்தில் சேர்த்து ஆதிரசத்தைத் தயாரித்தார் கோரக்கர்.

இந்த ரசமானது மூப்பைத் தடுக்கவல்லது; இளமையை நிலைநிறுத்துவது; விரும்பும்வரை உயிர்

வாழத் துணை நிற்பது. இதை கோரக்கர் செய்தபோது, விதிப்பாடுடைய பல சித்த புருஷர்கள் மூன்று கையளவுக்கு அள்ளிக் குடித்து, தங்களை கல்ப யோகிகளாக ஆக்கிக் கொண்டனர்.

இதன் பின்புலத்தில் உள்ள மூலிகைகள் எவை எவை என்பதெல்லாம் பெரும் ரகசியமாகும். இந்த ரகசியங்களை பரிபாஷையில் பாடல்களுக்குள் புகுத்தி வைத்தார்கள். இதை எல்லோராலும் புரிந்துகொள்ள முடியாது.

விதியுடையோர் பரிபாஷையைச் சரியாகப் புரிந்துகொண்டு, அந்த மூலிகைகள் என்னென்ன என்பதை அறிந்து கொள்வர். தப்பித் தவறியும் கோரக்கரோ பிரம்மமுனியோ, இன்று கஞ்சா - புகையிலையை நம் மக்கள் தவறாகப் பயன்படுத்துவது போலப் பயன்படுத்தவில்லை. கஞ்சாவை போதைக்காகப் பயன்படுத்துவோரை 'பேயர்' என்கிறார் கோரக்கர்.

கஞ்சாவும் கள்ளும் உண்டோர் காணார் பேயர்...

முலையின் பால் உண்டாலல்லோ நிலைக்கும் தேகம்

-எனும் அவரது சந்திரரேகை பாடல் வரிகள் அதைக் குறிப்பிடுகின்றன.

இன்று புகைபிடிப்போர் பயன்படுத்துவது புகையிலையைத் தான். இது வாய், நெஞ்சகம், நுரையீரலை வேகவைத்துப் புண்ணாக்கிவிடுகிறது. ஒரே காரணம்தான்... இதன் ரசத்தைப் பக்குவப்படுத்தி உட்கொண்டால் மருந்து. இல்லாவிட்டால் விஷம்! அதுமட்டுமல்ல; இந்தத் தாவரங்கள் தோன்றியபோது, இவர்களைச் சபித்த விதமும் காரணம்.

அருள் மாயையும், இருள் மாயையும் வேள்வியின்போது மன ஒருமையைக் கெடுத்தனர். தேவர்களுக்கே மதி மயக்கம் ஏற்பட்டது. எனவே, இவை இரண்டையும் நாடுவோரிடமும் மனச் சிதைவு ஏற்பட்டு, மன ஒருமை இல்லாது போகிறது. அத்துடன், சாபத் தொடர்பும் இருப்பதால், இவற்றை நாம் தீண்டும்போது, நாமும் அதன் தொடர்புக்கு ஆளாகிறோம். இதனால், ஒருவர் அழிவுக்கு ஆளாகவேண்டிய விதிப்பாடு இருந்தால், இவற்றைத் தொடர்பு கொள்ளும் நிலைப்பாடு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஏற்படும். எனவே, இவற்றைச் சாபத்துக்கு உரியவையாகக் கருதி விலக்கி வைப்பதே சிறந்த விஷயமாகும்.

இன்றும் சதுரகிரி மலைத் தலத்தில் கோரக்கர் குண்டா இருப்பதாகக் கூறப்படுகிறது. ஓர் ஆலிலை வடிவில் அது காணப்படுகிறது. இன்றும் இதில் தேங்கியிருக்கும் மழை நீருக்கு மருத்துவ குணம் மிகவே இருப்பதாகக் கருதுகின்றனர். இந்தக் குண்டா நீரை அள்ளி, மூன்று கை உண்டால் ஜென்ம சாபல்யமும் பிணிகளில் இருந்து விடுபடுதலும் நிகழ்கிறது.

கோரக்கர் இதுபோல ஆதிரசம் செய்தது மட்டுமல்ல, கால ஞானத்தோடு 'நாஸ்டர்டாமஸ்' எனும் மேல் நாட்டு தீர்க்க தரிசியைப்போல பல எதிர்கால நிகழ்வுகளையும் முன்பே ஜோதிடம் போலக் குறிப்பிட்டுள்ளார். அந்தக் குறிப்புகள் அவர் இயற்றியுள்ள சந்திரரேகை எனும் நூலில் காணப் படுகின்றன. குறிப்பாக, கலி யுகம் எப்போது எப்படித் தொடங்கியது என்பதை இரு வரிகள் அழுத்தமாக கூறுகின்றன.

இந்தக் கலி உதிப்பு பிரமாதி ஆண்டு

ஆன சித்திரை வெள்ளி நவமி மூலம்...

-என்கிறார். அதாவது, பிரமாதி ஆண்டு சித்திரை மாதம் வெள்ளிக்கிழமை நவமி திதி, மூலம் நட்சத்திர நாளில் கலி புருஷன் பிறந்தானாம்.

இந்தக் கலி எப்படிப்பட்டவனாக இருப்பான் என்பதையும் சந்திரரேகையிலுள்ள 98, 99-ஆவது பாடல் வரிகள் கூறுகின்றன. அத்துடன், நம் பாரதநாட்டை யாரெல்லாம் ஆள்வார்கள் என்றும் பாடியுள்ளார்.

பழியில்லா பரீட்சித்து ஐந்நூறே ஆண்டான்

பரிவாக சனமேசெயன் முந்நூறாண்டான்

இழிவில்லா நரேந்திரனாம் என்ற மன்னன்

இரண்டு நூற்றெண்பத் தெட்டாக ஆண்டான்

செழிப்பாக சாரங்கன் எண்பதைந்து

செகமுழுதும் விக்கிரமாதித்த வேந்தன்

இரண்டாயிரம் ஆண்டதப்பால்..!

-என்று சொல்லும் பாடல் வரிகள், ஒரு கட்டத்தில், 'ஆன்ம நலம் அறிந்த கிள்ளு நாமக்காரர்' என்று ஒருவரைக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

குறிப்பிட்டுக் காட்டுகிறது.

இந்தக் கிள்ளு நாமக்காரரர் வேறு யாருமல்ல; நமது மகாத்மா காந்தியைத்தான் குறிப்பிடுகிறது என்கின்றனர் சான்றோர். மொத்தத்தில் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே சந்திரரேகையில் பாரத தேசம் குறித்து எழுதியது ஏறத்தாழப் பொருந்துவதாக உள்ளது.

அடுத்து, கோரக்கரிடம் நாம் காண வேண்டிய தனிப் பெரும் சிறப்புக்குரிய ஒரு விஷயம் அவரது வான்மிசைப் பயணம். ஒரு மனிதன் பறவை போல் வானில் பறக்க முடிந்தால் அதைவிட ஓர் இன்பம் இருக்க முடியுமா?

எண்ணிப் பாருங்கள்...

பறக்க வேண்டும் என்றால், நமக்குச் சிறகுகள் தேவை. ஆனால், சிறகோடு பிறக்காவிட்டாலும், அதைச் செயற்கையாக உருவாக்கிக்கொண்டு, ஆடைபோல அதை அணிந்தபடி பயணிப்பது போன்ற முயற்சிகளை பலர் விஞ்ஞான சாகசமாகச் செய்து பார்த்துவிட்டனர். விண்ணின் புவிஈர்ப்பு விசைக்கு எதிராக உடல் எடையைச் சமன் செய்துகொண்டு பறப்பது என்பது இன்று வரை சாத்தியமில்லாத ஒரு விஷயமாகவே உள்ளது.

ஆனால், கோரக்கரும் சரி, அவரது குருவான போகரும் சரி, அடிக்கடி சீன தேசத்துக்குச் சர்வசாதாரணமாகப் பறந்து போய்விட்டு வந்திருப்பதைக் குறிப்புகள் உணர்த்துகின்றன. அது எப்படி என்பதற்குச் சான்றாக, போகரின் பாடல் வரிகளில் விடை காணப்படுகிறது.

அறிந்திட்டேன் வெள்ளி என்ற மலையும் கண்டேன்

அப்பனே செம்பினுடை மலையும் கண்டேன்...

-என்று சொல்லும் பாடல் வரிகள், ஓர் இடத்தில்

குறித்திட்டு வெளியாக்கவென்றே எண்ணி

குளிகையிட்டு சீனபதி அமர்ந்திட்டேனே...

பதியான தீவு தீவாந்திரங்கள்

பறக்கவே குளிகையொன்று செய்து கொண்டேன்

-என்கிறார் போகர். இந்தக் குளிகையை வாயில் அடக்கிக் கொண்டு விண்ணில் பறக்கலாம் என்பது இதிலிருந்து புலனாகிறது. ஒரு குளிகை வாயில் அடங்கும்போது எப்படி உடல் எடையைச் சமன் செய்யும் என்கிற கேள்வி இங்கே

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எழுகிறது. போகர் இப்படிக் குறிப்பிட்ட குளிகை பற்றி கோரக்கர் பதில் கூறுகிறார்...

ஆகாய மார்க்கமாக ஏறிப் பறக்க ஒரு குளிகை உதவும். அதற்குப் பெயர் கெவுன குளிகை! இதை எப்படிச் செய்யலாம் தெரியுமா?

பலுணி எனும் மரத்தை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். இதன் தூர் பெரிதாகவும், இலை கை அகலமாகவும், காய்கள் அத்திக்காய் போலும் இருக்கும். இந்தப் பழத்தைப் பறவைகள் சாப்பிடுமாம்.

இந்த மரத்தின் வேரைக் குடைந்து, அதற்குள் ஒரு பலம் பாதரசம் விட்டு, அந்த மரப்பட்டையாலேயே மூடிவிட வேண்டும். மூன்று மாதம் கழிந்த பின் எடுத்துப் பார்த்தால், அந்தப் பாதரசம் வெள்ளிபோல் உறைந்துபோயிருக்கும். அதை உருட்டி உருண்டையாக்கி வாயில் அடக்கிக்கொண்டால், பறக்கும் சக்தி ஏற்படுமாம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 19

ஆய்ந்திட மெய்க் கோரக்கன் என்றனுக்கே
ஐந்து பெண்டிர் அறுபதுசேய்; விளக்கம் உண்மை
மாய்ந்திடாது இவ்விதமாய் பதினெண் பேர்கள்
மனைவி மக்களுடன் வாழ்க்கை; பேரன் பேத்தி
தோய்ந்திடவே இருந்தேற்றுக் காலன் தன்னும்
தொடர்ந்திடாது நீடுழி காலம் பெற்றோம்
வாய்ந்த உமைஅரன் பாகத்து அமுது உண்டே
வயங்கு புலிக்குகைப் பொதிகை எங்கள் வாழ்வே!'

-'முத்தாரம்' கோரக்கர்

பலுணி என்னும் மரத்தின் உதவியோடு செய்யப்பட்ட கெவுன குளிகையால் பறக்கும் சக்தி ஏற்பட்டு கோரக்கரும் சரி, போகரும் சரி... சர்வ சாதாரணமாக சீன தேசம் வரை போய்வந்தார்கள் என்கின்றன சித்த நூல்கள்.

இந்த பலுணி மரக் கற்ப குளிகை மட்டுமல்ல, இன்னமும் சில குளிகைகள் பற்றியும் குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. குளிகை என்றால், இன்றைய மருத்துவத்தில் மாத்திரைகளோடு இதை ஒப்பிடலாம்.

மாத்திரைகள் உமிழ்நீரோடு கரைந்து வயிற்றுக்குள் சென்று ஜீரணமாகி ரத்தத்தில் கலந்து உடம்பெங்கும் பரவி, உபாதைக்கு காரணமான கிருமியினை ஆக்கிரமித்து அழித்து, இறுதியில் சிறுநீரோடும் மலத்தோடும் வெளியேற்றமும் கண்டுவிடுகின்றன. இதைப் பாமரனால்கூடச் சந்தேகமின்றி உணர முடிகிறது. இதில் எந்த மாய்மாலமும் இல்லை.

ஆனால், இங்கோ ஒரு குளிகை வாயில் அடக்கிக்கொள்ளப்பட்ட நிலையில், ஒரு மனிதனை அவனது உடலோடு பறக்கவைக்க முடிகிறது என்றால், அது எப்படி என்கிற கேள்வி எழுகிறது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இந்தக் குளிகை என்றில்லை; 'கழுகாஞ்சனம்' என்று ஒரு மை இருக்கிறது. அதாவது, கழுகின் இறகைச் சுட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்கி, அதில் நெய், புனுகு, ஜவ்வாது சேர்த்துக் குழைக்க... மை போலத் திரளும். இந்த மையை புருவத்தில் பூசிக்கொள்ள, பூசிக்கொள்பவர் எதிரில் இருப்பவரின் பார்வைக்குப் படமாட்டார் என்று ஒரு சித்தர் மருத்துவப் பாடற் குறிப்பு கூறுகிறது.

கெவுன குளிகை, கழுகாஞ்சனம் - இவை எல்லாமே நமக்குள் மாய்மால உணர்வையே தோற்றுவிக்கின்றன. காரணம், இன்று நம்மை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும், ஏன் என்று கேள்வி கேட்கச் சொல்லும் விஞ்ஞான சக்தி. ஆன்மிகம் சார்ந்த சித்த விஷயங்கள் மெய்ஞ்ஞானம் சார்ந்தவை. இங்கே விளக்கிக் கொள்ள முடிவது விஞ்ஞானமாகிறது; அப்படி முடியாமல் இருப்பது மெய்ஞ்ஞானமாகவே நீடிக்கிறது என்று ஒரு விளக்கமும் சிலரால் அளிக்கப்படுகிறது.

ஆனால், ஆன்மிகத்தை எப்படி நோக்கினாலும், அதிலும் விஞ்ஞானம் இருக்கவே செய்கிறது. கடவுளே ஆனாலும் அவர் கால்களால்தான் நிற்கிறார்; கை கொண்டுதான் எதையும் செய்கிறார்; அளவான தலைமுடியோடு அழகாய் ஆடை உடுத்தி நிற்கிறார்.

உலகையே எடுத்துக்கொள்ளுங்கள். அது சதுரமாக இருந்து சுழன்றால் இப்போது இருப்பதுபோல இரவு - பகல் கிடையாது. இப்போது இருப்பதுபோல கடல் வெளி மூன்று பங்காகவும், நிலப் பரப்பு ஒரு பங்காகவும் இருக்க முடியாது. அவ்வளவு ஏன்... அந்தச் சதுரப் பரப்பு சீராகச் சுழலவே முடியாது. சுழல முடியாவிட்டால் காற்று, மழை என்று எதற்கும் வழி இல்லை. இதன் விளைவாக பூமியில் ஒரு உயிரினம்கூட இருக்க முடியாத நிலைதான் ஏற்பட்டிருக்கும்.

எனவே, உலக இயக்கமே விஞ்ஞானத்துக்கு உட்பட்டதுதான். கடவுளிடமும் ஆன்மிக நெறிப்பாடுகளுக்குள்ளும் விஞ்ஞானம் இருந்தே தீர வேண்டும். எனவே, நாம் எங்காவது மாய்மாலம் என்றோ, மந்திர ஜாலம் என்றோ, கண்கட்டு என்றோ ஒரு ஆன்மிக விஷயத்தைச் சொல்கிறோம் என்றால்... அது நமக்கு இன்னும் புரிபடாத ஒரு விஞ்ஞானமாக இருக்கிறது என்பதே நிலைப்பாடு. அதிலும், சித்தவியல் சார்ந்த ஆன்மிக நெறி 'சூப்பர் சயின்ஸ்' எனப்படும் உச்சபட்ச விஞ்ஞானமாகும்.

இந்த விஞ்ஞான அடிப்படையில் கழுகாஞ்சனம், கெவுன

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

குளிகை, இவை இரண்டையும் எப்படி விளக்கிக் கொள்வது என்று பார்ப்போம்.

இந்த வகையில் குளிகையை வாயில் போட்ட மாத்திரத்தில் இந்த உடலை அது எடையற்றதாக மாற்றி, விசையோடு விண்ணில் ஏற்றிவிடக்கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறு விண்ணேகிவிட்ட நிலையில், சுவாச கதிக்குள்ளும் சில மாறுபாடுகளைச் செய்து கொண்டு, சைக்கிள் ஓட்டும்போது உணர்வு ரீதியாக நாம் மேற்கொள்ளும் சமன்பாட்டை (தீணீறீணீஸீநீவீஸீரீ) இங்கே செய்தபடி பறக்கிறார்களோ என்றே கருத வேண்டியுள்ளது.

அஞ்சனமும் நம் உடல் அணுக்களை நாம் இருக்கும் இடம் சார்ந்த அணுக்களோடு இணைத்துவிடுவதாகவோ, அல்லது நம் உடலை ஒளியுடலாக ஆக்கிவிடுவதாகவோ இருக்க வேண்டும். இம்மட்டில், நான்கு குருடர்கள் யானையைத் தொட்டுப்பார்த்து அதன் தும்பிக்கை உலக்கைபோல் இருப்பதாகவும், காதுகள் முறம் போல் இருப்பதாகவும் தாங்கள் அறிந்த ஒன்றோடு தொடர்புபடுத்தி எண்ணிப் பார்த்தது போலத்தான் நாமும் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. இவற்றுக்கான தெளிவான விடையை நாமும் ஒரு சித்தனாக மாறினாலன்றி தெரிந்துகொள்ள முடியாது என்றே கருத வேண்டியுள்ளது.

இதை வைத்தே 'விண்டவர் கண்டிலர், கண்டவர் விண்டிலர்' என்று கூறினார்களோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. சித்த சாகசங்களை ஒரு வார்த்தையில் 'புருடா' என்றோ, 'மிகையான கற்பனை' என்றோ நாம் கூறிவிடுவது மிகவே சுலபம். அதற்கு நமக்குத் தேவை அந்த இரு சொற்கள் மட்டும்தான். நம்பவும் ஏற்கவும்தான் நிரம்பிய நம்பிக்கையில் தொடங்கி பொறுமை, பணிவு, சகிப்புத்தன்மை என்று பலப்பல சங்கதிகள் தேவைப்படுகின்றன.

நாம் திரும்ப கோரக்கரிடம் வருவோம். இவர் பிறப்பு இருவிதமாய் சித்திரிக்கப்பட்டுள்ளதாக முன்பே பார்த்தோம். மச்சேந்திரரின் சீடனாய் விபூதிச் சாம்பலில், ஒரு கோவகத்து அடுப்புக்குள்ளிருந்து இவர் வந்தவர் என்பது இட்டுக் கட்டப்பட்ட கதை. உண்மையில் வசிஷ்டருக்கும், மராட்டிய மாநிலத்தில் காட்டில் வசித்த ஒரு குறத்திக்கும் மகனாகப் பிறந்தார் கோரக்கர் என்பதே உண்மை. இதற்கு போகர் ஏழாயிரம் பாடல்களில் காணப்படும் பாடலொன்றே சாட்சி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்கின்றனர்.



இந்தப் பாடல் மூலம் இவர் அனுலோம கோத்திரம் எனும் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்பதையும் குறிப்பிடுகின்றனர்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இவர் பெயரும் தொடக்கத்தில் கோரக்கர் என்று இல்லை. 'கோரட்சர்' என்பதே சரி என்கின்றனர். கோரட்சர் என்றால் 'கோவாகிய பசுக் கூட்டங்களை ரட்சித்து அன்பு காட்டுபவர்' என்பது பொருள்.

ஒரு பசுவானது ஆயிரம் தாய்க்குச் சமம். அதனுள் முப்பத்து முக்கோடி தேவரும் உறைகின்றனர். அதன் புலத்தில் இருந்து கிடைக்கும் அனைத்துமே மிக உன்னதமானவை. நீர் இழிநிலை காணும்போது சிறுநீர் என்கிறோம். மனிதர்களின் சிறுநீர் நோய்க் கிருமிகளின் புகலிடமும்கூட! மற்ற விலங்குகளின் சிறுநீருக்கும் அதுவே நிலை. ஆனால், பசுவின் சிறுநீர் உன்னதமான மருத்துவ குணம் கொண்டது. அதன் சாணம் கிருமிகளைக் கொன்று, சூரிய ஒளி படும்போது வினை புரிந்து ஒரு தூய வெளியை உருவாக்குகிறது. பசுவின் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் என்பவற்றை தருகிறது. இந்த நான்கும் குளிர்வின் அம்சங்கள். அதே நேரம், நெய் நெருப்போடு கூடும்போது அதைப் பன்மடங்காக்கி நலமிக வாயுக்கள் உருவாகக் காரணமாகிறது.

அதனாலேயே யாக, ஹோம குண்டங்களில் நெய் முதலிடம் வகிக்கிறது. உண்ணும் உணவிலும் நெய் அன்ன சுத்தி எனப்படுகிறது.

ஒரு பசுவின் பின்புலத்தில் இத்தனை சிறப்புகள் இருப்பதாலேயே இதை தானமாய் தருவது பெரும் புண்ணியச் செயல் என்கிறோம்.

இதைப் பேணுவதும் பெரும் புண்ணியச் செய லாகும். இதனாலேயே பசுக்களை பேணுவது, அதைக் கொண்டாடுவது என்று சகலத்திலும் கோரட்சர் முன்னிலையில் இருந்தார். இவர் தனக்கான தியான மந்திரமாக 'ஓம் பசுபட்ச ராஜு...' என்பதையே கொண்டிருந்தார் என்பதும் தெரிகிறது. இந்த மந்திரத்தை இடையறாது தியானிப்பவர்களுக்கு கோரக்கர் தரிசனம் நிகழும் என்றும் நம்பப்படுகிறது.

இவரும் சரி, இவரைப் போன்ற பிற சித்த புருஷர்களும் சரி... மனித வாழ்வின் சராசரி அளவான நூற்றாண்டு எனும் அளவைக் கடந்து பல நூறாண்டுகள் வாழ்ந்துள்ளனர். காரணம், இவர்கள் உண்ட கல்ப மூலிகை ரசமும், காய கற்பங்களுமே..! கோரக்கர் நெடுங்காலம் வாழ்ந்தது மட்டுமல்ல,

தன் மூலம் சந்ததிகள் உருவாகி, அவர்கள் மூலம் சித்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

விசாலம் தொடரவும் வழிகண்டார். அதனால், இவருக்கு ஐந்து மனைவியர்! ஐந்து மனைவியர்க்குமாய் அறுபது பிள்ளைகள்! அவர்கள் பெயர், அவர்கள் வளர்ந்து தொடர்ந்த விதங்களில் தெளிவில்லை. ஆனால், அந்தப் பிள்ளைகளில் ஒரு பிள்ளையாவது இன்னும் வாழும் ஒரு குடும்பத்துக்கு காரண கர்த்தாவாக இருக்க வேண்டும் என்பது மட்டும் நிச்சயம். அதன் அடிப்படையில் பார்த்தால் கோரக்கர் வம்சம் இன்றும் உள்ளதென்றே சொல்லலாம்.

சித்த புருஷர்களில் அதிக மனைவியர் குதம்பைச் சித்தருக்குத்தான். அவருக்குப் பதினாறு மனைவியர். மிக அதிக பிள்ளைகள் பெற்ற சித்தர் ராமதேவர். இவருக்கு 200 பிள்ளைகள். இந்த விவரங்கள் கோரக்கரின் முத்தாரப் பாடல் திரட்டில் காணப்படுகிறது.

இவரது பாடல்களின் எண்ணிக்கை 8,450. இவை அவ்வளவும் பல ரகசியங்களைப் பட்டவர்த்தனமாக போட்டு உடைப்பவை ஆகும். இதை மற்ற சித்தர்கள் விரும்பவில்லை. எனவே, இவரது நூல்களை எல்லாம் பெற்றுச் சென்று அழித்துவிடவோ, இல்லை மறைத்துவிடவோ எண்ணினார்களாம்.

இதை எப்படியோ தெரிந்துகொண்ட கோரக்கர், அப்படிப் பட்ட சித்தர்கள் தன் இல்லத்துக்கு அது குறித்துப் பேச வந்தபோது, கஞ்சாவின் உதவியால் அவர்களை மயங்கி விழச்செய்து, அவர்கள் மயங்கிக் கிடந்தபோது, தான் எழுதிய பாடல்களில் மிக முக்கியமானவற்றை எல்லாம் தொகுத்து 'சந்திரரேகை' எனும் நூலாக எழுதி முடித்தார் என்பர். அதில் உள்ள 200 பாடல்களும் பல உண்மைகளை நமக்கு எடுத்துரைப்பவை.

இதுபோக 'பூரணம் பொக்கிஷம்' என்றொரு நூல். இதில் 4,500 பாடல்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த பூரண பொக்கிஷத்தில் கூறப்படாத சித்த ரகசியங்களே இல்லை எனலாம். ஆனால், இந்த நூலை மற்ற சித்தர்கள் சலித்துப் பாறையாக்கிவிட்டதாகவும் ஒரு செய்தி உண்டு. இந்தப் பாறையை காட்டுத் தெய்வமான கருப்பன் முதல் பல சித்த புருஷர்கள் வழிவழியாகக் காவல் காத்து வருகின்றனர். கோரரர்களின் யந்திர மந்திரம் அறிந்து பூஜை செய்து இந்தப் பாறையைத் தேடி வருவோருக்கு இந்தப் பாறை பிளந்து வழிவிடும்; உள்ளே சென்று, அந்தப் பூரண பொக்கிஷ நூலை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எடுத்துச் சம்பந்தப்பட்டவர்கள் வாசிக்கலாம். ஆனால், அதற்குக் கால அளவு உண்டு. அங்கிருந்து எடுத்துச் செல்லவும் முடியாது.

இப்படி கோரக்கர் பின்புலத்தில் ஏராளமான ரசமான செய்திகள் உண்டு. இறுதியாக, பரூர்ப் பட்டியில் சமாதி கொண்டதாக அவரே கூறியுள்ளார். அந்தச் சமாதியை அமைத்தவர் போகராக இருக்கலாம். பின் அங்கிருந்து சூட்சுமமாக வெளிப்பட்டு, இப்பூவுலகில் அவர் நினைத்த இடத்துக்குச் சென்று வர முடிந்தவராக இன்றளவும் இருந்து வருகிறார் என்பதுதான் கோரக்கர் பின் உள்ள அரிய செய்தியாகும்.

சித்த புருஷர்களில் கோரக்கர், பிரம்ம ரிஷி போகர் முதலானோர் ஒரு விதம் என்றால், திருமூலர் இவர்களில் முற்றாக வேறுபட்டவர்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 20

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே!

- திருமந்திரம்

திருமூலர் இயற்றியதுதான் திருமந்திரம். இந்தத் திருமந்திரப் பாடல்கள் மிக எளிமையானவை மட்டுமல்ல, ஆழ்ந்த பொருட்சுவை உடையவையும்கூட!

இவரே 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றவர். அதுமட்டுமா? 'உள்ளம் கோவில், ஊனுடம்பே ஆலயம்' என்றவரும் இவரே! இவரது மூவாயிரம் பாடல்களுமே மூவாயிரம் முத்துக்கள்! 'திருமந்திரம் தேறியவர் பிற மந்திரம் வேண்டார்!' என்பர்.

திருமந்திரப் பாடல்களை மனனம் செய்து, அவற்றின் பொருளைக் கசடறப் புரிந்துகொண்டவர் வாழ்வு மந்திரம் போட்டதுபோல மாறிவிடுமாம். ஏனென்றால், திருமந்திரத்தில் இல்லாததே இல்லை; அது சொல்லாததும் ஒன்றுமில்லை.

சரி, யார் இந்தத் திருமூலர்?

போகருக்கு அடுத்து, அனைவருக்கும் வெகுவாகத் தெரிந்த சில சித்த புருஷர்களில் திருமூலரும் ஒருவர்.

திருமூலர் என்ற உடனேயே கூடுவிட்டுக் கூடு பாய்வது என்னும் ஒரு விஷயம் பளிச்சென்று நினைவுக்கு வரும். சித்தர்களில் திருமூலர், அரசர்களில் விக்கிரமாதித்தன், யோகியர்களில் பாபா - இம்மூவருமே தங்களின் உடல் எனும் கூட்டை விட்டு உயிர் என்னும் ஆத்மாவை வெளியே கொண்டு சென்று, பிரிதொரு உடலுக்குள் புகுத்தி அதை இயக்க முடிந்தவர்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இதில் திருமூலர் முதன்மையானவர். ஒரு முறைக்கு மூன்று முறை இவர் கூடுபுகுந்தவர். பொதுவில், சித்த புருஷர்களை வர்க்கப்படுத்தியதில் பால வர்க்கம், கயிலாய வர்க்கம், மூல வர்க்கம் என மூன்று வர்க்கங்கள் உருவாயின.

மூலருக்கு முன் கயிலாய வர்க்கமே பிரதானமாக விளங்கியது. அந்த வர்க்கத்தவருக்கு அந்த ஈசனே ஆதிகுருவாகத் திகழ்ந்தான். திருமூலருக்கும் ஈசனே ஆதிகுரு. ஆனாலும், இஷ்டகுருவாக விளங்கியவர் நந்தி. (சித்தர்களில் நந்தீசர் என்றொரு சித்தர் உண்டு. இவர் வேறு!).

கயிலாயத்தில் ஈசனோடு கூடி அந்தப் பார்வதி இருந்திட, சப்த ரிஷிகள், நவநாயக சித்தர்கள் மற்றும் சிவபூத கணங்கள் என கயிலாயத் துள் ஈசனைத் துதிசெய்து, அங்கேயே வாழ்கின்றவர்களும் பலருண்டு. அவர்களுள் ஒருவர் சுந்தரானந்தர்.

கயிலாயமோ, வைகுண்டமோ அதுவுமில்லை... சத்ய லோகமோ, இந்திரனின் அமரலோகமோ... இங்கே தேவர் களுக்கே இடம். தேவர்களோ அமர வாழ்வு எனும் நரை, பிணி, மூப்பற்ற இறவாப் பெருவாழ்வு வாழ்பவர்கள். தேவ நிலை என்பது தவத்தால் உருவாவது. புலன்களை ஒடுக்கிச் செய்யப்படும் தவமே தேவமாகிறது. தவத்திற்கான வரமே அமர வாழ்வு!

இந்த அமர வாழ்வில் சில நேரங்களில் சலனம் ஏற்படுவது உண்டு. ஆனாலும், அதனால் இறுதியில் நன்மையே விளையும். அமர வாழ்வை அசுர வாழ்வு ஆட்டிப்படைக்க விழையும். இறுதியில் அசுரம் அழிக்கப்பட்டு, தேவம் நிலை பெறும். அமர வாழ்வுக்கும் இலக்கணங்கள் உண்டு. அந்த இலக்கணங்கள் மீறப்படும்போது அசுரம் தலையெடுக்கும். பின், அந்த அசுரம் வதம் செய்து அழிக்கப்படும். இதையே பாணா சுரன் முதல் மகிஷாசுரன் வரை நடந்த சம்பவங்கள் உணர்த்துகின்றன.

சில நேரங்களில், அமர வாழ்வில் மானுட மாயை படிவதும் உண்டு. கயிலாயத்து கணங்களில் ஒருவராய் விளங்கிய சுந்தரானந்தர் மீதும் மானுட மாயை படிந்தது. இதனால் அவருக்கு அகந்தை ஏற்பட்டது. தன்னைவிட மேலான சிவ பக்தன் இல்லை என்கிற ஓர் எண்ணம் தலைதூக்கியது.

இதை நந்திபெருமான் உணர்ந்து, 'மானுடர்போல அகந்தை கொள்வது தவறு' என்று அறிவுறுத்தினார். அப்போதே மானுட

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வாழ்வு எப்படிப்பட்டது என்ப தைத் தெரிந்துகொள்ளும் ஆவல் சுந்தரானந்தருக்கு ஏற்பட்டுவிட்டது. சிவபெருமானும் அவரை பூவுலகு சென்று, மானுட வாழ்வு வாழ்ந்து திரும்பப் பணித்தார். அப்படி வாழ்ந்தாலே பூவுலக மாயை விளங்கும்; விளங்கிக்கொண்டாலே தெளிய முடியும்;

தெளிந்துவிட்டாலோ சித்தனாகிவிடுவான்; சித்தனா னால் அதனால் சமூகத்துக்கும் நலம் விளையும் என்பதே ஈசனின் எண்ணம்.

அவ்வாறேதான் ஆனது. சுந்தரானந்தர் சித்தராகி, அதனால் விளைந்த நலமே திருமந்திரம்.

வேறுவிதமான கருத்துக்களும் உண்டு.

திருமூலர், நந்தியின் மாணவர். இவர் நான்கு வேதங்களை அறிந்ததோடு, அஷ்டமா ஸித்திகளையும் உடையவர். இவர் கயிலாயத்திலுள்ள நந்தி எம்பெருமானைவிட்டு நீங்கி, பூவுலகில் பொதிகையில் தவமியற்றிவந்த அகத்தியருடன் தங்கி இருக்கவும், பூவுலகில் உள்ள திருத்தலங்களை தரிசிக்கவுமே பூவுலகு வந்தார் என்பர் சிலர். இவர் இப்படிப் பூவுலகு நோக்கி வந்ததன் பின்னே பல சிந்தனைகள் உள்ளன.

அவர் எதன் பொருட்டு வந்திருந்தாலும் சரி, அவருக்கு நேரிட்ட அனுபவம் மிக விந்தையானது. அதுமட்டுமல்ல, அவரது பாடல்களில் காணப்படும் பொருள் நயம், இன்று தலைசிறந்த அறிஞர்களாகத் திகழ்கின்றவர்களையே வியப்பில் ஆழ்த்துகிறது.

திருமூலர் வரையில் ஒரு கருத்து மிகத் தெளிவாக உள்ளது. அதாவது, அவரே தனது பாடல் ஒன்றில்,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்

தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

- என்கிறார். அதாவது, 'இறைவனாகிய அந்த ஈசன் தனது அருட்தன்மை, கருணை முதலானவற்றை இந்த உலகுக்கு உணர்த்தவே என்னைப் படைத்திருக்கிறான்' என்கிறார். அதற்கேற்ப, 3,000 பாடல்களைப் பாடிக் கொடுத்துவிட்டும் போயிருக்கிறார். இந்த 3,000 பாடல்களுக்கும் தெளிவான பொருளறிந்து, ஒருவர் அதைத் தன் உள்ளத்தில் வைத்துக் கொண்டுவிட்டால், அதன்பின் அவருக்குத் தேவைப்படுவது என ஒன்று இந்த உலகில் இருக்காது என்பதே பேருண்மை.

சரி, இப்படிப்பட்ட திருமூலர் பூவுலகில் எப்போது எப்படி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அறியப் பட்டார் என்பதை இனி பார்ப்போம்.

முன்னதாக, இவரது காலம் எது என்பதை அறிவது முக்கியம். அந்த வகையில், தெளிவாகவே குறிப்புகள் காணப்படுகின்றன. சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகை, பெரிய புராணம், உமாபதி சிவாச்சார்யரின் திருத்தொண்டர் புராண சாரம் எனப் பல நூல்கள் மூலம் திருமூலரின் காலத்தைக் கணக்கிட முடிகிறது.

கி.பி. 7-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் திருநாவுக்கரசர். இவருக்கும் முற்பட்ட 4-ம் நூற்றாண்டவர் மாணிக்கவாசகர். இந்த மாணிக்கவாசகருக்கும் முற்பட்ட காலமான சங்க காலத்தில் திருமூலர் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது சிலரது திடமான கருத்து. அதற்குச் சான்றாக, இவரது பாடல்களில் கலிப்பாவின் தன்மை இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

சங்க காலம் என்பதோ 9,990 ஆண்டு கால வரலாற்றைக் கொண்டது. இதன் அடிப்படையில் பார்த்தால், நாயன்மாருக்கு எல்லாம் முற்பட்டவராகத் தெரிகிறார் திருமூலர். அது மட்டுமல்ல, இவர் மூவாயிரம் ஆண்டுக் காலம் வாழ்ந்ததாகக் கூறப்படுவதையும் பல நோக்கில் சிந்திக்க வேண்டியுள்ளது.

பூவுலகில் ஒரு மனிதனின் தீர்க்கமான ஆயுள் என்பது


120 ஆண்டுகள். ஆயினும், காய கற்பங்களால் தேகத்தைத் திடமாக்கிக் கொண்டும், மூச்சுப் பயிற்சிகளால் சித்த புருஷர்கள் தங்கள் ஆயுளை நீட்டித்துக்கொண்டதையும் அறிந்தோம். திருமூலரும் சகல ஸித்திகள் பெற்றவர். எனவே, இவர் சராசரி மனித ஆயுளை வெற்றி கொண்டு வாழ்ந்திருக்க வாய்ப்பு உண்டு.

இவரது சில பாடல் வரிகளிலேயே அதற்குச் சான்றும் உள்ளது. 'இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி' என்கிறார். இந்த 'எண்ணிலி கோடி' எனும் சொல்லை உரிய முறையில் அணுகிப் பொருள் கொள்ள வேண்டும்.

சராசரி மனித வாழ்வை அணுகுவதைப் போல் சித்த புருஷர்களின் வாழ்வினை அணுகிவிடக் கூடாது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



சரி... சுந்தரன், திருமூலன் ஆன கதைக்கு வருவோம்.

திருவாவடுதுறைக்கு அருகில் உள்ளது சாத்தனூர் என்னும் கிராமம். இந்தக் கிராமத்தில் அந்தணர்கள் மிகுதி. அந்தணர்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

களுக்குப் பசு மாடுகளைப் பேணுகின்ற கடப்பாடு உண்டு. இந்த மாடுகளை மேய்க்கும் பொறுப்பு இடையர் குலத்தில் வருவோர்க்கே உண்டு. அந்தக் குலத்தில் வந்தவன்தான் மூலன் என்பவன். இவன் பசுக் கூட்டத்தை மேய்த்துக் கொண்டிருக்கும் போது, இறைவன் திருவுளப்படி இவன் உயிர் பிரிகிறது. மந்தைவெளியில் மாடுகளுக்கு நடுவே பிணமாக விழுந்து கிடக்கிறான்.

அப்போதுதான் விண்ணின் வழியே கயிலாயத் துக்குச் சுந்தரர் பயணித்தபடி இருக்கிறார். அவர் பார்வையில் சாத்தனூர் மந்தைவெளியும், அதில் மாடுகளும், மாடுகளுக்கு நடுவே மூலன் பிணமாகக் கிடப்பதும் தெரிகிறது. பிணமாகக் கிடக்கும் மூலனைச் சுற்றி அத்தனை பசுக்களும் நன்றி உணர்வோடு கூடி நின்று அழுகின்றன. பசுக்கள் கண்ணீர் சிந்தும் அந்தக் காட்சிதான் சுந்தரரைப் பெரிதும் உலுக்குகிறது. மூலன் உடல் கிடக்கும் இடத்தை அடைந்து, பசுக்கூட்டத்தைப் பார்க்கிறார். இருள் சூழப் போகும் வேளை. மாடுகள் தத்தம் எஜமானர் குடிலை அடைந்தாக வேண்டும். ஆனால், வழி நடத்தும் மூலனோ பிணமாக!

சுந்தரரின் தேவ உள்ளத்தில் கருணை பெருக்கெடுக்கிறது. தான் அறிந்த கூடு விட்டுக் கூடுபாயும் வித்தையால் தன் உடலை அங்கே ஓரிடத்தில் கிடத்திவிட்டு, உயிரை உடம்பி னின்று விடுவித்து, உயிரற்ற மூலன் உடலுக்குள் புகுத்துகிறார். மூலன் எழுந்து நிற்கிறான். மாடுகளிடம் மகிழ்வும் உற்சாகச் செருமலும் ஏற்படுகிறது. அவை மூலன் என்று கருதி, சுந்தரரைத் தம் நாவாலே நக்கி அன்பை வெளிக்காட்டிட... சுந்தரரும் பெரிதும் மகிழ்கிறார். இப்படிப் புறத்தே அன்பு காட்டி, அதன் மூலம் பதில் அன்பைப் பெறும் முதல் அனுபவமும் அவர் வரையில் அப்போதுதான் ஆரம்பமாகிறது. தொடர்ந்து, மாடுகளை எல்லாம் ஊருக்குள் அழைத்து வருகிறார் சுந்தரர். மாடுகள் அனைத்தும் தத்தம் பட்டியை அடைகின்றன.

'அப்பாடா... கடமை முடிந்தது; இனி நாம் சுந்தரனாக நம் பயணத்தைத் தொடங்குவோம்' என்று அவர் எண்ணும்போது தான், விதி தன் விளையாட்டைத் தொடங்கியது. மூலனின் மனைவி அவனைத் தேடிக் கொண்டு எதிரில் வந்தாள். 'இன்று ஏன் இவ்வளவு தாமதம்? வேகமாக வீட்டுக்கு வாருங்கள்' என்று பாசத்தோடு பேசினாள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சுந்தரனுக்கும், தற்போதைய தனது உடம்புக்கு உரியவனின் மனைவிதான் இவள் என்பது புரிந்தது. அவளிடம், 'மூலன் இறந்துவிட்டான்; நான் அவனது உடம்புக்குள் இருக்கும் சுந்தரன் என்று எப்படி சொல்வது? அதை அவள் நம்புவாளா? நம்பினால், அவளால் தாங்க முடியுமா?' - சுந்தரனுக்குள் கேள்விகள் எழுகின்றன. அவனது இதயத்திலும் கருணையின் ஊற்று. அதனால், மௌனமாக அவளைத் பின்தொடர்ந்தார்.

பாசமும் பந்தமுமான ஒரு குடும்ப வாழ்வு எப்படி இருக்கும் என்பதை அறிந்திடும் வாய்ப்பாகவும் அன்றைய நிலைப்பாடு இருந்தது. அதே வேளையில், மூலன் மனைவி அவரிடம் இருந்த வேற்றுமைகளை மெள்ள உணரத் தொடங்கினாள்.

மூலன் பசி தாளாதவன், முன்கோபி. படபடவென்று பேசுபவன். ஆனால், சுந்தரரோ பசியே அறியாத தேவர். சாந்த சொரூபி. பேச்சிலும் மிக இதமான தன்மை. இவை எல்லாமே அவளை ஆச்சரியப்படுத்தின.

ஒருகட்டத்தில், சந்தேகத்தோடும் துக்கத் தோடும், "மச்சான்... உனக்கு என்ன ஆச்சு? நீ என் மச்சான்தானான்னு சந்தேகமா இருக்கு!" என்று அவள் வாயிலேயே வந்துவிடுகிறது. சுந்தரரும் இனியும் உண்மையை மறைத்தால் அது பெரும் தவறு என உணர்ந்து, "தாயே! நான் உண்மையில் உன் கணவன் அல்ல; உன் கணவனின் உடம்புக்குள் கூடுவிட்டு கூடுபாய்ந்த கயிலாயத் தேவன்" என்றார்.

அதைக்கேட்டு ஆடிப் போனாள் மூலன் மனைவி. அவளால் அதை நம்பவும் முடிய வில்லை; நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. விஷயம், சாத்தனூர் பெரியவர்கள் பலரிடம் சென்றது. அவர்களும் சுந்தரன் சொன்னதைக் கேட்டு ஆடிப் போனார்கள்.

'கூடுவிட்டுக் கூடு பாய்வதா? அது எப்படிச் சாத்தியம்? இதுவரை கேள்விப்பட்டதே இல்லையே!

இது உளறல்; ஏமாற்று வேலை!' - இப்படிப் பல கருத்துகள். சுந்தரன் அதற்கெல்லாம் சொன்னது ஒரு பதில்தான்: "சந்தேகமாக இருந்தால், மாடுகள் மேயும் மந்தைவெளியில் தான் என் உடல் கிடக்கிறது. வாருங்கள், அங்கே போய்ப் பார்க்கலாம். இந்த உடம்பை விட்டு, அதில் புகுந்து எழுந்து, உங்கள் கருத்துகளை பொய்யாக்குகிறேன். நான் கயிலாயத்தேவன். உங்களைப் போல பஞ்ச பூதங்களுக்குக் கட்டுப்பட்ட, கர்மப் பிறப்பெடுத்த அற்ப மானிடன் அல்ல!"

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்றபடியே மந்தைவெளி நோக்கி நடக்கத் தொடங்கினார்.

நடந்த அனைத்தையும் கயிலாயத்தில் இருந்துகொண்டே மோனக் கண்களால் பார்த்தபடி இருந்த ஈசன் உதட்டிலோ குறும் புன்னகை. அதை நந்திதேவரும் கவனித்தார். "ஐயனே..! தங்களின் புன்னகைக்கான காரணத்தை அடியேன் அறியலாமா?" என்று பணிவாகக் கேட்டார்.

"என் பக்தனும் உன் சீடனுமான சுந்தரன் பாவம்... இப்போது இடை மூலனாகிவிட்டான். கருணையால் நேரிட்ட அந்த மாற்றத்துக்கு இடையில், 'நான் அற்ப மானிடன் அல்ல; கயிலாயத் தேவன்' என்கிற செருக்கான பேச்சு வேறு! பூலோகக் காற்று சுந்தரனையும் 'நான்' என்கிற செருக்குக்கு ஆளாக்கி விட்டது. அதை எண்ணும்போதே சிரிப்பும் வந்துவிட்டது..!"

"தேவா! உலக மாயையும் பந்தபாசமும் சுந்தரனைக் கட்டுப்படுத்தாது. அதை வென்று விட முடிந்த வைராக்கிய சித்தன் அவன்..!"

"அதையும்தான் பார்ப்போமே..!"

இப்படிச் சொன்ன ஈசன், மந்தைவெளியில் கிடந்த சுந்தரனின் உடம்பை மறையச் செய்தார். சிலர் அந்த ஈசனே புலி வடிவில் வந்து, அந்த உடம்பைத் தின்றுவிட்டுச் சென்றார் என்பர். எப்படியானால் என்ன?

சுந்தரன் உடம்பு இல்லாது போவதுதானே முக்கியம்? அப்போதுதானே கர்மத்தால் வந்த இந்திரிய உடம்புக்குள் இருக்கவும் முடியும்?

மந்தைவெளிக்குக் கூட்டமாய் வந்து, உடல் இல்லாதது கண்டு விக்கித்துப் போனார் சுந்தரன். தான், மூலன் உடலில் சிக்கிக்கொண்டதும் புரிந்தது. உடனே, அவரது மனம் குருவான நந்தியை எண்ணிப் பிரார்த்தித்தது. நந்தியும் சுந்தரன் முன் தோன்றினார்.

"சுந்தரா! இது இறைவனின் விருப்பம். உன் சித்த வைராக்கியத்தை இந்தக் கர்ம உடம்பில் இருந்து காட்டவே சுந்தரனான நீ இப்போது மூலனாகி உள்ளாய். அந்த வைராக்கியத்தைக் காட்டு. உலகின் மாயா விநோதங்களை, கர்ம, குரோத, லோப, மாச்சரியங்களை நேருக்கு நேர் சந்தித்து, அவற்றை வெற்றிகொள். அப்போதுதான், இடை மூலனாய் நிற்கும் நீயும் திருமூலன் ஆவாய். உன்னால்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

புதியதோர் சித்த இலக்கணம் தோன்றட்டும். அரிய செய்திகளை உலகு அறியட்டும். மனத்து எண்ணங்களே பேச்சாகின்றன. அந்த எண்ணங்களை அடக்கி வெற்றிகொண்ட மனத்தின் திறமோ மனத் திறமாகி, அதுவே மந்திரமாகிறது. உன்னாலும் மந்திரங்கள் உருவாகட்டும். அது திருமந்திரம் என்றாகட்டும். உனக்கு என் வாழ்த்துகள்!" என்று கூறி மறையவும், சுந்தரரும் அப்போதே தன்னை மூலன் என்றாக்கிக்கொண்டார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 21

நடுவு நின்றான் நல்ல கார்முகில்வண்ணன்
நடுவு நின்றான் வல்ல நான்மறை ஓதி
நடுவு நின்றார் சிலர் ஞானிகள் ஆவோர்
நடுவு நின்றார் நல்ல நம்பனும் ஆமே!

- திருமந்திரம்

பூலோகம் வந்த இடத்தில் உடம்பு இல்லாதுபோன சுந்தரன், நந்தியின் அருளால் மூலன் உடலில் இருந்தபடியே திருமூலன் ஆனார்.

'இந்த மூலன் இனி ஒரு யோக சித்தன். இந்த உடம்பை அடக்கி ஆளப் போகின்றவன். இனி, என் உள்ளமே கோயில்; இந்த ஊனுடம்பே ஆலயம்; உள்ளே உள்ள கள்ளப் புலன் களெல்லாம் ஏற்றிவைத்த மணி விளக்குகள்; தெள்ளத் தெளிந்த எனக்குள் உள்ள ஜீவனே சிவலிங்கம்' என்று சங்கல்பித்துக் கொண்டார். இதுவே, பின்னாளின் திருமந்திரப் பாடலாக வெளிப்பட்டது.

உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தோர்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளாமணி விளக்கே!

- என்னும் அந்தப் பாடல் மட்டுமல்ல, திருமந்திரப் பாடல்கள் ஒவ்வொன்றுமே எளிதில் மனத்தில் தங்கிவிடக்கூடிய சொற்கட்டும் பொருட்சிறப்பும் கொண்டவை. மூவாயிரம் பாடல்கள் கொண்ட திருமந்திரம் மட்டுமல்ல... முந்நூறு மந்திரம், முப்பது உபதேசம் என்றும் இவர் எழுதியிருப்பதாகத் தகவல்.

சரி, நாம் திரும்ப மூலனிடம் வருவோம்.

திருமூலனாகிய சுந்தரன், அந்த உடம்புக்குரியவனான

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மூலனின் மனைவியை எப்படிச் சமாளித்தார் என்று பார்ப்போம்.

தன் தேவ உடல் மறைந்தால் என்ன, தான் இருப்பது புகுந்த உடல் என்பதை நிரூபிக்க முனைந்த சுந்தரன், மூலன் உடம்பை விட்டுத் தன் உயிரை வெளிக்கொண்டு சென்றார். அப்போது பிணமான மூலனின் உடலைப் பார்த்து அழுத அவன் மனைவி, "நான் உண்மையைத் தெரிந்துகொண்டேன். இந்த உடலில் இருந்தே நீங்கள் உங்கள் திருத்தொண்டைச் செய்யுங்கள். நான் இனி உங்களிடம் மனைவி என்று உரிமை கொண்டாட மாட்டேன். இந்த உடம்பாலும் பெயராலும்தான் நீங்கள் இனிப் பரவலாக அறியப்படப் போகிறீர்கள் என்கிற சந்தோஷமே எனக்குப் போதும்!" என்று வணங்கி நின்றாள்.

சுந்தரனும் அது முதல் மீண்டும் மூலனாகி, அந்த உடம்பில் இருந்தபடியே திருவாவடுதுறை ஆலயத்தை அடைந்து, யோகத்தில் ஆழ்ந்தார்.

இந்த யோக நெறிக்குள்தான் 'ஞானம், யோகம், சரியை, கிரியை' எனும் நால்வகை நன்னெறிகளும் உலகத்தவர் பொருட்டுப் பாடல்களாய் அவரது மனத்தில் திரளத் தொடங்கின.

இப்படி, யோக நெறியோடு ஒருபுறம் வாழ்ந்த போதிலும், கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை காரணமாக திருமூலருக்குப் பல அனுபவங்கள் காத்திருந்தன. திருமூலரையும் அவரது திருமந்திரத்தையும் ஆழ்ந்து அனுபவித்துக் கற்றவர்கள் பலர். அவர்களில் சிலரிடம் இந்தக் கூடு மாறல் சங்கதிகள் குறித்த ஈர்ப்பு பெரிதாக இல்லை.

இடையனான மூலன் உடம்பில் புகப்போய் அவர் திருமூலர் ஆனார் என்பதோடு, அவரின் திருமந்திரம் நோக்கி இவர்கள் சென்றுவிடுகின்றனர். ஆனால், திருமூலர் அதன் பின் வீரசேனன் எனும் அரசன் உடம்புக்குள்ளும், பின்பு ஒரு வேதியர் உடம்புக்குள்ளும் புகும் ஒரு விதிப்பாடு அவர் பூவுலகம் வந்த நிலையில் ஏற்பட்டதாகவும் தெரிகிறது.

இதைப் பெரிதாகக் கருதாமல் கடப்போரும் உண்டு. 'இருந்துவிட்டுப் போகட்டும்; அதனால் என்ன?' என்று கேட்போரும் உண்டு. சித்தர்கள் வரலாற்றைக் கதை போலத் தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கோ, அவர்களின் கூடு விட்டுக் கூடு பாய்ந்து வாழ்ந்த வாழ்வே பெரும் சுவாரஸ்யமாக உள்ளது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

திருமூலரின் அந்த அரச வாழ்வையும், வேதிய வாழ்வையும் அறிவதற்கு முன், அவர் கயிலாயத்தில் இருந்து வந்தவர் என்பதன் பின்னேயும் நாம் சிந்திக்கச் சில விஷயங்கள் உள்ளன.

கயிலாயத்து சுந்தரனை இறைவனே பூவுலக மாயையை உணரவும் தெளியவும் அனுப்பிவைத்தான் என்பது ஒரு கருத்து.

"இல்லையில்லை... 'வளப்பில் கயிலை வழியில் வந்தேனே' எனும் பாடல் வரியின்படி பார்த்தால், அவர் திருக்கயிலாய பரம்பரை வழிவந்தவர் என்றுதான் கொள்ளவேண்டும். இறைவனே அவரை அனுப்பிவைத்தார் என்பது மிகையாகப் படுகிறது" என்று கூறுவோரும் உள்ளனர்.

திருமூலர் பற்றி நுட்பமான ஆய்வு மேற்கொள்வோருக்குச் சவாலாகப் பல சங்கதிகள் அவர் பாடல் வரிகளிலேயே இருக்கின்றன.

நந்தி அருளாலே மூலனை நாடினேன்...

நாடிப்பின் நந்தி அருளாலே சிவன் ஆயினேன்...

-எனும் அவரது வரிகளின்படி பொருள் கொள்ளப்போனால் நிறையவே இடிக்கிறது.

'நந்தி அருளாலே மூலனை நாடி' எனும் வரிகளில் உள்ள மூலன், அந்த ஆதிசிவனைக் குறிப்பதாகும். அவன்தான் முற்றிலும் முதலுமாகி மூலமாய் இருப்பவன். எனவேதான், அந்த மூலனை நாடினேன். பின், குருவான நந்தி அருளாலே 'என்னுள்ளே நானே சிவனும் ஆயினேன்' என்று கூறுவதாகவும் கொள்ளலாம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



இந்த மாதிரி பொருள் கொண்டால், மாட்டு இடையனான மூலனை அவர் குறிப்பிடவில்லை என்றாகிறது. அப்படியென்றால், இடையன் உடம்பில் அவர் கூடுமாறிப் புகுந்தார் என்பது புனைகதையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆனால், திருமூலர் குறித்துப் பெரிய புராணம் படைத்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சேக்கிழார்பிரான் மற்றும் உமாபதி சிவாச்சார்யர் பாடல் வழியாகப் பார்த்தால், கயிலாய சுந்தரர் இடையன் மூலன் உடம்பில் புகுந்து பூவுலக வாசியாகச் சிக்கிக்கொண்டது உண்மையில் நிகழ்ந்த ஒன்றே என்று கருத வேண்டியுள்ளது.

கயிலாயத்தொரு சித்தர் பொதியில் சேர்வார்

காவிரிசூழ் சாத்தனூர் கருதும் மூலன்

பயிலாநோ யுடன்வீ யத்துயர் நீடும்

பசுக்களைக் கண்டவன் உடலில் பாய்ந்தபோத

அயலாகப் பண்டை உடல் அருளால் மேவி

ஆவடு தண் டுறை ஆண்டுக்கொருபா வாகக்

குயிலாரும் அரசடியில் இருந்து கூறிக்

கோதிலா வடகயிலை குறுகினாரே!

-எனும் பாடல் வரிகள், மூலன் உடம்பில் சுந்தரர் புகுந்ததை உறுதி செய்கின்றன. சித்தர் பெருமக்கள் வரையில் அஷ்டமா சித்துக்கள் ஒரு பொருட்டானவை அல்ல! எனவே, திருமூலர் கூடு புகுந்தவர் என்பதை நம்பிட நாம் தயங்கத் தேவையில்லை.

எப்படிப் பார்த்தாலும், கயிலாயத்து சுந்தரன் சிவ பெருமானால் பூவுலக மாயை உணர்ந்து தெளிய அனுப்பப் பட்டார் என்பதில் உள்ள கன பரிமாணம் மற்றதில் இல்லை. எனவே, அதை அப்படியே ஏற்றுப் பின்தொடர்வதே சரி எனப்படுகிறது.

நெடிய கால கதியும், சில சங்கதிகளும் மாறுபட்ட கருத்து களுக்கு இடம் தருவதையும் ஆரோக்கியமாகவே கருதலாம்.

'பாத்திரம் பெரிதா? பதார்த்தம் பெரிதா?' என்றால், பதார்த்தத்துக்கே பாத்திரம்! அந்த வகையில், திருமூலர் குறித்துப் பல மாறுபட்ட கருத்துகள் இருந்தாலும், அவரது திருமந்திரம் குறித்து இதுபோல மாறுபட்ட கருத்துகளைக் கூறமுடியாது.

திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்

திருமந்திரமே சிவமாம் - அருமந்த

புந்திக்குளே நினைந்து போற்றும் அடியார் தமக்குச்

சந்திக்கும் தற்பரமே தான்!

-எனும் பாடல் திருமந்திரச் சிறப்பை உறுதி செய்கிறது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

திருமந்திரம் இந்த அளவு போற்றப்படுவதற்கு காரணமே, அதனுள் உள்ள கருத்துச் செறிவும், மனித சமுதாயத்துக்கு அது வழிகாட்டுவதாக இருப்பதும்தான்.

கடவுள் மறுப்பாளர்கள் எனப்படும் நாத்திகர்கள்கூடச் சில திருமந்திரக் கருத்துக்களை மறுக்காமல் ஒப்புக்கொண்டு, அதை ஏற்றுச் செயல்பட்டுள்ளனர்.

திருமந்திரத்தின் இன்னொரு சிறப்பு, பளிச்சென்று பாமரனுக்கும் புரியும் விதத்தில் அதன் சொற்கட்டுகள் இருப்பதுதான்.

சிந்தை தெளிந்தார் சித்தர்

தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்

தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்

முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பவர்கள்

பின்னை வினையைப் பிடித்து பிசைவார்கள்

ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்

தேடியும் காணீர் சிவனவன் தாள்களே!

ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்

ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை

யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை

யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி

யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே!

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

ஒன்றே குலம், ஒருவனே தேவன்

- இப்படித் திருமந்திரப் பாடல் வரிகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த வரிகளுக்குப் பொருள் தெரிய பெரும் தமிழறிவோ கல்வி ஞானமோ தேவையில்லை. காதில் விழுந்த மாத்திரத்தில் பொருள் புரிந்துவிடும்.

இத்தனைக்கும் திருமூலரை சங்க காலத்தவராகக் கருதவே வாய்ப்பு அதிகம் காணப்படும் நிலையில், அன்றைய சங்க காலப் பாடல்களோடு ஒப்பிடுகையில், இதன் எளிமையும் எக்காலத்துக்கும் பொருந்தும் தன்மையும் வியப்பை அளிக்கிறது அல்லவா?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஒரு விஷயம் காலாகாலத்துக்கும் வாழ வேண்டும் என்றால், அது எளியதாய், அதேநேரம் வலியதாய் இருக்க வேண்டும். அப்படி இருந்துவிட்டால், அதை எவராலும் மறுக்க முடியாது என்பதற்குத் திருமந்திரம் ஒரு பெரும் சான்று.

இப்படிப்பட்ட திருமந்திரப் பாடல் களில் பல பாடல்கள் மனித குலத்துக்கு இன்றும் என்றும் வழிகாட்டக் கூடியவை. அதில் மிக ரசமான ஆழ்ந்த கருத்துள்ள சில பாடல்களையும் அதன் பொருளையும் பின்னர் பார்ப்போம்.

இப்போது சுந்தரனாகிய திருமூலருக்கு உலக மாயை தெளிவாகக் காரணமான சம்பவங்களுக்குள் புகுவோம்.

முதல் சம்பவம்... மூலன் உடம்புக்குள் புகுந்து பசுக் கூட்டத்தின் கண்ணீரைத் துடைத்த சம்பவம். பின், மூலன் மனைவியிடம், 'நான் உன் கணவனில்லை' என்று கூறி அவளுக்கு பிரிவைத் தந்து விலகிய சம்பவம். இந்த இரண்டுக்குள்ளுமே பெரிய உணர்வாய் இருந்து அவரை

சஞ்சலப்படுத்தியவை பந்தபாசம் என்னும் உணர்வும், கருணை என்னும் உணர்வுமாகும். அடுத்து, அவருக்காகக் காத்திருக்கும் அனுபவம் அரச வாழ்க்கை!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 22

நில்லா சீவன் நிலையென்றென எண்ணி
வல்லார் அறுத்தும் தவத்துளும் ஆயினார்
கல்லா மனிதர் கயவர் உலகினில்
பொல்லா வினைத்துயர் போகம் செய்வாரே!

- திருமந்திரம்

ஒருமுறை, வீரசேனன் என்னும் அரசன் இளம் வயதிலேயே விஷத் தாக்குதலுக்கு ஆளாகி இறக்க நேரிட்டது. அவனது இளம் மனைவி குணவதி, அரசனின் உடலருகே அமர்ந்து கண்ணீர் விட்டாள். அந்த நாட்களில் கணவன் இறந்தால், மனைவியும் உடன்கட்டை ஏறுவது வழக்கத்தில் இருந்தது.

இன்று, பெரும் மூடப்பழக்கமாக, கொடியதாக இது கருதப் பட்டாலும், அன்றிருந்த சூழ்நிலையில் உடன்கட்டை ஏறுவது என்பது பெரும் பாக்கியமான விஷயமாகவும், உடன்கட்டை ஏறுபவர் தெய்வமாகிவிடுவதாகவும் கருதப்பட்டது. அப்படி உடன்கட்டை ஏறி தெய்வமாகிவிட்டவர்களுக்கான கோயில் களும் 'சதி கோயில்' எனும் பெயரில் இன்னும் பல இடங்களில் காணப்படுகின்றன.

இருந்தாலும், இந்த உடன்கட்டைச் சடங்கு, உடன் இருப்பவர்களைப் பெரிதும் துக்கத்தில் ஆழ்த்துவதாக இருந்தது. அரசன் வீரசேனன் இறந்துவிட்ட நிலையில், ஒரு நாடே வழிகாட்டியை இழந்து நின்றது. கூடவே, அந்த நாடு உடன்கட்டை என்னும் பெயரில் அரசியையும் இழக்கப் போகிறது. அரசன், அரசி என இருவரும் இறந்துபோனால், அதன்பின் இந்த நாட்டை யார் நிர்வகிப்பது? எதிரிகளும் இதுதான் சந்தர்ப்பம் என்று நாட்டைத் தங்கள் வசப்படுத்த முயற்சி செய்யலாம்.

இப்படியொரு குழப்பமான நிலையில், வீரசேனனின் நாடே பெரும் சோகத்தில் சிக்கித் திணறிக்கொண்டிருந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இதுபற்றி அறிந்த திருமூலருக்கு, அது ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. திருவாவடுதுறை ஆலயத்தில் தன்னை நிஷ்டையில் ஈடுபடுத்திக்கொண்டு தவத்தில் இருந்தவரைச் சந்தித்த நாட்டு மந்திரி, திருமூலரையே ஒரு கடவுளாகக் கருதி, தியானத்தில் அமர்ந்திருந்த அவரை வலம்வந்தார். தொடர்ந்து, 'யோகியாரே... எங்கள் நாட்டுக் குழப்பம் தீர தகுந்த வழிகாட்டுங்கள்' என்று கண்ணீர் மல்க பிரார்த்தித்தார்.

அது திருமூலர் உள்ளத்தை உருக்கியது. மேற்கொண்டு விஷயத்தை அறிந்தவர், அப்போதே அரசனின் உடம்புக்குள் கூடு மாறி உட்புகத் தீர்மானித்தார். அரசன் உயிர்த்து எழுந்தால், அரசியும் உடன்கட்டை ஏற நேராது. எதிரிகளும் ஏமாறுவார்கள். நாட்டு மக்களின் சோகமும் அகலும். ஆனாலும், இதெல்லாம் ஒரு தற்காலிகத் தீர்வே!

நிரந்தரமான மகிழ்ச்சி, நிரந்தரமான விடுதலை உணர்வு என்பது இந்த மாயா உலகில் பற்றற்று வாழ்வதில்தானே உள்ளது? இந்த உண்மையை உணர்த்தும் கடமையும் தனக்கு இருப்பதைப் புரிந்துகொண்டு தன் நாடகத்தை தொடங்கினார் திருமூலர்.

பிரேதமாக கிடந்த அரசனின் உடம்புக்குள் நுழையும் முன், தனது உடலை போன முறை இழந்துவிட்டதைப்போல இழந்துவிடக் கூடாது என்று கருதியவர், சித்தர்கள் உறையும் சதுரகிரிக்கு வான் மார்க்கமாகச் சென்று, அங்கு ஓங்கி வளர்ந்திருந்த மரம் ஒன்றின் பொந்துக்குள் தன் 'மூலன்' உடலைஜீ பாதுகாப்பாக வைத்துவிட்டு, அதன் பிறகே அரசன் வீரசேனனின் உடம்புக்குள் உட்புகுந்தார்.

திடீரென்று மன்னன் உடலில் அசைவுகள் ஏற்படக் தொடங்கியதும், எல்லோரும் வியந்து நின்றனர். சற்று நேரத்தில் அரசனும் விழித்து எழுந்தான். அரசி பூரித்துப் போனாள்.

இம்முறை, மூலனின் மனைவியிடம் நடந்து கொண்டதுபோல், அரசியான குணவதியிடம் திருமூலர் நடந்து கொள்ளவில்லை. மாறாக, ஒரு ஞானி அரசனாக மாறினால் அவன் ஆட்சி எப்படிப்பட்டதாக இருக்குமோ, அப்படி ஒரு தர்மத்தின் ஆட்சி அவரால் நடக்கத் தொடங்கியது. அதேநேரம், அரசியிடமும் மந்திரிகளிடமும் வாழ்வின் நிலையாமை குறித்த பேச்சு அவரால் அடிக்கடி பேசப்பட்டது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

'உயிர் பிரிவதை இழப்பாகவோ அழிவாகவோ கருதக் கூடாது. அது ஒரு மாற்றம். உடல் என்பது பஞ்ச பூதங்கள் ஒன்றுபட்டு உருவாகும் ஒன்று. அதற்குக் கருவறை தொடக்கம் என்றால், முது நிலையே முடிவு. உடல் அழியும்; ஆன்மா அழியாது. அப்படி அழியாத ஆன்மா இறைவனோடு கலக்க வேண்டும். அதற்கே மானுடப் பிறப்பு! எனவே, பிறப்பின் நோக்கம் புரிந்து வாழ்வை இறைச் சிந்தையோடு வடிவமைத்துக் கொள்ள வேண்டும். பிறவா நிலையை அடைய, வாழும் நாளை அர்த்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.'

- இப்படி அவரால் உபதேசங்கள் செய்யப்பட்டன. இது அரசியிடம் ஆச்சரியத்தை உருவாக்கியது. அவள் கணவன் செத்துப் பிழைத்தவன். அப்படிப் பிழைத்துக்கொண்ட பிறகு, அவனுக்குள் இருந்த வீரம்மிக்க அரசன் எங்கே போனான் என்றே அவளுக்குத் தெரியவில்லை. மாறாக, ஒரு பற்றற்ற சந்நியாசி போல மன்னன் பேசுவதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. அரசனாக இருந்தும் சந்நியாசி போலவே அவன் வாழ்ந்ததும் அவளை உறுத்தியது.

ஒருநாள், அரசனாகிய திருமூலரிடமே அதைக் கேட்டுவிடத் தீர்மானித்தாள். அந்த நேரமும் வந்தது.

''உங்களுக்கு என்னாயிற்று? நீங்கள் அரசரா? இல்லை... சந்நியாசியா? ராஜ போகங்களோடு ஒட்ட மறுத்து, பஞ்சணை இருக்க, கீழே தரையில் படுக்கிறீர்கள். பால், பழங்களுடன் மதுரசமும் இருக்க... ஏழு மிளகை மட்டும் உண்டு தண்ணீர் குடித்து, ஒரு நாளையே கடத்துகிறீர்கள். உங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை'' என்றாள்.

திருமூலரும் அரசியிடம் உண்மையைச் சொல்லும் நேரம் வந்துவிட்டதை உணர்ந்தார்.

''உண்மைதான் பெண்ணே! நான் தோற்றத்தில் உனக்கு அரசன். உண்மையில் நானொரு சந்நியாசி. என் ஆதி நாமம் சுந்தரன். பின், மூலன் ஆனேன். இப்போதோ இந்த உடல் நிமித்தம் வீரசேனன் ஆகியுள்ளேன். உன் கணவன் ஆத்மா எப்போதோ இந்த உடலைப் பிரிந்து இறைவன் நிழலடி சேர்ந்து விட்டது. நீயும் உடன்கட்டை ஏறிடத் துணிந்தாய். நாட்டு மக்கள் கதறினார்கள். எதிரிகளும் சுற்றி வளைக்கத் தீர்மானித்தார்கள். இவை எல்லாம் என்னை யோசிக்க வைத்தன. நான் கற்ற பரகாயப் பிரவேசம் என்னும் கூடு மாறும் வித்தை எனக்கு கைகொடுத்தது. அதனால், இறந்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சாம்பலாக இருந்த உன் கணவன் உடலுக்குள் புகுந்து எழுந்தேன். உங்களை எல்லாம் ஆற்றுப்படுத்த எண்ணியே உபதேசம் புரிந்தேன். அதுமட்டுமல்ல, ஆண்டியான நான் அரச வாழ்வையும் உணரத் தலைப்பட்டேன்.



இந்த உலகின் மாயை தெளிய இறைவனால் அனுப்பப் பட்டவன் நான். மனித வாழ்வின் அனைத்து நிலைப்பாடு களையும் இப்போது உணர்ந்துவருகிறேன். உணர்ந்தவற்றை வருங்கால மாந்தர்கள் கசடற உணர்ந்திட நான் எழுத வேண்டியவை ஏராளம் உள்ளன. இனி அதை நோக்கியே என் பயணம். நீயும் வாழ்வின் நிலையாமையைப் புரிந்துகொண்டு, இருக்கும் நாளை இறைத் தொண்டுக்கு ஆட்படுத்து. மக்களையும் அதே நெறியில் நடக்கச் செய். அதற்கே உனக்கு அரசி எனும் பதவியை இறைவன் அளித்துள்ளான்!" என்று அரசிக்கு உபதேசம் செய்திட... அரசியிடம் பெரும் திகைப்பு! கூடவே, ஒரு சுயநலமிக்க தவறான முடிவையும் அவள் எடுத்தாள்.

அதன் அடியொற்றி, "நீங்கள் சொல்வதை நான் எப்படி நம்புவது?" என்று அவள் கேட்க, "சந்தேகமாக இருந்தால், சதுரகிரி வனத்தில் மரப் பொந்தில் இருக்கும் என் உடலைப் பார்த்தால், நான் கூறுவதை உண்மை என்று நீ உணரலாம்" என்றார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அடுத்த நொடியே அரசி தன் சேவகர்கள் சிலரை அந்த உடல் இருக்கும் இடத்துக்கு அனுப்பினாள். வீரர்கள் சதுரகிரி மலையை அடையவே பல நாட்கள் ஆயின. பின், அங்கே திருமூலர் ஒரு மரப் பொந்துக்குள் வைத்திருக்கும் உடலைக் காண மேலும் பல நாட்கள் தேவைப்பட்டன. ஏனென்றால், சதுரகிரியின் நான்கு மலைகளில் எந்த மலையில் உள்ள குகையில் திருமூலர் தன் உடலை உதிர்த்து வைத்திருந்தார் என்பதைக் கண்டறிவது சாதாரண செயலில்லை.

ஒருமுறை, தன் தேவ உடலைப் பாதுகாப்பு இன்றி விட்டு விட்டதால் அதை இழக்க நேர்ந்த அனுபவம், இம்முறை அவர் வரையில் கவனமாகச் செயல்பட வைத்திருந்தது. சில செவிவழிச் செய்திகளாலும், கதைகளாலும் இந்த உடலை திருமூலரின் சீடன் ஒருவன் காவல்காத்து வந்ததாகவும் கூறுவார்கள். எது எப்படியோ... அரசி வரையில் இந்தக் கூடு மாறல் என்பது எந்த அளவு சாத்தியம் என்பது தெரிய வேண்டும். அவளுக்கு இது நம்ப முடியாத ஓர் அதிசயம்.

வீரர்களும் சதுரகிரி வனத்தில் மரப் பொந்து ஒன்றுக்குள் பத்மாசனக் கோலத்தில் அமர்ந்த நிலையில் திருமூலரின் உடல் இருக்க, அதன் மேல் இலை தழைகள் விழுந்து உடம்பை மூடியிருப்பதைக் கண்டார்கள். இதுபோன்ற கூடு மாறும் தருணங்களில், உடல் கெட்டுப் போகாமல் இருக்கவும், மிருகங்கள் அங்கே வந்து தின்றுவிடாமல் இருக்கவும் உடம்பில் சில களிம்புகளையும் தைலங்களையும் பூசிக்கொள்வதும் உண்டு.

வீரர்கள் கண்ட உடலின் மீதும் களிம்பும் தைலப் பூச்சும் காணப்பட்டது. ஒரு பிடிக்காத வாடையும் வெளிப்பட்டபடி இருந்தது. வீரர்களில் சிலர் அங்கேயே இருக்க, மற்ற வீரர்கள் நாட்டுக்குத் திரும்பி வந்து திருமூலர் உடல் இருப்பது உண்மை தான் என்று அரசியிடம் தகவல் தெரிவித்தனர். அந்த உடம்பின் அருகில் சில வீரர்கள் காவலுக்கு இருப்பதையும் கூறினர்.

வீரர்களின் செய்தி கேட்டு, மேலும் ஆச்சரிய அதிர்வுக்கு ஆளானாள் அரசி. தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டாள்.

அப்படி அவள் என்ன சிந்தித்தாள்?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 23


மன்னன் வீரசேனனின் உடலுக்குள் கூடுவிட்டுக் கூடு பாய்தல் மூலம் உட்புகுந்திருப்பது திருமூலர் என்பதை அறிந்த அரசி, என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள். அரசி வரையில் உடல் மட்டுமே அரசன்; உயிரோ திருமூலர்! அதாவது, ஒரு சித்தயோகி. இந்நிலையில் உடலுக்கு மதிப்பளிப்பதா? உயிருக்கு மதிப்பளிப்பதா? இதனால் தன் கற்புநெறி என்னாகும்...? இப்படி அவளுக்குள் பல கேள்விகள்!

அரசிக்கு இருக்கும் இந்தக் கேள்விகள் திருமூலருக்கு இருக்காதா என்ன? கடந்த முறை மூலன் உடம்புக்குள் இரக்க உணர்ச்சி காரணமாகப் பிரவேசிக்க நேர்ந்தது. இம்முறையோ அரசன் உடம்புக்குள் இரக்க உணர்ச்சியால் மட்டுமல்ல; பல உண்மைகளை உலகுக்குப் புரியவைக்கவும் வேண்டியே இந்தப் பிரவேசம் நிகழ்ந்துள்ளது.

'பிறந்தவர் ஒரு நாள் இறந்தே தீர வேண்டும். இந்த இறப்பு ஒன்றும் அழிவு அல்ல; இது ஒரு மாற்றம். உயிரின் யாத்திரையில் அதன் அனுபவங்களில் ஒன்றே உலக வாழ்வு! பிறப்பில் மேலான பிறப்பு மனிதப் பிறப்பு. இந்தப் பிறப்பை எடுக்கும் போதே முக்கால சிந்தனை ஏற்படுகிறது. முக்காலம் என்னும் நேற்று இன்று நாளை என்னும் கால கதி ஏற்படுவதே மனம் சிந்திப்பதால்தான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



இந்த முக்கால சிந்தனை மூலம் பிறப்பை உணர்ந்து, அதன் மதிப்பை உணர்ந்து, மீண்டும் பிறந்துவிடாதபடி வினை புரிந்து, முக்தி அல்லது மோட்சம் எதுவுமில்லாது இறையோடு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கலந்துவிடுதல் வேண்டும். இதற்கு உடம்பு பற்றிய தெளிவு, அதைக் கட்டியாளும் வலிமை மிக முக்கியம். இதை உணரும் தன்மை கொண்ட மானுடப் பிறப்பில் பிறந்தும், இதை உணராது காலத்தின் கைதிகளாய், உடம்பின் வசம் சிக்கி, அதன் விருப்பு- வெறுப்புக்கு ஏற்ப நடந்துகொண்டு, திரும்பத் திரும்ப பலவித பிறப்பெடுத்து, உலக மாயையில் இருந்து விடுபட முடியாதவர்களாகவே மனிதர்கள் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு இதை உணர்த்த வேண்டும். குறிப்பாக, மக்களைக் கட்டி ஆள முடிந்த அரசன், அரசிக்கு இது முக்கியம்!' என்று உணர்ந்தே திருமூலர், அரசனின் உடலில் புகுந்தார்.

இப்படிப் புகுந்தவர், எவ்வளவு காலம் இருப்பார் என்பது அரசி உள்பட யாருக்கும் தெரியாது. அரசன் உடலில் அவர் புக நேர்ந்தது போல, நாளை தன் பழைய திருமூல உடம்பில் மீண்டும் புக நேர்ந்தால் தன் நிலை என்ன என்று யோசித்த அரசிக்கு, அப்படியொரு நிலை ஏற்பட்டால், தான் கணவனை இழந்த விதவையாக பார்க்கப்படுவது மட்டுமல்ல, ஒரு கூடு பாய்ந்த சித்த யோகியோடும் வாழ்ந்தவள் என்று இந்த உலகம் தூற்றாதா என்றும் அஞ்சினாள்.

இதற்கு ஒரே வழிதான் உள்ளது. நடந்தது நடந்துவிட்டது. இனி, இந்த யோகிதான் தன் வரையில் எல்லாம்! இந்த உடம்பை விட்டுத் திருமூலர் விலகிடாதவண்ணம் இருக்க ஒரே வழிதான் உள்ளது. அது, அந்தத் திருமூலரின் உடலை அழித்து விடுவது ஒன்றுதான். எனவே, தனது வீரர்களை அழைத்து, அந்த உடலை எரித்துவிட உத்தரவிட்டாள் அரசி. அவர்களும் அவ்வாறே செய்யச் சென்றார்கள்.

அரசியும் திருமூலரோடு ஒன்றும் அறியாதவள்போல வாழத் தொடங்கினாள். திருமூலரும் ஓர் அரசனின் சுகபோகங்களையும், ராஜ மரியாதைகளையும், ராஜ்ஜிய செயல்பாடுகளையும் அணு அணுவாய் உணரும் வாய்ப்பைப் பெற்றார். ஒருமுறை, வேட்டைக்குச் செல்லும் சாக்கில் தன் உடலைக் காணச் சென்றவர், அங்கே உடல் இல்லாமல் சாம்பல் பூத்திருப்பது கண்டு, உண்மையை ஞான திருஷ்டியால் அந்த நொடியே உணர்ந்துகொண்டார்.

அவருக்கு உடனே அரசியின் மேல் கோபம்தானே வர வேண்டும்? ஆனால், வரவில்லை. காரணம், அரசி உலகை எண்ணி பயந்தது முதல், சுமங்கலியாக வாழ விரும்பியது

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வரை சகலமும் அவருக்குப் புரிந்தது.

அதே நேரம், அரசனின் உடலில் இருந்துகொண்டு யோக நெறிகளைப் பின்பற்றித் தன்னாலும் வாழ முடியாத இக்கட்டான சூழ்நிலையும் திருமூலருக்குப் புரிந்தது. இந்த அனுபவங்கள் 'நிலைப்பாடு' என்பதன் தன்மையை அவருக்கும் உணர்த்தின.

திருமூலர் தனது செயல்பாடுகளை எல்லாம் தெரிந்துகொண்டு விட்டதை அரசியும் அறிந்து, அவர் காலில் விழுந்து, தன்னை மன்னிக்கக் கோரினாள்.

"இதில் மன்னிக்க எதுவுமில்லை. அரசனாக வாழ்ந்து பல உண்மைகளைத் தெரிந்துகொண்டேன். நாட்டில் சில புதிய நெறிகளை நான் உருவாக்கினாலும், இந்த உடம்பைக் கொண்டு எனக்கான யோக நெறிகளை என்னால் பின்பற்ற இயலாது. உன்னையும் என்னால் பூரண மகிழ்வுக்கு ஆளாக்க முடிய வில்லை. சுருக்கமாகச் சொல்வதானால் ஆசை, மாயை போன்றவற்றின் சக்தியை மிக நன்றாகப் புரிந்துகொண்டேன்" என்றார் திருமூலர்.

அரசி அவரை அரசனாகத் தொடர்ந்து வாழ வேண்டினாள்; ஆனால், திருமூலர் மறுத்துவிட்டார் என்பர். அரச உடம்புக்குப் பின் அவர் ஒரு வேதியனின் உடம்புக்குள் புக நேர்ந்ததாம்! ஜம்புகேஸ்வரம் எனப்படும் திருவானைக்காவல் திருத்தலத் தில் ஒரு பிராமண இளைஞன் பிராணாயாம மூச்சுப் பயிற்சி யில் குரு உபதேசம் இன்றி இறங்கப்போய், அதில் சிக்கி உயிரையே விட்டுவிட நேர்கிறது.

அவனது உடம்புக்குள் புகுந்து எழும் திருமூலர், அதன்பின் அந்த உடம்பில் இருந்தவாறே தனது யோக நெறியைத் தொடர்ந்தார்; உலக மாயையினை முற்றாக வெற்றிகொண்ட பிறகே திருமந்திரத்தைப் படைத்தார் என்றும் கூறப்படுகிறது.

திருமந்திரமானது 3,000 பாடல்களைக் கொண்டது. இதை, திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து, ஆண்டுக்கு ஒன்றாகப் படைத்தார் எனும் கருத்து பெரிதும் ஆய்வுக்குரியது.

நம் வரையில் ஓர் ஆண்டு என்பது பன்னிரண்டு மாதங்களைக் கொண்டது. திருமூலரும் நான்கு வரியில் உள்ள ஒரு திருமந்திரப் பாடலுக்கு இந்தப் பன்னிரண்டு மாதங்களை எடுத்துக் கொண்டார் என்பது ஏற்றுக்கொள்ளக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கூடியதாக இல்லை. அதற்கு அவர் வாக்கில் எங்கேயும்

சான்றுகள் இல்லை. ஆனால், அவர் சராசரி மனித வாழ்வும் வாழவில்லை; நெடுங்காலம் வாழ்ந்தவர் என்பதற்கு 'ஒப்பில் ஒரு கோடி யுகம் இருந்தேனே...' எனும் வரி சான்றாக விளங்குகிறது.

ஆனாலும், மூவாயிரம் பாடல்களுக்குப் பின் மூவாயிரம் ஆண்டுகள் என்பதை சான்றோர்கள் மிகைப்பட உரைத்ததாகவோ, மூவாயிரம் பாடலுக்கு மூவாயிரம் ஆண்டு என்று கவிதைச் சந்தக் கணக்கு போலச் சொல்லிச் சென்றதாகவோ கருதவும் இடமில்லை. இதன்பின் நுட்பமான பொருள் இருக்கிறது. அது செழுமையான ஆய்வுக்கு உரியது.

திருமந்திரத்தை பக்தியோடும் பாங்கோடும் கற்று, அதன் கருத்தைக் கசடற உணர்ந்த நிலையில், இதற்கான விடையை ஒருவேளை நாம் உணர நேரலாம். அப்படி உணர்ந்திட திருமூலரின் திருவருளும் துணை செய்ய வேண்டும் என்பதும் முக்கியம்.

ஒரு குருவாக அவரை ஏற்று, அவரிடம் சரண் புகுந்து, பின் ஒரு மாணாக்க உணர்வோடு திருமந்திரத் துக்குள் கற்கப் புகுந்தால்... பல அரிய உண்மைகளை நாம் உணர முடியும். அரிய உண்மைகள் என்பது கூட லௌகீகமாகக் கூறப்படுவதே...!

ஞானப்பாடு என்று கூறினாலே சரியாக இருக் கும். புலன்களுக்குப் புலனா வதை அறிய முற்படுவதே அறிவு. புலனாவதற்கு அப்பாலும் ஊடுருவ முடிவதே ஞானம்.

அந்தவகையில், திருமூலரின் சில பாடல்களையும், அதன் ஆழ்ந்த பொருட் கட்டையும் அறிய முற்படுவோம்.

நூலும் சிகையும் நுவலில் பிரமமோ

நூலது கார்ப்பரிசம் நுண்சிகை கேசமாம்

நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்

நூலுடை அந்தணர் காணும் நுவலிலே

- என்று ஒரு திருமந்திரப் பாடல். இது, எது பிராமணீயம் என்பதற்கு விளக்கம் தருகிறது.

எண்ணி ஒருநாள் இயங்கிடில் பிங்கலை

தண்ணிய மூவாண்டில் தப்பாது மரணம்

ஒண்ணிய உபாயத்தில் ஓடிடில் பத்துநாள்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மண்ணில் மதி ஆறில் மரிப்பான் குறி இதே

- எனும் பாடல், மனித உயிரானது ஓர் உடலை விட்டுப் பிரிவதற்கு முன் காட்டும் குறிகளைப் பற்றிச் சொல்கிறது. இதை உணர்ந்தால், எப்போது மரணம் என்று கூறிவிடலாம்.

இப்படி ஒவ்வொரு பாடலுக்குள்ளும் ஒவ்வொரு உண்மை. அவை பற்றி, வரும் அத்தியாயத்தில் காண்போம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 24

அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பல உள
கண்டம் கறுத்த கபாலியும் ஆமே!'

- திருமந்திரம்

திருமூலரின் திருமந்திரப் பாடல்களில் பல பாடல்கள் அரிய பல கருத்துக்களை மிக எளிமையாகச் சொல்லிவிடுகின்றன. உதாரணத்துக்கு, 'மரத்தை மறைத்தது மாமத யானை' என்னும் பாடல். தமிழ்ச் சான்றோர்கள் இந்தப் பாடலைப் பெரிதும் வியந்து பேசுவார்கள்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே!

- இதுதான் அந்தப் பாடல்.

அதாவது, ஒரு யானை பொம்மை மரத்தால் செய்யப்பட்டது. அதை ஒரு குழந்தை பார்க்கும்போது அதற்கு மரம் தெரியாது; யானைதான் தெரியும். அதை மரமாகப் பார்ப்பவர்களுக்கோ யானை தெரியாது.

இதைப் போலத்தான், பஞ்சபூதங்களைப் பார்க்கும்போது ஞானிகளுக்கு அது தனித் தனியே பஞ்ச பூதங்களாகத் தெரியாது; அதைப் படைத்த பரமன்தான் தெரிவான். தனித்தனியே நீர், நிலம், காற்று என்று இவற்றைப் பிரித்துப் பார்ப்பவர்களுக்கோ பரமன் தெரிய மாட்டான்.

இந்தப் பாடலின் மூலம், ஒரு விஷயம் பார்க்கப்படுவதில்தான் அதன் பரிமாணம் புலனாகிறது என்பது தெரிகிறது அல்லவா? பார்க்கப்படுவதிலும்கூட

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எப்படிப் பார்க்கிறோம், எங்கிருந்து பார்க்கிறோம் என்பது மிக முக்கியப் பங்கை வகிக்கிறது.

ஒரு பெரும் கூட்டம். ஆயிரக்கணக்கானவர்கள் உள்ளனர். அதில் ஒருவர் தூரத்தில் முதுகைக் காட்டியபடி நின்றுகொண்டு இருக்கிறார். அவரைப் பார்க்கும் இன்னொருவர், அவரது பின் தோற்றத்தை வைத்து, தன் நண்பர்களில் ஒருவராக அவரைக் கருதி அருகில் சென்று, தோளில் கைபோட்டு, அந்த நண்பரின் பெயரையும் சொல்லி அழைக்கிறார். ஆனால், அந்த நபர் திரும்பினால் அவர் வேறு ஒருவர் என்பது தெரிகிறது. உடனேயே, தான் தவறாக அனுமானித்துவிட்டதை இவரும் கூறுகிறார். இப்படி நமக்கெல்லாமும்கூட நடந்திருக்கும்.

இந்தச் சம்பவம், பார்ப்பது மட்டும் போதாது;

சரியான கோணத்தில் பார்க்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது அல்லவா?

ஒருவர் வாழ்வில் இன்று எவ்வளவோ சம்பவங்கள். அவற்றுள் இந்தப் 'பார்ப்பதால்' வரும் குழப்பங்களுக்கு மிகவே இடம் கிடைத்துவிடுகிறது. பல குழப்பங்கள் நமக்குள் இருந்தால், இந்தத் தவறான பார்வைக் கோணமே அதில் முதலிடம் வகிக்கிறது.

திருமூலர் எப்படிப் பார்க்க வேண்டும் என்று மட்டும் கூறவில்லை; எப்படி வாழ வேண்டும், எப்படிப் பேச வேண்டும், என்ன செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது, எது நிலையானது, எது துன்பம் தருவது என்று, மனித வாழ்வின் அவ்வளவு விஷயங்களுக்கும் திருமந்திரப் பாடல்கள் வாயிலாக வழிகாட்டுகிறார். அவர் பாடல்களில், சான்றோர் உலகம் மிக வியந்து மிகப் பெரிதாகக் கருதுவது, உடல் குறித்த அவரது சிந்தனைகளைத்தான்!

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்

உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்

உடம்பினுள் உத்தமன் கோயில் கொண்டானென்று

உடம்பினை யானிருந் தோம்பு கின்றேனே.

- இது, திருமந்திரப் பாடல்களில் ஒன்று. இதில், நம் ஒவ்வொருவர் உடம்பையும் கோயில் என்கிறார். நம் உள்ளே உள்ள ஜீவனாகிய ஆன்மாவே சிவமாகிய கடவுள் என்கிறார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயமறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

-என்பதும் திருமந்திரப் பாடல்தான். இன்று உடல் வளர்த்தலை நம் சமூகத்தில் மிகத் தவறாகப் புரிந்துகொண்டு, நாக்கு கேட்பதை எல்லாம் தின்பதும், தின்ற களைப்பு தீர உறங்குவதும்தான் வாழ்க்கை என்று பலர் உள்ளனர். உடல் வளர்த்தலுக்குப் பொருள் இதுவல்ல. நோயற்றதாகவும், சக்தியின் வங்கியாகவும் இந்த உடலை ஆக்கிக்கொள்வதே உடல் வளர்த்தல் என்பதற்குச் சரியான பொருளாகும்.

நோயற்றதாகவும் சக்தியின் இருப்பிடமாகவும் இதை வைத்துக்கொள்வது எப்படி? மருத்து வர்கள் கூறுவதுபோல நடைப்பயிற்சி செய்து, உடற்பயிற்சிகள் செய்து, சத்தான உணவை உண்டு, நன்கு தூங்கி எழுவதால் மட்டும் நல்ல உடல் அமைந்துவிடுமா என்றால், அதுதான் இல்லை என்பதே பதில். அதை, கலகலப்பான ஆரோக்கிய உடல் எனலாம். ஆனால், நல்ல உடலுக்கான இலக்கணம் வேறு. ஆரோக்கியமான உடல் உடையவர், உடம்புக்கு பயந்தும் அடங்கியும் நடப்பவராவார். நல்ல உடல் கொண்டவருடைய உடல், அவர் மனத்துக்குக் கட்டுப்பட்டுச் செயலாற்றும்.


முன்னதாக, உடல் குறித்த ஒரு அறிவும் தெளிவும் மிக முக்கியம். இன்றைய விஞ்ஞானம் நம் உடல் உறுப்புகளுக்கெல்லாம் ஒரு பெயரை வைத்துள்ளது. அது எதனால் இயங்குகிறது என்பதைக் கூறுகிறது. நோயுறும்போது எந்தக் கிருமியால் நோயுற்றோம் என்பதைக் கண்டறிந்து கூறி, அந்த கிருமியை அழித்திட வழிவகை செய்கிறது. அவ்வளவுதான்!

ஆனால், நமது உபநிடதங்கள் உடல் குறித்து விரிவான பல அரிய செய்திகளைத் தருகின்றன. அந்த வகையில், ஐந்து வித அமைப்புகளுக்குள் நம் உடலும் உயிரும் இருப்பதை அவை தெரிவிக்கின்றன. 'அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், ஞானமய கோசம், ஆனந்தமய கோசம்' - இதுவே அந்த ஐவகை நிலை. உணவால் வளரும் உடல்தான் அன்னமய கோசம் எனப்படுகிறது. இதனூடே சுவாசித்து நடப்பது பிராணமயம்; மனத்தால் எண்ணங்களுக்கு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆட்பட்டிருப்பது மனோமயம்; அறிவாலே இவற்றை உணர்ந்து தெளிவது ஞானமயம்; ஞானமயத்தில் லயிக்கத் தொடங்கிவிட்டாலே ஆனந்தமயம் ஏற்பட்டுவிடுகிறது.



அத்வைத சித்தாந்தப்படி ஒவ்வொருவருக்கும் மூன்றுவித

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உடம்புகள் இருக்கின்றன. ஒன்று, தூல சரீரம். அடுத்து, சூட்சும சரீரம். மூன்றாவது, காரண சரீரம். இதில், தூல சரீரம் ஐவகை பூதத்தால் ஆனது. அதாவது, நம் வசம் இருப்பது. சூட்சும சரீரமோ பத்தொன்பது கூறுகளால் ஆனது. அதாவது, ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், நான்கு அந்தகரணங்கள் மற்றும் ஐந்து பிராணன்கள் கொண்டது.

இவை அத்தனையாலும் யோகம் பிரியும்போது மனம் ஒடுங்கி, உடம்பும் அடங்கி, குண்டலினி மேல் எழும்பி, அது உச்சந் தலையை அடைந்து, ஒரு பேரின்ப நிலை ஏற்படும் போதுள்ள சரீரம்தான் காரண சரீரம்.

திருமூலர் குண்டலினியைப் பெரிதும் வற்புறுத்துகிறார். குண்டலினி யோகப் பயிற்சியை அவர் ஒரு யாகம் செய்வதோடு ஒப்பிடுகிறார். குண்டலினியில் வென்றவர், உடம்பைப் பற்றி கவலைப்படத் தேவையே இல்லை. இந்த உடம்பைப் படகு ஆக்கிக்கொண்டு, அவர் பிறப்பெனும் பெரும் ஆற்றை மூழ்காமல் கடந்துவிடலாம்.

குண்டலினி பற்றித் திருமூலர் மட்டுமில்லை; பாம்பாட்டிச் சித்தர் முதல் காரைச் சித்தர் வரை பலரும் பாடியுள்ளனர். இது, அத்தனை சுலபத்தில் வசப்படாத ஒரு பெரும் வித்தை. பூர்வ ஜென்ம புண்ணியம். தகுந்த குருநாதரின் வழிகாட்டலோடு, நிகழ்கால வாழ்வில் காமத்தை வென்று உடம்பைப் புரிந்து வாழும் ஒரு நிலைப்பாட்டோடு ஒருவர் இருந்தாலே இது வசப்படும். ஏனென்றால், குண்டலினிக்கு மூலமாய்ப் பயன்படுவது விந்துவாகும். இது பரம்பரைத் தொடர்போடு வரும் ஒன்று. இந்த விந்துவே ஒரு வகையில் ஆசை, பாசம், காமம், குரோதம் முதலானவை தோன்றவும் பெரும் காரணமாக உள்ளது.

ஆணுக்கு விந்தும், பெண்ணுக்குச் சுரோணிதமுமே அவர்களை முழுமையான மனிதர்களாகக் கருதச் செய்கின்றன. இதில் குறைபாடு நேர்ந்துவிடும் பட்சத்தில், அவர்களை முழுமையாக கருத முடிவதில்லை. ஏனென்றால், இதிலிருந்தே வம்சம் விருத்தி ஆகிறது. இதனாலேயே உறவுகள் தோன்றுகின்றன. ஒரு துறவி இதை அடக்கிக் கரைசேர்கிறான். அல்லாதவர்கள், இதைத் தங்கள் பந்தங்களாக ஆக்கி, இல்வாழ்வுக்கான தர்மத்தைப் பின்பற்றிக் கரைசேர்கிறார்கள்.

இதில், அடக்கிக் கரை சேர்வதில்தான் குண்டலினி யோகம்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வருகிறது. இந்த யோகத்தில்தான் விந்துவானது வைரமாகிறது. விந்துவைக் கட்டுப்படுத்தி, நிறுத்த முற்படுவது என்பது அசாத்தியமான ஒரு செயல். மிகுந்த மனக் கட்டுப்பாடும் உடல் மேல் ஆதிக்கமும் செலுத்த முடிந்தவர்களுக்கே இது சாத்தியம். அப்படி நிறுத்தியதை, முதுகுத் தண்டுவடம் வழியாக உச்சந் தலைக்குக் கொண்டுசெல்வது என்பது குண்டலினியில் இன்னொரு விதம்.

இப்படிச் செய்யும் யோகியின் உடலில் வியர்வைகூட நறுமணத்தோடு மணக்குமாம். இதைச் செய்ய முடிந்தவர்களை நாத சித்தர்கள் என்பர். நாத சித்தர்கள் இப்படிச் செய்வதன் மூலம், பஞ்சபூதங்கள் வசம் சிக்கி அதன் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் உடம்பைத் தங்கள் மன ஆளுமையின் கீழ் கொண்டுவந்து, அந்த பஞ்சபூதங்களின் இயல்பையே மாற்றி விடுகிறார்கள். இதனால், இவர்களின் உடம்பு கோள்களின் பிடியில் இருந்தும் விடுபட்டு ஒரு தனிச் சக்தியாக மாறிவிடுகிறது. இந்தத் தனிச் சக்தியைக் கடவுள் நிலை என்று தாராளமாகக் கூறலாம்.

ஏனெனில், இந்தச் சக்தி சுதந்திரமாய் நித்ய இன்பத்தோடு உலகின் எந்தவொரு சக்திக்கும் கட்டுப்படாததாய், முடிந்தால் அந்த சக்திகளை எல்லாம் அடக்கி ஒடுக்க வல்லதாய் ஆகி விடுகிறது. இறைத்தன்மை என்பதும் அப்படிப்பட்டதுதானே? இந்நிலையில் இருந்து திருமூலர் பாடியதே கீழ்க்காணும் பாடல்.

தன்னையறிய தனக்கொரு கேடில்லை

தன்னையறியாமல் தானே கெடுகின்றான்

தன்னை அறியும் அறிவை அறிந்தபின்

தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே.

இப்படிப் பாடிய திருமூலரிடம் இன்னொரு சிறப்பும் உண்டு. அது, தான் எழுதிய பாடலின்படி அவர் நடந்து காட்டியதுதான். இன்று அறக் கருத்துகளை பலரும் கூறுகின்றனர். ஆனால், அந்தக் கருத்துப்படி அவர்கள் நடக்கிறார்களா என்று பார்த்தால் பெரிதாக இடிக்கும்.

அவர்களிடம் கேட்டால், இதற்கும் ஒரு பதிலைத் தயாராக வைத்திருப்பார்கள். `அற வழி செல்லாமல் நான்தான் அழிந்து விட்டேன். மற்றவர்களாவது அற வழியில் சென்று நல்ல

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

விதமாய் வாழட்டுமே என்றே கூறுகிறேன்' என்பர். இதைக் கேட்கும்போது, அவர்களின் அந்த நல்ல எண்ணம், அவர்கள் செய்யாததை நம் வரையில் மன்னித்துவிடச் செய்துவிடும். ஆனால், திருமூலர் அப்படிப்பட்டவர் அல்ல.

ஞாலம் அறிய நரை திரை மாறிடும்

பாலனும் ஆவர் பராநந்தி ஆணையே

-என்கிறார் அவர். அதாவது, 'உடம்பைப் பற்றி முழுமையாக அறிந்து குண்டலினியில் மூழ்கியவர்க்கு நரை திரைகூடப் போய்விடும். பாலனைப்போல சிறு பிள்ளையாகிவிட முடியும். அதாவது, வயதாவது அப்படியே நின்றுபோகும். இது பொய் அல்ல; நந்தி மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்' என்கிறார் திருமூலர்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 25

ஓதுகின்ற வேதமெச்சி லுள்ளமந் திரங்களெச்சில்
மோதகங்க ளானதெச்சில் பூதலங்க ளேழுமெச்சில்
மாதிருந்த விந்துவெச்சில் மதியுமெச்சி லொளியுமெச்சில்
ஏதிலெச்சி லில்லதில்லை யில்லையில்லை யில்லையே!
- சிவவாக்கியர்

சிவவாக்கியர்! திருமூலரைத் தொடர்ந்து நாம் அறிந்து கொள்ளப்போகிறவர் இவர். சித்தராக வாழ்வதெற்கென்றே பிறந்தவர் இவர் என்பார்கள். எவ்வளவோ சித்த புருஷர்கள்..! அவ்வளவு பேரையும் காலம் மெள்ள மெள்ளத்தான் சித்தனாக மாற்றியது. குழந்தைப் பிராயம், அதைக் கடந்த வாலிபப் பருவம், பின்பு அதையும் கடந்து இல்வாழ்க்கைக் காலம் என மனிதர்கள் படிப்படியாகத்தான் முதிர்ச்சியுறுகிறார்கள். இதில், குழந்தைப் பிராயத்துக்குப் பாவ புண்ணியங்கள் இல்லை. ஏனென்றால், இது ஏதுமறியாப் பருவம்.

இந்த ஏதுமறியாப் பருவத்துக்கு உணர்ச்சிகளே கணக்கு. இந்த உணர்ச்சியின்பாற்பட்டு பாவம் செய்தாலும் புண்ணியம் செய்தாலும், அதை எவரும் பொருட்படுத்துவதில்லை. அடுத்து, விடலை கடந்த வாலிபப் பிராயம். ஓடுகிற பாம்பைப் பிடிக்கிற தைரியமும், பாய்ந்து வரும் காளையை அடக்கும் சாதுர்யமும் கலந்த பருவம். ஆனால், இந்தப் பிராயத்தில் செய்யும் தவறுகள் பாதிப்பை ஏற்படுத்தும்.

இப்படி மானுடப் பருவங்களுக்குப் பின்னாலே அவற்றுக் கேற்ற தன்மைகள் உள்ளன. இந்தத் தன்மைகளுக்கு ஆட்பட்டே மனிதன் வாழ்ந்தாக வேண்டும். ஆனால், எதிலும் விதிவிலக்குகள் இருப்பதுபோல, இதிலும் விதிவிலக்கானவர்கள் இருக்கவே செய்கின்றனர். அப்படி ஒரு விதிவிலக்கான சித்த புருஷர் சிவ வாக்கியர்.

இந்த மண்ணில் வாழ்வதற்காகப் பிறக்கும் பிள்ளைகள்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பொதுவாகக் 'குவா... குவா' என்றுதானே அழும்? இந்தப் பிள்ளையோ 'சிவா சிவா' என்று அழுதது. ஆச்சரியமாக இருக்கிறதல்லவா..? அப்படி அழுததே அவரது பெயருக்கான காரணமாகிவிட்டது. எப்போதும் 'சிவா சிவா' என்று சொன்ன இந்தப் பிள்ளைக்கு 'சிவவாக்கியன்' என்று பொருத்தமாகப் பெயரிட்டுவிட்டனர்.

"அது எப்படி, ஒரு குழந்தை பிறக்கும்போதே இத்தனைத் தெளிவுடன் 'சிவா சிவா' என அழும்? தான் யார், தன்னைப் பெற்ற தாய் - தந்தை யார்? எங்கு பிறந்திருக்கிறோம்? எதற்கு பிறந்திருக்கிறோம்? - இப்படி எந்த ஒரு கேள்விக்கும் விடை தெரிந்திராத நிலையில், தெரிந்துகொள்ள முடியாத நிலையில், அதாவது மனம் என்கிற ஒன்றே உருவாகியிராத நிலையில், அது எப்படி 'சிவ சிவா' எனச் சொல்ல முடியும்? அது நாவின் பிறழ்ச்சியான ஒலியாகத்தான் இருக்கும்!" என்று சிலர் அதைப் பற்றிக் கருத்து கூறினர். ஆனால், பிள்ளை வளர வளர, அதனிடம் தென்பட்ட விஷயங்கள், அப்படிக் கூறியவர்கள் வாயை அடைத்துவிட்டன.

சிவ வாக்கியர் பிறந்த இடத்தின் அருகே ஒரு சிவாலயம் இருந்தது. அந்த ஆலயத்துக்கு சிவ வாக்கியரை அவரது தாய் தூக்கிச் சென்ற வேளையில், உள்ளிருந்த சிவலிங்கத் திரு மேனியை உற்றுப் பார்த்த பிள்ளை, 'சிவா சிவா' என்றது. 'ஆம்... இதுவே சிவம்..' என்றாள் தாய். பிள்ளை உடனே கை தட்டி 'சிவா சிவா' என்று ராகம் போட்டுப் பாடத் தொடங்கி விட்டது. இதைக் கண்டவர்கள் 'இது விட்ட குறை, தொட்ட குறை' என்றனர்.

முன் ஜென்மத்தில் பரம சிவபக்தனாக இருந்து, அதே பிரக்ஞையோடு உயிர் பிரிந்திருந்தால்தான், இப்படி ஒரு நிலை குழந்தைப் பிராயத்தில் ஏற்பட முடியும் என்றும் சிலர் கூறினர்.

- சிவ வாக்கியர் குறித்து இப்படி பல வியாக்யானங்கள்.

அவரோ மற்ற எல்லாக் குழந்தைகளையும் போல ஓடியாடி விளையாடாமல், அந்தக் கோயிலே கதியெனக் கிடந்தார். கோயில் அர்ச்சகருக்கு உதவியாகப் பூக்கள் பறிப்பது, ஸ்வாமி அபிஷேகத்துக்கு உதவுவது என்று செயல்பட்டவர், சில காலத்திலேயே அவ்வாறு செய்வதை நிறுத்திக்கொண்டார்.

'ஏனப்பா திருப்பணி செய்வதை நிறுத்தி விட்டாய்?' என்று சிலர் கேட்டனர்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

'உங்களுக்குத்தான் இது திருப்பணி; எனக்கில்லை. எனக்குள் இருக்கும் ஈசனே வெளியேயும் இருக்கிறான். இருவரும் ஒருவரே! நான் வெளியே உள்ளதைத் துதிக்கும்போது உள்ளிருப்பதை உணராத ஒரு நிலை உருவாகிவிடுகிறது. எனக்குள் அவனிருக்க எனக்கெதற்கு வெளி?" என்றார்.

மிகச் சிறிய வயதிலேயே சிவ வாக்கியர் கேட்ட இந்தக் கேள்வியில் உள்ள உட்பொருளைப் புரிந்துகொள்ளும் சக்தி பலருக்கு இல்லை. சிலர் தவறாகப் புரிந்து கொண்டதோடு, "கொஞ்சம் விட்டா 'நானே சிவன்' என்றுகூடக் கூறுவாய் போலத் தெரிகிறதே?" என்று கோபமாய்க் கேட்டனர்.

"அதிலென்ன சந்தேகம்? நான் சிவன்தான். நான் மட்டுமா சிவன்? நீங்களும்தான்..!' என்று அவர் பதில் கூறவும், சிவ வாக்கியரை புத்திகெட்ட ஒரு பித்தனாகப் பார்க்கத் தொடங்கி விட்டனர் மக்கள்.

சிவ வாக்கியருக்கும் இப்படித் தன்னை விமர்சிப்பவர்களுக்கு நடுவில் காலத்தைக் கழிக்க விருப்பமில்லை. ஏதோ ஒரு சக்தி அவரை காசி நோக்கித் தள்ளிச் சென்றது. அதற்குக் காரணமும் இருந்தது.

காசியில்தான் சிவ யோகிகள் அதிகம். அவர்களில் ஒருவர் தொடர்பு ஏற்பட்டாலும் போதும்; தான் உணர்ந்தவற்றை அவரிடம் கூறி, தன்னை மேலும் மேம்படுத்திக்கொள்ள முடியும் என்று சிவ வாக்கியர் கருதினார். பெற்றோராலும் ஓரளவுக்கு மேல் அவரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"என் மேல் வைக்கும் பாசத்தை அந்த ஈசன் மேல் வையுங்கள். அவனை வெளியில் தேடாதீர்கள். உங்களுக்குள் தேடுங்கள். தேடிக் கண்டுபிடித்து, அவனிடம் சரணடைந்து விடுங்கள். அப்படிச் சரணடைவதுதான் என் நோக்கம். நான் என்னுள் அவன் இருப்பதை உணர்ந்துவிட்டேன். ஆனால், என்னால் உங்களுக்குள் அவன் இருப்பதை உணர்த்த முடியவில்லை. எதனால் அது முடியவில்லை என்பதைக் கண்டறிந்து, எப்படியாவது அனைவருக்கும் நான் அந்த ஈசனை உணர்த்துவேன். அதுவே என் நோக்கம்!" என்று பெற்றோரிடம் கூறிவிட்டு, காசிக்குப் புறப்பட்டுவிட்டார்.

அது, இந்தக் காலமா என்ன... ஒரு ரயிலில் ஏறி அமர்ந்தவுடன் இரு தினங்களில் காசியை அடைந்துவிட! அந்த நாட்களில் நடந்தோ, அல்லது வண்டி கட்டிக்கொண்டோதான் செல்ல வேண்டும். வழியில் எது வேண்டுமானால் ஏற்படலாம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பத்து பேர் காசிக்குப் புறப்பட்டால், ஒருவர்தான் அந்த ஊரைச் சென்று சேர்வார். மற்றவர்கள் வழியிலேயே மடிந்து முடிவார்கள். சிவ வாக்கியரோ ஸ்திதப் பிரக்ஞை கொண்டவர். தவிர, திருவோடு பிறந்தவர் ஆதலால், அவரது பயணத்தில் பெரிதாக எந்த இடையூறும் ஏற்படவில்லை. அதோடு, அவருக்குக் காசியில் பல ஞான அனுபவங்கள் ஏற்பட வேண்டும் என்பது விதி.

எப்போதும் விதி வழியேதான் வாழ்வு செல்லும். ஒரு விதி தனக்கேற்ப பஞ்ச பூதங்களின் மேலும் ஆதிக்கம் செலுத்தும். விதிப்படி ஒருவன் கொல்லப்பட வேண்டும் என்றிந்தால், கொலைகாரன் தேடி வருவான். கொலையாக வேண்டியவனும் அவனைத் தேடி அடைவான். அப்போது சூழலும் அமைதியாக வேடிக்கை பார்க்கும்.

உலகின் மாறாத அதிசயம், விதியின் செயல்பாடுதான்! அந்த விதி சிவ வாக்கியரை ஒரு மூன்றாண்டு நடைப்பயணத்தில் தாடியும் மீசையுமாக, யோகிக்கு உண்டான தோற்றத்தோடு கங்கைக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தது.

இந்தப் புண்ணிய மண்ணில் எவ்வளவோ நதிகள்! எதற்கும் இல்லாத சிறப்பு கங்கைக்கு இருப்பது எதனால் என்பதைக் கூர்ந்து கவனித்தால் உணரலாம். பொதுவாக, ஒரு நதி உருவாக நிச்சயம் ஒரு மலை வேண்டும். மலை மேல் பொழியும் மழைதான் விசையோடு வீழ்ந்து ஓடி, நதியாகிறது. இல்லா விட்டால், தேங்கி ஏரி, குளமாகும் சாத்தியமே அதிகம். அந்த வகையில், மலை என்பது மண்மிசை மிக உயரமான ஒன்று மட்டுமல்ல; ஆற்றல் எனும் சக்தியை மிகுதியாகத் தன் வசம் கொண்டிருக்கும் ஒன்றும்கூட! அதிலும், இமயமலை பிற மலைகளைப் போலக் கல்லும் மண்ணுமானது அல்ல; அது பனியால் மூடப் பட்ட ஒரு மலை. பிற மலைகள் மேல் விழும் மழையானது, அந்த மலையின் மண்ணின் குணத்தோடு தாவரங்களின் தன்மையையும் சுமந்துகொண்டு மண்ணுக்கு வரும்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



ஆனால், இமயத்தில் மண்ணின் தன்மைக்கு இடமே இல்லை. தாவரங்களைத் தழுவும் தன்மைக்கும் இடமில்லை. குளிர்ந்த பனிக்கட்டியானது சூரியனின் கிரணம் பட்டு உருகி வரும் நீராகவே கங்கை நீர் உள்ளது. மற்றவை பெருகி வருபவை என்றால், கங்கை நீர் உருகி வருவதாகும். பெருகி வருவதுள் மண் குணம்; உருகி வருவதனுள் சூரியனின்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உஷ்ண குணம். இதனாலேயே இந்த நீரில் கெடாத தன்மை அதிகம். அடுத்து, பாவம் என்னும் அழுக்கை இந்தத் தீயின் குணம் எரித்து விடுகிறது.

கங்கையை நுட்பமாக ஆய்ந்து, விளங்கிக் கொள்ள வேண்டும். இதில் நீராடி, பிறவித் தளையை அறுத்தெறிய வருபவர்கள் மிக அதிகம். அதிலும், இது மாயை மிகுந்த வாழ்வு என்று தெளிந்த யோகிகள், கங்கையையும் அதன் கரையையும் தங்கள் வாழ்விடமாகக் கருதினார்கள். அப்படி எண்ணினால் மட்டும் போதாது; கங்கையை எப்படி நோக்க வேண்டும் என்பதன் பின்னாலே ஒரு கதையும் உண்டு.

ஒரு கோணத்தில் அது ஒரு வேடிக்கையான கதை; இன்னொரு கோணத்திலோ மிகப்பெரிய பொருட்செறிவு கொண்டது! இந்தக் கதை, கயிலாயத்தில் அந்த ஆதிசிவன்-பார்வதியிடம் இருந்தே தொடங்குகிறது.

கயிலாயத்தில் பார்வதிதேவி யோக நிமித்தம் கண்களை மூட முயலும்போதெல்லாம், பூவுலகில் இருந்து பக்தர்கள் துன்பம் தாளாம லும், சரியான வழி தெரியாமலும் உடைந்து அழுது, 'இறைவா, காப்பாற்று!' என்றும், 'தாயே, காப்பாற்று!' என்றும் கைகளை உயர்த்திப் பிரார்த்திக்கும் கூக்குரல்தான் கேட்கிறது. இந்தக் கூக்குரல் பார்வதியையே ஆச்சரியப்படுத்தி, ஈசனிடம் விவாதம் புரியவும் காரணமாகிவிடுகிறது.

''பிரபோ... என்னால் தியானத்தில் மூழ்கவே முடியவில்லை. பூவுலகில் இருந்து ஒருவர் மாற்றி ஒருவர் குரல் கொடுத்தபடியே உள்ளனர். அங்கே குறை இல்லாத மனிதர்களே இல்லை எனத் தோன்றுகிறது. உங்கள் படைப்பில் மனிதக் கூட்டம் இப்படி அல்லல் படலாமா?'' என்று கேட்கிறாள்.

''அதற்கு நான் என்ன செய்ய முடியும் தேவி? அவரவர் பாவத்தை அவரவர் அனுபவிக்கத் தானே வேண்டும்?'' என்று திருப்பிக் கேட்கிறார் ஈசன். பார்வதிதேவியிடம் இதனால் அதிர்ச்சி!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 26

கோயில் பள்ளி யேதடா குறித்து நின்ற தேதடா
வாயினால் தொழுதுநின்ற மந்திரங்க ளேதடா
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியில் காணலா மிறையையே

- சிவவாக்கியர்

அவரவர் பாவங்களால் அவரவர்களும் கஷ்டப்படுகிறார்கள் என்று ஈசன் கூறியதால், மேலும் அதிர்ச்சியானாள் பார்வதிதேவி. "பாவமா..? அதைப் போக்கத்தான் கங்கையை பாயச் செய்துள்ளீர்களே? அதில்தான் நாள்தோறும் ஆயிரக்கணக்கில் மக்கள் நீராடிக்கொண்டு இருக்கிறார்களே! அதில் நீராடினால் தான் பாவமெல்லாம் போய் புண்ணியராகி விடுவரே! அப்படி இருக்க, பாவிகள் எப்படி பூவுலகில் அதிகரிக்க முடியும்? ஒருவேளை... என் சக்களத்தியான கங்கை தன் கடமையைச் சரியாகச் செய்யாமல் எனக்கென்ன என்று கிடக்கிறாளோ?" என்று கேட்டாள்.

பார்வதிதேவியின் கேள்வியைக் கேட்டு நகைத்தார் சிவபெருமான்.

"இப்படி நீங்கள் சிரிப்பதற்கு என்ன பொருள்..? நுட்பமாய் ஏதோ எனக்குப் புரியவில்லை என்பதுதானே?" - பார்வதி மெல்லிய கோபம் தொனிக்கக் கேட்டாள்.

"சக்தி, உனக்கா புரியாது? உனக்கு இதற்கான விடை தெரிந்திருந்தும், தெரியாதது போல என்னிடம் வினவுகிறாய்..." என்றார் பரமன்.

"விடை எதுவாக இருந்தாலும், அதை நாம் சோதித்தே உணரலாமே?"

"எப்படி சோதித்து உணரலாம் என்கிறாய்?"

"உடனே என்னோடு புறப்படுங்கள் காசியம்பதிக்கு..!"

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"உத்தரவு!"

பரமனும் பார்வதியும் அடுத்த நொடியே காசியம்பதியின் கங்கைக் கரையோரம் ஒரு மரத்தடியில், நலிந்த வயோதிகத் தம்பதியராகக் காட்சியளித்தனர். பரமனால் நிற்கக்கூட முடிய வில்லை. கட்டைவிரல் நுனியில் நின்று ஆனந்த தாண்டவம் ஆடமுடிந்தவர், ஒரு திருவிளையாடலுக்காகத் தம்மை அப்படி ஆக்கிக்கொண்டு விட்டார்.

உடம்பெல்லாம் நடுக்கம். வாயிலில் எச்சில் ஒழுக்கு (அது தான் அமுதம் என்று எத்தனை பேருக்குத் தெரியும்?). அருகில் நின்றிருக்கும் பார்வதியிடமும் நல்ல நடுக்கம். அவர்கள் எதிரில், கங்கை நோக்கிப் போவோரும் வருவோருமாக பலப் பலர். பார்வதி அவர் களைப் பார்த்து ஈனசுரத்தில்

கெஞ்சினாள்...

"புண்ணியவான்களே! சற்று நின்று எனக்கு உதவுங்கள். என் கணவரால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. அவரை யாராவது சுமந்துவந்து கங்கைக்கரையில் விட்டு விடுங்கள். நான் எப்படியாவது நடந்து வந்துவிடுகிறேன். இதனை இலவசமாகச் செய்யவேண்டாம். நான் அதற்குச் சுமைகூலியாக நூறு பொன் தருகிறேன்" என்றாள்.


நூறு பொன் என்றதும், பலர் வேகமாய் முன்வந்தனர். அப்படி வந்தவர்களிடம் பொன் மூட்டையைக் காட்டியவள், "உங்களிடம் இன்னொரு முக்கிய விஷயத்தையும் கூற வேண்டும்" என்றாள். தொடர்ந்து, "இவரை யார் தீண்டினாலும், இவர் செய்த பாவங்கள் அனைத்தும் தீண்டுபவரைச் சேர்ந்து விடும். இப்படி ஒரு வரத்தை இவர் பெற்றிருக்கிறார். இதை நான் மறைத்துப்

பாவம் செய்ய விரும்பவில்லை" என்றாள்.

அதைக் கேட்ட விநாடியே, நெருங்கி வந்தவர்கள் முகங்கள் இருண்டன. 'நீ நூறு பொன் தருவதாகக் கூறும்போதே நினைத்தேன்... இப்படி இடக்கு முடக்காக ஏதாவது இருக்கும் என்று..!' என்றான் ஒருவன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



'நான் செய்த பாவத்தையே என்னால் சுமக்க முடியவில்லை இதில், இந்தக் கிழவனின் பாவம் வேறா?' என்று கேட்டு, நடையைக் கட்டினான் இன்னொருவன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

‘இந்தக் கிழவனால் இவ்வளவு தூரம் வர முடிந்தும், கங்கையை அடைய முடியவில்லை என்றால், நிச்சயம் இவன் பெரும் பாவியாகத்தான் இருக்க வேண்டும். ஆளை விடு தாயே..!’ என்று ஓட்டம் பிடித்தான் மூன்றாமவன்.

இப்படி ஆளுக்கு ஆள் கேலியும் கிண்டலும் செய்துவிட்டு ஓட்டம் பிடித்தனரே தவிர, ஒருவர்கூட பரமனைச் சுமக்க முன்வரவில்லை.

மாலை வேளை வந்துவிட்டது. இரவு வரப் போகிறது. அதற்குள் கங்கையில் நீராடுவதே புண்ணியம். இரவில் நதிகளில் மனிதர்கள் நீராட சாஸ்திரம் அனுமதிப்பதில்லை. அதிலும் நள்ளிரவு நேரம் தேவர்கள், கந்தர்வர்கள், யட்சர்கள் முதலானவர்களுக்கான காலம். அதிகாலையில் இருந்து மனிதர்கள் திரும்பவும் நீராடலாம்.

பார்வதி தவிக்க ஆரம்பித்தாள். பரமன் அந்தக் கிழட்டு நடுக்கத்திலும், “இந்த மனிதர்களுக்குத்தான் பாவம் என்றால் எவ்வளவு பயம்?” என்று கிண்டலாகக் கேட்டார்.

“இப்படி அச்சமும் சுயநலமும் இருந்தால், அங்கே எப்படி க்ஷேம நலன்கள் இருக்க முடியும்” என்று பார்வதியும் திருப்பிக் கேட்டாள்.

“நம் திருவிளையாட்டால் ஒரு பயனும் ஏற்படப்போவது இல்லை என்றே தோன்றுகிறது. நீ என்ன நினைக்கிறாய்?”

“இல்லை; எனக்கு நம்பிக்கை இருக்கிறது” என்றாள் பார்வதி.

அவள் நம்பிக்கைக்கு ஏற்ப ஒருவன் வந்தான். பார்வதிக்கு உதவவும் தயாரானான். பாவம் பற்றிக்கொள்ளும் என்றாள்.

“அதனால் என்ன?” என்று அவன் திருப்பிக்கேட்டான். “அதனால் என்னவா? பாவம் போக்கவே கங்கைப் புலத்துக்கு நீ வந்திருக்கிறாய். போக்க வந்த இடத்தில் இவர் பாவத்தையும் சேர்த்துக்கொள்வதை எண்ணி அச்சமடையவில்லையா?”

“எதற்கம்மா அச்சம்? என் பாவம், இவர் பாவம், அவ்வளவு ஏன்... உங்கள் பாவம், இந்த ஊரின் பாவம் என எல்லாமே என்னைச் சேரட்டும். அதை எல்லாம்தான் கங்கா மாதா போக்கிவிடுவாளே?”

“ஓ... கங்கை அத்தனை சக்தி வாய்ந்தவளா?”

“இது என்னம்மா கேள்வி... நம்பிக்கை இல்லாமலா நீங்கள் கங்கையில் நீராட வந்துள்ளீர்கள்?”

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அவனிடம் பார்வதியும் பரமனும் அதற்கு மேல் விவாதிக்க வில்லை. தங்கள் திவ்ய சொரூபத்தைக் காண்பித்து, அங்கேயே அவனுக்கு முக்தியும் அளித்தனர்.

பின், பரமன் பார்வதியைப் பார்த்தார். பார்வதிக்கும் புரிந்தது.

"அப்படி பார்க்காதீர்கள். இன்று முழுக்க ஆயிரம் பேராவது நீராடச் சென்றிருப்பார்கள். ஒருவன் மட்டும் தான், கங்கையில் மூழ்கினால் தன் பாவம் நிச்சயம் நீங்கும் என்று உறுதியாக நம்பினான். ஆயிரத்தில் ஒருவனுக்குத்தான் நம்பிக்கை இருக்கிறது. மற்றவர்களின் பாவங்கள் ஏன் நீங்கவில்லை என்பதற்குக் காரணம் புரிந்துவிட்டது" என்றாள் பார்வதி.

"சரியாகச் சொன்னாய். நம்பிக்கை முக்கியம். மூடிய பாத்திரம் எத்தனை ஆழமான கடலில் விழுந்தாலும், அதனுள் ஒரு துளி நீர்கூடச் செல்லாது. ஆனால், கரை மேல் கிடக்கும் கிளிஞ்சல் திறந்திருப்பதால் தன் உட்குழிவுக்குள் நீரை வாங்கிக் கொள்ளும். செயலைவிட, அதனுள் இருக்கும் நோக்கமே பெரிது. உன் மாயா சக்தியே மனிதர்களை இப்படி நம்பியும் நம்பாமலும் ஆட்டிப் படைக்கிறது" என்ற பரமனைச் சற்று கோபமாகப் பார்த்த பார்வதி, "குறை சொல்வதில் நீங்களும் மனிதர்களை விஞ்சிவிடுவீர்கள்போல் தெரிகிறதே..!" என்று சிடுசிடுத்தாள். "எல்லாம் பூவுலகில் கால்பட்ட தோஷம்!" என்று சிரித்தார் பரமன்.

இந்த கதை, நம்பிக்கை என்பது எப்படிப்

பட்டது என்பதைத் திட்டமாய் விளக்கிவிடுகிறது. கங்கையின் பின்புலத்தில் இது போலப் பல கதைகள் உண்டு.

இப்படிப்பட்ட கங்கை, சிவவாக்கியரிடமும் விளையாடுகிறது. அது எப்படி என்று இனி பார்ப்போம்.

காடு மேடெல்லாம் நடந்து காசியம்பதியை அடைந்த சிவவாக்கியருக்கு நல்ல பசி எடுத்தது. அதற்குத் தோதாக, ஒருவர் புண்ணியம் வேண்டி அன்னதானம் செய்துகொண்டு இருந்தார். சிவவாக்கியருக்கும் அதனால் உணவு கிடைத்தது. நல்ல சுவையான உணவு. உண்டு முடித்து, அப்பாடா என்று இளைப்பாறினார். அவருக்கு உணவிட்ட அந்தப் புண்ணியவானின் அன்னதானம் தொடர்ந்துகொண்டே இருந்தது. வருகின்றவர்கள் எல்லாம் உண்டனர். ஆனால், ஒரு செருப்பு தைக்கும் மனிதன் மட்டும் செருப்பு தைத்தபடியே இருந்தான்; அன்னதானத்தை ஏரெடுத்தும் பார்க்கவில்லை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அது சிவவாக்கியரை ஆச்சரியப்படுத்தியது. அப்படியே ஓரமாக உள்ள ஒரு மண்டபத்திலேயே அவனும் தங்கிவிட, சிவவாக்கியரும் அங்கேயே ஓர் ஓரமாகப் படுத்துவிட்டார்.

நாட்கள் கழிந்தன. அந்த மனிதன், உணவு என்கிற ஒன்றைப் பற்றிய கவலையே இல்லாதவனாய் தன் கடமையில் கண்ணாக இருந்தது சிவவாக்கியரைச் சிந்திக்க வைத்தது. அதை அவனிடமே கேட்டும்விட்டார்.

‘‘ஐயா! நான் தினமும் உங்களைக் கவனிக்கிறேன். நீங்கள் எதையும் சாப்பிடுவதே இல்லை. எப்படி உங்களால் பசியின்றிச் செயல்பட முடிகிறது?’’

‘‘அதைத் தெரிந்துகொண்டு நீ என்ன செய்யப்போகிறாய்?’’

‘‘என்னையும் இந்தப் பசி ஆட்டிப் படைக்கிறது. உணவுக்காகப் பிறரிடம் கையேந்துவது எனக்குப் பிடிக்க வில்லை. உழைத்து உண்பது என்பதும் எனக்கு வாழ்க்கைப் பற்றை வளர்க்கும் வழியாகவே தெரிகிறது. நான் எனக்குள் இருக்கும் ஈசனைப் பார்த்துவிட்டவன். ஆனாலும், பசியை வெல்ல மட்டும் என்னால் முடியவில்லை. உங்களைப் பார்த்தால், அதை வென்றுவிட்டவர்போலத் தெரிகிறது...’’

சிவவாக்கியர் பேசியதைக் கேட்டுச் செருப்பு தைப்பவன் சிரித்தான்.

‘‘என் பேச்சு உங்களுக்குச் சிரிப்பாக இருக்கிறதா?’’ என்றார் சிவவாக்கியர்.

‘‘ஆமப்பா... உனக்குள்ளே ஈசனைப் பார்த்துவிட்டதாகக் கூறினாய். அப்படியென்றால், நீயே ஈசன் என்றாகிறது. ஈசனாகவே முடிந்த உன்னால் அன்னமய கோசமான உடம்பை ஜெயிக்க முடியவில்லை எனும்போது, எப்படிச் சிரிக்காமல் இருக்க முடியும்?’’

‘‘நான் சொல்வது உண்மை. என்னுள் அந்த ஈசன் இருக்கிறான். உங்களுக்குள்ளும் இருக்கிறான். ஆனால், அதை உணராமல் எல்லோரும் அவனைப் புறத்தில் தேடுகின்றனர்.’’

சிவவாக்கியரின் பதிலுக்கு மீண்டும் சிரித்தான் அவன்.

‘‘அப்படிச் சிரிக்காதீர்கள்..!’’

‘‘இது கேலிச் சிரிப்பல்ல அப்பனே! உனது அறியாமையை எண்ணியே சிரிக்கிறேன். உலகுக்கே படியளக்கும் ஈசனுக்குக் கூடவா பசிக்கிறது?’’

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அவன் அப்படிக் கேட்டது, பொட்டில் அடித்தாற்போல் இருந்தது சிவவாக்கியருக்கு.

"புரிகிறது. நான் என்னையே ஈசன் என்றதால், எனக்கு எப்படிப் பசிக்கும் என்று கேட்கிறீர்?"

"ஆமாம். ஒன்று... நீ உன்னை ஈசன் என்று உணர்ந்தது பிழையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், பசிக்கிறது என்று சொல்லுவது பொய்யாக இருக்க வேண்டும். உண்மை யைச் சொல்லப்போனால், நீ இன்னும் முழுமையாகப் பக்குவப்படவில்லை."

"அதை ஒப்புக்கொள்கிறேன். பக்குவம் பெறவே இந்தக் காசியம்பதிக்கு வந்தேன்."

"வந்த நீ, கங்கையில் நீராடி உன் பாவத்தைப் போக்கிக் கொண்டாயா?"

"நான் பாவி என்று கருதினால் அல்லவா அப்படிச் செய்ய வேண்டும்?"

"புண்ணியவான் என்றால் பசிக்கக் கூடாதே..?"

"உண்மைதான். பசியாதிருக்க என்ன வழி?"

"பிராணமய கோசமான உடம்பை மனோமய கோசமாக்கி, பின்பு அதை ஆனந்தமய கோசமாக்கிக்கொள்வதுதான் வழி!"

"அது எப்படி?"

"உணவைத் துச்சமாகக் கருது. அதன் வழியாகத்தான் கோள்கள் மனிதர்களை ஆட்டிப்படைக்கின்றன."

"உண்மையாகவா?"

"ஈசனா இப்படிக் கேட்பது?"

"மன்னிக்க வேண்டும். நான் அவசரப்பட்டுவிட்டேன். எனக்கு குருவாக இருந்து, எது ஆனந்தமய கோசம் என்று புரியவையுங்கள்."

"அது அவ்வளவு சுலபமல்ல. நீ பசியோடு மோதி, வைராக்கியத்தோடு அதை வெல்ல வேண்டும்."

"உணவில்லாவிட்டால் உடம்பு எப்படி இயங்கும்?"

"நீரிலும் காற்றிலும் உள்ள பிராண சக்தியை உட்கொள்ளப் பழகிவிட்டால், மண்ணில் விளைவதை உண்ணத் தோன்றாது."

"அது எப்படி?"

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

செருப்பு தைப்பவன் இன்னும் விளக்கமாக பேச ஆரம்பித்தான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 27

எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றிரண்டு தேவரோ?
இங்குமங்கு மாயிரண்டு தேவரே இருப்பரோ...
அங்கும் இங்குமாகி நின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ?
வங்க வாரம் சொன்ன பேர்கள் வாய்புழுத்து மாள்வரே
- சிவவாக்கியர்

"நீரிலும் காற்றிலும் உள்ள பிராண சக்தியை உட்கொள்ளப் பழகிவிட்டால், மண்ணில் விளைவதை உண்ணத் தோன்றாது!" என்று செருப்புத் தைப்பவர் சொன்னதற்கு மேற்கொண்டு கேள்விகேட்டார் சிவவாக்கியர்.

"அது எப்படி?"

"அதற்கு திடசித்தம் மிக முக்கியம்."

"என்னிடம் அது இருக்கிறது."

"அதை நான் எப்படி நம்புவது?"

"என்னை எப்படி வேண்டுமானாலும் சோதித்துக் கொள்ளலாம்."

சிவவாக்கியரை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தன் வசம் இருந்த தோல் பைக்குள் கையை விட்டுச் சில தங்க நாணயங்களை எடுத்து அவரிடம் தந்தார் செருப்புத் தைப்பவர்.

"எதற்கு இது?"

"தங்க நாணயமப்பா!"

"அதுதான், எனக்கு எதற்கு என்கிறேன்?"

"வேண்டாமா உனக்கு?"

"நான் உங்களிடம் கேட்பது ஞானத்தை; இது போன்ற செல் வத்தை அல்ல..!"

"சரி, இதை நான் தந்தேன் என்று கங்கையிடம் கொடுத்துவிட்டு வா..!"

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"உத்தரவு!"

சிவவாக்கியர் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் தங்க நாணயங்களுடன் கங்கையை நோக்கி நடந்தார். அவரைச் சோதிக்கத் தொடங்கிவிட்ட அந்த மனிதருடைய முகத்தில் மெல்லிய ஆச்சரிய ரேகைகள்!

கங்கையும் பாய்ந்து சென்றுகொண்டிருந்தாள்.


இந்த உலகத்தில் ஆயிரமாயிரமாய் நதிகள். அவற்றில், கங்கைக்கு மட்டும் விசேஷமான இடம்! உயரமான இடத்தில் பிறப்பது முதல் நீண்ட தூரம் பயணிப்பது வரை கங்கையிடம் எவ்வளவோ சிறப்புகள்! அவற்றில், அவள் மானுடர்களின் பாவங்களைச் சேர்த்துக் கழுவுபவள் என்பதுதான் உச்சபட்ச நிலை. இதனால் அந்த கங்கையில் ஆயிரமாயிரம் பேர் மூழ்கி எழுந்தவண்ணமிருக்க, சிவவாக்கியரும் கங்கையை அடைந்தார். கையில் தங்க நாணயங்களுடன் கங்கையைப் பார்த்தார்.

வேறு எவராக இருந்தாலும், அல்லது நாமேகூட தங்கத்தைத் தூக்கிக் கங்கையில் போடுவதா... இது என்ன முட்டாள்தனம் என்றுதான் நினைப்போம். காரணம்... நம் வரையிலும் தங்கம் விலைமதிப்பற்றது! உலகுக்கே அது பொதுப் பணமாகவும் திகழ்கிறது. புராணக் கதைகளில் கிடைத்த தகவல்களின்படி பார்த்தால், இறை உலகிலும் அது மதிப்புக்கு உரிய ஒன்றுதான். அப்படிப்பட்ட ஒரு வஸ்துவைத் தூக்கியெறிய மனம் வருமா? அதுவும் பாய்ந்து செல்லும் வெள்ளத்தில்! இதைவிட ஆச்சரியம், அதை வாங்கிக்கொள்ள கங்கையே வருவாள் என்று அந்தச் செருப்பு தைக்கும் மனிதர் சொன்னதுதான்!

'செருப்பு தைக்கும் ஒருவரது பேச்சை இந்த உலகம் என்றைக்கு மதித்திருக்கிறது? தாழ்ந்த நிலையில் உள்ள ஒருவரது பேச்சை அவரைப் போலத் தாழ்ந்த நிலையில் உள்ள இன்னொருவரே மதித்துக் கேட்பாரா என்பதே சந்தேகம்தான். இந்த நிலையில், கங்காதேவி கேட்பாள் என்பது எத்தனை பெரிய பூச்சுற்றல்?!' - இப்படித்தான் எல்லோருக்குள்ளும் கேள்விகள் எழும்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



ஆனால், இதில் ஒரு கேள்விகூட சிவவாக்கியருக்கு எழவில்லை. காரணம், செருப்பு தைக்கும் அந்த மனிதரை ஒரு கர்ம யோகியாக அவரால் பார்க்க முடிந்ததுதான்! அப்படிப் பட்டவர் ஒரு செயலைச் சொல்வதன் பின்புலத்தில், நிச்சயமாக பெரும் பொருள் இருக்கும்; அதை, அந்தச் செயலைப் புரியும் போது மட்டுமே உணர முடியும் என்ற

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எண்ணத்துடன் கங்கைக்கு வந்த சிவவாக்கியர், தங்க நாணயங்களை எடுத்து ஓடும் கங்கையில் போடத் தயாரானார். அப்போது, 'அவசியம் இல்லை, நானே கேட்டு வாங்கிக் கொள்கிறேன்' என்பதுபோல், கங்கையின் வளைக் கரம் மட்டும் நீர்ப் பரப்பின் மேல் எழும்பியது. சிவவாக்கியர் அந்தக் கரத்தில் தங்க நாணயங்களை வைத்தார். அந்தக் கரம் திரும்ப உள் மூழ்கியது. சிவவாக்கியர் திரும்பி வந்தார். 'கங்காதேவி தன் கையாலேயே கேட்டு வாங்கிக்கொண்டாள்' என்று செருப்புத் தைப்பவரிடம் தகவல் சொன்னார். உடனேயே செருப்பு தைக்கும் அந்த அன்பரின் முகத்தில் ஒரு சிந்தனை.

"என்ன யோசனை சுவாமி?"

"இல்லை! அந்த நாணயம் திரும்ப வேண்டும்."

"அதனாலென்ன... போய்க் கேட்டு வாங்கி வந்துவிடவா?"

"இதற்காக கங்கைக்குப் போகத் தேவையில்லை. கேட்டால், அவள் இந்த தோல் பைக்குள் இருந்தும் வெளிப்பட்டுத் தந்துவிடுவாள்" என்றவர், அவ்வாறே சிவவாக்கியரின் எதிரில் தோல் பையைப் பார்த்து கொடுத்ததைக் திருப்பிக் கேட்கவும், கங்கையில் முளைத்த கை இங்கேயும் முளைத்து, திருப்பித் தந்தது!

ஆனால், 'ஏன் இப்படிக் கொடுக்கிறீர்கள்? திரும்பக் கேட்கிறீர்கள்?' என்று சிவவாக்கியர் கேட்கவில்லை. அவர் அந்தச் சம்பவத்தைப் பார்த்துத் துளிக்கூட வியப்பு காட்ட வில்லை.

அந்த மனிதருக்கும் சிவவாக்கியரின் ஸ்திரமான மனது புரியத் தொடங்கியது.

"அப்பனே... எனது செயல் உன்னைப் பாதிக்கவில்லை என்பது உன்னைப் பார்க்கும்போது நன்றாகத் தெரிகிறது. தங்கமும் மயக்கவில்லை. கங்காதேவியின் அருட் கரமும் உன்னை வியப்பில் ஆழ்த்தவில்லை. நீ உலகின் மாயைக்குள் உழலப் பிறந்தவன் இல்லை; அந்த மாயையை வெல்லப் பிறந்தவன். உனக்கு நான் யோக ரகசியங்களை உபதேசிக்கிறேன். அவற்றை சிக்கெனப் பிடித்துக்கொள். நம்மிடம் தங்கம் இருப்பது பெரிதில்லை. நாமே தங்கமாகத் திகழ்வதுதான் பெரிது! உன்னாலும் அப்படி திகழ முடியும்..." என்றார்.

அத்துடன், சிவவாக்கியருக்கு யோக ரகசியங்கள்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அனைத்தையும் உபதேசித்தார்.

உடம்பை ஆட்சி செய்யும் தச வாயுக்களைப் பற்றிக் கூறி, அவை செய்யும் வினைகளையும் கூறி, அனைத்துக்கும் மூலம் நாம் உள் வாங்கும் பிராணக் காற்று என்பதை எல்லாம் விளக்கி, அந்த யோகப் பயிற்சிகளை எல்லாம் சிவவாக்கியருக்கு அளித்தார். கூடவே, ஒரு குடலை அளவு ஆற்று மணலையும், பேய்ச் சுரைக்காய் ஒன்றையும் தந்தார்.

''சுவாமி, இது எதற்கு?'' என்று கேட்டார் சிவவாக்கியர்.

''அப்பா... மண்ணில் இடப்படும் விதை நெல் விளையும்; அது பசியாற்றும். ஆனால், மண்ணே ஆற்றுமா?''

''அது எப்படி சுவாமி?''

''இந்த மண் ஆற்றுமப்பா.... இதை நெல்லாக மாற்றும் கரம் இதைத் தீண்டும்போது...''

''அது எப்படி சுவாமி?''

''பெண்ணும் ஒரு வகையில் மண்தானப்பா. அதனால்தான் பூமியை பூமாதேவி என்கிறோம். பெண்ணையும் மண்ணோடு பொருத்தி, மண் விளைவிப்பதுபோல நீயும் உயிர்களை விளைவிக்கிறாய் என்கிறோம்.''

''பெண்ணிடம் மண் குணம் இருப்பதற்கும், நீங்கள் இதை எனக்கு அளிப்பதற்கும் என்ன தொடர்பு சுவாமி?''

''தன் ஆற்றலால் இந்த மண்ணை உயிர்ப்பிக்க முடிந்த ஒரு பெண்ணரசி உனக்கு மனைவியாகத்தான்...''

''என்னை சம்சாரியாகச் சொல்கிறீர்களா?''

''இல்லையப்பா... சிவத்தோடு சக்தி சேர்ந்தால், அந்த சிவசக்திதான் பூரணமானதாகும்.''

''இந்தக் கசப்பான சுரைக்காய்?''

''கசப்பு இதன் தன்மை. இதை நீக்க முடிந்தால், இது உண்ணப் பயன்படும். தான் பிறந்த நோக்கம் இதற்கு ஈடேறும்!''

''மணலை அரிசியாக்க முடிந்த கரத்தால் சுரைக்காயின் கசப்பைத்தானா நீக்க முடியாது?''

''சரியாகச் சொன்னாய்..!''

''ஆனாலும் கேட்கிறேன்... நான் சிவசக்தி சமேதனாகி என்ன செய்யப்போகிறேன்?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நல்ல கேள்வி! அப்படி ஆகாமல்தான் என்ன செய்துவிட முடியும் உன்னால்?''

''எதைச் செய்வதும் எனது நோக்கம் இல்லை சுவாமி! எதைச் செய்தும் எவருக்கும் எதுவும் ஆகிவிடப் போவதில்லை. அவரவர் கர்மப்படி அவரவரும் பிறந்து வளர்ந்து வாழ்ந்து முடிந்திடப் போகின்றனர்.''

''அந்த அவரவர் கர்மத்தின்படியே உனது கர்மத்துக்கு நான் வருகிறேன். எங்கோ பிறந்த நீ, இங்கே என்னை அடைந்து, யோக ரகசியங்களை அடையப் பெற்றாய் அல்லவா?''

''ஆமாம்...''

''எல்லோரும் தங்கள் செருப்புகளை என் வசம் விட்டு, தேய்ந்துபோன அதைத்தான் தேய்த்துக்கொண்டனர். உனக்கு மட்டும்தானே அப்பா நான் பரமாத்மா - ஜீவாத்மா எனும் இரண்டையும் இணைத்துத் தைப்பவன் என்பது தெரிந்தது.''

''அதனால்..?''

''உனக்கும் ஊருக்குச் சொல்லும் கடமை இருக்கிறதப்பா!'' என்றார் செருப்பு தைப்பவர்.

சிவவாக்கியர் அதை ஒப்புக்கொண்டாரா?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 28

செங்கலும் கருங்கலும் சிவந்த சாதிலிங்கமும்
செம்பிலும் தராவிலும் சிவன் இருப்பன் என்கிறீர்
உம்பதம் நினைந்துநீர் உம்மைநீர் அறிந்தபின்
அம்பலம் நிறைந்த நாதர் ஆடல்பாடல் ஆகுமே!

- சிவவாக்கியர்

"ஒரு கடமை உனக்கு இருக்கிறது" என்று, செருப்பு தைக்கும் கடமையைச் செய்கின்ற அந்த யோகி, சிவவாக்கியரை நோக்கிச் சொன்னபோது, அவரால் அதைச் சட்டென்று ஏற்க முடியவில்லை.

மனத்தின் உணர்வுகளை அப்படியே எதிரொலிப்பதுதானே முகம்? யோகிக்கு அது புரியாமலா போகும்?

"என்னப்பா யோசிக்கிறாய்?" என்றார்.

"எனக்கு, ஊருக்குச் சொல்லும் கடமை என ஒன்றிருப்பதாகச் சொன்னீர்கள், அல்லவா..?"

"அந்தக் கடமை உனக்கு மட்டுமல்ல; ஆறறிவு பெற்ற மனத்தை உடைய மாந்தர்கள் அவ்வளவு பேருக்குமே உள்ளது! என்னையே எடுத்துக்கொள்... 'கங்கை! என்னை ஏற்றுக்கொள்!' என்று நான் கங்கை ஆற்றில் இறங்கினால், அவள் என்னை ஏற்றுக்கொள்ளாமல் போய்விடுவாளா? பிய்ந்துபோன செருப்புகளைத் தைத்துக்கொண்டு எதற்காக இங்கே உட்கார்ந்திருக்கிறேன்?"

"இதை நானும்கூட எனக்குள்ளேயே கேட்டுக்கொண்டேன்!"

"இப்படி நான் இங்கே இருந்திருக்காவிட்டால், நீ என்னைச் சந்தித்திருக்க முடியுமா? உன்னைத்தான் நான் அறிந்து கொண்டிருப்பேனா?"

"உண்மைதான்! தனக்கென வாழ்வது சுயநலமானது என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இந்தச்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சமூகம் எனக்குக் கோபத்தையும் சிரிப்பையுமே தருகிறது. ஆளுக்கொரு விதமாகச் சிந்திக்கிறார்கள். தான் சிந்திப்பதே சரி என்றும் எண்ணுகிறார்கள்!"

"அதுதானப்பா கருத்துச் சுதந்திரம்! மனமும் வானமும் பல வகைகளில் ஒன்று. வானம் என்ற ஒன்று உண்மையில் எதுவும் இல்லாதது. பூமியும் பிற கோள்களும் இருக்கப்போய்த்தான், இடைவெளி தெரிந்து, அதை வானம் என்கிறோம். அதில் இந்த பூமி மற்றும் பிற கோள்களின் சுழற்சியாலும், ஒளி- ஒலியாலும் இலங்குவதாய் உள்ளதே ஆகாயம்! இவை எல்லாம் இல்லாது போனால், ஆகாயமும் இல்லாது போகும். மனமும் இவற்றால் பாதிக்கப்பட்டுத் தன்னை பிரதிபலிக்கிறது. இந்தப் பிரதிபலிப்புகளே நீ அவர்களிடம் காணும் சிந்தனைகள்..."

"எனில், உலகத்தவர் யாவரும் ஒரே கருத்தோடு இருக்க முடியாது என்று கூறவருகிறீர்களா?"

"ஒன்றுதானப்பா பலவாக இருக்கிறது. அந்த பலதுதானப்பா பக்குவம் பெறும்போது ஒன்றாகிப்போகிறது..!"

"குழப்புகிறீர்களே?"

"தெளிவதற்காகக் குழம்புவதில் பிழையில்லை!"

"இந்தச் சமூகத்தைத் திருத்த முடியாது, அது தேவையுமற்றது என்பதே எனது தெளிவு! ஒருவன் தன்னைத் திருத்திக் கொண்டாலே போதும்; ஒவ்வொருவரும் திருந்தத் திருந்த, மொத்தமும் தானாகத் திருந்திவிடும் என்கிறது என் மனம்."

"உன் தொடக்கமே தவறாக உள்ளதே!"

"எப்படி?"

"திருத்துவது என்னும் உன் கருத்தே தவறானது. அப்படிக் கூறும்போதே, நீ திருந்தி பிழைகளே இல்லாமல் வாழ்பவன் என்று ஓர் அர்த்தம் வருகிறதே! அது உண்மையா?"

"நானறிய என்னிடம் ஒரு பிழையும் இல்லை, சுவாமி!"

"என்றால், அறியாப் பிழைகள் இருக்கக்கூடும் அல்லவா?"

"அதில் எனக்கு மாற்றுக் கருத்தே இல்லை."

"நல்லது. அறியாப் பிழைகள் என்னிடமும் உள்ளன. பிழைகள் துளியுமின்றி ஒருவர் இருத்தல் அரிதினும் அரிது! இருந்த இடத்தை விட்டு அகலாமல் காற்றை மட்டும் உட்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கொண்டு தவம் புரியும் துறவிகூட, அப்படிக் காற்றை உட்கொள்ளும்போது, கண்களுக்குப் புலனாகாத நுண்ணுயிர்கள் சிலவற்றை உட்கொள்ளும் நிலைப்பாடு உள்ளது. அதன் காரணமாக அவரும் அறியாப் பிழையாளர் ஆகிறார்.''

''இதன் மூலம் தாங்கள் எதை வலியுறுத்த விரும்புகிறீர்கள்?''

''எந்த ஒரு விஷயத்துக்கும், அதை விளங்கிக்கொள்ள இரண்டு பக்கங்கள் இருந்தாக வேண்டும். விளங்கிக்கொண்ட பின்னர், அது விளங்கிக்கொண்டவருக்குள் ஒன்றாகிவிடும். இதற்குச் சான்றாக உள்ளவையே இரவு- பகல், இன்பம்- துன்பம், இனிப்பு - கசப்பு, மேல் - கீழ், பெரிது - சிறிது போன்றவை. இந்த இரட்டைத்தன்மை இல்லாவிடில், ஒன்றின் மதிப்பை உணரவோ, அளவிடவோ முடியாது. உனது குழப்பத்துக்குக் காரணமும் இந்த இரட்டைத்தன்மையை நீ காண்பது தான். உனக்கு எதிரான தளத்தில் இந்தச் சமூகம் இருப்பதாக நீ கருதுகிறாய். உன் அமைப்பு ஒரு தளம் என்றால், உனக்கு எதிரான அமைப்பு இன்னொரு தளம். இது இயற்கை. காலம் காலமாக இப்படித்தானப்பா இருந்து வருகிறது. இனியும் இப்படியே இருக்கும். இடையில் வந்தவன் நீ... நான்... நாம்..!

''இப்படி நீ... நான்... நாம் வரவும் சரியான காரணம் உண்டு. காரணம் இல்லாமல் ஒன்றை, இந்த உலகில் ஒரு தூசு தும்பிடம் கூட நீ காண முடியாது. ஒரு தூசானது குப்பையிலிருந்து உருவாகி இருக்கும். குப்பையோ தனக்கான தேவையும் பயன் பாடும் முடிந்த நிலையில் அப்படி ஆகியிருக்கும். முன்னதாக அது பயன்நிறைந்த ஒன்றாகவே இருந்திருக்கும்.

''இதோ, இந்தக் கிழிந்த செருப்பையே எடுத்துக் கொள்; இது எருமைத் தோலால் ஆனது. எருமை இறக்கப்போய், இது உரிக்கப்பட்டுச் செருப்பானது. எருமை அதற்கு முன் வேறோர் எருமையின் சுரோணிதத்தில் இருந்தது. அந்தச் சுரோணிதம் கொண்ட எருமை, இன்னோர் எருமையின் சுரோணிதத்தில் இருந்தது. இப்படிப் பின்தொடர்ந்து போனால் போய்க் கொண்டே இருக்கலாம். இதிலிருந்தே, காரணம் இல்லாமல் காரியம் இல்லை எனும் அழியாக் கருத்து தோன்றியது. இந்தக் கருத்தின் வழியாக இனி இந்தச் சமூகத்தைப் பார். அப்போது தான் ஒன்றின் இரு நிலைகளைச் சமமாகப் பார்த்தது போலாகும். சமமாகப் பார்த்தாலே சரியான

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

செயல்பாட்டைச் செய்ய இயலும். பார்வையே சமமாக இல்லாதபோது, உன் செயலில் அது எப்படி வரமுடியும்?''

''சுவாமி! உண்மையில் தாங்கள் யார்? நான் ஒன்றென்றும், என்றும் உண்டென்றும் நம்பும் அந்தச் சிவபெருமானே நீங்கள் தானோ? என் அகக் கண்களைத் திறந்துவிடப் பேசும் உங்கள் பேச்சு, எனக்குள் ஒரு தெளிவை உருவாக்கிவிட்டது. அதே நேரம், என்னுள் இன்னமும் பல கேள்விகள் விடைக்காகத் துடித்தபடியேதான் இருக்கின்றன..!''

''கேளப்பா... தெரிந்தால் பதில் கூறுவேன்.''

''பிழையேயின்றி இந்தப் பூமியில் ஒரு துறவியால்கூட இருக்க முடியாது என்றால், எப்படித்தான் கடைத்தேறுவது?''

''தவிர்க்க இயலாத பிழைகளை அந்தப் பரமன் தன் கருணையால் மன்னித்து ஏற்றுக்கொண்டு விடுவானப்பா! அவன் கருணைக்கும் துளி இடம் வேண்டுமல்லவா?''


''புரிந்துகொண்டேன் சுவாமி! ஒன்றே இரண்டாக இருக்கிறது; அப்போதுதான் புரிந்து கொள்ளுதல் எளிது என்றீர்கள். எனில் நன்மை- தீமை எனும் இரண்டும் சமம் போலக் கருத வேண்டி உள்ளதே! ஒரு நன்மை எப்படி ஒரு தீமைக்குச் சமமாகும்?''

''தீமை இருந்து, அதைத் தடுக்கப் போய் அல்லது மாற்றப் போயல்லவா நன்மை வந்தது? குப்பையே விழ வாய்ப்பில்லாத இடத்தைச் சுத்தமான இடம் என்று எப்படிக் கூற முடியும்?''

''புரிகிறது! ஒன்று இரண்டாகவே இருக்கும். அதைச் சமமாக நமக்குள் கருதினாலே, அதை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியும். விளங்கிக்கொண்டால்தான் வினையாற்ற முடியும். வினையாற்றுதலே கடமை. அதைச் செய்யவே பிறப்பு. விளைவைப் பற்றிய கவலையின்றி, கடமையைச் செய்து கொண்டே போக வேண்டும். கடப்பாட்டுக்கு உரிய பலன் தானாகவே தோன்றும். முனைந்து தோற்றுவிக்கத் தேவையே இல்லை என்கிறீர்கள்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



"ஆம்... அப்படிக் கடமையாற்றிடும்போது ஏச்சும் பேச்சும் தோன்றும். சமமாக பாவிக்கும் மனப் பாங்கு வந்துவிட்டதால் ஏச்சு வருத்தம் தராது; வாழ்த்தும் மயக்கம் தராது!"

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"நல்லது... நானும் இனி சமூகத்தை விட்டு ஒதுங்கி இருக்காமல், என் கடமையைச் செய்வேன். நான் எதை உண்மை என்று உணர்ந்தேனோ, அதைப் பிறருக்கும் உணர்த்துவேன்."

"அப்படியே செய்! இதுதான் ஞானிகளின் செயல். நீ உணர்ந்து உரைப்பதைச் சிலர் மறுக்கக்கூடும். அவர்கள் உணர்ந்ததைத்தான் நீயும் மறுக்கிறாய். இடது என்று ஒன்றிருந்தால், வலதென்று ஒன்று இருந்தே தீரும். இடமும் வலமுமான வினைப்பாடென்னும் துடுப்பு அசைந்தால்தான், வாழ்க்கைப் படகு தேங்கி நிற்காமல் வாழ்வெனும் நதியைக் கடக்கும்.

"ஆனால், இடமோ வலமோ, எங்கே இருந்தாலும் அங்கே - அதிலே முழுமையாக இருத்தல் வேண்டும். இல்லையெனில், ஊனமாகிப் போவாய்; ஞானியாக மாட்டாய்! இவ்வளவு தானப்பா விஷயம்..."

அவர் பேசி முடித்திட, சிவவாக்கியரும் ஒரு புத்தொளியோடு புறப்பட்டார்.

உபதேசம் என்பது உயரமான பீடத்தில், பட்டும் பீதாம்பரமும் தரித்த மடாதிபதியிடம் இருந்துதான் கிடைக்க வேண்டும் என்பதில்லை; இப்படித் தெருவோரத்துப் பாமரனிடமும் கிடைக்கும் என்பதே, இதன் மூலம் நாம் உணர வேண்டிய உண்மை.

சிவவாக்கியர் புடம்போட்ட தங்கமாகிப் புறப்பட்ட பின், அந்த மணலையும் பேய்ச் சுரைக்காயையும் சமைக்க முடிந்த பெண்ணையும் காலத்தால் கண்டறிந்தார். திருமணமுமாகியது. சிவவாக்கியருக்குள் மானுட வாழ்க்கை நெறிகளில் இடது சார்புத் தன்மையே அதிகம் இருந்தது. அவரது கோணம் அப்படி என்று கூறலாம். அவருக்குள் இறைவன் அவ்வாறு செயல்பட்டான் என்றும் எடுத்துக்கொள்ளலாம். உருவ வழிபாடு அவருக்கு ஏற்புடையதாக இல்லை. வேதங்களுக்குள் இறைவன் இருக்கிறான் என்பதை அவர் மறுத்தார். 'ஒரு புத்தகம் எப்படிக் கடவுளாக முடியும்? எனில், அது கையிலிருக்க ஒருவன் ஏன் கடவுள் தன்மை அடையாமல், அதன் அடிமை போலிருக்கிறான்?' என்று கேட்டார்.

வேதங்கள்தான் சாதியை உருவாக்கின. சாதி மனிதன் பாவியாகிவிட்டான். ஒருவனைப் பாவியாக்கிய வேதம் எப்படிச்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சுத்த சுயம்பிரகாசமான இறைவனை அடையாளம் காட்ட முடியும் என்றும் கேட்டார் சிவவாக்கியர். இந்தக் கோபமே 'பறைச்சியாவதேதடா, பனத்தியாவதேதடா, இறைச்சித் தோல் எலும்பினும் இலக்கம் இட்டிருக்குதோ?' என்று பாடல் வழி கேள்வி கேட்கச் செய்தது.

இதனால் சிவவாக்கியருக்கு ஆதரவானவர்களைவிட எதிரானவர்களே அதிகம் உருவாயினர். கருத்தளவில் அவரோடு ஒன்ற முடிந்தவர்கள், அவர் சொல்வதை வழி மொழிந்தனர். குறிப்பாக இடது சார்புச் சிந்தனையாளர்கள் சிவவாக்கியர் பாடல்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

சிவவாக்கியர் இப்படி, தான் உணர்ந்ததைச் சொல்ல வழிகாட்டியவராக கங்கைக் கரைச் செருப்பு தைப்பவரைச் சொல்லலாம். ஒன்றின் அழுக்கை நீக்க, அதை அடித்துத் துவைக்க வேண்டியுள்ளது. அப்போது, உடையின் அழுக்கு நீரிடம் சென்று சேர்கிறது. நீர் அழுக்கானால்தான் உடை சுத்தமாகும்!

நீராக இருந்து நம் அழுக்கை ஏற்று, தங்களை அழுக்காக்கிக் கொண்டு, பின்பு ஆறுபோல ஓடி தங்கள் அழுக்கை உதிர்த்து விட்டு மீண்டும் தெளிவாகின்றவர்களே யோகிகள் - குருநாதர்கள். இவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம்!

இந்த வரிசையில், சிவவாக்கியர் போல் சில கருத்துக்கள் கொண்டிருந்து, பின்பு அதில் மாறுபாடு கொண்ட காகபுஜண்டரை அடுத்துச் சிந்திப்போம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 29

பாரடா இப்படியே யுகங்கள் தோறும்
பார்தனில் நானிருந்தேன் பலகோடி ஆண்டு
ஆரடா என்னைப்போல் அறிவாருண்டோ
ஆதியென்ற சித்தருக்கும் ஆதியானேன்.
வீரடா விமலரிடம் செல்லும்போது
வெற்றியுடனெனை எடுத்து முத்தமிட்டார்
காரடா கயிலையின்மேல் இருக்கச்சொன்னார்
காகமென்ற ரூபமா யிருந்தேன் பாரே...

- காகபுஜண்டர்

காகபுஜண்டர்! சித்த புருஷர்களில் மிகுந்த ஆய்வுக்குரிய சித்தர் இவர் என்றால், மிகையே இல்லை. சித்தர்களின் தொடக்கம் சுந்தரானந்தரில் இருந்து தொடங்குகிறது என்பது ஒரு கணக்கு.

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரப் பெருமான்தான் சுந்தரானந்த சித்தராக மதுரையில் நடமாடி, மொத்த மதுரை மக்களையும் தன் பேரழகால் மயக்கி, சித்து வேலைகள் பல செய்து, பின் இந்திரனால் கட்டப்பட்ட ஆலயத்துக்குள் பாண்டிய அரசனின் முன்னால், கல் யானைக்குக் கரும்பு கொடுத்து, பாண்டியனுக்கும் பிள்ளைப் பேற்றை அளித்துச் சென்றவராவார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



இப்படி, சுந்தரேசப் பெருமானே சுந்தரானந்த சித்தனாக வந்து, சித்தர் வரிசை தொடங்கியது. அதற்கு முன் முனிவர்கள், ரிஷிகள் என்போரே இருந்த நிலையில், சித்தர்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்றொரு வரிசை ஈசனால் தோற்றுவிக்கப்பட எது காரணம் என்பதற்குத் தெளிவான ஒரு விடையை இதுநாள் வரையில் எவரும் கண்டதாகத் தெரியவில்லை.

நிலையாய் ஓரிடத்தில் அமர்ந்து தவத்தில் முனைந்து, சுவாசத்தால் ஓரங்குல அளவை எட்டுபவன்தான் முனிவன். இந்த நிலையில், சமாதி நிலை ஏற்பட்டு பேரின்பப் பெருநிலை உருவாகி, பலப் பல ஆண்டுகள் இந்த சமாதி நிலையிலேயே அமர்ந்திருப்போர் பலர் உண்டு. நாமெல்லாம் இந்த ஓரங்குல சுவாச கதியை அடைவது என்பது, கற்பனைகூடச் செய்து பார்க்கமுடியாத ஒரு விஷயமாகும்.

நாம் எதுவும் செய்யாமல் சாதாரணமாக அமர்ந்திருக்கும் நிலையில், நம் சுவாசம் 12 அங்குல அளவுக்கு உள் சென்று திரும்புகிறது. நடக்கும்போதோ 16 அங்குலம்; ஓடும்போது 25-லிருந்து 30 அங்குலம்; உறங்கும்போது 36 அங்குலம்; உடலுறவு கொள்ளும்போது 64 அங்குலம் என்பது நமது அன்றாட சுவாச கதி ஆகும். இப்படிப்பட்ட நாம் எப்படி ஓரங்குல அளவை அடைய முடியும்?

நம் சுவாச அளவு குறையக் குறையத்தான் நமக்கான ஆரோக்கியத்தில் இருந்து பல அதிசய சக்திகள் நமக்குள் தோன்றும். நமது சராசரி அளவான 12 அங்குலத்தில் இருந்து ஓர் அங்குலம் குறைத்து, 11 அங்குல அளவுக்கு நாம் சுவாசித்தாலே, பல அதிசயங்கள் நடக்கத் தொடங்கிவிடும். அதாவது, 11 அங்குல சுவாசம் நமக்குப் போதும் என்றாகி விட்டால், உலக இச்சை நம்மை விட்டுப் போய்விடும். அதுவே இன்னமும் குறைந்து 10 அங்குலமானால், யாரும் உபதேசிக்காமலேயே நமக்கு நாமே ஞானியாகிவிடுவோம்.

இன்னோர் அங்குலம் குறைந்து 9 அங்குல அளவுக்கு நமது சுவாசம் செயலாற்றும்போது, எதை எப்படிச் செய்யவேண்டும் என்பது புலனாகிவிடும். எட்டு அங்குல அளவை அடையும் போது, அடுத்து நடக்கப்போவதை முன்கூட்டியே உணர முடியும். இப்படிக் குறையும் சுவாச கதி இரண்டு அங்குல அளவை எட்டும்போது, சுலபமாக உடம்பை விட்டே நம் ஆத்மாவை வெளியேற்ற முடியும். அதாவது, கூடுவிட்டுக் கூடு பாயலாம்.

இப்படி சுவாச கதிக்கான போக்கில்தான் மனிதனின் அடுத்த பரிமாண நிலைப்பாடுகள் உள்ளன. யோகப் பயிற்சியும், தகுந்த குருநாதரின் வழிகாட்டலும், அருள் பலமும்தான்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இதில் நமக்கான பரிமாண நிலை எது என்பதை முடிவு செய்கின்றன. இதைக் கொண்டு, முனைந்து கடைத்தேறுபவன் முனிவன். பின், முனிவனே அடுத்த நிலையாக ரிஷி எனும் பதவிக்குச் செல்கிறான்.

ஒரு முனிவன் தன்னை வென்றவனாவான். ரிஷி என்பவன் தன்னை வென்றதுடன், உலகின் சகலத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தி, அதையும் வெல்ல முடிந்தவனாவான். இந்த இரு நிலைப்பாடு கடந்து அல்லது இந்த இரு நிலைப்பாடு போதாது என்று மூன்றாம் நிலைப்பாடாக வந்ததே சித்தம். அந்த சித்தத்தை உலகுக்கு அறிமுகப் படுத்தி, முதல் சித்தனாக வந்தவன் அந்த ஈசன்.

முனியோ, ரிஷியோ சுயமாக ஆக முடியாது. குருவருளாலும், மந்திர உபதேசத்தாலும் மட்டுமே முனியும் ரிஷியும் உருவாக முடியும்.

இவர்களுக்குச் சிஷ்யர்கள் தோன்றக் கூடும். ஆனால், இவர்கள் சமுதாய நலனை முன்னிறுத்திப் பெரிதாக எதையும் செய்பவர்கள் இல்லை; சொல்பவர்களும் இல்லை. சொல்ல ஒருவர் இருந்தால் எப்படி இருக்கும் எனும் கேள்வியின் பின்புலத்தில் உருவானவனே சித்தன். இந்த சித்தன் உடம்பை அறிந்து, அதை வென்றவன்; பிரபஞ்சம் அறிந்து அதைக் கடந்தவன். இதைச் சுயமாக, தன்முனைப்பால் கண்டவன். அந்தச் சுயமான தன்முனைப்புக்குப் பின்னே முற்பிறப்பும், அதில் ஈடேற்றிய அருட்செயல்களும் அடக்கம்.

இவன் எப்படி இருப்பான் என்பதற்குப் பதில் போலவும், இப்படியும் இருக்கலாம் என்பது போலவும் ஒரு திருவிளையாடற் செயலாக தன்னைச் சுந்தரானந்த சித்தனாக ஆக்கிக்கொண்டு, நிரம்பிய சித்துக்களைச் செய்து காட்டினான் அந்த சிவன். ஒரு திருவிளையாட்டாக, தானே நேரில் வந்து சித்த பரம்பரையைத் தொடக்கியவன், அதற்கும் முன்பே காக புஜண்டர் வடிவில் அந்தப் பரம்பரையைத் தொடங்கிவிட்டான்.

காலத்தை ஊடுருவிப் பின்னோக்கிச் சென்று பார்த்தால் இதை உணரலாம் என்று கூறி, அந்த வகையில் பார்த்தால், சுந்தரானந்தர் முதல் சித்தர் இல்லை. அவரினும் முன்னதான அகத்தியரும் சித்தர் இல்லை. அவர் ஒரு முனிவர். பின்னர், மகரிஷியாக தன்னை உயர்த்திக்கொண்டவர்.

சித்தன் என்றால்... அதிலும் முதல் சித்தன் என்றால், அது காகபுஜண்டர்தான் என்பது சிலரது கருத்தாகும். எதனால்,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எப்படி என்பதை இனி காண்போம்.

கயிலையில், ஒருநாள் அம்மையும் அப்பனும் ஆனந்த நடனம் ஆடத் தொடங்கினர். அவர்கள் இருவரும் ஆடுகிறார்கள் என்றால், ஒரு கோணத்தில்தான் அது நடனக் காட்சி. உண்மையில், பிரபஞ்சவெளியில் பல மாறுதல்கள் அதனால் உருவாகத் தொடங்கிவிட்டன என்பதே, அந்த நடனத்தின் பின் உள்ள பேருண்மை. இந்த நடனக் காட்சியை, கயிலாய பூதகணங்கள் முதல் சக்தி கணங்கள் வரை சகலரும் கண்டு இன்புற்றிருக்க, இவர்களுடன் சப்த ரிஷிகளும் நவநாயக முனிவர்களும் அடக்கம்.

ஓர் ஆச்சரியம் போல, இந்த வேளையில் சிவபெருமானின் சிவகலையில் இருந்து காகம் ஒன்று தோன்றியது. அதேநேரம், சக்தியின் கலையில் இருந்து அன்னம் ஒன்று தோன்றியது. ஒன்று வெண்ணிறமானது; பாலையும் நீரையும் கலந்து தந்தாலும், பிரித்து உண்ணத் தெரிந்தது. காகமோ, பிரிக்கத் தெரியாமல் கிடைப்பதை உண்பது. இரண்டும் நேர் எதிரானவை. அழகு, குணப்பாடு என அனைத்திலும் மாறுபாடு உடையவை. எப்போதும் இந்த உலகில் ஒன்று இரண்டாகவே உள்ளது. அது இரண்டாக இருந்தால்தான், அந்த ஒன்றை நம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

பொழுது எனும் ஒன்று இரவு, பகலாக உள்ளது. சுவை எனும் ஒன்று இனிப்பு, கசப்பாக உள்ளது. குணம் எனும் ஒன்றோ சாந்தமும் கோபமுமாய் உள்ளது. இவ்வாறு இரு விதமாய் இருந்தால்தான் அதனதன் தன்மையை நாம் தெளிவாக உணர முடியும்.

இங்கேயும் ஏகாந்த நடனத்தில்... இப்படி ஒரு பேருண்மையை உணர்த்தவே, அன்னமும் காகமும் தோன்றியதாகக் கொள்ளலாம். அவை இரண்டும் கூடின. அதன் விளைவாக 21 முட்டைகளை அன்னம் இட்டது. அதில் 20 அன்னங்களும், ஒரு காகமும் தோன்றின. சிவ கலையான காகம் அழிவில்லாத தன்மையைப் பெற்று, பிறப்பைத் தொடர்ந்தது. அன்னக் குஞ்சுகள் அன்னமாய் வாழ்ந்து முக்தியை அடைந்துவிட்டன. கயிலையில் பிறந்த இந்தக் காகத்தின் அடுத்த பிறப்பே காக புஜண்டர் எனும் மானுட வடிவாகும். அப்போது இவருக்கு இப்பெயர் வாய்த்திருக்கவில்லை. இப்பெயர் பின்னால்தான் ஏற்பட்டது.

இந்த காகபுஜண்டர் எனும் பெயருக்குப் பின்னால் பெரும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காரணங்கள் ஒளிந்துள்ளன. முன்னதாக, காகம் எனும் பெயர்க் காரணத்தை நாம் ஆராய்வது நலம்.

'கம்' என்றால் அடங்கியிருத்தல் என்பது பொருளாகும். லிங்கம் என்றால், அதனுள் எல்லாம் அடக்கம் என்று பொருள். ரங்கம் என்றால், அனைத்தும் புறத்தில் அடக்கம் என்று பொருள். தங்கம் என்றால் 'தண்' எனும் ஒளி அடக்கம். 'தண்' என்பதுதான் 'தங்' என மருவி வழக்குச் சொல்லாயிற்று என்பர்.

இவ்வகையில் 'கா' என்பது காலத்தைக் குறிக்கிறது. அதாவது காகம் காலத்தின் ஒரு வடிவமாகும். காலம் என்பது, உண்மையில் இருள் சார்ந்தது. சூரியனால்தான் ஒளி தோன்றி பகல் உண்டாயிற்று. எப்போதும் இருப்பது இருளே! இதனால், வந்து மறைவதே ஒளி! எனவே, காகத்தின் நிறம் கறுப்பானது. இது, தன் குரலாலும் காலத்தையே உரைக்கிறது. காலை, மாலை நேரத்தில் காகங்கள் கூட்டாகக் கரையும். அதேபோல், இவை குரல் கொடுப்பதன் பின்புலத்தில் ஒரு காரண - காரியம் இருக்கும்.

ஒரு வீட்டில் உள்ள மரத்திலோ, கூரை மீதோ ஒரு காகம் அமர்ந்து கத்தினால், அந்த வீட்டுக்கு உரியவரை எண்ணியபடி உறவினர்கள் வந்துகொண்டு இருக்கிறார்கள் என்பது பொருள். காகத்தின் குரலை ஒரு செய்தியாக எடுத்துக்கொள்ளலாம். எப்போதும் காலத்தால் நடக்க இருப்பதையே இது எதிரொலிக்கிறது.

பறவைகளில் இது மட்டும்தான் மனிதன் உண்ணும் அனைத்தையும் உண்ணக்கூடியது. அதாவது, பிற பறவைகள்போல பச்சையாகவும் உண்ணும்; வெந்ததையும் இது உண்ணும். மனிதர்களிடமோ பிற மிருகங்களிடமோ இதற்கு அச்சம் கிடையாது.

இதனால்தான் மானுட வாழ்வு முடிந்து அமரர்களாகிவிட்ட நம் முன்னோர், பித்ரு லோகத்தில் இருந்து, இதன் வடிவில் பூ உலகுக்கும், தங்கள் தொடர்புடையவர் வீட்டுக்கும் வந்து, அவர்கள் இடும் அன்னத்தை உண்டு திருப்தியுற்று, 'கா கா' என்று ஆசீர்வதித்துச் செல்வார்கள். 'காகா' என்றால் 'காலத்தால் காப்பேன்' என்பது பொருள். நாமும் 'காகா' என்று அழைக்கும்போது, 'காலத்தால் எங்களை காக்க வருக' என்று அழைக்கிறோம். சிலர் 'காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்' என்பதன் சுருக்கம் என்பர்.

இப்படி, காகம் எனும் பறவையின் பின்புலத்தில், நாம்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உணர்ந்திட அனேக விஷயங்கள் உள்ளன. இப்படிப்பட்ட தன்மை பொருந்திய காகம், கயிலையில் சிவகலையாக வந்தது. பின், அது மானிடப் பிறப்பெடுத்தது. சிவ கலைக்கு அழிவில்லாததால், அது காலத்தால் பிறவிகளைத் தொடர்ந்தது. அண்டமாகிய உலகமானது, காலத்தின் வடிவாகிய காக வடிவெடுத்தவரால், அவருடைய புஜத்தில் தாங்கப்படுகிறது. இதுவே காகபுஜண்டர் என்றானது என்பர். தூய தமிழில் காகபுசுண்டர் என்பர். அதாவது, காலத்தைத் தாங்கி நிற்பவர் எனும் பொருளில் காகபுஜண்டர் பார்க்கப்படுகிறார். இந்தப் பெயர்க் காரணத்தை மறுப்பவர்களும் உண்டு.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 30

காகமென்ற ரூபமாயிருந்து கொண்டு
காரணங்கள் அத்தனையும் கருவாய்ப் பார்த்து
வேகமுடன் வெளியோட்ட நிலையைப் பார்க்க
வெகுதூரம் சுற்றியின்னம் விபரம் காணேன்
மோகமுடன் பரந்தமனம் அணுவ தாக்கி
மூர்க்கமுடன் பரவெளியை மனவெளிதாக்க
நாகரிகமாகவுந் தானண்டமேவி
நடுவணைய முச்சிநடு மத்தி தானே!

- காகபுஜண்டர்

காகம் கயிலையில் சிவகலையாக பிறப்பெடுத்து வந்தது; பின், அது மானிடப் பிறப்பெடுத்தது; சிவ கலைக்கு அழிவில்லாத தால், அது காலத்தால் பிறவிகளைத் தொடர்ந்தது குறித்தும், காகபுஜண்டர் எனும் பெயருக்கான காரணம் குறித்தும், அந்தப் பெயர்க் காரணத்தை மறுப்பவர்களும் உண்டு என்றும் சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம்.

சுகப்பிரம்ம ரிஷி எழுதிய ஞான சூத்திரத்தின் வாயிலாகவே இந்தச் சங்கதிகள் தெரிய வருகின்றன. இதிலிருந்து, காக புஜண்டர் காலத்தால் அழிவற்றவர், காலத்தை எதிரொலிப்பவர், காலத்தால் நடக்க இருக்கும் பிற விஷயங்களை, ஊழியை முன்னதாக அறிய முடிந்தவர் என்பதெல்லாம் தெளிவாகிறது. அதை முன்னதாக உணர்த்தும் ஆற்றலும் மிக்கவர் என்பதும் புலனாகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, நெடிய கால கதியை தன் வரையில் மட்டுமல்ல, பிறர் வரையிலும் இவரால் அறிந்து கொள்ள முடிந்தது. கால மாற்றமும் அழிவும் நேரும் போதெல்லாம், இவர் காக வடிவெடுத்து வெளியில் பறந்து தப்பிப்பார். பின் புதிய யுகம்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தோன்றும்போது, இவரும் வந்து இணைந்துகொள்வார்.

'கயிலையில் ஓர் அன்னத்தின் வயிற்றில் பிறந்த காரணத்தாலா இந்தத் தன்மை?' என்கிற கேள்வி எழலாம். இதற்கு வேறு வகையிலும் ஒரு விடை காணக் கிடைக்கிறது.

முதலில், அன்னம் வயிற்றில் பிறந்த காகமாகி, பின் மானிடப் பிறப்பெடுத்த வேளையில், இவருக்குள் சிவபக்தியே மிகுதியாக இருந்தது. கூடவே, தன்னை விஞ்சிய ஒரு சிவபக்தன் இல்லை என்கிற மமதையும் இருந்தது.

அந்தப் பிறப்பில், ஓர் அந்தணர் இவருக்குக் குருவாக அமையும் ஒரு விதிப்பாடு இருந்தது. அந்த அந்தணரிடம் பாடம் கற்றுக்கொண்ட இவர், அவரைவிட தான் மிகவும் புத்திசாலி என்பதோடு, அவரை விடவே தலைசிறந்த பக்திமான் என்று தன்னைக் கருதிக்கொண்டு, குருவைப் பெரிதாகக் கருதாமல் அலட்சியப் படுத்தத் தொடங்கிவிட்டார்.

ஒருமுறை, மகாகாலர் எனும் ஆலயத்தில் பெரும் வேள்வி நடைபெற்றது. அதில் பங்கெடுத்துக்கொண்டிருந்த நிலையில், இவரது அந்தண குரு அந்த யாகத்தில் பங்குகொள்ள வந்த போது, இவர் அவரைக் கண்டுகொள்ளவே இல்லை. அவரை அலட்சியப்படுத்தி நிந்திக்கவும்... அதுவரை பூஜைகளை ஏற்றுக்கொண்டு அருளாசி வழங்கியபடி இருந்த அந்த மகா காலனாகிய ஈசனே நேரில் தோன்றி, குருவை நிந்தித்த இவரைச் சபிக்க முனைந்தான்.

எப்படித் தெரியுமா?


'இந்த உலகில் வாழும் அத்தனை உயிரினங்களாகவும் பிறக்கக் கடவது' என்று சாபமளித்துவிட்டான். இந்தச் சாபப்படி காகபுஜண்டர் ஒவ்வொரு பிறப்பாக எடுத்துக் கொண்டே இருக்கவேண்டியதுதான். அந்தப் பிறப்புக்கு ஏற்ப வாழ்ந்து, மடிய வேண்டும். ஒரு முறைதான் அந்தப் பிறப்பு. அடுத்து, இன்னொரு பிறப்பு. கிட்டத்தட்ட பதினாயிரம் பிறப்பு!

இதைக் கேட்டு காகபுஜண்டர் மிகவே வருந்தினார். தன் தவற்றை உணர்ந்து மன்னிப்பு கோரினார். ஆனால் மகாகாலரோ, 'பாவத்தில் பெரும் பாவம் குருவை அவமதிப்பது. துரோகத்தில் பெரும் துரோகம் குருவுக்குப் புரிவது. நீ இரண்டையும் செய்தவன்' என்றிட, அந்த குருவாகிய அந்தணரே காகபுஜண்டருக்குப் பரிந்து பேசினார். மகாகாலரும் அவரின் பரிவை ஏற்று, காக புஜண்டருக்குத் தந்த சாபத்தில்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினார்.



அதன்படி, ‘எந்தப் பிறப்பிலும் உலகின் மாயையாகிய துன்பங்கள் இவரை எதுவும் செய்யாது. அதே நேரம் அந்த மாயை பற்றியும், துன்பங்கள் பற்றியும் உணர்ந்து, ஓர் உத்தம குருவின் இடத்தில் இருந்து, இவர் எவருக்கு வேண்டுமானாலும் அருளலாம்’ என்று திருத்தம் செய்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தந்தார் மகாகாலர்.

அதன்பின், காகபுஜண்டரின் பிறப்புகள் காலந்தோறும் தொடர்ந்தன. ஒவ்வோர் உயிரினமாகப் பிறந்ததும், அதன் தன்மையும் அனுபவமாகப் படிந்தது. இதனால், சகல உயிர்களின் வாழ்க்கைப் பாட்டை உணரமுடிந்த ஓர் ஆத்மாவாக காகபுஜண்டர் திகழ்ந்தார். இது, இந்த உலகில் காகபுஜண்டருக்கு முன்னும் பின்னும் எவருக்கும் கிடைத்திராத ஒரு வாய்ப்பாகும்.

இதனால், அண்டத்தின் அனைத்து உயிர் அனுபவங்களையும் தன் தோள்மேல் சுமந்தவரான இவருக்கு, ஒரு பிராமணப் பிறப்பும் ஏற்பட்டது. அப்பிறப்பில், லோமசர் எனும் முனிவரின் சீடனாகும் பாக்கியமும் வாய்த்தது. இவரின் இப்பிறப்பில் அந்தத் திருமாலின் ராமாவதாரம் முற்றுப்பெற்று, ராமனின் சரிதம் சொல்லப்படுவதும் கேட்கப்படுவதும் பெரிய புண்ணியமாகும் என்னும் கருத்து இவருக்குக் கூறப்பட, 'அந்த ராமனைத் தன்னால் காண முடியுமா?' எனும் கேள்வி இவருக்குள் எழும்பியது.

குரு லோமசரிடம் இவர் தனக்கு ராம தரிசனம் சித்திக்கச் செய்யுமாறு வற்புறுத்தினார். லோமசரோ, "அதற்கு உனக்குப் பக்குவம் வரவேண்டும். உன்னுள் பக்தி முதிர வேண்டும்!" என்றார். உடனே, "எப்படி பக்தி புரியவேண்டும்?" என்று இவர் கேட்டார். "அது சொல்லி வருவதல்ல; உணர்வால் வருவது" என்றார் லோமசர்.

"உணர்வால் எப்படி வரும்?" என்று கேட்டார் இவர். லோமசர் சொன்ன எதையும் புரிந்துகொள்ளாமல், சிறுபிள்ளைத்தனமாக அவரிடம் தான் பேசியதே பேச்சு என்று பேசவும், லோமசர் தன் திருஷ்டியாலே இவரின் முதல் பிறப்பு காகம் என்பதை உணர்ந்து, அந்தக் காகம் போலவே இவர் விடாது கரைவது கண்டு, "நீ உன் பூர்வ பிறப்பை எடுப்பாயாக!" என்று சபித்துவிட, இவர் மீண்டும் காகமானார். பின்னரே, சாப விமோசனம் கிடைத்து, காகபுஜண்டர் ஆனார் என்பார்கள்.

லோமச முனிவரின் சாபத்தால், தன் பழைய பிறப்பான காக்கைப் பிறப்பை புஜண்டர் எடுத்துவிட்ட நிலையில், லோமச முனிவரிடமே ஒரு சலன சஞ்சலம் இதனால் ஏற்பட்டது. ஒரு சீடனை நெறிப்படுத்தி வழிப்படுத்த வேண்டியவனை அவசரப்பட்டு சபித்துவிட்டோமோ என்று அவர் தனக்குள்ளேயே தடுமாற ஆரம்பித்தார். நல்ல ஒரு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தவசிக்குக் கோபமே வரக் கூடாது. கோப தாபங்களை வெல்ல முடிந்தாலே, மனமானது ஒரு புள்ளியில் அடங்கி தவம் வசப்படும். தவம் வசப்பட்டாலே வரங்கள் கிட்டும்.

இப்படி ஒரு நிலையை ஒரு முனிவர் ஒரு நாளின் ஒரு பொழுதில் அடைந்துவிடுவதில்லை. ஆனால், கோபவயப்பட்டுச் சபிக்கும்போது, அத்தனை நாட்களாய்ச் சேர்த்த அத்தனை தவ சக்தியும் ஒரு நொடியில் அந்தக் கோபத்தால் வெளியேறி, திரும்பவும் ஆரம்ப நிலையை சபித்தவர் அடைந்துவிடும் ஒரு ஆபத்து உண்டு. அப்படி ஒரு நிலையை ஒருவர் அடைந்து விட்டாலே மனம் சஞ்சலப்படும். அதில் குழப்பங்கள் ஏற்படும். சஞ்சலமும் குழப்பங்களும் கிரகங்களால் ஆட்டுவிக்கப்படும் மனிதர்களுக்கேயுரிய தன்மைகள்!

ஒரு முனிவனுக்கு அந்த நிலை ஏற்படுகிறதென்றால், அந்த முனிவன் உயர்ந்த முனி நிலையில் இருந்து இறங்கிவிட்டதாகவே பொருள்!

இதனாலேயே, கோபத்தில் சபித்துவிடும் பலர் பரிகாரம் கூறித் தங்களை நிமிர்த்திக்கொள்ளப் பார்ப்பார்கள். இதையெல்லாம் உணர்ந்தே, மகாபாரதத்தில் விதுரர் தான் வகுத்த 'விதுர நீதி'யில் கோபம் - சாபம் குறித்துத் தெளிவாகக் கூறியுள்ளார்.

'கோபப்படுவதும், கோபத்துக்கு ஆளாவதும் உருவாக்கும் விஷயங்கள் என்ன தெரியுமா? கோபப்படுபவன் தன் வசம் உள்ள அருளம்சம் அவ்வளவையும் இழக்கிறான்; கோபத்துக்கு ஆளானவரோ அவ்வளவையும் அடைபவராகிறார். இந்த உண்மையை உணர்ந்தவன் எக்காரணம் கொண்டும் கோபிக்க மாட்டான். கோபித்து, தன்னை இழப்பாளியாக ஆக்கிக் கொள்ளமாட்டான். எனவே, யாரேனும் கோபித்தால் பதிலுக்கு நீங்களும் கோபித்து, அவர் தந்த அருளை இழந்து விடாதீர்கள்!' என்பது விதுர நீதி உணர்த்தும் ஒரு நுட்பமான உண்மையாகும். இதைத் தன் வாழ்நாளில் கடைப்பிடித்த ஒரே முனிவர் வசிஷ்டர்தான்!

வசிஷ்டரை விசுவாமித்திரர் படுத்திய பாடு கொஞ்ச

நஞ்சமல்ல. குறிப்பாக, வசிஷ்டரின் புதல்வனான சக்தியும் தந்தையை விஞ்சுமளவு தவமும், அதன் பயனும் உடையவன். அவனையே விசுவாமித்திரர் கல்மாஷபாதன் என்னும் சாபம் பெற்ற ராட்சதன் மூலம் கொல்கிறார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சக்தி உள்பட, வசிஷ்டருக்கு நூறு பிள்ளைகள். அவ்வளவு பேரையும் கல்மாஷபாதன் தானே உண்டு ஜீரணிக்கிறான். இதனால், தனது வாரிசுகள் அவ்வளவு பேரையும் வசிஷ்டர் இழக்கிறார். ஒரு கட்டத்தில் புத்திர சோகம் தாளாமல் தற் கொலைக்குக்கூட துணிகிறார். ஆனால், மறந்தும் கோபாவேசம் கொண்டு, தனது துக்கத்துக்குக் காரணமான விசுவாமித்திரரைச் சபிக்கவோ, அவர் மீது கோபப்படவோ செய்யவில்லை. இதனாலேயே வசிஷ்டரால் பிரம்ம ரிஷியாக இறுதிவரை வாழ முடிந்தது.

இதெல்லாம் லோமசருக்கும் நினைவுக்கு வருகிறது. உடனேயே பரிகாரம் காண விழைந்து, காகமாகிவிட்ட புஜண்டர் முன் தோன்றி, "புஜண்டா! கோபத்தால் அவசரப் பட்டு உன்னைச் சபித்துவிட்டேன். அதிலும், ஒரு காகமாக! காகம், அச்சம் மிகுந்த பிறவி. தன் இனத்துடன் கூடி ஒற்றுமையாக உண்ணத் தெரிந்த இதற்கு எச்சில் பேதம் இல்லை என்பது ஒரு குறை. அழகில்லாத ரூபமும், குரலும்கூட குறையே! இந்தக் குறைகள் உன் வரையில் நீங்கிட, நீ நினைத்த வடிவம் கொள்ளும் சக்தியை நான் உனக்கு வரமாகத் தருகிறேன். அது மட்டுமல்ல... அழிவே இல்லாதபடி யுக யுகமாக வாழ்ந்திடும் ஆயுளையும் தருகிறேன். யுகங்கள் அழிந்து புதிய யுகம் தோன்றிடும்போது, அதைக் காண முடிந்த கால தூதனாக நீ திகழ்வாய். மாறாதது மாற்றங்கள் மட்டுமே! அந்த மாற்றங்கள் எப்படிப்பட்டவை என்பதைக் காணவும் உணரவும் முடிந்த ஒரு பறவையாகவும் மானிடனாகவும் நீ திகழ்வாய். உன்னால் இந்த உலகம் அறியப்போவது, காலம் என்ற ஒன்றின் தன்மையாகும்.

இதற்கு, உனக்குக் கலங்காத தெளிந்த சித்தம் வாய்க்க வேண்டும். அதன் பொருட்டு நான் உனக்கு ராமநாமத்தை உபதேசிக்கிறேன். இந்த நாமமானது ஈசனின் ஜீவசக்தியும், திருமாலின் பிராண சக்தியும் கொண்டதாகும். பஞ்சாட்சர நமசிவாயத்தில் 'ம' எனும் பதத்தில்தான் ஜீவசக்தி மையம் கொண்டு, பொதிந்து கிடக்கிறது.

அஷ்டாட்சர மந்திரமான நாராயணாவில் 'ரா'வில்தான் அதன் பிராண சக்தி மண்டிக் கிடக்கிறது. இரண்டும் இணைந்த மகா மந்திரச் சொல்லே 'ராமா' எனும் நாமமாகும். இதை ஜெபிக்க, சித்தத்தில் ஜீவ பிராண சக்தியின் ஒளி ஏற்பட்டு, அதனால் அளப்பரிய சக்தியினை அடையவும் முடியும்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

'ராமா' எனும்போது உயிர்ப்பும், அதையே திருப்பி 'மரா' எனும்போது மரிப்பும் ஏற்படும். தொடர்ந்து இதைச் சொல்லும்போது நல்லன உயிர்க்கப் பெறும்; அல்லதெல்லாம் மரிக்கப் பெறும்!

உன்னிடமும் அது நிகழட்டும். காலத்தின் தூதனாய், சித்தர்களின் தலைமகனாய், இனி வருவோர்க்கெல்லாம் அவர்களின் முக்காலத்தை உரைப்பவனாய் நீ இருப்பாய். அதற்கான அத்தனை ஆற்றலையும் என் தபோசக்தியால் உளப்பூர்வமாக உனக்கு அளிக்கிறேன். காலம் உள்ள அளவும் நீ வாழ விரும்பினால் வாழ்வாயாக..!" என்று லோமசர் கூறவும், காகபுஜண்டர் மிகவும் மகிழ்ந்தார்.

பின்பு, முதல் காரியமாக ராம நாமத்தை ஜெபித்து சித்த ஒளி பெறத் தயாராகிவிட்டார். நெடுங்காலம் தவமிருந்து, ஆயிரம் கோடிமுறை ராமநாமத்தை ஜெபித்து, பெரும் அறிவுத் தெளிவை அடைந்தார். பிரபஞ்சம் பற்றிய ஞானம் முதல், சகலமும் இதனால் இவருக்கு வசப்பட்டது.

காலமும் உருண்டதில், பலப்பல யுகங்கள் தோன்றி மறைந்தன. இதில், சிவ- விஷ்ணு- பிரம்மாக்களாய் பலர் தோன்றி மறைந்ததாக காகபுஜண்டர் குறிப்பிடுவதைப் பார்க்கும்போது, அவர்களின் அம்சங்களையே இவர் அவ்வாறு குறிப்பிடுகிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

பூவுலகில் சித்தர்களின் புகலிடமாகவும், அவர்கள் விரும்பும் ஒரு தலமாகவும் திகழுமிடம் சதுரகிரி மலைத்தலமாகும். சதுரகிரி என்பதை சதுர வடிவமானது என்று தவறாகப் பொருள் கொண்டுவிடக் கூடாது. சதுர் என்றால் நான்கு என்று பொருள். நான்கு கிரி, அதாவது நான்கு மலைகளை நாற்புறமும் உடையது என்பது பொருள். இந்த நான்கு மலைகளை, நான்கு வேதங்களோடு பொருத்திச் சொல்வார்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 31

கண்டு கொள்வர் ஒளி தெரிந்த சீடன்தன்னை
கண்ணான ஞானக் கண் கொண்டு தானே
விண்டு சொல்லார் அங்கிருந்து கெவுனம் பாய்வார்
மெய் சிலிர்த்து நின்றதொரு சீடன் முன்னே
கண்டு கொள்ள வந்தனென்றே சொல்லி - நிற்பார்
கதவடைத்து இருட்டறையிலிருந்தாலுந்தான்
கொண்டு வந்து காதிலுறை உபதேசங்கள்
கொண்ட மட்டும் ஊட்டுவிப்பார் கோடி - தானே?

- காகபுஜண்டர்

பிரம்மனைக் கொண்டு மகாவிஷ்ணு படைத்த நான்கு வேதங்களும், அவற்றுக்குண்டான சப்தாகமங்களும் சதுரகிரியில் திட வடிவம் கொண்டு நான்கு மலைகளாய், அவற்றின்கண் உள்ள மூலிகைகளாய் எழும்பி நிற்கின்றன. இதன் காரணமாக, பஞ்ச பூதங்கள் இங்கே சமச்சீரோடு திகழ்வதாகவும் கூறலாம். பஞ்ச பூதங்கள் சம பலத்துடன் உள்ள ஓர் இடம், பூகோள ரீதியாகப் பலவிதங்களில் வலிமைமிக்கது.

இந்த உலகில் பிறந்துவிட்ட உயிரினங்கள், உடலில் உருவாகிடும் பசி, தாகத்தை வெல்ல முனைந்து, நீரையும் உணவையும் தேடி அலைந்து, அவ்வாறு தேடித் தின்னவே வாழ்வு என்று வாழ்ந்து வந்த நிலையில், மனிதன் மட்டும் அந்த நிலைப்பாட்டைத் தன் ஆறாம் அறிவால் உணர்ந்து, தேடிச் சோறு நிதம் தின்னுவது மட்டுமேவா வாழ்க்கை என்று கேட்டு, பின்பு அதற்கு மட்டுமில்லை என்று அறிந்துகொண்டான். பின்னர், மேன்மைகளைப் படிப்படியாக அடைந்து, ஒரு கட்டத்தில் பசி, தாகத்தையும் வென்று, வாய்த்த உடம்பையும் கல்ப உடம்பாக்கிக்கொள்ள சதுரகிரி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எனும் தலமே பேருதவியாக அமைந்தது. காரணம், இதன் பஞ்ச பூத பலம் மற்றும் இதன் புராதனச் சிறப்பு!

இதனாலேயே சித்தர்களுக்கு இந்தச் சதுரகிரி, அவர்களுக்கான பட்டினம் என்றானது.

நிலவும் பதினெண் சித்தரெனும் நீர்மைக்கும்பன் முதலாகக்

குலவும் பெருமை கோரக்கர் ஈறாக் குறிக்குந் தவமுனிவர்

உலவும் மேன்மைதனைக் கொண்டே உமைதன் பாகன் அகத்திருக்கக்

கலவும் சதுரகிரிப் பெருமை கனிய வுரைப்பாங் காசினிக்கே.

- எனும் பாடல் சதுரகிரிச் சருக்கத்தின் சிறப்பைக் கூறுகிறது. பூவுலகில் சித்தர்களுக்கு இது மட்டுமே சிறந்த புகலிடம் என்றும் கூறுகிறது. இந்தச் சதுரகிரிக்கு காகபுஜண்டரும் வந்து சேர்ந்து, இங்கே ஒரு குகையில் தவத்தோடு கூடிய இன்ப வாழ்வை வாழ்ந்தவராகவும், இன்னும் வாழ்ந்துகொண்டு இருப்பவராகவும் திகழ்கிறார். இன்னும் அவர் எவ்வாறு வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்னும் கேள்வியைப் பிறகு சிந்திப்போம். சதுரகிரியில் அவர் வாழ்ந்த நாளில், அவரால் இந்த உலகம் பல அரிய சங்கதிகளைத் தெரிந்துகொண்டது. அது என்னவெனக் காண்போம்.

தன்மார்த்தன் என்பவன் சுவேத மகாராஜாவின் பிள்ளை களில் ஒருவன். இவன் அரச வாழ்வில் சலிப்புற்று, எது உண்மையான ஆனந்த வாழ்வு என்ற கேள்வியில் விழுகிறான். பின்பு, அதற்கான விடையைத் தேடிப் புறப்படுகிறான்.

ஒரே இடத்தில் இருந்துகொண்டு, திரும்பத் திரும்ப சிலரையே பார்த்துக்கொண்டு, வெந்ததைத் தின்று பசியை அடக்கி, பின் வேளை வந்து செத்துப்போவதல்ல வாழ்க்கை என்பதை உணருபவன், ஒரு நாடோடியைப் போல இந்த உலகைச் சுற்றி வரத் தயாராகிறான். குறிப்பாக, வனங்களுக்குள் புகுந்து, அங்கு வாழ்வை வெறுத்து தவம் செய்தபடி இருக்கும் முனிகள், ரிஷிகள், சித்தர்களைச் சந்தித்து, அவர்கள் மூலம் வாழ்க்கையைப் பற்றிப் புரிந்துகொள்ள முடிவெடுக்கிறான்.

தன்மார்த்தனை தனியாக அனுப்ப சுவேத மகாராஜா தயங்கவும், அவனோடு பிரம்மார்த்தன் எனும் அவனது சகோதரனும், அவ்விருவரின் மனைவியரும், அவர்களுடன் வீரசேனன் எனும் சகோதரனின் மனைவியும் என ஐந்து பேர்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வனம் நோக்கி முதலில் புறப்படுகின்றனர்.

அவர்களது பூர்வ புண்ணியம், அவர்களை சதுரகிரி வனத்துக்குள் அழைத்துச் செல்கிறது. இந்த வனத்தில் ஏராளமான சித்தர்களுக்கான ஆசிரமங்கள், அவரவருக்குப் பிரியமான இடத்தில் அமைந்திருந்தன. அதில், மேற்குப் பக்கமாக அமைந்திருந்ததுதான் காகபுஜண்டரின் ஆசிரமக் குடில்.

இந்தக் குடிலுக்கு ஐவரும் வந்து, காக புஜண்டரைப் பணிந்து நின்றனர். புஜண்டரும் தன் ஞான திருஷ்டியாலேயே அவர்களைப் பற்றி அறிந்து கொண்டார். குறிப்பாக, தன்மார்த்தனைப் பார்த்து, "அப்பனே! நீ இதுவரை பல பிறவிகளை எடுத்து இருக்கிறாய்" என்று கூறியவர், அவன் எடுத்த பிறவிகளை வரிசையாகக் கூறினார்.


"உன் முதல் பிறப்பில் நீ ஒரு புழுவாக இருந்தாய். உன்னை உண்டு, ஒரு பறவை பசியாறியது. அந்தப் புண்ணியம் காரணமாக, அடுத்த பிறப்பு உனக்குக் கால்கள் கொண்ட பல்லியாக அமைந்தது. பல்லியாக இருந்த உன்னை ஒரு பாம்பு விழுங்கி, அதன் பசி அடங்கியது. அந்தப் புண்ணியம் உன்னை அடுத்து காலோடு சிறகு கொண்ட பறவையாக ஆக்கியது.

பறவையான உன்னை ஒரு வேடன் வேட்டையாடி, அவன் பசி அடங்கிடக் காரணமானாய். அதன்பின், அறிவில் சற்றுச் சிறந்த நாயாகப் பிறந்தாய். எஜமான விசுவாசமுடன் வாழ்ந்து மடிந்த உன் அடுத்த பிறப்பு கருடபட்சியாக அமைந்தது. உன்னைக் கண்டு பலரும் வணங்கி, பக்தியில் மூழ்கிடக் காரணமானாய்.

அதனால், உனது அடுத்த பிறப்பு, யானையாக அமைந்தது. கோயில் யானையாகத் திகழ்ந்ததன் காரணமாக, அடுத்த பிறப்பில் வயலில் உழுதிடும் ரிஷபமானாய். உன்னால் பலருக்கும் நெல் கிடைத்துப் பசியாறினர். அந்தப் புண்ணியமே, நீ அரச புத்திரனாக ஜனிக்கக் காரணம்!" என்று அவன் பிறப்பின் பின்னால் உள்ள ரகசியங்களைக் காரண காரியங் களோடு கூறவும், தன்மார்த்தன் ஆச்சரியமுற்றான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



பின்பு, "சுவாமி! ஓர் உயிர் அழியாமல் இப்படித் திரும்பத் திரும்பப் பிறப்பெடுத்துக் கொண்டேதான் இருக்குமா? இதில் இருந்து விடுபட முடியாதா?" என்று கேட்டான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"பிறப்பில் இருந்து விடுபட, அரிய பிறப்பான மானுடப் பிறப்பை அடைவது முக்கியம். அதிலும், பாவ கர்மங்களில் சிக்கியிராதபடி ஒரு வாழ்க்கை வாழ்ந்திருப்பது மிக முக்கியம். புண்ணியம் மிக்க வாழ்வு வாழ்ந்தாலே, தகுந்த குருவைக் காணும் வாய்ப்பு ஏற்படும். குருவைக் கண்ட பின், அவர் வழிகாட்டலால் பிறப்பிலிருந்து நிச்சயமாக விடுதலை பெற்று நித்ய இன்பத்தோடு வாழமுடியும்" என்றார் காகபுஜண்டர்.

"என்னை உங்கள் சீடனாக ஏற்று, பிறப்பில் இருந்து விடுதலை அடைய வழிகாட்டுவீர்களா?"

"அதுதானே என் நோக்கம்! காலம் காலமாக நான் அழிவின்றி வாழ்ந்துகொண்டிருப்பதே அதற்காகத்தானே?" என்றவர், "முதலில் நீங்கள் ஐவரும் இந்த வனத்தில் ஓடியபடி இருக்கும் நதிப்புலத்தில் நீராடிவிட்டு வாருங்கள். பசியாறுங்கள். பின்பு, ஆற அமர அமர்ந்து பேசலாம்!" என்றார்.

அவர் அப்படிச் சொன்னதன் பின்னாலே ஒரு காரணமும் இருந்தது. ஆனால், தன்மார்த்தனும் சரி, அவன் சகோதரனும் சரி... அந்தக் காரணத்தை எண்ண இயலாதவர்களாக, நதி நீராடப் புறப்பட்டனர். வழியில் ஒரு பலாமரம்! அதில் ஏராளமாய் கனிகள். குறிப்பாக, வேர்ப்பாகத்தில் ஒரு பலா வெடித்திருந்தது; சுளைகள் பளிச்சென்று வெளித்தெரிந்தபடி இருந்தன. அதைக் கண்ட தன்மார்த்தனின் சகோதரன் பிரம்மார்த்தன், 'நீங்கள் முன்னே செல்லுங்கள். நான் இந்தப் பழத்தை உண்டு பார்த்துவிட்டு வருகிறேன்' என்று கூறியவனாக, அதை நோக்கிச் சென்றான்.

அது கூழைப்பலா! உள் நீர் அதிகம். எனவே, கொழகொழவென சுளைகளோடு கிடந்த அதன் ஒரு சுளையை எடுத்து ஆசையாகச் சாப்பிடத் தொடங்கினான் பிரம்மார்த்தன். சாப்பிட்ட சில நொடிகளிலேயே, அவனுடைய உடலில் ஒரு வித மாற்றம்... மதி மயங்கி, மூச்சும் முட்ட ஆரம்பித்தது.

பிரம்மார்த்தன் பலாச் சுளைகளை சாப்பிட்டு மயங்கிக் கிடந்த நிலையில், நீராடச் சென்ற தன்மார்த்தனும் அவனுடன் சென்றவர்களும் நீராடிவிட்டு, பிரம்மார்த்தன் நீராட வரவில்லையே என்னும் வருத்தத்தோடு திரும்ப வருகின்றனர். அவர்களின் பார்வையில் பிரம்மார்த்தன் மயங்கிக் கிடக்கும் காட்சி தெரிகிறது. பதைத்துப் போகின்றனர். அவனைத் தட்டி எழுப்ப முனைகின்றனர். முடியவில்லை. அதே வேளையில்,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அவன் உடலில் மெள்ள நீலம் பாரிக்கத் தொடங்குகிறது.

பாம்பின் விஷம்தான் உடம்பில் நீலமாய் பாரிக்கும். அந்த யூகத்தின் அடிப்படையில் பார்த்தபோது பிரம்மார்த்தனை பாம்பு தீண்டி விட்டதாகக் கருதவேண்டி வந்தது. உடனேயே தன்மார்த்தன் பிரம்மார்த்தனைத் தன் தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு, காக புஜண்டரின் ஆஸ்ரமக் குடில் நோக்கி வேகமாய் நடந்தான்.

காகபுஜண்டர் முன் பிரம்மார்த் தனின் உடம்பைக் கிடத்தி, அவரை கண்ணீருடன் பார்த்தான் தன் மார்த்தன். காகபுஜண்டர் பெரிதாகப் பதைக்க வில்லை. நாடி பிடித்துப் பார்த்தார். நயனங்களில் வெண் பகுதியை ஊடுருவி நோக்கினார். பின், மார்பின் மேல் காதை வைத்துப் பார்த்துவிட்டு, மென்மையாகச் சிரித்தார். அது தன்மார்த்தனையும் மற்றவர்களையும் சற்று சங்கடப்படுத்தியது.

"குருவே... பிரம்மார்த்தனை அரவம் தீண்டிவிட்டதாகக் கருதுகிறேன். தாங்கள்தான் எப்படியாவது இவனைக் காப்பாற்றி எழுப்ப வேண்டும்!" என்றான் தன்மார்த்தன்.

"கவலை வேண்டாம். அரவம் தீண்டவில்லை. ஆனால், அரவத்தின் விஷம்தான் உடம்பில் ரத்தத்தில் கலந்துள்ளது. எப்படி இப்படி ஆயிற்று என்று கூற முடியுமா?" என்று கேட்டார்.

"குருவே... பழுத்து வெடித்த வேர்ப் பலாவை விரும்பிச் சாப்பிடச் சென்று, அப்படிச் சாப்பிட்ட இடத்திலேயே மயங்கிக் கிடந்தான். அங்கேதான் அரவம் தீண்டியதோ என்று கருத வேண்டியுள்ளது..."

"இப்போது புரிகிறது. அரவம் இவனைத் தீண்டவில்லை. அது வெடித்த பலாவைத்தான் தீண்டியுள்ளது. வேர்ப் பலா அருகில் அரவங்கள் சுருண்டு படுக்க வரும். அப்போது காற்று வீசவும் பலாக்கனி ஆடும். அது ஆடவும், அரவம் அச்சம் கொண்டு அதைக் கொத்தும். அப்போது அதன் விஷம் பழத்தில் இறங்கிவிடும். இது தெரியாமல் அதை உண்ணப்போய்த் தான் இப்போது இந்த நிலை.

நல்லவேளை... அரவமே தீண்டியிருந்தால் விஷம் உச்சியில் ஏறி மூளையில் பரவி, உயிரும் பிரிந்திருக்கும். விஷம் இப்போது வயிற்றில் மெல்ல ஜீரணமாகத் தொடங்கி, பின்னரே பரவியுள்ளது. இன்னமும் மூன்றரை நாழிகை வரை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நாடித் துடிப்பு இருக்கும். சப்த நாடிகள் ஒவ்வொன்றாகவே அடங்கும். இதுவரையில் நான்கு நாடிகள் அடங்கிவிட்டன. இன்னமும் மூன்று நாடிகள் அடங்குவதற்குள் விஷத்தை முறித்து, ரத்த ஓட்டத்தில் உயிர் அம்சத்தைப் புகுத்தி, அடங்கிவிட்ட மற்ற நாடிகளையும் தட்டி எழுப்பி துடிக்கச் செய்து, மயக்கத்துக்குக் காரணமான காரணிகளை வெளியேற்றி, இவனை உயிர் பிழைக்கச் செய்துவிடலாம். இப்போது நாகதாளி எனும் செடியின் இலைகள் வேண்டும். அதைப் பறித்து அரைத்து, உடல்முழுக்க முதலில் பூச வேண்டும். அவ்வாறு பூசிடும்போது, அதற்கென்று உள்ள மந்திரத்தைச் சொல்லியபடி பூசவேண்டும்'' என்ற காகபுஜண்டர் அவரே சென்று நாகதாளி செடியை வேரோடு பறித்து வந்தார்.

பின்பு, இலையை ஒரு கலயத்தில் போட்டு, மரத்தால் ஆன மத்து கொண்டு கடைந்து அரைத்து, அதில் நீர் விட்டுச் சாறு போலாக்கிக் கொண்டு, கிழக்குத் திசை நோக்கி நின்றவராக மந்திர உச்சாடனம் புரியத் தொடங்கினார். அப்படியே சாற்றை பிரம்மார்த்தன் உடல் முழுவதும் பூசினார். பூசும் போதும் மந்திரம் ஜெபித்தார்.

அதன்பின், நீலமாய்க் கிடந்தவன் பச்சையாக மாறினான். நேரம் உருண்டது. காலில் கட்டைவிரல் பாகத்தில் மெல்லிய அசைவு தெரிந்தது. அதைக் கவனித்த காகபுஜண்டர், 'அடங்கிவிட்ட ஒரு நாடி துடிக்கத் தொடங்கிவிட்டது' என்றார். பின்பு, கையில் ஆட்காட்டி விரலில் அசைவு! அடுத்த நாடியும் துடிக்கத் தொடங்கிவிட்டது.

இப்படி, ஒவ்வொரு அடங்கிய நாடியும் துடிக்கத் தொடங்கி, பிரம்மார்த்தனும் எழுந்து அமர்ந்தான். அனைவரிடமும் பெரும் மகிழ்வு!

காகபுஜண்டரும், 'ஒரு கண்டம் கடந்தாய் அப்பனே!' என்றார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 32

காகபுஜண்டரின் சிகிச்சையால் பிரம்மார்த்தன் விழித்து எழுந்தான். தன் சகோதரன் பிழைத்துக்கொண்டதால் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்ட தன்மார்த்தன் காகபுஜண்டரிடம் தனது கேள்வியை முன்வைத்தான். "குருவே... மனித வாழ்வில் இப்படி எதிர்பாராத சம்பவங்கள் நிகழ எது காரணம்?" என்று கேட்டான் தன்மார்த்தன்.

"ஊழ்வினைதான்... வேறென்ன?" என்றார் காகபுஜண்டர்.

"அனைத்தும் அவன் செயல் எனும்போது, ஊழ்வினைக்குக் காரணமான செயலுக்கும் அந்த இறைவன் அல்லவா காரணம்?"

"அதிலென்ன சந்தேகம்? அவனே காரணம்!"

"அப்படி இருக்க, எப்படி தீவினைகள் பாதிப்பை ஏற்படுத்தலாம்?"

"அப்பனே, நெருப்பென்றால் சுட வேண்டும்; காற்றென்றால் நிலவ வேண்டும்; நீரென்றால் தாகம் போக்க வேண்டும்; நிலமென்றால் தாங்க வேண்டும்; ஆகாயம் என்றால் இருந்தும் இல்லாதிருக்க வேண்டும். அதுபோல, வினைக்கு ஏற்ப பதில் வினை உருவாகும். இதை உள்ளடக்கியே தர்ம நீதி சாஸ்திரங்கள் உருவாக்கப்பட்டன. அந்த சாஸ்திரங்களைத் தெரிந்தும் புரிந்தும் வாழ்வதே வாழ்வாக இருக்க வேண்டும். சாஸ்திரங்கள் தெரிந்தால் மட்டும் போதாது; அதன்படி நடக்க வேண்டும். அப்படி நடந்தால் தீவினைகளே புரிய மாட்டோம்; பதிலுக்கு எதிர்விளைவுகளும் உருவாகாது..."

"தர்மநீதி சாஸ்திரங்களைத் தெரிந்துகொள்ள வழியற்ற நிலையில் உள்ளவர்கள் என்ன செய்வது?"

"ஓர் உயிர் மானுடப் பிறப்பு எடுக்கிறது என்றாலே, அதன் முன் வினைப்பாடுதான் காரணம். அப்படி மானுடப் பிறப்பு எடுத்துவிட்ட நிலையில் சுழலுக்கேற்ப மனம் உருவாகும். பின், காலத்தால் அறிவு வளரும். இயற்கையே இவ்விரண்டையும் கற்றுத்தரும். இந்த இரண்டின் போக்கில் முதலில் தர்மநீதி சாஸ்திரங்களை அறிந்து கொள்ள வழியற்ற நிலை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இருந்தாலும், நிச்சயமாக ஒரு பிறப்பில் தெரிந்துகொள்ள வழி ஏற்படும். இப்போது என் மூலம் உங்களுக்கு பல விஷயங்கள் தெரிய வருவதுபோல் அதுவும் சித்திக்கும்...''

''அதற்குப் பல பிறவிகள் தேவைப்படுமோ?''

''ஆம். ஒவ்வொன்றுக்கும் ஒரு காலப்பிரமாணம் உள்ளது. ஒரு விதை மரமாகி, காய் கனிகளைத் தருவது முதல், ஓர் உடல் ஒவ்வொரு பருவத்தையும் கடந்து முதுமை எய்தி, உயிர் மூச்சை நிறுத்திக் கொள்வதுவரை ஒவ்வொன்றின் பின்னாலும் ஒரு காலக் கணக்கு உள்ளது. அந்தக் கணக்கு கூடவும் கூடாது; குறையவும் குறையாது. அது மிகச் சரியானது. சற்று மாற்றி இப்படியும் கூறலாம்... அதாவது, எது மிகச் சரியானதோ அதை கணக்கு என்றும் கூறலாம்...''

''அப்படியானால், இந்த வனத்தில் நாங்கள் உங்களைச் சந்தித்ததற்குப் பின்னாலும் வினைக் கணக்கு உள்ளதோ?''

''அதிலென்ன சந்தேகம்? இந்த வனத்தில் கோடானுகோடி தாவரங்கள், உயிரினங்கள் உள்ளன. ஆனால், உங்கள் தொடர்பும் கவனமும் என் மேல் மட்டும்தானே இப்போது உள்ளது?''

''மனித வாழ்வில் இப்படி உணர்வதற்கு எத்தனை விஷயங்கள் இருக்கிறது குருவே?''

''அதற்கு எல்லையில்லை அப்பனே! அனைத்தையும் அறிந்து வைப்பதால் பயனுண்டா என்றால், அதுவுமில்லை. கடலளவு நீர் இருக்க, நம் தாகத்துக்கு எப்படிக் கையளவு போதுமானதோ, அப்படியே மானுட வாழ்வும்.

எனவே, தேவைக்கு மதுரமாய் வாழ முற்படுவதே நல் வாழ்வாகும்.''

''அந்த மதுர வாழ்வுக்கு எது முதலில் தேவை?''

காகபுஜண்டருக்கும் தன்மார்த்தன், பிரம்மார்த்தன் முதலான ஐவருக்கும் இடையில் ஒரு ஞானப் பரிவர்த்தனை தொடங்கியது...

''அப்பனே... ஒரு மனிதனின் முதல் தேவை, தாகம் அடங்கிப் பசியாறுதல். இது உடல் சார்ந்தது! இந்தப் பசியும் தாகமும் இல்லை என்றால் உடல் வளராது. எனவே, இது அனிச்சையாக மனித உடலில் செயலாற்றுகிறது. அதனால்தான் பிறந்த குழந்தை பாலுக்கு அழுகிறது. மலப் பையும் மூத்திரப் பையும் நிரம்பியவுடன் உடல் அதை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வெளியேற்ற வேண்டிய அவஸ்தைக்கு ஆளாகிறது. உடல் சார்ந்த இந்த அனிச்சை, மனத்துக்கு அறிவாலே உருவாகிறது. அந்த அறிவுதான் பட்டறிவு. இந்தப் பட்டறிவே சூட்டை உணர்ந்து, அதை விட்டு விலகி நிற்கச் செய்கிறது. நீரில் மூழ்கிடாது நீச்சலடிக்கக் கற்றுத் தருகிறது. கை கால்களைக் கொண்டு நடக்கவும், குதிக்கவும், படுக்கவும், மரம் மேல் ஏறி இறங்கவும் என்று ஒவ்வொன்றையும் கற்றுத் தருகிறது.

ஆக, உடம்பு அனிச்சையாகவும், மனது பட்டறிவாலும் செயலாற்றுகிறது. இந்த இரண்டும் புழு பூச்சி முதல் மனிதன் வரை சகலருக்கும் பொருந்தும். இந்தச் செயல்பாடு களின் பின்னாலே ஐந்தறிவு மட்டுமே உள்ளது. ஆனால், மனிதனுக்கு ஆறாவதாக ஓர் அறிவும் உள்ளது. அதுதான் தன்னை உணர வழி காட்டுகிறது. ஒருவன் தன்னை, தன்னை மட்டும் வைத்து உணர இயலாது. பிறரை வைத்தும் ஏனைய பிறவான பலவற்றை வைத்துமே உணர முடியும்."

காகபுஜண்டர் ஆறாம் அறிவு குறித்துச் சொன்ன செய்தியோடு அந்த ஐவரையும் ஆழமாகப் பார்த்தார்.

"குருவே! இந்த அறிவுதானே மனிதனைப் பிற உயிர்களிடம் இருந்து வேறுபடுத்தி மேன்மையாகவும் காட்டுகிறது?" என்று கேட்டான் பிரம்மார்த்தன்.

"ஆம்... ஆனால், மேன்மையாக எனும் உன் கருத்து தவறானது. அந்தக் கருத்து அகந்தையான கருத்தாகும். மிக உயரமாக வளர முடிந்ததால் தென்னை மரம் உயர்ந்தது என்றும், ஒரு சாண் அளவே வளர முடிந்த அருகம்புல் தாழ்ந்தது என்றும் கூறுவோமா?"

"என்றால், மானிடப் பிறப்பு அரிய பிறப்பு என்று கூறப் படுவதன் காரணம்?"

"தன்னை, இந்த உலகை அறிந்துகொள்ள முடிந்த பிறப்பாக மானிடப் பிறப்பு இருப்பதால், அது அரிய பிறப்பென்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. இந்த அரிய பிறப்பு எனும் கருத்தை பொறுப்பு உணர்வோடு அணுக வேண்டும்.

அரிய பிறப்பு வசமாகியுள்ளது. இதிலிருந்து அறிய வேண்டியதை அறிந்து, புரிய வேண்டியதைப் புரிந்து, பிறவித் தளையில் இருந்து விடுபெற முயல வேண்டும். ஒரு மலை உச்சியைப் போன்றது மானிடப் பிறப்பு. அந்த உச்சியில் இருந்து மேலே ஆகாயத்தில் ஏறிடும் விதம் செயல்பாடு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இருத்தல் வேண்டுமே தவிர, உருண்டு கீழே விழுந்துவிடுவது போன்ற விதத்தில் கூடாது. எனவேதான், மனித வாழ்வை வரையறை செய்து பிறவித் தளையை வென்றிடும் விதமாக தர்ம நியாயங்கள் சாஸ்திரங்களால் சொல்லப்பட்டுள்ளன. அதை அறிந்து, அதன்படி நடந்திட வேண்டும்.''

''தர்ம நியாயங்களின்படி வாழ்வது என்பது பெரும் சவாலான விஷயம் என்று கூறப்படுகிறதே?''

''ஆம்... இந்த உலகம் மாயையால் சூழப்பட்ட ஒன்றும்கூட. தர்ம நியாயங்களோடு நடக்க முயலும்போது மாயை அதைத் தடுக்கப் பார்க்கும். தர்ம நியாயங்கள் என்பதே ஒரு பொய் என்பதுபோல எண்ண வைக்கும். ஆனால், நாம் அந்த மாயையின் வசம் சிக்கி விடாமல், அதை வென்று செயல்பட வேண்டும்.''

''ஏன் மாயை மனிதனைத் தன் வசப்படுத்த முயல்கிறது?''

''ஒரு போட்டியில் பலரும் பங்குகொள்கிறார்கள். ஒருவரை ஒருவர் வெற்றி கொண்டால்தானே வெற்றி பெற்றவர் ஆவோம்?''

''அதிலென்ன சந்தேகம்?''


''இங்கே மாயைதான் நம் எதிரி! அதை வெற்றி கொண்டால் தான் பிறவித் தளையில் இருந்து விடுபட முடியும்.''

''மாயையை வெல்ல என்ன செய்ய வேண்டும்?''

''முதலில் தன்னை நன்கு உணர வேண்டும்.''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



"அதற்கு வழி?"

"உங்கள் மனத்தை அலைபாய விடாதீர்கள். மனக் குதிரையை கட்டிப் போடுங்கள்."

"எப்படி?"

"பிராணாயாமம் செய்யுங்கள்!"

"பிராணாயாமம் பற்றித் தெளிவாகக் கூறுங்கள்."

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"பிராண வாயு உட்சென்று பெருமளவு கலந்துவிடாதபடி தடுத்து நிறுத்தி, தேவைக்கு உட்கொள்வதே பிராணாயாமம் ஆகும்.

பிராண வாயு உடலில் மிகுந்து இருக்கும்போது, மனமும் கவனத்துடன், இயக்கத்துடன் இருக்கும். மனம் அசையாதபோதே சித்தம் ஸ்திரமாகும். மனம் அசையக் காரணமான பிராண வாயுவைக் கட்டுப்படுத்தும் விதமே பிராணாயாமம் ஆகும். இது பூரகம், கும்பகம், ரேசகம் என்று மூன்று நிலைகள் கொண்டது. பூரகம் என்பது சந்திரநாடி, சூரியநாடிகளில் பிராண வாயுவை உள் இழுப்பதாகும். கும்பகம் என்பது, இழுத்த வாயுவை உள் நிறுத்திக் கொள்ளுதலாகும். ரேசகம் என்பது, நிறுத்திய பிராண வாயுவை விட்டு விடுதலாகும்.

பிராணன் என்றால் காற்று; அயாமா என்றால், கட்டுப்படுத்துதல். இரண்டு சொல்லின் இணைப்புச் சொல் தான் பிராணாயாமம். இந்தப் பிராணாயாமத்தை தெளிந்து செய்வதில்தான் நம் உடலும் உள்ளமும் சிறப்போடு திகழ்வது உள்ளது. இதில் உச்சம் தொட்டுவிட்டால், மரணத்தைக்கூட நாம் வென்றுவிட முடியும்!"

காக புஜண்டரின் விளக்கம் அந்த ஐவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

"நம் சுவாச கதிக்கு பின்னால், இவ்வளவு சங்கதிகள் உள்ளதா?" என்று கேட்டான் தன்மார்த்தன்.

"மூச்சுதான் அப்பனே எல்லாம்! பிரபஞ்சத் தொடர்பே அதன் மூலம்தான். இந்த மூச்சுக்குள்தான் கணக்கு உள்ளது. அந்தக் கணக்குகளில் தான் நாம் அடைவதும், அடையாததும் ஒளிந்துள்ளது..."

"அடைவது எதை? அடையாதது எதை?"

கேட்க வேண்டிய கேள்வியை மிகச் சரியாகவே கேட்டான் பிரம்மார்த்தன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 33

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பகம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத்திரண்டதி ரேசகம்
மாறுதல் ஒன்றின் கண் வஞ்சக மாமே.

- திருமந்திரம்

பிராணாயாமம் என்னும் சுவாசப் பயிற்சிதான் மனிதனைக் கடைத்தேற்றும் அற்புதம். அதைத் தெளிவாகப் புரிந்தும் உணர்ந்தும் செய்வதில்தான், அடைவது அடையாதது எனப் பல உள்ளது என்று காகபுஜண்டர் கூறிட...

அடைவது எதை, அடையாதது எதை என்று அதையொட்டி ஒரு கேள்வி கேட்டான் பிரம்மார்த்தன்.

யுகங்களைக் கடந்து வாழ்ந்திடும் அந்த மகா சித்தனும் அதற்கான பதிலைச் சொல்லத் தொடங்கினார். அது பிரம்மார்த்தனுக்கு மட்டும் சொல்லப்பட்டதல்ல; பிரம்மார்த்தனுக்குச் சொல்வதுபோல் மனிதகுலம் முழுமைக்கும் சொல்லப்பட்ட பதிலாகும். பதில் என்றால், ஏதோ ஓரிரு வரிகளில், சொற்ப வார்த்தைகளில் அமைந்த பதில் அல்ல. அது ஒரு நெடிய விளக்கம். பிரம்மார்த்தனும் சரி, அவனோடு இருந்த மற்ற நால்வரும் சரி... அதை ஏடுகளில் எழுதிக்கொள்ளவும் செய்தனர். அந்த ஏடுகள் அழியாது பலர் கைகளில் தவழ்ந்து, அந்தந்தக் கைகளுக்கு உரியவர் எல்லாரும் காகபுஜண்டரின் உபதேச மொழிகளை அறிந்துகொண்டனர். பின்பு, அவர்களால் அது உலகம் முழுக்கப் பரவத் தொடங்கியது.

உலகம் முழுக்கப் பரவியது என்றால், உலகில் வாழ்ந்து வரும் அத்தனை மாந்தர் களும் இதை அறிந்துகொண்டார்கள் என்று பொருள் கொண்டுவிடக் கூடாது. எவருக்கெல்லாம் மானுட வாழ்வில் கடைத்தேறும் விதிப்பாடு இருந்ததோ,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அவர்களை எல்லாம் புஜண்டரின் உபதேச மொழிகள் சென்றடைந்து, அவர்களின் அகக் கண்களைத் திறந்துவிட்டன. அது என்ன விதிப்பாடு என்று ஒரு கேள்வி இங்கே எழலாம்.

இன்று உலக அளவில் ஆன்மிகத்தைப் பொறுத்தமட்டில் ஒரு தவறான நிலைப்பாடு, ஆன்மிகத்தில் நாட்டமும் நம்பிக்கையும் உடையவர்களிடமேகூட காணப்படுகிறது. ஆன்மிகத்தைத் தெளிவாகவும், முழுமையாகவும் தெரிந்து கொள்ளாமலும், புரிந்துகொள்ளாமலும், தாங்கள் அறிந்த அளவுக்குண்டான தெரிதல் புரிதலோடு தான் நூற்றுக்குத் தொண்ணூறு ஆன்மிகவாதிகள் செயல்பட்டு வருகின்றனர்.


இதனால் இவர்களிடம் நாத்திகம் பேசுகின்றவர்கள் சில கேள்விகளை எழுப்பும்போது, அவர்களுக்குச் சரியான பதிலைக் கூற முடியாதவர்களாக இவர்கள் உள்ளனர். அடுத்து, இது தவறு என்று தெரிந்தும், பல தவறுகளைச் செய்து விடுகின்றனர். இதனால் கர்மவினைப்பாடு உருவாகி, அது அழியும்வரை அந்த வினைக்கு ஏற்பப் பிறவிகள் எடுக்க வேண்டிய ஒரு கட்டாயம் உருவாகிவிடுகிறது. இந்த வினைப் பாடுகளே விதியாக வடிவெடுத்து, வழிநடத்துகின்றன.

வினைப்பாடுகளில் நல் வினைப்பாடுகளும் உண்டு. பள்ளி ஆசிரியராக, ஊதியத்துக்காகக் கடமைக்குப் பணியாற்று பவராக இல்லாமல், ஊதியத்தை ஒரு பொருட்டாகக் கருதாமல், ஆயிரக் கணக்கான மாணவ மாணவியரின் எதிர் காலம் ஒன்றை மட்டுமே கருதி, அவர்களுக்கு ஏற்ப பாடம் புகட்டும் ஆசிரியப்பணி ஆற்றுபவரே ஒரு நல்ல குரு ஆவார். அவரது தன்னலமற்ற வினைப் பாடு, வாழ்வியல் கல்வி புகட்டிய அவரை, ஞானக்கல்வியை அறிந்துணரும் நிலைக்கு இட்டுச்செல்லும்.

காகபுஜண்டர் போதித்தது ஞானக் கல்வியை..! அந்தக் கல்விக்குள் இருந்தது உடல் மற்றும் உள்ளம் குறித்த ரகசியங்கள் ஆகும். இன்று 700 கோடி பேரைக் கடந்து இந்த உலகின் மக்கள் தொகை சென்றுவிட்டது. இதில் தமிழறிந்தவர்கள் சுமார் 10 கோடிப் பேர்தான் இருப்பார்கள். இவர்களில் கல்வி ஞானம் உடையவர்கள் முக்கால் பங்கு இருப்பர். இவர்களிலும் இறை நம்பிக்கையாளர் குறைவாகவே இருப்பர். அந்த நம்பிக்கை உடையவர்களிலும், ஆன்மிகத்தில் நல்ல புரிதலும் தெளிதலும் உடையவர்கள் மிகக் குறைவாகவே இருப்பார்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



இந்தத் தெளிதலும் புரிதலும் உடையவர்களே பெரும் தேடுதல் வேட்கை கொண்டிருப்பர். அவர்களின் தேடுதல் என்பது, இந்தப் பிறவித் தளையில் இருந்து விடுபடுவதற்கான

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வழியாகவே பெரும்பாலும் இருக்கும்.

மானுடப் பிறப்பென்பதே அரிய பிறப்பு! இந்த மானுடப் பிறவிக்கே தன்னை அறிந்துகொண்டு, பின்பு தான் சார்ந்த சகலத்தையும் அறிந்திடும் ஆற்றல் உண்டு. ஆயினும், இந்த ஆற்றலைப் பயன்படுத்தத் தெரியாமல் உலக மாயையில் சிக்கி, மீண்டும் பிறவிகளை எடுப்பவர்களாகவே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் உள்ளனர். பத்து பேர்தான் கடைத்தேறிடும் வழியைக் கண்டு, மீண்டும் 'பிறவாமை' எனும் நற்கதியையும் அடைகிறார்கள்.

அரிய பிறப்பு இந்த மானிடப் பிறப்பு என்று கூறிவிட்டு, தொடர்ந்து அதில் பிறவிகள் எடுப்பதை ஏன் ஒரு பாரமாகக் கருத வேண்டும் என்று சிலர் கேட்கலாம். அநேகமாக, அவர்கள் வாழ்வின் இளைய பிராயத்தில் இருக்கும்போதுதான் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கக்கூடும். முதுமை அடைந்து முடி நரைத்து, கண்ணில் திரை விழுந்து, தள்ளாமைக்கு ஆளாகி, பிறர் துணையின்றி வாழ இயலாத ஒரு நிலை வரும் போதுதான் ஆகச் சிறப்பான மானுடப் பிறப்பே பெரும் பாரமாகத் தெரியும். இவ்வேளையில் தவறான வாழ்க்கைப்பாடு காரணமாகவும், வினைப்பாடு காரணமாகவும், நோய் நொடிகள் உடம்பில் தஞ்சம் புகுந்துவிட்டால், முதுமை என்பது முதிர்ந்த நிலை என்பது போய், சகலமும் தகர்ந்த நிலை என்றாகிவிடும்.

இவர்களிடம் சென்று மீண்டும் மனிதப் பிறப்பெடுக்க விருப்பமா என்று கேட்டால், இதுவரை பட்டதே போதும் என்றே கூறுவர். முதுமையிலும் இளமைக்குரிய சுறுசுறுப்பும் ஆரோக்கியமும் எவரிடம் உள்ளதோ, அவரே மிகச் சிறந்த வினைப்பாட்டுக்கு உரியவர்.

இந்த வினைப்பாட்டுக்கு உரியவரால்தான் காகபுஜண்டரின் உபதேசங்களையும் பின்பற்றிக் கடைத்தேற முடியும். மற்றவர்கள் பின்பற்றாவிட்டாலும், அறிந்துவைத்துக் கொள்வதில் தவறில்லை. அதேநேரம், இதை அறிந்துகொள்ளக் கூட நல் வினைப்பாடு வேண்டும் என்பதை மனத்தில் கொள்ளவேண்டும்.

இனி, பிராணாயாமம் குறித்தும், உடல் வலிமையின் பொருட்டு காயகற்பங்கள் குறித்தும் காக புஜண்டர் கூறியதைச் சிந்திப்போம்.

தன்மார்த்தன், பிரம்மார்த்தன் மற்றும் அவர்களின்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மனைவியரும் காகபுஜண்டரின் கூற்றைக் கவனமாகக் குறித்துக் கொண்டனர்.

பிராணாயாமம் புரிய, தேகம் முக்கியம். ஏனென்றால், பிராணாயாமம் என்பது காற்றைச் சுவாசிப்பதால் புரியப்படும் ஒரு செயல்பாடு.

எனவே, இது மனம் சார்ந்தது மட்டுமல்ல; உடல் சார்ந்ததும் கூட! ஆனால், இந்தப் பிராணாயாமம் உடம்பில் ஓர் உன்னத நிலைப் பாட்டை அடையும் தருணத்தில், இதன் காரணமாக மனம் எனும் சித்தப் பகுதியும் மிக மிகச் சீராகும்.

அந்த வேளையில், இந்தச் சித்தம் பிறர் கூறாமலே, தானாகவே நுட்பமான பல விஷயங்களை உணர்ந்துகொள்ளும். அந்த உணர்வு காரணமாக, மனத்தில் ஓர் ஒளி தோன்றி, அது அவர் முகத்தில் தேஜஸ் எனும் அம்சமாக ஒளிரும்.

பிராணாயாமம் புரிய அடிப்படைத் தேவையான உடல் குறித்து முதலில் சற்றுச் சிந்திப்போம். ஒருவர் இருக்கிறார் என்றால், அவர் புலன்களுக்குத் தெரிவதால்தான் இருப்பதை உணர்கிறோம். தெரியக் காரணமானது தேகமே! இந்தத் தேகமானது தாய் தந்தையரால் உருவானது. ஓர் உடலில், ஏழு தாய் தந்தையர்களின் பதிவுகள் மட்டுமே இருக்கும். மற்றதைக் காலம் அழித்துவிடும்.

அதாவது, உங்கள் எதிரில் இப்போது ஒருவர் இருக்கிறார்; அதாவது, அவரின் தேகம் இருக்கிறது எனில், அதில் அவர், அவரின் தாய், தந்தை, பாட்டன்மார், பாட்டிமார்களின் அணுக்கூறுகளைக் காணமுடியும். அவர்களின் அணுக்கூறுகள் மட்டுமல்ல, வினைக் கூறுகளும் உள்ளன.

அணுக்கூறுகள்தான் உடம்பின் நிறம், உயரம், ஒல்லி, குண்டு, பித்தம், வாதம், சிலேத்துமம், ஊனமுள்ள மற்றும் ஊனமற்ற அமைப்பு

என்று சகலமாய் உள்ளது. வினைக்கூறுதான் சித்தமாய் உள்ளது.

இந்த அணுக்கூறோடும் வினைக்கூறோடும் முற்பிறப்பில் அவரை வழிநடத்திய ஆன்மாவானது வந்து கலந்து, அதுவே இயக்க சக்தியாக மாறி, அணு மற்றும் வினை இயங்கத் தொடங்குகிறது.

அந்த இயக்கமானது, அவர் தன் தாயின் கருப்பைக்குள்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கருப்பிண்டமாக உருவான நிலையில், ஒரு குறிப்பிட்ட நாளில் இருந்து அதைக் கைப்பற்றி இயங்கத் தொடங்குகிறது. இந்த இயக்க சக்தி காரணமாகவே சுவாசச் செயல்பாடு தொடங்கி, உடம்பும் வளரத் தொடங்குகிறது. பின்பு பிறப்பு நிகழ்ந்து, சுற்றுச் சூழலால் சித்தம் விழிக்கத் தொடங்குகிறது.

இந்தச் சித்தத்துக்குத் தாய் தந்தையர் பேசும் மொழி தாய்மொழி ஆகிறது. அவர்கள் வந்த வழிமுறைகளே இதன் வழிமுறையாகவும் அமைகின்றன. பிறந்த இடம் பிறப்பிடம் ஆகிறது. இடத்துக்கு உரிய ஊர், ஊருக்கு உரிய நாடு, நாட்டுக்கு உரிய இனம் எனப் பிரத்யேக அடையாளங்கள் உருவாகின்றன.

ஒரு கோணத்தில், இவை எதுவுமே நம் கைகளில் இல்லாதவை போல் தோன்றும். குறிப்பாக, நாம் அறிய வருவதைக் கொண்டு வளர்வதே அறிவாகும். அந்த அறிவுதான், இவை எதுவுமே நம் கையில் இல்லை என்று கூறும்.

ஆனால் உண்மையில், வாழ்நாளில் நாம் புரியும் வினைப் பாடே ஆன்மாவில் பதிவாகி, முடிவான முக்திக்கு உரியவராகவும், முடிவற்ற பிறப்புக்கு உரியவராகவும் நம்மை ஆக்குகிறது. இதை அறிவதே ஞானம்.

இந்த ஞானமோ, எடுத்த பிறப்பை அதன் அடையாளங்களை முன் வினைப்பாட்டுக்கு ஏற்ப அடைந்ததாகவே கருதும். இதன்படி பார்த்தால், ஒவ்வொருவரும் அவரவர் தலை யெழுத்தை அவரவர்களே எழுதிக்கொள்கின்றனர். ஆனால், ஞான விழிப்பு ஏற்படாத நிலையில், கடவுள் தன் தலையில் எழுதிவிட்டான் என்கின்றனர். ஒருநாள், ஞான விழிப்பு ஏற்படும்போது, நம் செயல்களே நம் வாழ்க்கைப் போக்கைத் தீர்மானிக்கின்றன என்பது புரியும்.

இந்தச் சிந்தனை நாத்திகவாதிகளிடமும் உண்டு. இதே கருத்தையுடைய நாத்திக வாதிக்கும் ஆத்திக ஞானிக்கும் இடையே ஒரு பெரும் வித்தியாசம் உண்டு. நாத்திகம் பேசுவனிடம் 'நான்' எனும் அகந்தை இருக்கும். ஆத்திக ஞானியிடம் அது இருக்காது. நாத்திகம் பேசுபவன் 'நான்' என்று உடம்பை முதலாக வைத்துச் சிந்திப்பான். ஆத்திக வாதியோ ஆன்மாவை முதலாக வைத்துச் சிந்திப்பான்.

கண்களுக்குப் புலனாகும் இந்த உடம்புக்குப் பின்னால் இப்படிச் சிந்திக்க நிறைய சங்கதிகள் உள்ளன. இப்படிப்பட்ட

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உடம்புக் குள் ஏழு பிறப்பாளர்களின் அணுக்கூறுகள் பதிந்து கிடந்து, அவை வளர்ந்து, அவற்றின் தன்மைக்கு ஏற்ப செயலாற்றி, முதுமை

அடைந்து, பின் மரணமெய்தி மண்ணாகவோ சாம்பலாகவோ ஆகின்றன. நம் முன்வினைக் கூறு விதியாகி வழி நடத்துகிறது. இந்த அணு மற்றும் வினைக் கூற்றை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்து கொள்ளவும் விதியில் இடமிருக்கவேண்டும். தெரிந்துகொண்டாலே பின்னர் புரிந்து கொள்ள முடியும். புரிந்துகொண்டாலே நாம் நமக்கு அமைந்த உடம்பை அதற்கு ஏற்பப் பாதுகாக்க முடியும்.

பாதுகாக்கும் ஒரு பிரதான முன்செயல் பாடுதான் உடம்பை காயகல்பத்தால் வஜ்ரம் போலாக்குவது. பின்பு, பிராணாயாமம் புரிந்து உடல் மற்றும் சித்தமாகிய மனம் என்ற இரண்டையும் மிகுந்த வலிமையுடையதாக ஆக்கிக்கொண்டு, வாழ்வை ஆரோக்கியமாகத் தொடர்வது.

உடல் வலிமைக்கு காயகற்பங்களை எடுத்துக்கொள்வதற்கு முன், அதை அறுசுவைகளில் இருந்து விடுவிக்க வேண்டும். அறுசுவையும் அதன் கிளைச் சுவைகளும்தான் நவமெனும் ரசமாகின்றன. இந்த நவரசம் மாயை சார்ந்தது. அனுபவிக்க அனுபவிக்க அலுப்பூட்டும். நித்ய இன்பம் தராது.

எனவே உப்பு, புளி, காரம் என்கிற சுவைகளைத் தவிர்த்து, உடம்பைப் பத்தியத்துக்கு ஆட்படுத்தி, கூடுதல் கொழுப்பு துளியும் இல்லாத உடம்பை முதலில் திடமான எண்ணத்தால், அதன் முனைப்பில் உருவாக்க வேண்டும். அதற்குத் துணை புரிவதே தவமாகும்.

உடம்பு அறுசுவையில் இருந்து விடுபடும்போது, ஆட்டிப் படைக்கும் கோள்களின் பிடியில் இருந்தும் விடுபடும். கோள்களின் பிடியில் இருந்து விடுபடுவதே விடுதலையின் தொடக்கம். இந்த நிலையில்தான் காயகல்பம் உடலில் தன் செயல்பாட்டால் உடம்பை வஜ்ரம்போல் ஆக்கும். வஜ்ர உடம்புக்கு வாழை இலையில் போஜனம் தேவையில்லை. ஒரு துளசி இலை, ஒரு வில்வ இலையேகூட போஜனம்தான்! தாகமும் எடுக்காது; எனவே, தண்ணீர் தேவையில்லை. வாயுவே போஜனம். வாயு போஜன உடம்புக்கு வியர்வை, மூத்திரம், மல நாற்றம் எதுவும் கிடையாது. கபாலத்தின் உச்சியில் சஹஸ்ராரத்தில் சுரக்கும் அமிர்த நீர் அப்படியே உச்சியில் இருந்து கீழே நாவண்ணங்களில் விழுந்து, அந்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அமிர்த நீரே எச்சிலாகத் திகழும். பின்பு, அதுவே வயிற்றை அடைந்து, பசி தாகக் காரணியான அக்னியை அடக்கும்.

எனவே, காயகற்பங்களால் உடம்பைப் பேணுங்கள். இந்த காயகற்பங்களுக்குத் தேவையான மூலிகைகளே முண்டகம், அழுகண்ணி, தொழுகண்ணி போன்றவை. இதைப் பறிப்பதற்கு கால நேரமுண்டு; உண்பதற்கும் கால நேரமுண்டு.

பூச நட்சத்திர நாளில் இதை உண்ணத் தொடங்குவது நலம் தரும். ஒரு மண்டல காலம் பக்குவம் அறிந்து உண்ண வேண்டும். இதனால் நரைதிரை நீங்கி, உடம்பின் மேல் நம் மனதானது ஆதிக்கம் புரியத் தொடங்கிவிடும். உடம்பின் மேல் மனது ஆதிக்கம் புரியத் தொடங்கும்போதுதான் அஷ்டமாசித்திகள் நம் வசப்படும்.

அஷ்டமாசித்திகள் பற்றி இனி கூறுவேன்.

காகபுஜண்டரின் உபதேசம் தொடர்கிறது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 34

விளையாடிக் கருநெல்லி பறித்தே உண்ணு
வேகாத தலையாகும் விரும்பிப் பாரு
மலையாமல் வெண்சாரை பிடித்தேயுண்ணு
மைந்தனே சாகாக்கா லதுவே யாகும்
அலையாமல் சோதியதன் பாலையுண்ணே
அக்கினியாங் கம்பமடா சுழுமுனையாச்சு
கலைநாலு நோகிறதை எட்டிற்சேர்
கபடமற்ற தேகமடா கண்டு பாரே!

- காகபுஜண்டர்

காகபுஜண்டர் தன் நெடிய விளக்கத்தில் அஷ்டமாஸித்தியைத் தொட்டு நின்றார். தன்மார்த்தனும் பிரம்மார்த்தனும் அவர் கூறப்போகும் அந்த ஸித்தி பற்றி அறிய ஆவலாக அவரை நோக்கினர்.

இந்த அஷ்டமாஸித்தி எனப்படும் எட்டு வித வல்லமைகள் சாதாரணமானவை அல்ல. இதை ஒரு மனிதன் அடைந்து விட்டால் கிட்டத்தட்ட அவன் கடவுளாகவே ஆகிவிட முடியும். அதேநேரம், அவன் துளி புரண்டாலும், பெரும் அசுரனாகி, பெரும்பாவியாகி கொடும் நரகில் விழுந்துவிடவும் கூடும்.

இதன் பின்னால் இருக்கும் இந்த ஆபத்தை அறியாமலோ, அல்லது உணரமாட்டாமலோ இந்த அஷ்டமாஸித்திகளை மட்டும் மனதில் கொண்டு சித்தர்களாக மாறிவிட எண்ணியவர்கள் பலர் உண்டு. இவர்கள் சில காலம் சித்தர்களாகவும் இருந்தது உண்டு. ஆனால், இந்த சில ஸித்திகள் வசப்பட்ட உடனேயே, அவர்கள் இவற்றில் மயங்கித் திசைமாறிப் போய் ஒன்றுமே இல்லாமல் போனதும் உண்டு. எனவே, காகபுஜண்டர் அஷ்டமாஸித்திகள் பற்றிக் கூறுவதற்கு முன், அதை எந்த அளவுக்குத் தன் சீடர்களாய்த் தங்களை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆக்கிக்கொண்டிருக்கும் இவர்களுக்குச் சொல்வது என்றும் சற்று யோசிக்கத் தொடங்கினார். அது பிரம்மார்த்தனுக்கும் புரிந்தது.

"குருவே, என்ன யோசனை! அஷ்டமாஸித்தி பற்றித் தாங்கள் கூறப் போவதைக் கேட்க ஆவலாக இருக்கிறோம். தாங்களோ இவ்வேளையில் சற்று யோசிப்பது போல் தெரிகிறதே...?" என்றான்.

"உண்மைதான் பிள்ளைகளே! மூச்சு தொடர்பான ஞானக் கருத்துகளை உங்களுக்குச் சொல்லும் சாக்கில் உலகுக்கும் கூறிவிட்டேன். உடம்பு தொடர்பாகவும் காயகல்பங்கள் வரையிலும் கூறிவிட்டேன். இதனால் கல்பயோகியாகிவிடும் ஒருவன், கிட்டத்தட்ட மரணத்தையே வென்றவனாகிறான். யமனை அவன் ஆதிக்கம் செலுத்த முடியும். இப்படிப்பட்ட கல்பயோகியிடம் யமனும் வர மாட்டான்; வந்தால் வணங்குவான். காரணம் தேகம்தான்!

அந்த கல்பயோகியின் தேகம் வியர்க்காது. துர்வாடை வீசாது. எச்சில்கூட மருந்தைப்போல விளங்கும். அந்தக் கல்பயோகி தன் தலை முடியால் ஒரு மலைப் பாறையையும் கட்டி இழுக்க முடியும். இவையெல்லாம் ஐம்புலன் சுருக்கி, உள்ளொளியை அவன் பெருக்கிக்கொண்டதற்கான பரிசுதான். ஆனால், பரிசுக்கெல்லாம் பரிசைப் போன்றது அஷ்டமாஸித்தி. அதாவது, எண் பேராற்றல்! எட்டு விதமான இந்த ஆற்றல், அந்தக் கல்பயோகியை கடவுளாகவும் ஆக்கிவிடும்; அரக்கனாகவும் ஆக்கிவிடும். எனவே, எண் பேராற்றல் குறித்து விளக்குவதற்கு முன், அது கேட்பவர்களை எந்த அளவு பாதிப்புக்குள்ளாக்கும் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டியது அவசியம். அதனால்தான் யோசிக்கிறேன்."

"அதாவது, இந்த எண் பேராற்றல் பற்றி அறிந்தால் எங்களுக்குள் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று கருதுகிறீர்களா?"

"ஆம். நீங்கள் லௌகீக வாழ்விலிருந்து வந்தவர்கள். காமம் காரணமாக வந்து பிறந்தவர்கள். கர்மம் உங்கள் தலையில் தலைவிதியாக எழுதப்பட்டுள்ளது. அதை ஒட்டியே உங்கள் வாழ்வு செல்ல முடியும். அந்த விதிப்பாடுதான் நீங்கள் என் உபதேசம் கேட்கவும் காரணம். இந்த உபதேசம் உங்களைக் கடைத்தேற்றி உங்கள் பிறப்புக்கு ஒரு முடிவையும் ஏற்படுத்தலாம். மாறாகப் பல பிறவிகளுக்குக் காரணமாகவும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆகிவிடலாம்!''



''எப்படி என்று விளக்கமாய்க் கூறமுடியுமா?''

''எண் பேராற்றல் மீது நீங்கள் மோகம் கொண்டு, அதை அடைய நீங்கள் முயல்வதைப் பொறுத்தது அது!''

''முதலில், அந்த எண் பேராற்றல் எனும் அஷ்டமாஸித்தி எவை என்று கூறிவிடுங்களேன்...''

''கூறுகிறேன். அணிமா, மகிமா, கரிமா, லஹிமா, வசித்வம், பிராகாமியம், பிராப்தி, ஈசத்வம் எனும் எட்டு ஆற்றல்களே அஷ்டமா ஸித்திகள் ஆகும். அணிமா என்றால், அணுவாய் மாறுவது. அதாவது, ஆறு அடி உயரம் கொண்ட நீயோ இல்லை நானோ ஒரு தூசு போல மாறிப்போவதுதான் அணிமா ஸித்தி!''

''என்ன ஆச்சரியம்! இத்தனைப் பெரிய தேகம் எப்படி அணு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

போல் சிறுத்துப் போக முடியும்?"

"கேள்வியைச் சற்று மாற்றிச் சிந்தித்துப் பார். ஒரு துளியில் இருந்துதான் நாம் இத்தனை பெரிதாக வளர்ந்து ஆளாகி உள்ளோம். துளி இத்தனை பெரிதாகும்போது, இத்தனை பெரியது திரும்பத் துளியாக ஆக முடியாதா என்ன?" - காகபுஜண்டரின் கேள்வி அவர்களைப் பிரமிக்கவைத்தது.

"அணு போலச் சிறுக்க முடிவதற்கு நேர் எதிரானது மகிமா. அதாவது, விஸ்வரூபம் எடுப்பது. மலைபோல உயர்ந்தும் வளர்ந்தும் நிற்பது மகிமா!" என்று தொடர்ந்தார் காகபுஜண்டர்.

"குருவே, அது எப்படிப் பெரிதினும் பெரிதாக முடியும்? இதை நம்புவதற்கே இயலவில்லையே..?" என்றான் தன்மார்த்தன்.

"ராமாயணத்தில் அனுமனுக்குச் சாத்தியமாகி உள்ளதே? அணு போல் சிறுத்து ஒரு வண்டுபோலாகி, கடல் நடுவே எழும்பி நின்ற அரக்கியின் வாய்க்குள்ளேயே புகுந்தவன், மீண்டும் விஸ்வரூபம் எடுத்து நின்றபோது, சமுத்திரம் அவன் முழங்கால் அளவுதான் இருந்தது."

"ஓ.... இந்த ஸித்திகள் எல்லாம் உடையவர்தானா அனுமார்?"

"ஆமாம். ஆனால், ஓரிடத்தில்கூட இந்த ஸித்திகளைத் தன் பொருட்டு சுயநலமாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை அனுமன் என்பதை இந்த வேளையில் மனதில் கொள்ள வேண்டும் நீங்கள்."

"ஸித்தியை அடைவது பின் எதற்காக...?"

"அவசியத்தின்பொருட்டு, அது உலக நன்மைக்குப் பயன்பட வேண்டும். ஸித்திகள் வரையில் சுயநலம் துளியும் கூடாது."

"குருவே... மீதமுள்ள ஆறு ஸித்திகள் பற்றியும் கூறுங்களேன்..."

"நிச்சயமாக. அணிமா, மகிமாவைத் தொடர்ந்து வருவது கரிமா. அதாவது, கல்போல் கனப்பது. இதற்கும் அனுமனையே உதாரணம் கூறலாம். அனுமன் வனத்தில் ராம நாமம் ஜெபித்த படி இருக்கையில், பீமன் அந்தப் பக்கமாய் வருகிறான். இது மகாபாரத காலத்துச் சம்பவம். அப்போது அனுமன் வால், பாதையில் நீண்டு கிடக்கிறது. அது பீமனுக்குக் கோபத்தை ஏற்படுத்துகிறது. பீமனுக்கு அனுமனைத் தெரிந்திராத நிலையில், ஒரு கிழட்டு வானரம் என்று எண்ணிக்கொண்டு, 'ஏ வானரனே! வாலைச் சுருட்டிக்கொள். நான் தெரியாமல் மிதித்திருந்தால், உன்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உயிரே போயிருக்கும்!' என்கிறான் சற்றுத் திமிராக.

பதிலுக்குத் தனக்குள் சிரித்துக்கொள்ளும் அனுமன், 'நான் கிழட்டு வானரன்தான். வாலைத் தூக்கக்கூடச் சக்தியில்லை. முடிந்தால், நீ என் வாலைத் தூக்கி ஓரமாகப் போட்டுவிட்டுப் போ, அப்பனே!' என்கிறான். பீமனும் வாலைத் தூக்க முயல்கிறான். ஆனால், அசைக்கக்கூட முடியவில்லை. அனுமன் இங்கே வாலை மலைபோல் கனக்கச் செய்ததால், புஜ பலத்தில் பேர்போன பீமனால்கூட அதை இம்மியும் அசைக்க முடியவில்லை. பிறகு, அந்தக் கிழட்டு வானரம்தான் அனுமன் என்று அறிந்து வணங்கி ஆசியையும் பெற்றான் பீமன். அனுமன் அப்போது பீமனிடம் காட்டியதுதான் கரிமா சித்தி."

"அற்புதம்! லஹிமா என்றால் என்ன?"

"கரிமாவுக்கு நேர் எதிரானது. அதாவது, பஞ்சுபோல லேசாகி மிதப்பதுதான் லஹிமா. இந்த ஸித்திக்குப் பிரகலாதப் பிரபுவை உதாரணமாகச் சொல்லலாம். அவரின் தந்தையான இரண்யன், அவரைக் கடலில் தூக்கிப் போடச்சொல்ல, அப்படியே செய்தனர். ஆனால், கடலில் பிரகலாதன் மூழ்கி விடவில்லை. மாறாக, தெப்பம்போல மிதந்தார்."

"அருமை, அருமை! சிறுப்பது, பெருப்பது, கனப்பது, லேசாவது என்று நான்கு ஸித்தி களையும் உதாரணங்களுடன் அறிந்து கொண்டோம். அடுத்து..?"

"அதுதான் வசித்வம். அதாவது, பிறரைத் தன் வயப்படுத்துவது; தம் விருப்பப்படி எல்லாம் நடக்கச் செய்வது."

"இதற்கு உதாரணம்?"

"கிருஷ்ணலீலை என்று ஒரு வார்த்தையில் கூறிவிடலாம். பால கிருஷ்ணனின் குறும்புகள் சொல்லி மாளாதவை. குறும்பால் பாதிக்கப்பட்டவர்கள் அடிப்பதற்காக வருவார்கள். ஆனால், கிருஷ்ணனைப் பார்த்த மாத்திரத்தில் தடியைக் கீழே போட்டுவிட்டு அவன் சிரிப்பில் மயங்கித் தாங்களும் சிரிப்பர். ஆற்றங்கரையில் பெண்களோ, 'கிருஷ்ணா', 'கிருஷ்ணா' என்று அவன் பின்னேயே சுற்றித் திரிவர். மனிதர்கள் மட்டும்தானா..? அந்தக் கண்ணன் பின்னால் ஆடு - மாடுகள்கூட சுற்றித் திரிந்தன. இதற்குப் பெயர்தான் வசித்வம்."

"வசியம் என்று கூறலாமல்லவா?"

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"வசியம் என்பது தற்காலிகமானது. வசித்வம் நிரந்தரமான தன்மை படைத்தது."

"அடுத்து..?"

"பிராகாமியம். கூடுவிட்டுக் கூடு புகுதல். அதாவது, ஓர் உடம்பில் இருந்து இன்னொரு உடம்புக்குள் நுழைவது என்று அர்த்தம்."

"இதற்குச் சான்று உண்டா?"

"சித்தர்கள் வாழ்வில் மிகச் சாதாரணமான ஒரு விஷயம் இது. கயிலாய சுந்தரன், மூலன் எனும் இடையன் உடலில் புகப் போய்தான், அந்த இடையன் திருமூலர் எனப் போற்றப் பட்டார். இது சற்று ஆபத்தான சித்து விளையாட்டு. உட்புகுதல் என்பதைப் போலவே உடம்பினின்றும் விடுபடத் தெரிதல் என்பதும் இதில் முக்கியம். இதில் சிக்கிக்கொண்டவர்கள் பலர். இந்த வனத்திலேயே பல சித்தர்கள் விலங்குகளுக்குள் புகுந்துவிட்டு, வெளிவரத் தெரியாமல் இன்னமும் விலங்கு களாகவே திரிந்துகொண்டிருப்பதும் இதற்கு உதாரணம்." - காகபுஜண்டர் இவ்வாறு கூறவும், அவர்கள் ஐந்து பேருமே விக்கித்துப் போயினர்.

"பிராகாமியம் எனும் கூடுவிட்டுக் கூடு பாய்வதை அடுத்து வருவதுதான் பிராப்தி எனும் பிராப்தம்."

"அது என்ன?"

"நாம் எதை அடைய விரும்புகிறோமோ, அதை அடைவதற்குப் பெயர்தான் பிராப்தி."

"உண்மையில், சகல ஸித்திகளிலும் அற்புதமான ஸித்தி இதுதான். மற்ற ஸித்திகள் வசப்படக்கூட பிராப்தம் இருந்தால் தானே ஈடேறும்?"

"பிராப்தத்தைக் கர்ம பலத்தால் அடைவது ஒரு விதம்; எண்ணத்தின் சக்தியால் அடைவது இன்னொரு விதம். இங்கே அஷ்டமா ஸித்திகளில் ஒன்றான பிராப்தி, கர்மத்தால் மட்டுமே வருவதல்ல; எண்ணங்களின் சக்தியாலும் வருவதாகும்."

"இதற்கு ஓர் உதாரணம் கூற முடியுமா?"

"இதற்கு மிகச் சிறந்த உதாரணம் விசுவாமித்திரர். அவரின் தொடக்கம் ஒரு க்ஷத்திரியப் பிறப்பால் ஆனது. க்ஷத்திரிய குலத்தில் வந்த கௌசிகன் எனும் அரசன்தான் பின்னாளில் விசுவாமித்திரன் என்கிற பிரம்மரிஷியாக உயரப் பெற்றான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இதற்குக் காரணம் வசிஷ்டர் எனும் பிரம்மரிஷிதான். அந்த ரிஷிக்கு இந்தச் சதுரகிரி தலத்திலும் ஆஸ்ரமம் உண்டு. வசிஷ்டர், கௌசிக மன்னனைப் பார்த்து, 'மனத்தை அடக்கிப் புலன்களை வென்று, எங்களைப் போல முனிவராவது மிகக் கடினம்' என்று கூறவும், 'நான் புலன்களையும் மனத்தையும் வென்று முனிவனாகிக் காட்டுகிறேன்' என்று கூறி, அரசாட்சியைத் துறந்து, தவத்தில் ஈடுபட்டு, பின்பு வசிஷ்டராலேயே 'பிரம்மரிஷி' என்று அழைக்கப்பட்டவர்தான் விசுவாமித்திரர். அது மட்டுமல்ல, திரிசங்கு எனும் அரசனுக்கு சொர்க்கத்தில் இடமில்லாது போனபோது, தன் மனோபலம் மற்றும் தவசக்தியால் புதியதாக ஒரு சொர்க்கத்தையே நிர்மாணித்து, அதற்கு 'திரிசங்கு சொர்க்கம்' என்று பெயர் இட்டவர் விசுவாமித்திரர். பிராப்தியை இவர் மனோபலத்தால் அடக்கி, அதைத் தவத்தில் ஆழ்த்திப் பெற்றார். நாம் எண்ணியதை அடைய மன ஒடுக்கம் ஒன்றே போதும். அதுவே பிராப்தியை வழங்கிவிடும். தீவிரமாக ஒன்றை விரும்புவதும் பிராப்தியை அடைய வழி வகுக்கும்.''

காகபுஜண்டர் இப்படி ஏழு ஸித்திகளுக்கும் விளக்கமளித்து விட்டு, எட்டாவதாக ஈசத்வம் எனும் ஸித்தியிடம் வந்தார்.

''எட்டு ஸித்திகளில் உன்னத ஸித்தி இதுதான். முன்புபெற்ற ஏழு ஸித்திகளைப் பெரிதாகக் கருதாமல், அந்த ஆற்றலைப் பயன்படுத்தி மனம் - வாக்கு - காயத்துக்கு இன்பம் சேர்க்காமல், அதை எல்லாம் துச்சமாகத் தூக்கி எறிந்து, இத்தகைய ஸித்திகளைத் தனக்குத் தர முடிந்த இறை சக்தி எத்தனைப் பெரிதாக இருக்கவேண்டும் என்று எண்ணி, அந்தச் சக்தியை அடைய முயற்சிப்பதும், முயன்று அடைவதுமே வாழ்வின் நோக்கம் என்றும், இந்த ஸித்திகள் எல்லாம் சிறு குழந்தைகள் விளையாடும் பொம்மைகளைப் போன்றவை என்றும் எவரொருவர் உளமார எண்ணுகிறாரோ, அவரே ஈசத்வத்தை அடைந்தவராவார்.

ஈசத்வத்தை அடைந்துவிட்டால், அதைவிடப் பெரிது எதுவுமில்லை. இந்த ஈசத்வத்தை இந்த அஷ்டமாஸித்திகளில் அடங்கியுள்ள ஏழு ஸித்திகள் வழியாக அடைவது ஒரு விதம் என்றால், இந்த வழிமுறைகளே வேண்டாம் என்று இறைவனை எடுத்த எடுப்பில் சரண் புகுந்துவிடுவது மற்றொரு விதம். சரண் புகுவதுதான் சாலச் சிறந்த வழிமுறையும்கூட!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

- காகபுஜண்டர் அஷ்டமாஸித்திகளுக்கு விளக்கம் கூறி, நெடிய ஞான விளக்கத்தை அவர்களுக்கு அளிக்கும் சாக்கில், பூ உலகத்தோர்க்கும் அளித்தார். இன்னும் அவர் இறவாப் பெருவாழ்வை வாழ்ந்து வருகிறார் என்பதே அவரைத் தியானிப்பவர்களின் அசைக்கமுடியாத கருத்து.

காகபுஜண்டரைத் தொடர்ந்து அடுத்து நாம் சிந்திக்கப் போவது

பதஞ்சலி எனும் சித்த புருஷரை!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 35

சித்த புருஷர்களிலேயே, வடிவத்தாலும் தன்மைகளாலும் மானுட நிலையில் இருந்து மிக வேறுபட்டவர் பதஞ்சலி. மனித உடல், பஞ்ச சிரம் கொண்ட பஞ்ச நாகத் தலை என இரண்டும் கலந்த வடிவம். எதனால் இப்படி ஒரு வடிவம் என்கிற கேள்வி எழலாம். அத்திரி எனும் முனிவருக்கும், கோணிகா எனும் தாய்க்கும் பிறந்தவர் இவர். இவரை ஆதிசேஷனின் அம்சமாய்ச் சொல்வார்கள். பாற்கடலில் விஷ்ணுவுக்குத் தன்னைப் படுக்கையாக்கிக்கொண்டவன் ஆதிசேஷன். விஷ்ணுவுக்கு அணுக்கத் தொண்டனாய், அங்கே படுக்கையாய்க் கிடக்கும் இவர் பதஞ்சலியாக ஜென்மம் கண்ட நிலையில், இவர் இருந்த இடம் கயிலாயம்!

இது ஆச்சரியம் தரும் ஒன்றாக நமக்குத் தோன்றலாம். ஆனால், சிவ- விஷ்ணு பேதங்கள் சித்த புருஷர்களுக்கு இல்லை என்பதே இதன் அடிப்படையான கருத்து என்பர் சிலர். அதேபோல, பரம சிவபக்தனாக விளங்கிய கருடன்தான், பின்னர் மாலவனின் வாகனமாகி, முதல் மாலடியானாகவும் (பெரிய திருவடி) தன்னை ஆக்கிக் கொள்கிறான். இதை உதாரணமாய்ச் சொல்லி, பதஞ்சலியை உணரத் தலைப் படுவார்கள். வைணவர்கள் ஆதிசேஷனின் அம்சமாய் ராமானுஜரைக் குறிப்பிடுவார்கள். ராமாயணத்து லட்சுமணன் கூட ஆதிசேஷனின் அம்சமே! அந்த வகையில் லட்சுமணன், பதஞ்சலி, ராமானுஜர் என ஆதிசேஷன், மானுட சமூகம் உய்யக் கடமையாற்றியதாகக் கொள்ளலாம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



ராமாயணத்தில், தர்மத்தின் நாயகனான ஸ்ரீராமனுக்கே உறுதுணை. பின்பு, பதஞ்சலியாக மனிதர்கள் கடைத்தேற நூல்கள் எழுதிய வகையில், சமூகத்துக்கு உறுதுணை. பின்னர் எழுதிய யோக சாஸ்திரக் கருத்துக்களுக்கு ஏற்ப,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தானே வாழ்ந்து காட்ட விரும்பியதுபோல் ராமானுஜராக அவதரித்தார் என்று இவர் பிறப்பை வியாக்யானம் செய்பவர்கள் உண்டு. இவர் எழுதிய நூல்களிலேயே பிரதானமானது மற்றும் இன்றளவும் ஞானிகள் பெரிதும் நுகர்ந்துகொண்டிருப்பது 'யோக சாஸ்த்ரம்' எனும் நூலாகும். அடுத்தது, மஹாபாஷ்யம்; மூன்றாவது, ஆத்ரேய சம்ஹிதை எனும் நூல்.

இவரது நூலுக்கு திருமூலர், போகர், அகத்தியர் ஆகிய மூவருமே விளக்கவுரை எழுதியிருப்பதிலிருந்து, அவர்களும் இந்த நூலை வியந்து ஒப்புக்கொண்டு, வழிமொழிந்ததாக நாம் கொள்ளலாம்.

இப்படிப்பட்ட பதஞ்சலியை சைவர்கள் பார்க்கும் பார்வைக்கும் வைணவர்கள் பார்க்கும் பார்வைக்கும் நிறைய வேற்றுமை உண்டு. பதஞ்சலி தானறிந்த யோக ரகசியத்தைத்தான் உலகுக்கு அளித்தார். அவர் அதை எல்லாம் எப்படி அறிந் திருந்தார் என்று ஒரு கேள்வி உண்டு. ஆதிசேஷனான தன் மேனி மேல் படுத்துக் கிடக்கும் அந்த விஷ்ணுபதியிடமே உயிர் - உடல் - மனம் பற்றியெல்லாம் கேட்டு யோக ரகசியங்களை அறிந்துகொண்டார்; அதுதான் அவர் பதஞ்சலியாக ஜென்மம் எடுத்த நிலையில் வெளிப்பட்டது என்பர் வைணவர்.

சிவபெருமான் பார்வதிதேவிக்கு உபதேசித்ததை அருகில் இருந்து கேட்ட பின்பு, அவர்களின் அருளோடு இந்த யோக சாஸ்திரத்தை பதஞ்சலி எழுதினார் என்போரும் உண்டு. இப்படி, இந்த யோக சாஸ்திரம் எந்த அடித்தளத்தில் இருந்து பிறந்திருந்தாலும் சரி, இன்றளவும் சான்றோர் பெருமக்களுக்கு வற்றாத வியப்பைத் தந்துகொண்டிருப்பதோடு, அவர்கள் வாழ்வை வெற்றி கொள்ளவும் பெரும் துணையாக இருந்து வருகிறது.

இந்த யோக சாஸ்திரத்தில் இருந்துதான் அஷ்டாங்க யோகம் எனும் எட்டு வகை வாழ்வியல் நடைமுறைத் தத்துவங்களும் தோன்றின. ஓர் ஆச்சரியம் என்னவென்றால், இந்த யோக சாஸ்திரமும் சரி, இதன் அஷ்டாங்க யோகமும் சரி, மனித குலம் முழுமைக்கும் பொதுவானது. இது 'உடல் - மனம் - ஆன்மா - பிரபஞ்சம்' என்று உணரக்கூடிய நிதர்சனமான வற்றையும், புலன்களுக்கு அப்பாற்பட்ட அறிவைக் கடந்து நிற்பவற்றையும் ஞானத்தால் அறிய

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வழிவகை செய்கிறது.

முன்னதாக, பதஞ்சலி குறித்த சில ரசமான விஷயங்களைப் பார்ப்போம். பிறகு, இவரது கடினமான தத்துவங்களுக்கு வருவோம்.

பதஞ்சலி விஜயம் என்று ஒரு நூல், ராமபத்ரமுனி என்பவரால் எழுதப்பட்டது. ஏறக்குறைய 200, 300 ஆண்டுகளுக்கு முன்பு பதஞ்சலி குறித்து இந்த மனித சமுதாயம் அறிந்துகொள்ளவேண்டி ஏடுகளில் இது எழுதப்பட்டு, பின்பு கோயில் மண்டபத்தில் வாசிக்கப்பட்டதாகக் கூறுவார்கள்.

சிதம்பரத்தில், சிவராத்திரி அன்றும் மற்ற விசேஷ நாட்களிலும் இந்தப் பதஞ்சலி விஜயத்தை கதையாகச் சொன்னதாக செவி வழிச் செய்திகள் கூறுகின்றன. பதஞ்சலி விஜயம் வாயிலாகத் தெரியவரும் ஒரு சம்பவம், குருபக்தி என்பது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும், எப்படிப் பட்டதாக இருக்கக் கூடாது என்பதற்குச் சான்றாகும்.

பதஞ்சலி முனி தன் மாணவர்களுக்கு வித்தை கற்பிப்பவராய் இருந்த நேரம் அது. அடிப்படையில் அவர் ஆதிசேஷன் என்பதால், அவர் விடும் பெருமூச்சில் ஆலகாலத்துக்கு இணையான விஷம் உண்டு. இந்த விஷக்காற்று எப்பேர்ப்பட்ட உயிர்களையும் போக்கி, அவர்களைக் கருகச் செய்துவிடும். இதை உணர்ந்த பதஞ்சலி, தன்னை மறைத்துக்கொண்டே பாடம் நடத்துவார். தனது விஷக்காற்று தன் மாணவர்களைத் தீண்டிவிடாமலிருக்க, நடுவில் ஒரு கறுப்பு நிறத்தாலான திரையைக் கட்டி, திரைக்குப் பின்னால் அமர்ந்துதான் மாணவர்களுக்குப் பாடம் நடத்துவார். அப்போது அவர் ஐந்து சிரம் கொண்ட வடிவத்துக்கு மாறிவிடுவார். (ஆயிரம் தலைகள் கொண்ட ஆதிசேஷனாக மாறுவதாகவும் உண்டு).

மாணவர்களில் ஒருவனுக்கு, குருநாதரின் இந்தச் செயல் நெடுநாட்களாகவே வியப்பைத் தந்ததோடு, கறுப்புத் திரைக்குப் பின்னால் குருநாதர் மறைவாக அப்படி என்னதான் செய்கிறார் என்று அறிந்துகொள்ளும் ஒரு குறுகுறுப்பான எண்ணத்தையும் உருவாக்கிவிட்டது. இருந்தாலும், பதஞ்சலி பாடத்தைத் தொடங்கும் முன், திரைக்குப் பின்னால் இருந்தபடி, எவரையும் எக்காரணம் கொண்டும் திரையை விலக்கித் தன்னைக் காணக் கூடாது என்று

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உத்தரவிட்டிருந்ததால், ஒருவரும் திரையை விலக்கத் துணிவில்லாமல், அவர் நடத்தும் பாடத்தை மட்டும் செவி வழி கேட்டவர்களாக இருந்தனர்.

ஒருமுறை, ஒரு மாணவன் இயற்கை உபாதை காரணமாக மெள்ள எழுந்து வெளியேறிவிட, குறுகுறுத்த மாணவன் குருவின் கட்டளையை மீறியவனாக, அந்தக் கறுப்புத் திரையை விலக்கிப் பார்த்தான். அடுத்த நொடியே பதஞ்சலியின் விஷக்காற்று பட்டு அவன் மட்டுமல்ல, பாடம் கேட்டுக்கொண்டு இருந்த மற்ற மாணவர்களும் மாண்டுபோயினர். பதஞ்சலியும் தனது நாக வடிவில் இருந்து மானுட வடிவத்துக்கு உடனே மாறி, மாண்டுபோன மாணவர்களைப் பார்த்து, அவர்களின் விதியை நினைத்து நொந்துகொண்டார்.

இயற்கை உபாதைக்காக வெளியே சென்ற மாணவன் திரும்பி வந்ததும், தன் நண்பர்கள் மாண்டு கிடப்பதையும், திரை விலகியிருப்பதையும் கண்டு பதை பதைத்துப் போனான். பதஞ்சலியைக் கண்டு மலங்க மலங்க விழித்தான். பதஞ்சலியும் அவ்வளவு நாட்களாக தான் கற்பித்த வித்தை அவ்வளவும் பாழ்பட்டுவிட்டதே என வருந்தினார்.

எனினும், நல்லவேளையாக ஒரே ஒரு மாணவர் மிஞ்சி இருப்பதைக் கண்டு, அவனுக்கு மிச்சமுள்ள வித்தைகளை போதித்தாராம். அதேநேரம், பாடம் கற்கும் வேளையில், குருவாகிய தனக்குத் தெரியாமல் வெளியேறிய தவற்றுக்குத் தண்டனையாக, அவனை பிரம்ம ராட்சதனாகப் போகும்படி சபித்தாராம். இது பதஞ்சலி விஷயம் சொல்லும் கதை.

இந்தக் கதை, யோக ரகசியத்தைத் தெரிந்துகொண்டாலும், அதை அனுபவித்துக் கடைத் தேறக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்பதையே மறைமுகமாக உணர்த்துவதாக சான்றோர் பெருமக்கள் கூறுவர். உலக மாயை, யோக ரகசியங்களை அறியவிடாமல் தடுத்துவிடும். ஒரே ஒருவர்கூடப் போதும், அனைத்தையும் கெடுப்பதற்கு! ஆனாலும், சிரஞ்ஜீவித்துவத்தோடு அது எப்படியாவது வாழ்ந்திடும்.

பிரம்ம ராட்சதனாக சபிக்கப்பட்ட மாணவன் சாப விமோசனம் பெற்ற பிறகு, அவன் மூலமாக அதுதிரும்ப அனைவரையும் சென்று சேரும் என்பதுதான், அந்தக் கதைக்கு பின்னால் ஒளிந்திருக்கும் விஷயம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இங்கே, பாடம் கற்பிக்கும்போது, பதஞ்சலி முனி திரையைக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டது போலவே, ஸ்ரீராமானுஜர் வாழ்விலும் ஒரு சம்பவம் நடந்துள்ளது.

ஒருமுறை, ராமானுஜருக்கும் சமணர்களுக்கும் சண்டப் பிரசண்டம் எனும் வாதப் பிரதிவாதம் நிகழ்ந்தது. சமணர்களின் கேள்விகளுக்கு உரிய பதில்களை ராமானுஜர் சபையறியக் கூறி, சபையோரும் அதை ஏற்றிடச் செய்ய வேண்டும். அப்படி ஒரு நிகழ்வின்போது, ராமானுஜர் சமணர்களுக்கும் தனக்கும் நடுவில் ஒரு திரையைத் தொங்கவிட்டு, திரைக்குப் பின்னால் ஆதிசேஷனாகி, சமணர்களின் கேள்விகளை எல்லாம் தவிடு பொடியாக்கியதாக, ராமானுஜரின் வாழ்வை உற்று நோக்கும் போது காண முடிகிறது.

அந்த வகையில் இந்தச் சம்பவமே, பதஞ்சலியும் ராமானுஜரும் வேறு வேறில்லை என்பதற்கான சான்று என்பார்கள்.

பதஞ்சலி, குரு சொல் கேளாத சீடனை பிரம்மராட்சஸனாகச் சபித்துவிடுவதாக ராமபத்ரமுனியின் பதஞ்சலி விஜயம் கூறுவதை, சைவர்கள் வேறு விதமாகச் சொல்கிறார்கள்.

எல்லா மாணவர்களும் மாண்டுவிட்ட நிலையில், எஞ்சிய ஒரு மாணவர் 'கௌடபாதர்' என்பவர். பதஞ்சலி, கௌட பாதருக்கு யோக சூத்திரங்களை முற்றாகக் கற்பித்தார் எனவும், இவருக்குத் தனது ஆதிசேஷ தோற்றத்தைக் காட்டி அருளியதாகவும் கூறுவர்.

பதஞ்சலி குறித்து இன்னொரு சுவாரஸ்யமான சம்பவம் உண்டு. காஞ்சி முனிவரான மகா பெரியவா இதை ஒரு வேடிக்கையான கதைபோலக் கூறியுள்ளார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 36

பாரப்பா பரம்பிரம்ம ஒளியினாலே
பத்தியே நரம்புவழி பாயும்போது
ஆரப்பா இருகண்ணில் ஒளியதாகி
அண்டமெலாம் ஏகமாய் தெரியலாச்சு;
காரப்பா நரம்பெற்ற விழுது வட்டம்
கபாலத்தில் முக்கூறாய்ச் சுழுமுனையாச்சு;
வீரப்பா காதுக்கும் நாக்குக்குந்தான்
வெற்றி பெற இன்னமுந்தான் உரைக்கக் கேளே!

- காகபுஜண்டர் ஞானம்

பதஞ்சலி, சிவபெருமானைத் துதி செய்து, 'சரண ஸ்ருங்க ரஜித ஸ்தோத்திரம்' என்கிற ஒரு ஸ்தோத்திரத்தை அருளியுள்ளார். இதற்கு என்ன சிறப்பு என்றால், இதில் கொம்பெழுத்தோ, துணை எழுத்தோ கிடையாது. இந்த இரண்டும் இடம்பெறாதபடி, வார்த்தைகளைச் சிந்தித்து, இறையைத் துதி செய்வதென்பது சவாலான விஷயம். அதைப் பதஞ்சலி சாதித்துள்ளார்.

ஆனால், அவர் ஏன் அப்படிச் செய்தார்?

காளமேகப் புலவர்கூட, தனது கவிதா ஞானத்தை நிரூபிக்க, இப்படிச் சவாலான கவிதைகளைப் பாடியுள்ளார். உதாரணத்துக்கு ஒரு பாடல்...

தாதிதூ தோதீது, தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்தித்த தூததே - தாதொத்த
துத்திதத் தாதே, துதித்துத்தே தொத்தீது
தித்தத்த தோதித் திதி

இந்தப் பாடலில், மெய்யெழுத்தாகிய 'த்' எழுத்தை மட்டுமே பயன்படுத்தி, அதாவது 'த'கர வரிசையில் அமைந்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எழுத்துக்களை மட்டுமே பயன்படுத்தி, காளமேகம் கவிதை புனைந்திருப்பார். உலகில் எந்த ஒரு மொழி யிலும் இப்படி ஒரே எழுத்தைக் கொண்டு கவிதை பாடப்பட்டதாகச் சரித்திரம் இல்லை.

அந்த நாளில், தலைவியானவள் காதல் வயப்பட்ட நிலையில் அன்னத்தையும் கிளியையும் தூதாக அனுப்புவது உண்டு. அதன் அடிப்படையில், இந்தப் பாடலின் பொருளைப் பார்ப்போம்.

'தாதியை தூதனுப்பலாம்; ஆனால், அவளி டம் தன் காதலைச் சொல்வது ஆபத்தில்கூட முடியலாம். எனவே 'தாதி தூது தீது!' அவள் தலைவியின் காதலை, தலைவியின் தாயிடம் கூறிவிட்டால் என்னாவது?

கிளி மூலம் செய்தி அனுப்பலாம். ஆனால், அதனால் சில சொற்களே பேச முடியும். எனவே, கிளி எனும் 'தத்தை தூது ஓதாது'. ஆகவே, தூதி எனப்படும் தோழியின் தூதுதான் சரி.

இப்படி, தூது பற்றி விரியும் இந்தப் பாடல், தமிழ் இலக்கிய உலகில் பல ஆச்சரியங்களில் ஒன்றாகும். தமிழுக்கு இது ஆச்சரியம்போல, சம்ஸ்கிருதத்தில் பதஞ்சலி முனி படைத்த சரண ஸ்ருங்க ரஜித ஸ்தோத்திரமும் ஓர் ஆச்சரியம்தான்!

அது சரி... துணையெழுத்தையும், கொம்பெழுத்தையும் பதஞ்சலி ஏன் தன் ஸ்தோத்திரத்தில் பயன்படுத்தவில்லை?

வேடிக்கையான, அதே நேரம் அனைவரும் மறுக்காமல் ஒப்புக்கொள்ளக்கூடிய, சிந்தனைக்கு உரியதான ஒரு காரணத்தைக் கூறுகிறார் மகா பெரியவர்.

பதஞ்சலியோடு இறைவனின் திருநடனக் காட்சியைக் காணும் பேறு பெற்ற வியாக்ரபாதருக்குப் புலிக் கால்கள்; பிருங்கிக்கு மூன்று கால்கள்; நந்திக்கோ இரண்டு கால்களோடு, தலையிலும் இரண்டு கொம்பு. இந்த மூவருக்கும் உள்ள கொம்போ, கால்களோ, இரண்டுமே பதஞ்சலிக்கு இல்லை. அவை இருப்பதால், அந்த மூவரும் இறைவனின் களிநடனக் காட்சியைக் கண் மூடாது, அப்படி இப்படித் திரும்பாமல், நடனத்துக்கான இசை யையும் கேட்டு இன்புறுபவர்கள் ஆகிறார்கள்.

பதஞ்சலிக்கோ பாம்பு வடிவம். பாம்புக்கு ஏது கால்? எங்கே இருக்கிறது கொம்பு? அட, காதாவது இருக்கிறதா? இந்த மூன்றும் இல்லாத ஒரு பிறப்பாக இருந்தபோதிலும்,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இவர்களின் பக்திக்குத் துளியும் சளைக்காத பக்தி தன் பக்தி என்று காட்டவே, இந்த மூவருக்கும் இருக்கும் கால், கொம்பு எதுவும் இடம்பெறாதபடி அந்த ஸ்தோத்திரத்தை உருவாக்கினாராம் பதஞ்சலி.

இது பெரியவர் வேடிக்கையாகச் சொல்லும் ஒரு விஷயம். உண்மையில், அந்த நால்வரும் மகாஞானிகள். அவர்களிடம் பேதங்கள் இருக்கமுடியுமா என்ன? இப்படி எல்லாம் உடல் உறுப்புகளை வைத்து உயர்வு தாழ்வு கற்பித்துக்கொள்வார்களா என்ன? அதுவும், இறைவனின் திருநடனத்தைக் காணும் பேறுபெற்றவர்கள், எத்தனைப் புண்ணியம் செய்தவர்களாக இருக்க வேண்டும்!


பதஞ்சலியின் ஸ்தோத்திரத்தில் ஏன் கொம்பும், காலும் இல்லை என்பதற்குக் காரணம் தேடியபோது, ஒருவேளை இப்படி இருக்குமோ என்று மற்ற மூவரைத் தொட்டு ஒரு சுவையான கற்பனை தோன்றி, அதை வைத்தே மகாபெரியவர் அவ்வாறு கூறினார். அதனாலேயே, பதஞ்சலியின் அந்த ஸ்தோத்திரத்தை மறக்க முடியாதபடி ஒரு நெருக்கம் நமக்கும் அதனோடு ஏற்பட்டு விடுகிறது.

சரி, பதஞ்சலியிடம் திரும்ப வருவோம். சித்தபுருஷர்களில் இவர்தான் மனம் குறித்து அதிகம் சிந்தித்தவர். உயிர்களில் மனம் வாய்க்கப் பெற்ற ஒரே உயிரினம்தான் மனித இனம்! மனத இனம் என்பதே மனித இனம் என்றானது என்பர்.

மனம் வந்தாலே காலம் வர முடியும். யோசித்துப் பாருங்கள்! மனம் இல்லை என்றால், நேற்று - இன்று - நாளை என்னும் அடையாளங்கள் எப்படித் தோன்ற முடியும்?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



ஆடும் மாடும்கூட உயிரினம்தான். ஆனால் அவற்றுக்குத் தான் யாரென்றே முதலில் தெரியாது. தான் வாழ்வது, ஒரு பூவுலகில் என்பதும் தெரியாது. அவ்வளவு ஏன்... வாழ்வது என்றால் என்னவென்றே அவற்றுக்குத் தெரியாது, உடம்பு என்ற ஒன்று அவற்றுக்கு இருப்பதால், உயிர் என்ற ஒன்று அதனுள் இயங்குவதால், உறுப்புகள் செயல்பட்டு, அதன் காரணமாகப் பசிக்கிறது. அப்படிப் பசிக்கும்போது, அனிச்சையாக முதலில் தாய்ப்பால் குடித்தும், பின்பு தாவரங்களை சாப்பிட்டும் அவை உயிர் வாழ்கின்றன.

அப்படியான சூழலில், அடிப்படையாக சில அறிவுச் செயல் பாடுகள் அதனிடம் ஏற்பட்டு, தன் இனம் என்று தனித்து உணராமலே, வாசத்தை அடிப்படையாகக் கொண்டு தன் இனத்தோடு கூடித் திரிந்தும், அப்படித் திரியும்போது காயம்பட்டால் வலி ஏற்படப் போய் அதை உணர்ந்து எச்சரிக்கை வயப் பட்டும், பின்பு உடம்பின் ரசாயன மாற்றங்களால் காமுறுதல் ஏற்பட்டும், முழுக்க முழுக்க உணர்வு பூர்வமாக மட்டுமே அவை வாழ்ந்துவிட்டு, மடிந்து போகின்றன. இதுதான் மனமற்ற உயிர்களுக் கான வாழ்க்கை முறை. மனிதனுக்கு மட்டுமே மனம் என்ற ஒன்று வாய்த்தது. அதன் காரணமாக, அறிவைத் தூண்டிவிட்டு பேச்சு, மொழி என்று அவன் விரிந்தான்.

இந்த வேளையில், டார்வின் தியரியையும் இங்கே கொஞ்சம் சிந்திப்பதில் தவறில்லை. தொடக்கத்தில் மனிதனும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மிருகமாகத் தான் இருந்தான். மிருகங்களில் கூடுதல் அறிவு இவனுக்கு இயற்கையாக இருந்தது. கைகளாலும், கால்களாலும் மிருகம் போல நடந்தவனை அந்த அறிவுதான் மெள்ள மெள்ள மாற்றத் தொடங்கியது. முதலில் நிமிர்ந்து நிற்கப் பழகினான். முன்னிரண்டு கால்களை கைகளாக மாற்றிக்கொண்டான். பின்பு, பக்கவாட்டில் வளராமல் மூங்கில் போல உயரமாக வளரத் தொடங்கினான். வாயால் ஒழுங்கற்ற சத்தங்களை எழுப்பியவன், காலப்போக்கில் அந்தச் சத்தத்துக்குள் ஓர் ஒழுங்கை உருவாக்கி, அதன் மூலம் மொழியை உருவாக்கினான். எல்லோருக்கும் பொதுவான சத்தம் இருந்தால்தானே குழப்பம் இன்றி வேகமாக இயங்க முடியும் என்பதை உணர்ந்து, தான் உருவாக்கிய மொழிக்கு வரி வடிவம் எனும் எழுத்தை உருவாக்கினான். பின்பு, சத்தத்துக்குள் ஒரு தாளம், லயம் இருப்பதைக் கண்டுகொண்டு, இசையை உருவாக்கினான்.

வேகமாகப் பயணிக்கும் நிர்பந்தம் ஏற்பட்டபோது, சக்கரம் என்ற ஒன்றைக் கண்டறிந்தான். மனிதனின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு இது. தரையில் உருளும் சக்கரம்போல, நீரில் மரக் கட்டைகள் மிதப்பதை வைத்து படகு, கப்பல் என பல கண்டுபிடிப்புகளைச் செய்தான். அவற்றால் தன் வசிப்பிடம் கடந்து, உலகின் மற்ற பாகங்களை எல்லாம் கண்டறிந்தான். ஆக, ஒன்றிலிருந்து படிப்படியாகவே மாற்றங்கள் ஏற்பட்டன.

இதுதான் சுருக்கமான டார்வின் தத்துவம். இதில் பெரிதாக மறுப்பதற்கு ஒன்றுமில்லை.

மனிதன் மிருகமாக இருந்ததாகக் குறிப்பிட்டு, அதற்கு ஆதாரமாக டார்வின் சுட்டிக் காட்டியது, மனித வடிவில் இருக்கும் குரங்குகளைத்தான். இந்தக் குரங்கு வடிவம்தான் இன்றைய மனித வடிவத்தின் ஆதி மூலம்! என்றால், இந்தக் குரங்கு இன்றைய நாகரிக மனித நிலைப்பாட்டை அடைய எவ்வளவு காலம் ஆகியிருக்கும் எனும் கேள்விக்குள் புகுந்தால், லட்சக்கணக்கான ஆண்டுகள் அதற்குத் தேவைப்பட்டிருக்கும் என்பதை நம்மால் யூகிக்க முடியும்.

இந்த லட்சக்கணக்கான ஆண்டுகளில் இந்த மாற்றத்தைச் சாதித்தது மனிதனின் அறிவுதான். மனிதன் ஒவ்வொன்றாக அறியத் தொடங்கினான். அறிய வருவதே அறிவென்றானது. இந்த அறிவின் வடிவம்தான் மொழி, எழுத்து என்றாகி, பின்பு எண்ணங்களாகி, மனித மனம் முழுக்க இன்று திருவிழாக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கூட்டம்போல நிரம்பி வழிந்தபடி உள்ளது.

வழியும் இந்த எண்ணங்களில் இரவு - பகல் போல, இனிப்பு- கசப்பு போல, நல்ல எண்ணங்கள்- தீய எண்ணங்கள் என இரண்டு வித எண்ணங்கள் உருவாகிவிட்டன. இதில் நல்ல எண்ணங்கள் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் தருவதாகவும், தீய எண்ணங்கள் துக்க உணர்வைத் தருவதாகவும் உள்ளன. இப்படி, எந்த ஒன்றும் இரண்டு விதமாக இருந்தால்தான் ஒன்றின் அருமையை நாம் தெரிந்து கொள்ளமுடியும். இதைச் சுருக்கமாக, 'இயல்பு' என்றும், 'தன்மை' என்றும் கூறலாம்.

இந்த மனித இயல்பைப் பெரிதும் ஆராய்ந்தவர் சிக்மண்ட் ஃப்ராய்ட். இவரை 'உளவியலின் தந்தை!' என்று போற்றுகிறது உலகம். மொராவியா எனும் ஊரில், 1856-ம் வருடம் மே மாதம் 6-ம் தேதி பிறந்த ஃப்ராய்ட், அடிப்படையில் விலங்கியலும், உடற்கூறியலும் கற்ற ஒரு மருத்துவர். இவர் தனக்கு வந்த கனவுகளை வைத்து, அதை பகுப்பாய்வு செய்து, கனவுகளுக்கும் ஆழ்மனத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதைக் கண்டறிந் தார். அது குறித்து 'கனவுகளின் பொருள் விளக்கம்' என்று ஒரு புத்தகமே வெளியிட்டார். அதன்பின், படிப்படியாக உளவியலில் ஓர் உச்ச நிலையைத் தொட்டார். சிகரெட் பிடிக்கும் பழக்கம் காரணமாக, புற்றுநோய் இவரைத் தாக்க, 1939 செப்டம்பர் 23-ல் இறந்து போனார். மனித மனத்தைப் பற்றிய இவரது ஆய்வுக் கட்டுரைகள் இன்றும் உளவியல் விரும்பிகளுக்குப் பெரும் பாடமாக உள்ளன. அந்தக் கட்டுரைகளை அவ்வளவு சுலபமாகப் படித்துப் பொருள் கொண்டு விடவும் முடியாது. உளவியலில் தீவிர ஈடுபாடும் நாட்டமும் உள்ளவர்களாலேயே ஃப்ராய்டின் உளவியல் சிந்தனைகளைப் புரிந்துகொள்ளமுடியும்.

பதஞ்சலியைப் பற்றிச் சிந்திக்கும்போது, ஃப்ராய்ட் பற்றிய பார்வை எதற்கு எனும் கேள்வி எழலாம். ஃப்ராய்டின் கட்டுரைகள் ஆங்கிலத்தில் உள்ளவை. ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கே அவர் சிந்தனைகள் போய்ச் சேர்ந்திடும். மொழிமாற்றம் செய்யப்பட்டிருந்தாலும் மூலத்தில் உள்ள சிறப்பு, மொழி மாற்றத்தில் அப்படியே பிரதிபலிக்கும் என்று கூற முடியாது. ஃப்ராய்டின் தத்துவங்களும் சிந்தனைகளும் உலகின் 700 கோடி மக்களுக்குப் பொதுவான ஆங்கில மொழியில் இடம்பெற்று, அவரை 'உளவியல் தந்தை' என்று

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உயரத்தில் வைத்திருக்கின்றன. ஆனால், நமது பதஞ்சலியின் உளவியல் சார்ந்த கருத்துக்களை அறியும்போது, பதஞ்சலிக்குள் நூறு ஃப்ராய்டுகள் இருப்பதை உணர முடிகிறது.

ஃப்ராய்ட் 'உளவியல் தந்தை' என்றால், பதஞ்சலியை 'உளவியலின் கடவுள்' என்றே சொல்லலாம். ஃப்ராய்ட் எண்ணங்களோடு நின்றுவிட்டார். பதஞ்சலி, எண்ணங்களாகிய மனம் கொண்ட வீடாகிய உடம்பு பற்றியும், அதன் உள்ளிருக்கும் சக்கரங்கள், அவற்றின் செயல்பாடுகள் பற்றியும் சிந்தித்து இருக்கிறார்.

மேலும், பதஞ்சலி சொல்வதை எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், இவை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே சிந்திக்கப்பட்டவை என்பதுதான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 37

---

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் எழுத்து, மொழி இவற்றை எல்லாம் உருவாக்கியிருப்பானா என்கிற கேள்வியும் சந்தேகமும் எழுகிறது. சில குகை ஓவியங்கள், வரிவடிவங்களை ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால், அந்த அளவிலான அறிவோடு உளவியல் குறித்துச் சிந்திக்க முடியாது என்பதே அடிப்படையான உண்மை.

---

சரி, பதஞ்சலியின் யோக சூத்திரம் மனிதர்களைப் பார்த்து என்னதான் சொல்கிறது? அதைச் சற்று சுருக்கமாகப் பார்ப்போம்.

முதலில், எது யோகம் என்று சிந்திப்போம். இன்று, யோகம் எனும் சொல் இரண்டு விதமாகப் பொருள் கொள்ளப் படுகிறது. ஒன்று அதிர்ஷ்டம் சார்ந்ததாகவும், மற்றொன்று உடற்பயிற்சி சார்ந்ததாகவும் பொருள்கொள்ளப்படுகிறது.

மகிழ்வும் நிம்மதியுமாக வாழ்பவர்களை 'அவன் பெரிய யோகக்காரன்...' என்போம். தினமும் பலவிதமான உடற் பயிற்சிகளைச் செய்பவர்களை, 'யோகாசனங்கள் செய்பவர்' என்கிறோம். ஒன்று மனம் சம்பந்தமானது; மற்றொன்று உடல் சம்பந்தமானது. யோகம் எனும் சொல் 'இணைத்தல்' என்கிற பொருளை உடையதாக அகராதி வழி தெரியவருகிறது.

யுஜ் எனும் சமஸ்க்ருத வார்த்தை 'யோக்', 'யோகம்' என்றானது. ஒரு மனிதன் தன்னை வேறாகவும், உலகை வேறாகவும் கருதுகிறான். ஒன்று உள் சார்ந்தது; மற்றொன்று வெளி சார்ந்தது!

இரண்டாகத் தெரியும் இது உண்மையில் ஒன்றே! அது எப்போது தெரியும் என்றால், தன்னைத் தனியாகக் கருதுபவன் பிரபஞ்சத்தோடு இணைந்து விடும்போது! அவனை அப்படி இணைக்கத் தேவைப் படுவதுதான் யோகம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இதை விரிவுபடுத்தி, ஜீவாத்மா பரமாத்வோடு இணைந்து விடலாம்.

பதஞ்சலியின் யோக சாஸ்திரத்தை அறிந்துகொண்டு யோகம் புரிவதற்கு, மனம் மற்றும் உடல் என்னும் இரண்டும் பலமாகவும் ஆரோக்கியத்தின் உச்சமாகவும் இருக்க வேண்டியது அவசியம்.

மனத் தெளிவு என்பது அதை அடக்கி ஆள்வதில் கைவரப் பெறும். உடல் பலம் என்பதும் மனத்தெளிவோடு தொடர்பு உடையதே! 'எதை உண்ணலாம், எதை உண்ணக் கூடாது, எதை எப்போது உண்ணலாம், எப்படி உண்ணலாம்' என்பதெல்லாமும் மனத்தை ஆட்சி செய்யும் அறிவின் செயல்பாடுதானே?

நம் வசம் நமக்கென்று இருக்கும் நமது உடம்பைப் பற்றி எத்தனை பேருக்கு தெளிவாகத் தெரியும்? நமது உடல் உறுப்புகளின் பெயர்கள் தெரிந்திருப்பது என்பது நமக்கு நம் உடம்பைப் பற்றி முழுக்கத் தெரிந்துவிட்டதாகாது. நம் உடல் உறுப்புகளின் பெயர்கள்கூட ஓரளவுக்கே நமக்குத் தெரியும். பல உறுப்புகள் நமக்குள் இருப்பதே நமக்குத் தெரியாது.

72,000 நாடி நரம்புகள் நமக்குள் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்றால் நம்பமுடியுமா? நம் உடம்பில் உள்ள கேசம் என்னும் மயிர்க்கால்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? மூன்றரை கோடி! நம் வயிற்றுக்குள் மடங்கிச் சுருண்டுகிடக்கும் குடலின் நீளம் எவ்வளவு தெரியுமா? 32 முழம்! இது, யூகி முனி என்னும் சித்தர் சொன்னதாகும்.

நாம் சுவாசிப்பதால்தான் உயிர் வாழ்கிறோம். அந்தக் காற்றில் ஆக்சிஜன் குறையும்போது, நமக்கு மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. நாம் இப்படி உள் இழுக்கும் வாயு பிராணவாயு எனப்படும் ஆக்சிஜன். நம்முள் இருந்து வெளியேறும் வாயு கரியமில வாயு. மரங்களும் சுவாசிக்கின்றன. இரவில் மரத்தின் அடியில் உறங்கக் கூடாது, அது நம் உடல் நலத்துக்கு நல்லதல்ல என்று கூறக் காரணம், இரவில் மரம் வெளியேற்றும் கரியமில வாயுதான். குறிப்பாக, புளியமரம் இதை மிகுதியாக வெளியேற்றும். எனவே, புளியமரத்தின் அடியில் தூங்கக் கூடாது என்றனர்.

காற்றைப் பற்றி நமக்கு இதுபோல சில விஷயங்கள்தான் தெரியும். ஆனால், சித்த புருஷர்கள் காற்றைப் பத்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கூறுகளாகப் பிரித்து, தச வாயுக்கள் நம் உடலில் செயலாற்றுவதைக் கண்டறிந்து கூறியுள்ளனர். அவை முறையே 'அபானன், பிராணன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்ஜெயன்' என்று அழைக்கப் படுகின்றன.

இதில், அபான வாயுவால்தான் மலஜலம் கழிக்கிறோம். இதன் செயல்பாடு உந்தித் தள்ளுவதாகும். கைகால்களை அசைத்து இயங்கும்போது, தசைகள் வியானன் என்னும் வாயுவால்தான் இலகுவாக இயங்குகின்றன. வயிறு இயங்கக் காரணம் சமான வாயு! பேசுவதும், பார்ப்பதும், சிரிப்பதும் கூர்மன் எனும் வாயுவால்! தும்முவதும் இருமுவதும் கிருகரன் வாயுவால் நிகழும். கோபத்துக்குக் காரணமான வாயு - தேவதத்தன். ஒருவர் இறந்த பிறகும்கூட, இந்த வாயு உடலில் செயலாற்றும். இதுதான் உடல் ஊதிப் பருத்து வெடிக்கவும், அழுகவும் காரணமாக உள்ளது.

இப்படி நம் உடம்புக்குள் செயலாற்றும் வாயுக்களின் செயல் பாட்டைப் புரிந்து அறிந்து, அவற்றைக் கட்டுப்படுத்தி, குரங்கு போலக் கட்டிவைக்கவும் முடிந்தவர்களாக இருந்தனர் நமது சித்த புருஷர்கள்.

வாயுக்களைத் தொடர்ந்து நாம் அறியவேண்டியது, நம் உடல் எந்த வகையை அடிப்படையாகக் கொண்டது என்பதாகும்.

நம் நாடித் துடிப்பானது ஆமை போல மிக நிதானமாகத் துடித்தால், அது பித்த வகை உடம்பு; பாம்புபோல நெளியும் உணர்வு ஏற்பட்டால், வாத உடம்பு; வெள்ளம் பாய்வதுபோல உணர்ந்தால் சிலேத்துமம். நமது உடம்பின் வகை தெரிந்து அதற்கு ஏற்புடைய உணவு எது, ஏற்பில்லாத உணவு எது என்று தெரிந்து சாப்பிடுவதில்தான் ஆரோக்கியம் ஒளிந்துள்ளது.

அடுத்து, நம் உச்சி மண்டையாகிய கபாலத்தில் ஒரு திரவம் சுரக்கும். இது அமுதத்துக்குச் சமமானது. உள்நாக்கை விலக்கிக் கொள்ள, இது நேராக நம் வயிற்றில் விழும். இது பயிற்சியால்தான் சாத்தியமாகும். பசித்தலுக்குக் காரணமாக ஜடராக்னியை இந்த அமுதச் சொட்டு அவித்து, பசியே இல்லாதபடி செய்வதோடு, நம்மைப் புத்துணர்ச்சியோடும் வைத்திருக்க வல்லது!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



இந்த அமுதச் சொட்டு வயிற்றில் விழும்போது, வயிற்றில் அமிலம் அதிகம் சுரக் காதபடி இருக்க, மனத்தைச் சாந்தமாகவும் பேரமைதியுடனும் வைத்துக்கொள்ள வேண்டும். படபடப்பும் ஆவேசமான எண்ணங்களும் வயிற்றில் அமிலத்தை அதிகம் சுரக்க வைக்கும். அதற்காக 'கேசரி முத்திரை' எனும் முத்திரையில் அமர்ந்து மனத்தை அடக்கிட, அதனாலும் பசி அடங்கிவிடும்.

அடுத்து, நமது உடம்பில் ஆதார சக்கரங்கள் ஏழு இருப்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கே சக்கரம் என்பது, நிற்காத இயக்கத்தைக் குறிப்பதாகும்.

ஏழு ஆதாரச் சக்கரங்கள்...

- சகஸ்ராரம்: உச்சந்தலையில் இருப்பது. ஆயிரம் இதழ்கள் கொண்ட வெள்ளைத் தாமரை போன்றது இது.
- ஆக்ஞை: நெற்றிப் பொட்டில் இயங்குவது. இரண்டு இதழ் கொண்டது.
- விசுத்தி: 16 இதழ்கள் இதற்கு. தொண்டைப் பாகத்தில் உள்ளது.
- அனாகதம்: 12 இதழ்கள் கொண்டது. கழுத்துக்குக் கீழே

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

முதுகுத் தண்டில், நடு முதுகுக்கு சற்றுமேல் இயங்கும் சக்கரம் இது.

- மணிபூரகம்: 10 இதழ்கள். ஊதா நிறம் கொண்டது. நடு முதுகுக்குச் சற்றுக் கீழ் இயங்குவதாகும்.

- சுவாதிஷ்டானம்: 6 இதழ்களுடன், ஆரஞ்சு நிறத்தில் உள்ளது.

- மூலாதாரம்: முதுகுத் தண்டின் முடிவுப் பகுதியில், சிவப்பு நிறத்தில் 4 இதழ்களோடு இருப்பதே மூலாதாரமாகும்.

இந்தச் சக்கரங்களுக்கு அதி தேவதைகள் உண்டு. இந்தத் தேவதைகளின் செயல்பாட்டுடன், இந்தச் சக்கரங்களின் செயல்பாடு பொருந்திப்போகும். அந்த வகையில்...

மூலாதாரத்துக்கு, கணபதி அதிதேவதை; சுவாதிஷ்டானத்துக்கு பிரம்மா; மணிபூரகம் - விஷ்ணு; அனாகதம் - ருத்ரன்; விசுக்தி - இந்த ஆதாரச் சக்கரத்துக்கு ஜீவனே அதிதேவதை; ஆக்ஞை - இதில் ஜீவன் யோக நிலை அடைந்து, யோகியாகிவிடுகிறது; சஹஸ்ராரம் - இதில் விடுதலை கிடைப்பதால், இதன் அதி தேவதையாக பரமாத்மா உள்ளார்.

மேற்கண்ட எந்த ஒரு தகவலையும், இன்றைய மருத்துவ விஞ்ஞானம் கூறாது; கூறவும் அதனால் முடியாது. கண்களுக்குப் புலனாவது மட்டுமே இன்றைய மருத்துவ விஞ்ஞானத்துக்குக் கணக்காகும்.

இனி, ஓர் உடம்பின் மிக முக்கிய உயிர்த் திரவமான விந்துவுக்கு வருவோம். ஆணின் உயிர்த் திரவம் விந்து; பெண்ணின் உயிர்த் திரவம் சுரோணிதம். ஆணின் முதல் விந்துத் துளி, அவன் பிறந்தது முதலே அவனோடு இருந்து, அவன் வளர வளரத் திரண்டு நிற்கும் ஒன்று. அவனுக்கு அது அவனின் பெற்றோர் மூலம் கிடைத்தது. அவர்களுக்கு அவர்களின் பெற்றோர் மூலம் கிடைத்தது. ஆக, இதை ஒரு ரிலே ரேஸ் எனலாம். அப்படி முன்னோரின் சேர்க்கையால் தலைமுறை கடந்து வரும் உருவாக்கமே உடலாகும். இதனுள் உயிர் புகுதல் என்பது, கர்ப்பம் தரித்த காலத்தில் ஒரு குறிப் பிட்ட நாளில் நடைபெறுகிறது. இப்படித்தான் மனித இனம் உருவாகி இன்று 700 கோடியை அடைந்துள்ளது. இனியும் இதன்படியே இந்த இனம் தொடரும்.

இதில், ஆணின் முதல் விந்துத்துளி என்பது மிக

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பலமானது; பவித்ரமானது. அதேபோல் பெண்ணின் சுரோணிதமும்! பிறக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதைத் தீர்மானம் செய்வது ஆணின் விந்தணுதான். அதிலும் பவித்ரமான முதல் விந்துத்துளி, பெண்ணின் முதல் சுரோணிதத்துடன் கலந்து, அதன் சேர்க்கையில் உருவாகும் உடம்பும் உயிரும்தான் `தலைப் பிள்ளை' எனும் பெயர் பெறுகிறது.

இங்கே, தலை என்பது முதல் என்பதையும் குறிக்கும்; தலையில் இருந்து இறங்கிய விந்துவின் சேர்க்கையால் வந்த பிள்ளை ஆதலால், தலைப் பிள்ளை என்பதையும் குறிக்கும். இந்தத் தலைப்பிள்ளைக்கு நல்லது - கெட்டதுகளில் முன்னுரிமை தரப்படக் காரணம், தலைமுறைகளின் தவறாத தொடர்ச்சி இவன். ஏழு தலைமுறைகளின் தொடர்பைக் கொண்டிருப்பவன். அந்தத் தொடர்பானது உடற்கூற்றில், குரல் அமைப்பில், தலைமுடியில், கண் சிமிட்டுவதில், நடப்பதில், திரும்பிப் பார்ப்பதில், சாய்ந்து படுத்துத் தூங்குவதில், சிரிப்பதில், தும்முவதில், கோபப்படுவதில் என்று சகலத்திலும் இடம்பெற்றிருக்கும். இந்த ஏழு தலைமுறையினரின் பாவ - புண்ணியங்கள் எண்ணங்களாக அவர்களுக்குள் இருந்து, அந்த எண்ணங்களே நாதமாகி, விந்துவில் படிந்திருக்கும். அதன் தொடர்ச்சியில் தலைப் பிள்ளைகள் தொடர்பவர்களாக இருப்பதால், நான்கு தலைமுறைக்கு முன் ஒரு தாத்தா அன்ன தானம் செய்த புண்ணியமும் சரி, ஆறு தலைமுறைக்கு முன் ஒரு தாத்தா திருடித் தின்ற பாவமும் சரி... அதற்கான எண்ணப் பதிவாக தலைப் பிள்ளைகளிடம் வெளிப்பட்டு, அவர்களின் நன்மை - தீமையாக வடிவெடுக்கும். இன்று நம் கண் எதிரில் பெரும் பாவம் புரிபவன் சந்தோஷமாக வாழ்வதும், மிக நல்லவர் கஷ்டப்படுவதும் இதன் அடிப்படையில்தான்.

நாம் கடவுளைக்கூட ஏமாற்றிவிடலாம்; நம்மை நாம் ஏமாற்ற முடியாது. நமக்குத் தெரியாமல் ஒன்று எப்படி நம்மிடம் நடக்க முடியும்? நாம் செய்த வினை யாவும் எண்ணங்களாக, அழியாத நினைவுகளாக நமக்குள்தான் வாழ்ந்துகொண்டே இருக்குமே! அதுவே விந்துவில் பதிவாகி, தொடர்கிறது. நாம் வேறு, நம் பிள்ளைகள் வேறு அல்ல; உடம்பு மட்டும்தான் மாறுகிறது; உள்ளம் மாறாமல் தொடர்கிறது. இதை வைத்தே, `எண்ணம் போல் வாழ்க்கை' என்றனர்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மனிதன் கண்டுபிடித்த ஒரு மைக்ரோ 'சிப்', விரல் நகம் அளவுகூட இல்லை. அதில் பல திரைப்படங்களை அடைத்து, நினைத்தபோது அதை வெளிப்படச் செய்து, பார்க்கிறோம். ஒலி- ஒளி என இரண்டுமே அந்த நுண்ணிய சிப்பில் அடங்கிவிடுகிறது. மனிதனின் ஒரு கண்டுபிடிப்புக்கே இத்தனை ஆற்றல் இருந்தால், மனித விந்து இதைப் போலப் பல்லாயிரம் மடங்கு ஆற்றல் மிக்கது என்பதைச் சொல்லித்தான் புரியவைக்க வேண்டுமா என்ன?

அதனாலேயே, விந்தின் மகிமையைப் பாதுகாக்க ஒழுக்கம் வலியுறுத்தப்பட்டது; வளமான எண்ணங்கள் வலியுறுத்தப் பட்டன; கற்பு நெறி உருவாக்கப்பட்டது. இதைக் கட்டிப் பேண முடிந்தவர்கள் பிரம்மசாரிகள் எனப்பட்டனர்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 38

நெத்திக் கண் த்ரிகால வர்த்தம் சொல்லும்
நீண்ட சித்தி கண்டவுடன் திதியுஞ் சிஷ்டி
முத்திக்கண் விளைவிதுவே பொருளே சித்தி
மொய்க்கு மல்லா சம்மாரம் தன்னைச் சுத்தி
வத்திக் கண்ணாகாது எந்த நாளும்
வறுமையது ஏகிடுமே கண்ணுக்கெட்டா
வெத்திக்கண் இப்படியே செவியாந்தூரம்
மேல் விளைவ தறிந்தவரும் கேட்டும் பார்த்தே...

- காகபுஜண்டர்

பதஞ்சலியின் யோகத்துக்கு குண்டலினி யோகம் அடிப்படை அமைத்துக் கொடுக்கிறது. குண்டலினியை கராத்தே, கம்புச் சண்டை பழகுவதுபோன்று பழகிவிட முடியாது. இதற்கு மன வலிமையே பிரதானம். அடுத்து, ஒழுங்கான வாழ்க்கை முறை. அதற்கும் பிறகு, தகுந்த குருவின் வழிகாட்டல். இதெல்லாம் இல்லாமல் இந்த யோகத்தைப் பயில முடியாது. சுருக்கமாகச் சொன்னால், கோடியில் ஒருவருக்கே இது சாத்தியம்.

குண்டலினி யோகம் செய்ய முடிந்தவருக்கு, மனம் மற்றும் உடல் பற்றிய தெளிவு மிகவும் இருக்கும். அப்படிப்பட்டவர்களால் மட்டுமே பதஞ்சலி யோக சூத்திரத்தைப் புரிந்துகொள்ள முடியும். இந்த யோக சூத்ரத்துக்கு ஒரு பெரும் சிறப்பு என்னவென்றால், இது மதங்களுக்கு அப்பாற்பட்டது. இதன் அடிப்படை நோக்கம், மனிதனின் மகத்தான சக்தியான மனோ சக்தியை உணர்தல். பிறகு அதை அதிகரிக்கச் செய்து, தன்னுடைய ஆதிநிலையை உணர்ந்து, அதில் சென்று சேர்தல். இதையே சமாதி என்கிறோம். அதாவது, ஆதி நிலைக்குச் சமமான நிலையை அடைவதே சமாதி!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அடுத்ததாக, அனைத்துக்கும் மேலான சக்தியோடு... அது ஆதி சக்தியோ, பரம்பொருளோ, பரமாத்மாவோ அதனுடன் தன்னைக் கொண்டு சேர்த்துவிடுதல். இதுதான் யோகம்! இந்த யோக நிலையை அடைய 8 அங்கங்கள் வகுக்கப் பட்டுள்ளன. அவை: 'இயம, நியம, ஆசன, பிராணாயாம, பிரத்தியாஹார, தாரண, தியான, சமாதி' ஆகியன. இந்த எட்டுப் படிகளை 'அஷ்டாங்க யோகம்' என்பர். இந்த அஷ்டாங்க யோகத்தை நான்கு பாதங்களாகப் பிரித்து, யோக சூத்திரம் வகுக்கப் பட்டுள்ளது. அவை: சமாதி பாதம், சாதனா பாதம், விபூதி பாதம், கைவல்யா பாதம்.

இதை நூல் வடிவில் வாசித்து, நாமாகச் சிந்தித்து உணர்தல் ஒரு விதம். குருவின் வியாக்கியானத்துடன், பள்ளிப் பாடம் பயில்வது போன்று கற்பது இன்னொரு விதம். எப்படிக் கற்றாலும் சரி, இந்த யோக சூத்திரத்தை ஒருவர் புரிந்துகொண்டுவிட்டால், அவரை கவலை அணுகாது. அவர், உலகின் எப்படிப்பட்ட இன்பத்திலும் சிக்கி மயங்கிவிட மாட்டார்; திட மனத்துடன் இருப்பார். தலை மீது ஆகாயமே இடிந்து விழப்போகிறது என்றாலும், 'ஆஹா! இந்த அனுபவம் எப்படிப்பட்டது என்று பார்த்துவிடு வோமே' என, பயமற்று இருப்பார். மனிதன் கடைத்தேற பதஞ்சலி அளித்த ஞான அமுதம் என்றே இந்த யோக சூத்திரத்தை சான்றோர் உலகம் போற்றுகிறது.

பதஞ்சலி குறித்து மேலும் பல சுவையான சம்பவங்களோடு கூடிய கதைகள் நிறையவே உள்ளன. அவரும் வியாக்ரபாதரும் ஒன்றாகச் சேர்ந்து பல விஷயங்களைச் சாதித்துள்ளனர்.

பதஞ்சலிக்கு உரிய இன்னொரு சிறப்பு, சைவர்கள் மட்டுமின்றி, வைணவர்களும் அவரை வியந்து போற்றுவதுதான்.

சித்தர்களில் வைணவச் சார்பு கொண்ட சித்த புருஷர்களே அநேகமாக இல்லை எனலாம். சிலர் இடைக்காடரை வைணவ சித்தராகச் சுட்டிக்காட்டுவார்கள். மற்றபடி, சித்தர் பெருமக்கள் சம்பந்தமெல்லாம் சிவத்தோடுதான். இது ஏன் என்று யோசித்தால், பல விடைகள் காத்திருக்கின்றன.

சிவபெருமானுக்குப் பட்டு பீதாம்பர ஆடைகள் இல்லை. தங்கக் கிரீடம், வைரக் கடுக்கன், நவரத்ன ஆரம் எனும் வசீகரங்கள் இல்லை. கட்டவிழ்ந்த சிகை, கழுத்தில் நாகமே அணி, இடுப்பில் புலித்தோல், இடையில் உடுக்கை மற்றும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

டமருகம், உடம்பெல்லாம் பிணச் சாம்பல் பூச்சு. சித்தர்களும் வசீகரத்துக்கு இடம் தராதவர்கள்; சடையாண்டிகள். காவி, கந்தல் என எதையும் உடுத்துபவர்கள். அதுவும் வேண்டாத திகம்பரர்களும் உண்டு. சிவனுக்குப் பிரியமான இடங்களில் மயானமும் ஒன்று. சித்த சந்நியாசிகளும் மயானத்தை மிகவே விரும்புவார்கள். பிராந்தர் என்ற சித்தர் மயானத்தையே தமது வசிப்பிடமாகக் கொண்டார்.

அதுவே, பெருமாள் சர்வாலங்கார நாயகன்; காத்து ரட்சிப்பவர்; இச்சைகளைப் பூர்த்தி செய்பவர்; அதனாலேயே பொன், பொருள் வேண்டுவோர் திருமாலை வணங்குவார்கள். திருமாலின் மார்பிலேயே மகாலட்சுமி உறைவதால், அவளுடைய அருள் மாலனின் அருளுடன் கலந்தே உள்ளது. சித்தர்களுக்குத் தேவை பொருள் இல்லை; அருள்தான்! அதிலும், கர்மவினைகள் அழிந்து சாம்பலான நிலையில் அருளை எட்டுவதே அவர்களின் நோக்கம். அதற்கான இலக்கு, சிவமே! 'இதனாலேயே சித்தன் போக்கு, சிவன்போக்கு' என்று கூறப்பட்டது.

மேலும், மாலடியார்கள் சரணாகதி புரிபவர்கள்; அந்தத் திருமாலிடத்தில் தங்களை ஒப்படைத்துவிடுபவர்கள். உடல் குறித்த எந்த விசாரங்களும் இல்லாதவர்கள். சித்தர்கள், தங்களுக்குள் இருக்கும் உயிரே சிவம்தான் என்பவர்கள். இதனால், தங்களையே சிவம் என்று கூறாமல் கூறுபவர்கள்.

காண வேண்டும் என்று நீர் கடல் மலைகள் ஏறுவீர்

ஆணவம் அது அல்லவோ அறிவில்லாத மாந்தரே

வேணும் என்று அவ்வீசர் பாத மெய்யுளே தரிப்பரேல்

தாணுவாக நின்ற சீவன் தான் சிவன் அது ஆகுமே

- என்கிறார் சிவவாக்கியர். மாலவனின் அடியார்கள் இப்படிக் கூறியது இல்லை. தன்னுடைய ஜீவனை திருமால் என்று கூறியது இல்லை. 'அவன் பரமாத்மா, நான் ஜீவாத்மா; அவன் வேறு, நான் வேறு! சரணாகதியாலே அவன் நம்மை ஆட்கொண்டு, தன்னுள் ஏற்றுக்கொள்கிறான்' என்பதே வைணவக் கொள்கை. இப்படி, கொள்கையே வேறாக இருப்பதால், சித்தம் வைணவச் சம்பந்தம் கொள்ளவில்லை.

மீண்டும் பதஞ்சலியிடம் வருவோம். பதஞ்சலி யோக சூத்திரத்தைக் கற்றுணர்வது என்பது, பள்ளிக்குச் சென்று படிப்பது போன்றதல்ல! இதைக் கற்றுணர விதி இருக்க

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வேண்டும். இதற்கும் விதிக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கலாம். நிறையவே இருக்கிறது!



விதிப்பாடு என்பது நம் கர்ம வினையால், நாமே உருவாக்கிக் கொண்ட ஒன்று. ஒரு மனிதன் கடைத்தேற, நான்கு 'தி'க்கள் வேண்டும் என்பர். அதாவது, நல்ல விதி; அதன் காரணமான நல்ல மதி; அதன் காரணமான நல்ல நிதி; அதன் காரணமான நல்ல கதி. இந்த நான்கும் வேண்டும். இதில், விதிப்பாடு சரியாக இல்லாவிட்டால், மற்றவை அமைவதைப் பொறுத்தே நம் வாழ்வு என்றாகிவிடும். விதிக்குச் சரியான இடம்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இருந்தால், அந்த வாழ்வே அலாதியானதுதான். பதஞ்சலி யோக சூத்திரம் என்பது ஞானச் செல்வம். இதை ஒருவர் பெற்றுவிட்டால், காற்றை மட்டுமே உண்டு உயிர் வாழ்ந்துவிட முடியும். உடம்பிலும் வியர்வை, சிறுநீர், மலத்துக்கு இடமற்றுப் போய், நாவில் சுரக்கும் எச்சில்கூட அமுத குணம் கொண்டதாகி விடும்.

இமயமலைச் சாரலில் பதஞ்சலி யோக சூத்திரத்தை முழுவதுமாய் அறிந்த பல யோகிகள் உள்ளனர். இவர்களை வடவர்கள் 'பாபா' என்பர். இவர்களில் ஒரு பாபாஜி மாதக் கணக்கில் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பார். எதற்கும் எழுந்து செல்லமாட்டார். எதுவும் அவருக்கு தேவையில்லை. காற்று மட்டுமே அவருக்குப் போதுமானது. அவரது தேவைகளை வானகம் பூர்த்தி செய்துவிடுகிறது.

இப்படி ஒருவர் இந்த பூமியில் பஞ்சபூதங்களுக்கு நடுவில், பசி எனும் கொடிய எதிரியைத் தமக்குள் வைத்துக்கொண்டு சும்மா இருக்கமுடியுமா என்று கேட்டால்... இப்படி எவ்வளவோ பேர் இருக்கிறார்கள் என்பதே பேருண்மையாகும். இதுபோன்ற பாபாக்களை நாம் பார்ப்பதற்கும் ஒரு விதி வேண்டும்.

அவர்களை நாம் பார்க்க, அவர்கள் நம்மைப் பார்த்திட... நமது உடம்பின் ஆராவில் பெரும் மாற்றத்தை ஒரு பார்வையால் ஏற்படுத்த முடிந்தவர்கள் அவர்கள். இதற்கு 'நயன தீட்சை' என்று பெயர். அவர்களிடம் நாம் நம் மனக் குறைகளைச் சொல்லி அழத் தேவையே இல்லை. நம் உடம்பின் ஆராவே அவர்களுக்கு அதைக் காட்டிக் கொடுத்துவிடும். நம் உடம்பின் 'ஆரா' என்பது, நமது எண்ணப் போக்கு, அன்றைய நட்சத்திர கதி, ஜாதக ரீதியாலான நமக்கான தசாபுக்தி, அந்தரம், சூட்சுமம் ஆகியவற்றை எல்லாம் கொண்டதாக இருக்கும். அவர்கள் தங்கள் பார்வையாலேயே ஊடுருவ வல்லவர்கள். அதனால் ஆராவை வைத்தே, இன்னார் அருளாளர், இவர் பொருளாளர், இவர் பெரும் இருளாளர் என்பதையெல்லாம் உணர்ந்துவிடுவார்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



பெரும் கருணையோடு பலரது துன்பக் கதிர்களைத் தங்கள் பக்கம் உறிஞ்சி இழுத்துக் கொண்டு அனுப்புவார்கள். இதனாலேயே அவர்களைத் தரிசிப்பவர்களில் பலரும் மனம் லேசாகிப்போனது போலவும், பரவசத்தை அடைந்ததாகவும் உணர்வார்கள். இப்படியான அனுபவத்தை காஞ்சி மகா முனிவர் ஆயிரக்கணக்கானோருக்கு அளித்துள்ளார். பாபாக் களும் பலருக்கு அளித்துள்ளனர். சிலர் இந்த பாபாக்களிடம் சீடர்களாகி, பல யோக ரகசியங்களையும் கற்றுள்ளனர். பல கோடி ரூபாய் சொத்து இருப்பதைவிட மேலானது, ஒரு யோகத்தை முழுவதுமாகக் கற்று வைத்திருப்பது. அதே நேரம், பலருக்கு இவர்கள் உபதேசிப்பது இல்லை. சம்பந்தப்பட்டவர் களால் கற்க முடியாது என்பது ஒருபுறம்; கற்க முடிந்தாலும் அதை அவர்கள் நல்ல விஷயத்துக்குப் பயன்படுத்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மாட்டார்கள் என்பதுவும் ஒரு முக்கியக் காரணம்.

ஒருமுறை, பாபா ஒருவரிடம் தனக்கு யோகம் கற்றுத்தர வேண்டினார் ஒருவர். பாபாவும் அவருக்குக் கற்றுத் தர முன்வந்தார். முன்னதாக, அவருக்கு மூன்று கட்டளைகள் இட்டார். முதல் கட்டளை- ஆயிரம் பேருக்குக் குறைவின்றி அன்னதானம், அடுத்ததாக, ஏழைப் பெண்ணுக்குத் தாலி வாங்கித் தந்து, திருமண உதவி செய்வது, 3-வது வைதீக பிராமணர்களுக்கு வஸ்திர தானம் தந்து, அவர்களின் ஆசியைப் பெறுவது. தவிர, ஏழு நதிகளில் நீராடி, பசு மாட்டுக்குக் கீரையும், காக்கைக்கு அன்னமும் வழங்கிவிட்டு வரும்படி கூறினார்.

பாபா ஏன் இப்படிக் கூறினார் என்பதன் பின்னே பெரும் சூட்சுமம் உள்ளது!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 39

அஞ்ஞானம் போயிற்று என்று தும்பீபற - பர
மானந்தங் கண்டோம் என்று தும்பீபற
மெய்ஞ்ஞானம் வாய்த்ததென்று தும்பீபற - மலை
மேலேறிக் கொண்டேன் என்று தும்பீபற

- இடைக்காடர்

பாபாஜி, தான் யோகம் கற்றுத்தர விரும்பியவருக்கு இட்ட மூன்று கட்டளைகளின் பின்னே பெரும் சூட்சுமம் உள்ளது. அதற்கு முன் நாம் அறிய வேண்டியவை என பல முக்கிய செய்திகள் உள்ளன.

பாபாஜி போன்ற சித்த புருஷரின் தரிசனம், விதி இருந்தால்தான் ஏற்படும். இதை அனுபவத்தால் மட்டுமே உணர முடியும்.

பழநிக்கு அருகில் கணக்கன்பட்டி எனும் ஊரில், சித்த புருஷர் ஒருவர் இருந்தார். அவரை பழநி சுவாமிகள், கணக்கன் பட்டி சித்தர் என்றெல்லாம் அழைப்பார்கள்.

இருபது வருடங்களுக்கு முன்பு, பழநி பாத யாத்திரையின் போது, அவரைத் தரிசித்திருக்கிறேன். அவரைப் பார்த்ததும், எப்படி இவரால் இப்படித் திரிய முடிகிறது என ஆச்சரியப்பட்டு இருக்கிறேன். அவருடைய இருப்பிடத்தில், நானும் நண்பர்களும் சிறிது நேரம் தங்கி ஓய்வெடுத்துவிட்டுக் கிளம்பினோம். நிர்வாண கோலம், ஒற்றை நாடி சரீரம், சுறுசுறுப்பான நடை, எவரையும் கவனிக்காத போக்கு என அவரின் தோற்றமும் செயல்களும் எங்களுக்கு பிரமிப்பை ஏற்படுத்தின. மற்றபடி அருள்வாக்கு, அதிசயம் என்று எந்த அனுபவமும் நிகழவில்லை.

கடந்த மாதத்தில், அவருடைய பக்தர்களில் ஒருவர் என்னைச் சந்தித்து, மதுரையில் உள்ள கணக்கம்பட்டி சித்தரின் ஞானசபையில் 10-ம் ஆண்டு துவக்க விழா

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இருப்பதாகவும், அதில் நான் பேச வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். கணக்கம்பட்டி சித்தரின் செயல்பாடுகள் உருவாக்கும் பிரமிப்பு பற்றி, அப்போது அவர் நிறையவே கூறினார்.

நான் சித்தர்கள் குறித்து வாசிப்பவன்; எழுதுபவன். மற்றபடி சித்தானுபவம், குரு கிருபை என்பதெல்லாம் எனக்கு காஞ்சி மகா பெரியவாளோடுதான்! சித்த புருஷர்களுக்கெல்லாம் மேலானவர் அவர். சித்தர்களுக்கான இலக்கணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்.

இந்த நிலையில், கணக்கம்பட்டி சித்தர் குறித்து அறியும் வாய்ப்பும், அவருக்கான விழாவில் பேசுகிற வாய்ப்பும் கிடைத்தது. முன்னதாக, கணக்கம்பட்டி சித்தரின் சிலிர்ப்பான ஒரு சித்து விளையாட்டை அந்த நண்பர் பகிர்ந்துகொண்டார்.

இன்றைக்குத் தமிழகத்தில் மழை பொய்த்து, வறட்சிக்கு ஆளாகியிருப்பதை அறிவோம். ஆறு, குளங்கள் காய்ந்து கிடக்கின்றன. கடந்த மாதம் ஒரு பெண்மணி, கணக்கம்பட்டி சித்தரிடம் மழை வேண்டி, மிகவும் வருந்தியுள் ளார். "சாமி... ஆடு, மாடு குடிக்கக்கூட தண்ணி இல்ல சாமி. நீங்கள்ளாம் இருக்கிற பூமில இப்படி இருக்கலாமா?" என்று கேட்டார்.

அதைக்கேட்ட கணக்கம்பட்டி சுவாமிகள், "மழைய வரவிடாம பண்றதும் நீங்கதான்; வரணும்னு ஆசைப்படுறதும் நீங்கதான். மழை என்ன, நீ வளக்கற ஆடா, மாடா... வான்னா வரதுக்கும், போன்னா போறதுக்கும்..?" என்று தத்துவார்த்தமாய்க் கேட்டார்.

இன்றைய வாழ்வியில் முறையால், வானமே பொத்தல் விழுந்து, புண்ணாகிக் கிடக்கிறது. நாம் மரங்களை வளர்ப்பதை விட வெட்டுவதே அதிகம். பின், எங்கிருந்து வரும் மழை?

ஆனாலும், சித்தர் அந்தப் பெண்மணியிடம், "போ, போ! எல்லாம் வரும், கொட்டித் தீர்க்கும், போ!" என்று கூறியுள்ளார். அன்று இரவே, பழநி மற்றும் அதைச் சுற்றியுள்ள ஊர்களில் மூன்று மணி நேரம் கொட்டித் தீர்த்தது மழை. பழநி மட்டுமின்றி, அப்போது தமிழகத்திலும் பரவலாகப் பெய்திருந்தது மழை! ஊட்டியில், காட்டாற்று வெள்ளம் பெருகி, கரையோர வீடுகளே மூழ்கும் அளவுக்கு மழை பெய்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இது மழைக் காலமில்லை; இப்போதெல்லாம் மழைக் காலத்திலும் மழை பெய்வது இல்லை. சித்தர் சொன்னபோதும் அதற்கான சுவடே இல்லை. எனினும், அவர் சொன்னது நடந்துள்ளது.

இப்படி அந்தச் சித்தர் குறித்து பல அரிய தகவல்களை, அந்த அன்பர் என்னிடம் தெரிவித்தபோது, பிரமித்துப் போனேன். எனக்கும் சுவாமிகளைப் பார்க்கும் ஆவல் எழுந்தது. ஆனால், அதற்கான வேளை வருவதற்குள், கடந்த 11.3.2014 அன்று செவ்வாய்க்கிழமை மதியம், சுவாமிகள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ந்தேன்.

அப்போது தான், 'எட்டப் போறேன். எட்டறதுன்னா என்னன்னு தெரியுமா, உனக்கு?' என்று பேச்சினிடையே சுவாமிகள் கேட்டதை நண்பர் விவரித்தது நினைவுக்கு வந்தது. அப்போது அது ஒரு சாதாரண வாக்கியமாகவே எனக்குப் பட்டது. இப்போது யோசிக்கையில், 'எட்டப் போறேன்' என்று சுவாமிகள் சொன்னது இதைத்தானோ எனப் புரிய, அதிர்ந்து போனேன். அவரைத் தரிசிக்கிற பாக்கியம் அமையவில்லையே என வருந்தினேன்.

எதிர்காலத்தில், கணக்கம்பட்டி சித்தரின் பரமானந்தமான அனுபவங் கள் பலராலும் வெளிப்படலாம். அது அவர் சித்தம்! ஏன் என்றால், ஒவ்வொரு அனுபவத்தாலும் யாரோ ஒருவருக்கு கிடைக்காத விடை கிடைத்து, ஞானத்தெளிவும் உருவாகிறது. அது ஒரு சக்கர சுழற்சியாக நடைபெற்ற படியே இருக்கிறது என்பதே உண்மை.

மீண்டும் பாபாஜியிடம் வருகிறேன்.

பாபாஜியை தரிசனம் செய்த அன்பருக்கு, அவர் யோகியாவதற்கு இடையூறாக சில பாக்கிகள் இருந்தன. அது நீங்கிவிட்டால் அவர் முழு யோகியாகி இந்த உலகின் பாச பந்தங்களில் இருந்து எளிதில் விடுதலை பெறும் சாத்தியங்கள் பாபாஜிக்குத் தெரிந்ததாலேயே அன்னதானம், ஏழைப் பெண்ணுக்குத் தாலி, வைதீக வஸ்திர தானம், ஏழு புனித நதிகளில் நீராடல் மற்றும் மாட்டுக்குக் கீரை, காக்கைக்குச் சோறு என்கிற பரிகாரார்த்தங்களைக் கூறியிருந்தார்.

கர்ணன் இறந்து, சொர்க்கம் போகிறான். அங்கே அவனுக்குப் பசியெடுக்கிறது. சோறு யாசிக்கிறான். பட்டுத் துணி போர்த்திய தட்டை நீட்டுகிறாள் ஒரு தேவதை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

துணியை விலக்கிப் பார்த்தால், தட்டில் தங்கம், வைரம், மாணிக்கம் என இருந்ததாம். 'பசிக்குச் சோறு கேட்டால், இதைத் தருகிறாயே?' என்று கேட்டானாம் கர்ணன். 'என்ன செய்வது! இதைத்தானே நீ தானமாக பிறருக்குத் தந்தாய்' என்றாளாம் அந்தத் தேவதை.

சொர்க்கத்தில் பசிக்குமா, இப்படியும் நடக்குமா என்று கேட்கக் கூடாது. இது புனைக்கதை, அன்னதானத்தின் அவசியத்தையும் மேன்மையையும் வலியுறுத் துவதற்காகச் சொல்லப்பட்ட சத்விஷயம். அதனாலேயே ஆழ்வார்களும், நாயன்மார்களும் அடியவர்களுக்குச் சோறிடுவதை முதல் கடமையாகக் கொண்டிருந்தனர்.

இப்படி, பாபாஜி கூறிய ஒவ்வொரு பரிகாரச் செயலுக்குப் பின்னாலும் கர்மக் கணக்குகள் ஒளிந்துள்ளன.

ஏழைப் பெண்ணுக்குத் தாலி என்பதன் பின்னாலே, ஒரு பெண்ணின் திருமண வாழ்வைக் கெடுத்த பாவம் இருந் திருக்கலாம். வைதீக வஸ்திர தானம், மானம் காக்கும் ஒரு செயல். யார் மானத்தை வாங்கிய பாவத்துக்கு இது பரிகாரமோ? ஏழு புனித நதிகளில் நீராடுவது என்பதும் பெரும் புண்ணியம்.

இந்து மதம் மட்டுமே, நதிகளை தெய்வமாக்கி, நமக்கான விமோசனம் நதிகளில் உள்ளது என்கிறது. நதி நீர் என்பது மலையில் உருவாகி, கடலில் சங்கமிப்பது ஆகும். உயரே உருவாகி வழியெங்கும் செழிப்பாக்கி தாகம் தீர்த்த நிலையில், கடல் சங்கமத்தில், உலகின் மிகப் பெரிய விஷயம் ஒன்றில் கலந்து ஒன்றாகிவிடுகிறது. இதில் மூழ்கும்போது, நமக்கும் மலையின் தொடர்பு முதல் மடுவாகிய பெரிய சமுத்திரத் தொடர்பு வரை சகலமும் ஏற்படுகிறது. எல்லாமே பெரிதினும் பெரியவை!

பெரிதாக முடிந்த விதி இருக்கும்போது, எப்படிச் சிறிதான வினைகள் நம்மைச் சிதைக்க முடியும்? நதி நீராடல் என்பது உடம்புக்கான ஆனந்தம் மட்டுமல்ல; உள்ளத்துக்கான பெரும் விமோசனம். பசுவுக்கும் காகத்துக்குமான உணவு, பித்ரு தோஷத்தை நீக்கும்.

இவ்வளவையும் ஈடேற்ற முடிந்தவனுக்கு, ஞானம் எப்படி வசப்படாமல் போகும்? அதன்பின், அவர் பாபாஜியை நாட, அந்த அன்பரைக் கடைத்தேற்றியிருப்பார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சித்த புருஷர்கள் இப்படி நமக்கு ஞான வழிகாட்டிகளாகவும், நல்லாசிரியர்களாகவும் விளங்கி வருகின்றனர். இந்த வழி காட்டுதல் என்பதுகூட பலவிதங்களில் என்று சொல்லலாம். பேசியும் உபதேச மொழி கூறியும்தான் வழிகாட்ட வேண்டும் என்றில்லை; உற்று நோக்கி ஒரு பார்வையால்கூட அவர்களால் நமக்கு விமோசனம் அளிக்க இயலும்.



இந்த உலகில் நாம் பெரிதாகக் கருதும் எல்லாமே சித்தர் களுக்கு அற்பமானவைதான். அவர்களுக்குத் தங்களின் மேலான அனுபவங்களே உன்னதமானவை.

திருமந்திரத்தில் ஒரு பாடல்.

வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது

புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது

தொழுது கொண்டோடினர் தோட்டக் குடிகள்

முழுதும் பழுத்தது வாழைக் கனியே!

- எனும் பாடலில் சித்தர்களின் மறைபொருள் ஞானத்தை உணர்த்தியிருப்பார் திருமூலர்.

கத்தரிக்காய் விதைக்க பாகற்காய் விளைந்ததாம்! அப்படி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

விளைய முடியுமா?

எங்காவது புழுதியைத் தோண்டினால் பூசணி பூக்குமா? இதைப் பார்த்துத் தோட்டத்துக் குடிகள் பயந்து ஓடுகின்றனராம், இது என்ன மாயமோ என்று! அதற்குப் பிறகு, வாழைக் கனி நன்றாகப் பழுத்தது என்கிறார்.

இதன் நுட்பமான உட்பொருள் என்ன தெரியுமா? யோகப் பயிற்சியில் ஈடுபடுவதே கத்தரி விதைப்பது. அதில் பாகற்காய் முளைப்பது என்பது, கசப்பு நீங்குவதைக் குறிக்கிறது. இதனால் மனம் திண்மை அடைகிறது. புழுதியைத் தோண்டுவது என்பது எல்லாவித ஆன்ம தத்துவங்களையும் அலசுவதைக் குறிக்கிறது. அதன் விளைவாக, சிவமே ஜீவன் என்று உணர்த்துகிறார் திருமூலர். இதையே முழுதும் பழுத்தது வாழைக்கனியே என்கிறார்.

பெரும் சித்தானுபவங்கள் இப்படி மறை பொருளையே கொண்டிருக்கும். நமக்குக் கொஞ்சமாவது ஞான மிருந்தால்தான் இதை அறிந்து, தெளிய முடியும்.

'காகம் கரையும், குயில் கூவும்' என்று சிறுவர்களுக்குச் சொல்வது போல, அவர்கள் எதையும் எழுதிவைக்கவில்லை. அப்படி எழுதிவைத்தால், அதைக் காலம் விழுங்கியிருக்கும்.

நம் அனுபவங்களை எதற்குப் பிறருக்குச் சொல்ல வேண்டும் என்று, எதையுமே கூறாமல் தங்கள் வழியை மட்டும் பார்த்துக் கொண்டு சென்ற சித்த புருஷர்களும் உண்டு. 'எனது அனுபவங் களை உனக்குக் கொடுக்க முடியாது. உன் அனுபவங்களாலேயே நீ சித்தத்தை அறிய முடியும்' என்பது அவர்களின் கோணம். எனில், தங்கள் அனுபவங்களைப் பாடல்களாக்கி சமூகத்துக்கு விட்டுச்சென்றவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்கிற கேள்வி எழுகிறது.

அந்தப் பாடல்கள், சித்தத்தின் பெருமைக்கும் அருமைக்கும் சாட்சிகளாக விளங்குகின்றன என்பது உண்மை. மற்றபடி, அவற்றை வாசித்து அதன் மூலம் ஒருவர் தன்னைச் சித்தன் என்றாக்கிக்கொள்ள முடியாது என்பதே என் கருத்து.

இந்தச் சித்தர் பெருமக்களில் ஒரு சிலர் நீங்கலாக, அவ்வளவு பேரும் சிவனையே பெரிதாகக் கருதக் காரணம், லிங்கத்தின் தோற்றமே! அதை வடிவுடையது என்போமா, வடிவமற்றது என்போமா? அது ஒரு ஞானக் குறியீடு! தத்துவத்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தோற்றம்! பூட்டி வைக்கப்பட்ட புதையல். இதனால், சிவத்தை வியந்து, சாகசங்கள் செய்தருளினார்கள் சித்தர்கள்.

சித்த புருஷர்களுக்கு சாகசம் என்பது ஒரு விளையாட்டு. பொழுதுபோக்கு. அவ்வளவுதான்! பெரும்பாலும் எந்த ஒரு சித்தரும் அதைப் பெரிதாகக் கருதியதில்லை. கொஞ்சம் அது போலக் கருதிய கொங்கணவருக்குக்கூட ஒரு பத்தினி, 'கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?' என்று குட்டு வைத்து, சாகசங்கள் அற்பமானவை என்பதை அவருக்கும் உணர்த்திவிட்டாள்.

ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் யோகி ஒருவர், நீர் மேல் நடந்து வந்து காட்டிப் பெருமிதப்பட்டாராம். இந்தச் சாகசம் கைகூட தனக்குப் பல காலம் தேவைப்பட்டது என்றாராம்.

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் உடனே, 'அடடா! ஓரணா கொடுத்தால், படகில் ஏற்றி, சில நொடிகளில் மறு கரைக்குக் கொண்டுவந்து விடப்போகிறான் ஓடக்காரன். இந்த அல்ப விஷயத்துக்குப் பல காலம் வீணடித்துவிட்டீரே?' என்று கேட்டுச் சிரிக்க, சாகசங்களில் ஏதுமில்லை என்பது புரிந்ததாம் அந்த யோகிக்கு.

சித்தம் ஞானம் பெற்றால், அதையடுத்து சிவம் சுலபமாக வசமாகிவிடுமே...? எனவே, 'சித்தம் சிவம் சாகசம்' என்று தொடங்கியதை 'சாகசம் சித்தம் சிவம்' என்று கூறி நிறைவு செய்வதே பொருத்தமாக இருக்கும் என எண்ணுகிறேன்.

சாகசம் - சித்தம் - சிவம்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

Printed Books

"சித்தன்... பெரிய சித்தன்... எங்கே உன் ஆற்றலை அரசன் முன் காட்டு, பார்ப்போம்..."

"அதனால் எனக்கு ஆவது ஒன்றுமில்லை. அடுத்து, எதைச் செய்தும் உங்களை நான் அடக்கத் தேவையும் இல்லை."

"இது, அதிகப் பிரசங்கம். இப்போதே கைது செய்து சிறையில் அடைக்கவா?"

"முடிந்தால் செய்யுங்கள்..."

அந்தப் பதிலைத் தொடர்ந்து, வீரர்கள் அந்தச் சித்தரைக் கைது செய்ய முயன்றனர். ஆனால், சிவச் சித்தன், 'நில்லுங்கள்' என்று சொன்ன மாத்திரத்தில் கல்லாகச் சமைந்து நின்றுவிட்டனர். அருகிலேயே ஆலய கோபுரத்தைத் தாங்கி நிற்கும் இந்திரன் தோட்டத்து யானைகளில் ஒன்றாக ஒரு கல் யானை. அதைச் சிவச் சித்தன் பார்க்கவும், அதற்கு உயிர் வந்தது. தும்பிக்கையை விசைத்து அசைத்த அதற்கு, அந்தரத்தில் இருந்து கரும்பை வரவழைத்து நீட்டினார் சிவச் சித்தன். அதையும் அது உண்டது.

நடந்ததை எல்லாம் பார்த்து, மன்னன் அபிஷேக பாண்டியன் விக்கித்துப்போனான். இருந்தும், தனக்கு எதிரில் தெரிவது நிஜமான யானையா அல்லது பொய்த் தோற்றமா என்று அறிய விரும்பி, அதன் முன் சென்று பார்த்தபோது... அந்த யானை மன்னனின் கழுத்து முத்துமாலையைப் பறித்து அதையும் கரும்புபோல் கருதி விழுங்கிவிட்டது.

அபிஷேக பாண்டியனும் அரச கர்வத்தை விலக்கி, "அன்பரே... யார் நீவிர்? எதை உணர்த்த இந்தச் சாகசங்கள்?" என்று கேட்ட நொடியில், அந்தச் சிவச் சித்தனும் சொக்கலிங்க நாதர் சந்நிதியில் புகுந்து மறைந்து, 'வந்தது நானே!' என்பதை உணர்த்தினார். அப்படியே பாண்டிய மன்னனுக்குப் பிள்ளை வரமும் அளித்தார்.

விகடன் பிரசுரம்

SITHAM... SIVAM... SAGASAM

₹ 160

(1st Edition)

001757

ISBN 978-81-8476-600-4

9788184766004

www.t.me/tamilbooksworld